V.—GOVERNMENT MOTION—*cont.*

(2) DISCUSSION ON THE OFFICIAL LANGUAGE POLICY—*cont.*

MR. SPEAKER : We have to finish the discussion on the Official Language Policy, about 18 names of hon. Members have been given. I think that all those who want to speak have given their names. If, after allotting time some other names are given there will be great difficulty for me to reallot the time. I think we are sitting in the afternoon also, from 3 p.m. to 4-30 p.m. or 5 p.m., and at that time the hon. the Leader of the Opposition and the Hon. the Chief Minister will speak. So, before 1-30 p.m. the other leaders of parties and other hon. Members of the House who have given their names must finish their speeches. The hon. Member Sri Govindan, who will initiate the discusion to-day as per the request of the hon. the Leader of the Opposition, will be given 20 minutes and the hon. Members, Sri Saw. Ganesan and Sri Kalyanasundaram will be given 25 minutes each and the hon. Member Sri Nallasivam will be given 10 or 15 minutes. The other hon. Members will be giwen onlf 8 to 10 minutes each.

SRI SAW. GANESAN : Sir, it is quite insufficient.

MR. SPEAKER : I am at your hands. What is the way out that the hon. Member suggests?

SRI SAW. GANESAN : Sir, we will prolong the sitting up to 6 p.m.

MR. SPEAKER : I have already told the House that we are sitting in the afternoon also.

SRI SAW. GANESAN : Sir, instead of 4-30 or 5 p.m. we may sit till 6 p.m.

MR. SPEAKER : I do not think it is possible, as some hon. Members will be starting for trains leaving at 6-30 or 6-45 p.m. to-day.

SRI SAW. GANESAN : Sir, since it is an important matter. I want 45 minutes.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிக நேரம் வேண்டுமென்றால் ஒன்றிரண்டு பேச்சாளர்களை வேண்டுமானால் குறைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : We will see. Now, the hon. Member, Sri Govindan, will speak.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, மக்களுக்கு மொழிப் பற்று, இனப் பற்று, நாட்டுப்பற்று சமயப் பற்று என்று பற்றுக்கள் பல இருந்தாலும், எல்லாப் பற்றுக்களையும் விட மொழிப் பற்று மிக ஆழமான பற்று ஆகும். காரணம், மொழியை

3rd April 1965] [புலவர் கா. கோவிந்தன்]

யொட்டித் தான் இனம் உண்டாகிறது; இனத்தை யொட்டித்தான் நாடு உண்டாகிறது. தமிழ் மொழி இருப்பதால்தான் தமிழர்கள் என்று உண்டாகிறது. தமிழர்கள் இருப்பதால்தான் தமிழ்நாடு என்று இருக்கிறது. ஆகவே, இந்த மொழிக்கு அழிவு வருகிறது என்று வரும்போது நாடு அழிவதையும் கருதமாட்டார்கள், மக்கள் அழிவதையும் கருதமாட்டார்கள் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் மொழிக் கொள்கைக்கு உருவம் கற்பிக்கும் நேரத்தில் மனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மொழி பற்றி இவ்வளவு பேச்சு பேசுவதற்குக் காரணம் இந்த நாட்டிலே ஒற்றுமையை உண்டாக்கவேண்டும், ஒருமைப்பாட்டை உண்டாக்கவேண்டும் என்ற காரணத்திற்காக. நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், மொழி மட்டும் ஒருமைப்பாட்டை உண்டாக்கி விடாது. இதற்கு நமது வரலாறு கள் சான்று கூறுகின்றன. சீன நாட்டில் சீன மொழி ஒன்று தான் இருக்கிறது. இருந்தாலும் சீனு இரண்டாகப் பிரிந்து, கம்யூனிஸ்ட் சீனவும், தேசிய சீனவும் போராடிக்கொண்டிருக் கின்றன. ஆங்கிலம் அமெரிக்க நாட்டிலேயும் ஆங்கிலேய நாட்டி லேயும் ஒரே மொழியாக இருந்தது. ஆனால் அமெரிக்கரும் ஆங்கி லேயரும் போராடிக்கொண்டிருந்தார்கள். அரபு நாட்டிலே அரபு ஒரே மொழியாக இருந்தாலும் அங்கேயும் போர் இல்லாமல் இல்லை. தமிழ் நாட்டிலேயே எடுத்துக்கொண்டாலும் இங்கே சேரனும், சோழனும், பாண்டியனும் போராடிக்கொண்டே இருந்தார்கள் என்பதை மறக்க முடியாது. ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள், ஒரே மொழி பேசுகிறவர்கள், உடன்பிறந்தவர்கள் தங்களுக்குள் போராடிக்கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். மொழி மட்டும் ஒற்றுமையை உண்டாக்கி விடும் என்று கருதுவது அவ்வளவு சரி யாகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே மாதிரி வேறு பட்ட மொழிகள், வேறுபட்ட இனங்கள், வேறுபட்ட சமயங்கள் இருப்பதால் வேறுபாடு இருக்கும் என்று கூறுவதற்கு ஆதாரம் இல்லை. நம் நாடு வேறுபட்ட இனங்களை, வேறுபட்ட மொழிகளை, வேறுபட்ட சமயங்களைக் கொண்ட ஒரு நாடு ஆகும். ஆனாலும் நமது விடுதலைப் போராட்ட காலத்தில் நாடு ஒன்றுபட்டு இருந்த நிகழ்ச்சியை யாரும் மறக்க முடியாது. அதே மாதிரி இரண்டாவது உலகப் போரில் ஆங்கிலேயரும் ரஷ்யர்களும் நாஜிகளை அழிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக ஒன்றுபட்ட காட்சியை நாம் மறக்க முடியாது. ஆகவே, ஒரே மொழி ஒருமைப்பாட்டை உண்டாக்கி, பல மொழிகள் வேற்றுமையை உண்டாக்கும் என்ற கருத்து அடிப்படையில் ஒரு வழிவகை காணவேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, 'இந்தி ஆட்சி மொழியாக ஆக்கப்படுவதால் பிற மொழிகளுக்கு இல்லாத் தனிச் சிறப்பு அதற்கு அளிக்கப்பட்டு பிற மொழிகளின் உரிமை பறிக்கப்படுகிறது; இந்தி மாநில மக்கள் தாய்மொழியில் ஆட்சி நடத்த, இந்தி வாரங்கா மாநில மக்கள் பிற மொழியில் ஆட்சி நடத்த ஏற்பாட்டு சாரி வாய்ப்பு மறுக்கப்

[புலவர் கா. கோவிந்தன்] [3rd April 1965

படுகிறது.' இந்தக் கருத்தை டாக்டர் சுப்பராயன் அவர்கள் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். "இந்தி மத்திய அரசின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டால், இந்தி வழங்காதவரைக்காட்டிலும் இந்திக்காரருக்கு வாய்ப்பும் வசதியும் பெருகி விடும்; பொது வாழ்விலும், ஆட்சித் துறையிலும் இந்தி பேசும் செல்வாக்கு மிக்க ஓர் இனத்தவரின் கை ஓங்கி விடும்; இந்தி வழங்கா மக்களுக்கு மொழி வழங்குவது பற்றிய அடிப்படை உரிமை அறவே தகர்ந்து விடும்" என்ற கருத்தை அவர் தம் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

" Hindi-speaking people will have a great advantage over non-Hindi speakers if Hindi comes to be used for all official purposes of the Union. It is possible that India will have a privileged class of Hindi speakers in all Departments of public life and administration. The fundamental rights of the non-Hindi speakers in the matter of their language are sure to be seriously affected.'

என்ற கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய 'இந்து' பத்திரிகை இதே கருத்துக்களை வழங்கியிருக்கிறது.

"இந்தி வழங்கா மாநிலத்து மாணவர் இந்தி கற்றுக்கொண்டாலும், அம்மொழியில் வல்லுநராதலும், இந்தி மாணவர்களோடு சரிசமமாகப் போட்டியிடுவதும் இயலாது."

என்று தன்னுடைய 2-2-1965-ம் தேதி தலையங்கத்தில் 'இந்து' பத்திரிகை கூறியிருக்கிறது. தமிழக அரசாங்கம் கூட அதே கருத்தைத் தெரிவித்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழக அரசு ஆட்சி மொழிக் குழுவுக்கு வழங்கிய அறிக்கையில் இதே கருத்தை தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறது:—

(1) ஆங்கிலத்தின் இடத்தை இந்தி எத்தனை விரைவில் பிடிக்கிறதோ, அவ்வளவும், இந்திக்காரருக்கு நல்லது.

(2) அவர்கள் மாணவர்கள், மத்திய அலுவலகங்களில் மிக எளிதில் இடம் பிடித்துக்கொள்வார்கள்.

(3) இப்போதைக் காட்டிலும், அலுவல்களை மிக மிக எளிதில் அவர்களால் செய்ய வாய்ப்பாகும்.

(4) தங்கள் வட்டார எல்லைக்குள் வழங்கிவந்த நம் தாய் மொழி பரந்த அளவில் ஆட்சிப் பீடமேறியது கண்டு அவர் பெருமைப்படவும், உள்ளம் நிறையவும் செய்வர்.

(5) இவ்வளவு நன்மையும் ஒரு சிறு முயற்சியோ, இடர்ப்பாடோ இல்லாமலே கிடைத்துவிடும்.

(6) புதிய மொழிக் கொள்கைக்கு ஏற்றவாறு தங்கள் மொழிக் கொள்கையை மாற்றிக்கொள்ளவேண்டிய அவசியமும் அவர்களுக்கு ஏற்படாது.

" From the point of view of the Hindi-speaking people, the sooner the official language of the Union is changed from English to Hindi, the better. Their young men will find it so much easier

3rd April 1965] [புலவர் கா. கோவிந்தன்]

to secure employment in all offices and institutions under the control of the Government of India. They would be able to transact business with and make use of the facilities provided by those offices and institutions much more easily than at present. They could also feel pride and satisfaction about the promotion of their mother-tongue for uses above and beyond the regional limits. All this benefit would accrue to them without any exertion on their part or the slightest inconvenience."

என்ற கருத்தை நம்முடைய அரசு மத்திய ஆட்சி மொழிக் குழுவினிடம் எடுத்துக் கூறியிருக்கிறது. ஆகவே, இதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இன்னொன்று, இந்த நாட்டிலே உள்ள பக்கோ இந்தி வழங்குகிற மக்கள், இந்தி வழங்காத மக்கள் என்று ஒரு மொழியின் பெயரால் கூறி பெயர் சுட்டி உணர்த்தப்படுவது உயர்வு அல்லது இழிவு என்ற முறையில் பெயரிட்டு அழைப்பதுகூட எவ்வளவு பொருத்தமற்ற செயல் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். ஒரு காலத்தில் 'பிராமின்', 'நான்-பிராமின்', 'பார்ப்பனர்', 'பார்ப்பனரல்லாதார்' என்று குறிப்பிடுவது தன்மானத்திற்கு இழுக்கைத் தருவது என்ற கருத்து இந்த நாட்டில் நிலவியது. சென்ற காலத்திலிருந்தே முதல் அமைச்சர் அவர்கள் இந்தியை திணிப்பதில்லை, திணிப்பதில்லை என்று கூறியும், இந்தி மறைமுகமாக திணிக்கப்பட்டு வருகிறது. அதே கருத்தைத்தான் இன்றும் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மிகப் பணிவோடு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்தி கட்டாயம் இல்லை என்று சொல்லுகிறவர்கோ பாராட்டலாம். ஆனால், இந்தி கட்டாயம் இல்லை என்று சொல்லிக்கொண்டே இந்தியை மறைமுகமாக நுழைக்கிற வஞ்சகச் செயலை இந்த நாடு வன்மையாக கண்டிக்கிறது. மறைமுகமாக இந்தி திணிக்கப்படுவதுதான், வஞ்சகமான முறையில் இந்தி திணிக்கப்படுவதுதான், நம்முடைய அரசாங்கத்தின் கருத்தாக இருக்கிறது என்பதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன. அரசு கூறியிருக்கிற கருத்தை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

"கீழ்வரும் காரணங்களால், இந்தி கட்டாயப்படுத்தப்பட்மாட்டாது :—

(1) இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று வற்புறுத்துவது, அதை ஏராளமான மாணவர்கள் படிக்க வேண்டும் என்பதற்காக.

(2) இந்த நோக்கம் கட்டாயப்படுத்தப்பட்டால், நிறை வேறுது போவது மட்டுமல்ல, தோற்றுவிடும்.

(3) அதனால் இந்தி எதிர்ப்பு வலுப்பெறும்.

(4) அம்முறைக்கு மாறாக, எல்லாப் பள்ளிகளிலும் இந்தியை மூன்றாவது மொழியாக ஒப்புக்கொண்டு, அதன் தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய எல்லா வாய்ப்புகளையும் செய்துவிட்டால், இந்திப்படிப்பு, படிப்படியாக உயர்ந்துவிடும். மேலும் மத்திய அரசுப் பணிக்கு வருவோர் அங்கீகாரம் பெற்ற ஒரு இந்திப்

[புலவர் கா. கோவிந்தன்] [3rd April 1965

பள்ளியில் தேர்ச்சி பெற்றுக வேண்டும் என்பதை விதியாக்கி விட்டால், மாணவர்கள் தாமாகவே வலியவந்து, இந்தி கற்றுக் கொள்வர் என்பதில் ஐயமில்லை." என்ற கருத்தை அரசு கூறியிருக்கிறது. எவ்வளவு அச்சமான கருத்து இது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆங்கிலப் படிப்பை நாம் இங்கே படிக்க விரும்புகிறோம் என்று சொல்லி, இதே கருத்தை மறுபடியும் இதே அரசு குறிப்பிட்டிருக்கிறது.

"இந்தி கட்டாயப்படுத்தப்பட்டால், ஆட்சி மொழிக் குழு விரும்பும் நோக்கத்தைத் தகர்த்து எறியத்தக்க, எதிர்ப்பு களும், இடையூறுகளும் உண்டாகும். தமிழக அரசின் இப்போ தைய மொழிக் கொள்கை ஆட்சி மொழிக் குழுவின் நோக்கத்தை மிகப்பயனுள்ள வகையிலும் ஆரவாரமில்லாமலும் நிறைவேற்றி விடும்."

என்பதுதான் ஆட்சிமொழிக் குழுவுக்கு தமிழக அரசு அளித் துள்ள கருத்துரை. மூன்று மொழி என்று கூறிவிடுவது, இந்திக்கு மட்டும் சலுகை காட்டுவது, இந்தி கற்றுல்தான் மத்திய அரசாங் கத்தில் பணி செய்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடும், இந்தி வந்துவிடும் மறைமுகமாக என்பது அரசாங் கத்தின் கொள்கை. இந்த அரசு அதை மறுக்கவில்லை, மறுக்கவும் முடியாது. இந்தி கட்டாயம் இல்லை, கட்டாயம் இல்லை, விரும்பினால் படிக்கலாம் என்று கூறிக்கொண்டிருந்தாலும், மறைமுகமாக இந்தியை திணிப்பதுதான் நோக்கம். இதைப்பற்றிய கருத்து 'இந்து' பத்திரிகையில் தரப்பட்டிருக்கிறது.

"இந்தி ஆட்சி மொழியாவதையொட்டி அதைக் கற்கவேண் டியது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாகி விடுவதால் விரும்பவில்லை என்றால் யாரையும் கட்டாயப்படுத்தவில்லையே என்ற வாதம் முறையான வாதமாகாது"

என்று 'இந்து' பத்திரிகை எழுதியிருக்கிறது.

"The argument often naively advanced that no one is compelled to learn Hindi, if one does not take it, is certainly not a proper presentation of the case, since its study becomes necessary, once it is made the official language."

என்ற கருத்தை 'இந்து' பத்திரிகை எழுதியிருக்கிறது தன்னு டைய 2-2-1965-ம் தேதி தலையங்கத்தில். கட்டாயம் இல்லை என்று கூறிக் கொண்டு, இந்த மறைமுகமான வேலை வேண்டாம் என்று கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தி மட்டும் போதுமா? இந்திய நாட்டிற்கு இந்தி, இந்திய நாட்டைவிட்டுச் சென்றால் ஆங்கிலம் வேண்டும் என்று சொல்லு கிறார்கள். இந்தி மட்டுமே வேண்டும் என்று கூறுவதற்குக் காரணம் என்ன? சாதாரணமாக இருவர் திருவனந்தபுரத்திற்கு போகவேண்டுமென்றால், ஒருவர் நேராக திருவனந்தபுரம் எக்ஸ் பிரஸில் போகலாம் என்றும், இன்னொருவர் மதுரை ஜனதா எக்ஸ்பிரஸில் ஏறி, மறுபடியும் மதுரையிலிருந்து திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் போகலாம் என்று சொல்வது போல்தான் இருக்

கிறது. இந்தியின் இடத்தை ஆங்கிலம் நிரப்பும், ஆங்கிலத்தின் இடத்தை இந்தி நிரப்பாது. ஆங்கிலம் வேண்டும்போது இந்தி ஏன்? வெளிநாடு போவதற்கு ஆங்கிலம் கற்றுக் கொண்டால், அது வெளிநாட்டில் பயன்படுவதோடு அல்லாமல், இந்த நாட்டிலும் பயனுகும் என்பதை நான் இந்தச் சபையிலே தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து, மும்மொழித் திட்டம். சம வாய்ப்பு இருப்பதற்காக இந்தி மொழி கற்கச் சொல்லுகிறார்கள். மும்மொழித்திட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் வட நாட்டில் முதல் மந்திரி மகாநாட்டில் அது அவர்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. மும்மொழிக் கொள்கையை வடக்கே இருக்கிறவர்கள் வன்மையாக எதிர்க் கிறார்கள், மறுக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். மும்மொழித் திட்டத்தைப்பற்றி திரு. சந்தானம் அவர் கள் கூறியிருக்கிறார்கள்.

"மும்மொழித்திட்டம் தேவையற்றது. மும்மொழிக் கொள்கை நாட்டின் ஆக்கப்பணியைப் பெருமளவு பாழாக்கவல்ல ஒரு பைத்தியக்காரத் திட்டமாகும் என்று எண்ணுகின்றேன். நூற்றில் ஒருவருக்குக்கூட வழங்கத்தேவையற்ற ஒரு மொழி யைக் கோடிக் கணக்கான மாணவ மாணவியர்களுக்குக் கற்றுத் தருவது அறிவுடைமையாகாது. அந்த மொழியைப் பயன் படுத்தக் கூடிய வாய்ப்பினுக்கு உள்ளாகும் அந்த ஒரு சதவிகித மாணவரும், தென் இந்திய மக்களோடு, இந்தி அல்லது ஆங்கிலத் தில் தொடர்பு கொள்வதே எளிதாகக் கருதுவர்."

"I am convinced that this is a foolish notion which will involve immense waste of national effort. To teach a language to lakhs of boys and girls of whom hardly one per cent is likely to make the least use of it is not common sense. Even the one per cent, who may have the opportunities to use it will find it easier to communicate with South Indians in Hindi or English".

என்ற கருத்தை திரு. சந்தானம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஆட்சி மொழிக் குழு கூட அதே கருத்தைக் கூறியிருக்கிறது. பெரும்பாலும் வேற்றுமையுள்ள தலைவர்களைக் கொண்ட ஆட்சி மொழிக் குழு அதே கருத்தைக் கூறியிருக்கிறது.

"தன்னுடைய பிற்கால வாழ்க்கையில் இந்தி வழங்கும் மாநிலத்துக்கு வெளியே அதாவது இந்தி அல்லாத வேற்று மொழிகள் வழங்கும் மாநிலங்களுக்குச் சென்று வாழவேண்டிய சூழ்நிலை, ஒரு சில மாணவர்க்கே ஏற்படக்கூடும். அந்நிலையில், ஒரு மாணவன் தன் பள்ளிப் பருவத்தில், எந்த மொழியைக் கற்றானே, அந்த மொழி வழங்காத வேறு மாநிலத்துக்குச் சென்று வாழ நேர்தலும் கூடும். மேலும் தங்கள் தாய்மொழி அல்லாத வேற்று மொழி வழங்கும் மாநிலங்களில் சென்று வாழவேண்டிய சூழ்நிலை பல கோடி மக்களில் ஒரு சிலர்க்கு மட்டுமே உண்டாகும். ஆகவே, குறிப்பிட்ட சில சூழ்நிலையில், குறுகிய பயன் கருதி பயன் படுத்தவேண்டியிருக்கும் ஒரு மொழியை இந்த மாணவர்கள் மீது திணிப்பது முறையாகாது" என்ற கருத்தை ஆட்சி மொழிக் குழு தெரிவித்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் மும்மொழிக்

கொள்கை எப்படி வெற்றிகரமாக நடக்கும் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள்? அங்கே இருக்கிறவர்களுக்கு இரண்டு மொழிகள் கற்றால் போதும், தமிழகத்தில் இருப்பவர்களுக்கு மூன்று மொழிகள் கற்கவேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அங்கே மூன்று மொழிக் கொள்கை, இங்கேயும் மூன்று மொழிக் கொள்கை என்று பறைசாற்றுவதில் பயன் இல்லை. மும் மொழிக் கொள்கை என்று சொல்லுவது பொருத்தமற்ற வாதம் என்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்தி வராது என்ற உறுதிமொழி இருக்கிறது, விழிப் பாக இருக்கவேண்டும், ஒன்றும் நேராது என்ற கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் கல்வி அமைச் சராக இருந்தவர் திரு. சுப்பிரமணியம். அவர்கள் 1960-ல் இந்த மன்றத்தில் கூறிய கருத்துக்களை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"இனிமேல் நடக்கக்கூடிய நடவடிக்கைகளில் வாக்குறுதி மீறப்படுகிறதா என்பதைப் பார்த்துக்கொள்வதில் நாம் சர்வ ஜாக் கிரதையாக இருக்கவேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், நடவடிக்கைகள் எடுக் கக்கூடிய விஷயத்தில் பிரதம மந்திரி அவர்களோடு நின்று விட வில்லை. கொள்கை என்னவென்பதை அவர் வகுக்கலாம். அதை மந்திரி சபை ஒத்துக்கொள்ளவேண்டும். பிறகு பார்லிமெண்டு ஒத்துக்கொள்ள வேண்டும். பிறகு நடவடிக்கை எடுக்கும் பொழுது பல்வேறு நபர்கள் வந்து சேருவார்கள். இந்தி வரு வதற்கு இவ்வளவு தூரம் தாமதப்படுத்த வேண்டுமா . . ."

—நமது முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்—"அது உடனே வருவதற்கு தகுதி இருக்கிறது என்றெல்லாம் நினைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரிகள் அவ்வப்போது வந்து சேர்ந்துவிடலாம். ஆகவே
10–30 a.m. நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஏதாவது அம்மாதிரி தவறுதல் நடக்குமானால் நம்முடைய பிரதிநிதிகள் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த சர்க் கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தால் அதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்."

இம்மாதிரி 5—9—1960-ல் நம்முடைய சட்டசபையில் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். விழிப்பாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களே? அவர் களுக்கே தெரியாமல், அவர்களுடைய இலாகாவிலேயே இந்தியில் தான் நடக்க வேண்டும் என்ற அறிக்கை வந்திருக்கிறது. அதை அவர்களாலேயே கண்டுபிடிக்க முடியவில்லை. எவ்வளவு விழிப் பாக இருந்தாலும் இது நடக்கும். உறுதி மொழி இருக்கிறது என்று அமைச்சர் சொல்லுகிறார்கள். உறுதி மொழி இருக்கிறது, நாம் ஏன் பயப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் நாம் பார்ப்பது என்ன? இன்றைக்கு டிக்கட்டு இந்தியில் அச்சடிக்கப் பட்டு வழங்கப்படுகிறது. அதுவும், தமிழகத்திலே, இத்தனை ஆயிரம் பேர்கள், நூற்றுக்கணக்கான பேர்கள் உயிரிழந்த பிறகு, இந்தியில்தான் டிக்கட்டு வந்திருக்கிறது. இவ்வளவும் ஆனபிறகு

3rd April 1965] [புலவர் கா. கோவிந்தன்]

இன்றைக்கு உறுதிமொழிக்குச் சட்ட உருவம் கொடுக்கப் போகிறார்கள். அப்படிக் கொடுக்கும் உருவம் இந்தி வெறியைத் தடுக்க முடியும் என்று அமைச்சர் நினைக்கிறார்களா? இதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வடக்கே இருந்த நம்முடைய தலைவர் டாக்டர் சுப்பராயன் என்ன சொன்னார்கள்? 'இந்தியைப் பரப்புவது, இந்திய மக்கள் ஒற்றுமைக்கும் பிறவிக்கு கடனுக்கும் என்று இந்திக்காரர்கள் எண்ணுகிறார்கள். அது மட்டுமன்று. அதை மறுப்பதோ, அல்லது ஆங்கிலம் சிறிது காலம் வழங்கட்டும் என்பது போன்ற கருத்துரைகளை வழங்குவதோ, தேசத் துரோகமாகும் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள்' என்று டாக்டர் சுப்பராயன் இந்தி வெறியர்கள் போக்கு பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. செய்தித் துறை அமைச்சு எல்லாம் இந்தியில் நடக்கவேண்டும் என்ற அறிக்கை விட்டது சம்பந்தமாக, அந்த அறிக்கையைப் பற்றி திரு. லால்பகதூர் சாஸ்திரியிடம் கேட்ட போது, அவர் சிரித்துக்கொண்டே அவ்வளவு அலட்சியமாக, 'டெல்லியில் இருக்கிறவர்கள் சரளமாக இந்தி பேசுகிறவர்கள் தானே' என்று சொன்னார்கள். கூட்டங்களில், மற்றவகைகளில் எல்லாமே இந்தியில்தான் நடக்கவேண்டும் என்று அறிக்கை வெளியிட்டு இருக்கிறதே என்று பத்திரிக்கைக்காரர்கள் கேட்டபோது, கனம் லால்பகதூர் சாஸ்திரி ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு, 'டெல்லியில் இருக்கிறவர்களுக்கு இந்தி சரளமாகத் தெரியும்' என்றார்கள் என்றால், அவருடைய மனப்போக்கை கனம் முதல் அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற் காகத்தான் நான் அதை இங்கே குறிப்பிடுகிறேன். இதற்கெல்லாம் காரணம் என்ன? நம்முடைய அமைச்சர்கள் இந்த நாட்டின் நிலையை நல்ல முறையில் அங்கே எடுத்துச் சொல்லவில்லை. இந்த நிலைக்குக் காரணம். இந்தியை அட்சிமொழியாக்குவதில் தமிழகம் எந்த அளவு கொதிப்பு அடைந்திருக்கிறது என்பதை வடவர்க்கு உணர்த்தத் தவறிவிட்டதே ஆகும். தென்னக மக்களின் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்தில் வீற்றிருக்கும் காங்கிரஸ்காரர்கள் ஆற்றல் இழந்தவர்களாகிவிட்டார்கள். அந்த முயற்சியில் தோற்று விட்டார்கள். இதை நான் சொல்லவில்லை. 'இந்து' பத்திரிகை கன்னையுடைய 26-1-1965 தேதி தலையங்கத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் கடமையில் தவறிவிட்டார்கள் என்றுதான் நான் குற்றம் சாட்டுகிறேன். இன்னமும் தவறு செய்து கொண்டே இருக்கிறார்கள். ஆகவே, அந்த முயற்சியில் இனியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, நம்முடைய முதல் அமைச்சர் விஜைபாஜி உண்ணிவிரதம் இருந்தார்கள், ஆகவே ஆங்கிலத்தைத் தினிக்கக் கூடாது என்று சொல்லுகிறார்கள். எங்கே இருக்கிறது தினிப்பு? கனம் முதல் அமைச்சருக்குப் பணிவோடு கெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விஜைபாஜி ஒரு வட இந்தியர்தான். "துறந்த மூனிவரும் துறப்பரோ மக்கள் மேல் காதல்" என்பதற்கு இணங்க, அவரும் தன் வட இந்தியர்களைக் காப்பாற்றத்தான் உண்ணு

விரதம் இருந்தார்கள். ஆகவே, அதற்கு எந்த மதிப்பும் கொடுக்க வேண்டாம் என்று மிகப் பணிவோடு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே, ஆங்கிலம் திணிக்கப் படுகிறது என்பது பொருந்தாத வாதம். இல்லாத ஒன்றை கொண்டு நுழைத்தால்தான் அது திணிப்பு ஆகும். ஆனால் ஆங்கிலம் அங்கே ஏற்கனவேயே இருக்கிறது. எங்கே திணிப்பு? முதல் அமைச்சர் ஆங்கிலம் திணிப்பு என்று சொல்லுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று எடுத்துக்காட்ட விரும்பு கிறேன்.

அடுத்து, இன்றைக்கு கனம் முதல் அமைச்சர் நிரந்தர இரு மொழிபற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் என்ன விளக்கம் கொடுக் கிறார்கள்? நிரந்தர இருமொழி என்பது புதிய கருத்து; இதற்கு அரசியல் நிர்ணயச் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும்; கால வரம்பற்ற இருமொழி, ஆட்சிமொழிச் சட்டத்தில் ஏற்கனவே இருக்கிறது, இந்தி வழங்கா மாநிலங்களின் ஒப்புதலோடு நிரந்தர இரு மொழிக் கொள்கையைப் போராடிப் பெறுவேன் என்று சொல்லுகிறார்கள். இந்த விதமாக அமைச்சர் அவர்கள் 11–2–1965-ல் சொல்லியிருக்கிறார்கள். சட்ட உருவம் கொடுக்க சட்ட வல்லுநர்களை அழைத்துக் கலந்தாலோசித்து இருக்கிறார்கள் அமைச்சரைக் கேட்டால் என்ன சொல்லுகிறார்கள்? ராஜினாமா செய்த அமைச்சர்களே சொல்லிவிட்டார்கள், அதலால் நான் மாற் றிக்கொண்டேன் என்கிறார்கள். அவர்களுக்கும், இவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம். அவர்கள் செய்ததில் இவர் களுக்கு எரிச்சல் ஏற்படலாம். அவர்கள் சொல்லிவிட்டார்கள், நான் மாற்றிக் கொண்டு விட்டேன், அவர்களே சொல்லி விட்டார்கள் என்பதெல்லாம் தவறான வாதம் என்பதை கனம் அமைச்சர் உணரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு இருக்கும் நிலை, இந்தி மொழி ஆட்சிமொழியாவ தலில், மாணவர் சமுதாயம் மட்டும் பாதிக்கப்படுவதன்று. அவர் களோடு கூட, வணிகத்துறை, அஞ்சல் துறை இன்னும் வாணிகம் காரணமாகப் பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இது மாணவர்களைமட்டும் பாதிக்கும் செய்தி அல்ல. ஆதலால் அவர்களுக்கு உத்தியோகம் கொடுத்து, அதற்கு என்ற மாடரேஷன் வைத்துச் செய்துவிடலாம் என்பதல்ல. அது தவறான கொள்கையாகும். ஆகவே, நம்முடைய தமிழ் மாண வர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்துவிட்டார்கள். இன்னும் போராசிரியர்கள், துணைவேந்தர்கள், வாணிகச் சங்கங்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், அரசியல் கட்சிகள் இவர்களெல்லாம் கலந்தாலோசிக்கப் படவேண்டும். இவர்களெல்லாம் ஏற்கனவே கூறிவிட்டார்கள், ஆங்கிலம் ஒன்றுதான் வேண்டும் என்று. இவ்வளவு பேரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்த பிறகு இன் றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் நிச்சயிக்க வேண்டும் என்பது சரியானதாக இருக்காது. நிச்சயமாகச் சொல்லுகிறேன், இன் றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களும், மறைமுக ஓட்டு அளிப்ப தாக இருந்தால், ஆளும் கட்சிக்காரர்களும், கட்சிக் கொரடா இல்லாமல் இருந்தால், ஆங்கிலம் வேண்டும் என்றே ஓட்டுக் கொடுப் பார்கள், இவ்வளவு தமிழ் தாட்டுப் பெரியவர்கள் தெளிவாக

3rd April 1965] [புலவர் கா. கோவிந்தன்]

எடுத்துச் சொன்ன பிறகும், இந்த 136 பேர்கள் இந்த நாட்டின் மொழியை நிச்சயிக்க வேண்டும் என்பது சரியானதாக இருக்காது. ஆகவே, இந்தத் தமிழ்நாட்டு மக்களின் விருப்புக்கு மாறான முடிவை எடுக்க வேண்டாம் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே, சட்ட மன்றத்திலே கொரடா மூலம் ஓட்டு எடுப்பதை விட்டு விட்டு, மறைமுகமாக ஓட்டு அளிக்கும் முறையைக் கையாள வேண்டும்.

கடைசியாக, கனம் முதல் அமைச்சர் அடிக்கடி திராவிட முன்னேற்றக் கழகத்தில் குழப்பம் இருக்கிறது, குழப்பம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எங்கே இருக்கிறது குழப்பம்? குழப்பம் இல்லை என்பதை எடுத்துக்காட்ட, கழகக்கொள்கையை விளக்க விரும்புகிறேன். 5-9-1960-ம் தேதியன்று சட்டமன்றத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள். "ஒரு மொழிதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்கிற எண்ணம் நீக்கப்பட்டு எந்தெந்த மொழிகள் ஆட்சி மொழிகளாவதற்குத் தகுதி படைத்தனவோ அவைகள் எல்லாம் ஆட்சி மொழிகள் ஆக வழிவகைகள் செய்யப்படவேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள். அதோடு "இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவை மறுமுறையும் பரிசீலனை செய்து 'இந்தியாவிற்கு இந்தி ஆட்சிமொழி, அந்த இந்தி, தேவநாகரி லிபியில் இருக்கும், என்ற பகுதியை அறவே நீக்கிவிட்டு இந்தியாவில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கும். இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற மொழிகளில் ஒன்றோ, பலவோ ஆட்சிமொழியாவதற்கான தகுதி பெற்றதாக கருதப்படுகிறவரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும், என்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்." அதே தேதியில், அறிஞர் அண்ணா சட்ட சபையில் என்ன சொன்னார்கள்? "தமிழ் தெரிந்தவர்கள் இருக்கக்கூடிய இடத்தில் மணியார்டர் பாரம்கள், கார்டுகள், கவர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும்; ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கிலும் ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும்; மைசூரில் கன்னடத்திலும் ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும்; இந்திப் பிரதேசத்தில் இந்தியிலும் ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும் என்ற முறையை நாம் ஒப்புக்கொண்டால் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணுவதாக இருக்கும்" என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். 1960-ல் எங்கள் கழகத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட தீர்மானமும் இதையே எடுத்துக் காட்டுகிறது.

"And on such consideration, this House urges the State Government that the Central Government be requested to take immediate steps to amend the Constitution so as to provide for the continuance of English as the official language until such time when some of the modern Indian languages attain suitability for acceptance as Official language of the Union."

என்று தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

அதோடு ராஜ்ய சபையில் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறார்கள் "அரசாங்கத்தின் ஆதரவல்லாமல், பொதுமக்களின் இயற்கையான விருப்பத்தின் வீச்சுவால் ஒரு பொதுமொழி உருவாவதை நான் விரும்புகிறேன்" என்று.

[புலவர் கா. கோவிந்தன்] [3rd April 1965

" He was in favour of a *lingua franca* for India developing in course of time, through the natural will of the people and not with the backing of the Government."

அவர்கள் மேலும் சொன்னார்கள். "14 மொழிகளும் முழு வளர்ச்சிபெற அனுமதிக்கப் படுதல் வேண்டும். அவ்வாறு முழு வளர்ச்சி பெற்ற நிலையில் அவற்றுள் தகுதியுடைய ஒரு மொழி இணைப்பு மொழி ஆதல் வேண்டும். அது எந்த மொழியாதல் கூடும் என்பதை இப்போது குறிப்பிட விரும்பவில்லை" என்று.

" All the fourteen languages in the country should be allowed to develop and the one which was most suitable should become the link language though he was not prepared to name it at this stage."

இன்னும் அவர்கள் சொன்னது என்ன வென்றால் "தென்னிந்திய மக்கள் இந்திமொழியையும், வடஇந்திய மக்கள் பிற இந்திய மொழிகளையும் சரளமாக வழங்கும் ஒரு காலத்தை எதிர் நோக்கு கிறேன். அந்நாள் வரை, ஆங்கிலமே ஆட்சிமொழியாகட்டும்".

" He visualised a stage when people in the South could talk fluently in Hindi, while those in the North could converse with them in the various regional languages. Till such time, English should continue to be an official language."

இந்தக் கருத்து எந்த வகையில் முன்னுக்குப் பின் முரண் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* திரு. சா. கிருஷ்ணசாமி நாயுடு : கனம் சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களால் ஆட்சி மொழிக் கொள்கை விவாதம் துவக்கி வைக்கப்பட்டதை அனுசரித்துச் சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

முதல் அமைச்சர் அவர்கள் இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த போது, கடந்த சில மாதங்களில் நடைபெற்ற கசப்பான எண்ணங்கள், கசப்பான நிகழ்ச்சிகள் இவைகளையெல்லாம் மனத் திலிருந்து ஒதுக்கி வைத்துவிட்டு, மிகவும் சாவதானமாக, நிதான மாக, நாமெல்லோரும் உணர்ச்சி வசப்படாமல், எதிர்காலத்தில் இந்த நாட்டிலே ஆட்சி மொழி எவ்வாறு உருவாக வேண்டும் என்பதை நிதானமாகவும், நடுநிலைமையுடனும், அவரவர்களுடைய மனத்தில் பட்ட விஷயங்களையெல்லாம் இங்கு அறிவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை இந்த விவாதத்திலே தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் இந்த விவாதத்தைத் துவக்கிவைத்தார்கள்.

அவர்கள் துவக்கிவைத்த மாதிரியே அவருடைய பேச்சும் சமீப காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளோ அந்த எண்ணங்களோ அவருடைய மனத்தில் துளி அளவும் இல்லை என்பதை நமக்கு நினைவுபடுத்திற்று. அவ்வாறு அவர்கள் பேச்சும் நிதான மாக இருந்தது என்பதில் சந்தேகமே இல்லை. இந்தச் சபையில் உள்ள நாம் அனைவரும், அவர்கள் துவக்கி வைத்த முறையிலே, அவருடைய உள்ளத்தில் அந்தச் சந்தர்ப்பத்தில் குடிகொண்டிருந்த நிதானமான முறையிலே இந்தப் பிரச்னையை அணுகினால் நல்ல பயன் ஏற்படும் என்று நான் கருதுகிறேன்.

3rd April 1965] *[திரு. சா. கிருஷ்ணசாமி நாயுடு]*

இந்த விவாதம் துவக்கி வைக்கப்பட்டதை அனுசரித்து, அவர்கள் சர்க்கார் தரப்பிலோ அல்லது காங்கிரஸ் கட்சியின் தரப்பிலோ இந்தச் சபையினுடைய முடிவு இன்னவாக இருக்க வேண்டும் என்று ஒரு தீர்மானமும் கொடுக்காமல் இருந்திருக்கிறார்கள் என்பதையும் சில அங்கத்தினர்களுடைய கவனத்திற்கு, உங்கள் மூலமாக, நான் கொண்டுவர விரும்புகிறேன். அவ்வாறு மிகப் பெருந்தன்மையோடு அவர்கள் இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள் என்பதை எல்லாக் கனம் அங்கத்தினர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நினைப்பூட்ட விரும்புகிறேன்.

இந்தச் சபையில் உள்ள கனம் அங்கத்தினர்கள், மொழிக் கொள்கை சம்பந்தமாக இங்கே என்ன கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அப்படியே மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆட்சி மொழிச் சட்டம் உருவாக்கூடிய இந்தச் சமயத்தில் திருத்தத்தைக் கொண்டுவந்து அனைவருடைய சம்மதத்தையும் பெறக்கூடிய வகையில் நாட்டில் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கும் முறையிலே முயற்சி எடுத்துக்கொண்டு, தமிழ்நாட்டுச் சட்டசபையில் மொழி சம்பந்தமாகக் கொண்டுள்ள கருத்துக்கள் என்ன என்பதை, சட்டசபையில் அங்கத்தினர்கள் பேசிய விஷயங்கள் அனைத்தையும் அப்படியே மத்திய அரசினருக்கு அனுப்புவது என்ற பரந்த நோக்கத்தோடு, அதைத் தொடர்ந்து ஒரு திருத்தமோ, தீர்மானமோ எதுவும் சபையில் சமர்ப்பிக்காமல் இருந்திருக்கிறார்கள் என்பதை அனைவருடைய கவனத்திற்கும் நான் கொண்டு வருகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பிலும், சுதந்திராக் கட்சியின் சார்பிலும் இங்கே திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அரசாங்கத் தரப்பில் மூதலமைச்சர் அவர்கள் எந்த ஒரு திருத்தத்தையும் கொடுக்கவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன். அந்த அளவுக்குப் பெருந்தன்மையோடு அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு தீர்மானம் இங்கே கொண்டுவந்து நிறைவேற்றப்பட முடியும் என்றாலும், அப்படிக் கொண்டு வாமல், பரந்த அளவில் இந்தச் சபையில் உள்ளவர்களின் எண்ணங்கள் என்னவாக இருந்தன என்பதை ஆட்சி மொழிச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிற மத்திய அரசாங்கத்தினர் அறிந்து கொள்ளட்டும் என்பதற்காக முதல் அமைச்சர் அவர்கள் திருத்தமே கொடுக்காமல் இருந்திருக்கிறார்கள் என்பதைத் தயவு செய்து கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் கவனத்தில் கொள்ளும் படியாக நான் கேட்டுக் கொள்கிறேன். எதிர்த் தரப்பில் உள்ளவர்கள் கொடுத்திருக்கும் திருத்தங்களை அவர்கள் வற்புறுத்தாமல் இருந்துவிடுவார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால், அவர்கள் எவ்வாறு கருதுகிறார்களோ, அவ்வாறு நல்ல சூழ்நிலையில் இந்த விவாதம் இங்கே துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது. விவாதம் துவக்கி வைக்கப்பட்ட அன்று ஏப்ரல் 1-ந் தேதியானதால்தானே

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [3rd April 1965

என்னவோ, ஆரம்பத்திலே கொஞ்சம் நிதானமாக அந்த விவாதம் ஆரம்பமாயிற்று. போகப் போகக் கொஞ்சம் சூடு பிடித்துக் கொண்டது. இன்று தேதி மூன்று. மூன்றும் தேதி ஆரம்பத்தில் மிகவும் சுப சூசகமாக இருந்தது. எல்லா அங்கத்தினர்களும் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்கள். சுமுகமாகப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. நான் மேலே சொன்னபடி, முதல் அமைச்சர் அவர்கள் எந்தக் கருத்தோடு இந்த விவாதத்தைத் துவக்கி வைத்தார்களோ, அந்த எண்ணங்கள் தமிழ்நாட்டுச் சட்ட சபையிலும் ஒவ்வொரு அங்கத்தினருடைய பேச்சிலும் எப்படிப் பிரதிபலித்திருக்கின்றன என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கும் முறையில், நிதானம் இழக்காமல், சாவதானமாக, எதிர்காலத்தை மனத்திலே கொண்டு நம்முடைய நாட்டின் எதிர் காலத்தையும், நம்முடைய சந்ததியாருடைய எதிர்காலத்தையும் மனத்திலே கொண்டு, கருத்துக்களைத் தெரிவிப்பது நலம். தம் பாரதம் 'ஒரே நாடு' என்று அனைவரும் ஐயந்திரிபுற ஒப்புக்கொண்டுவிட்ட இந்த நிலையிலே அதிலே சந்தேகம் இருக்க முடியாது. யாரும் அதை மறுக்கவும் மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்த நிலைமை இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்டிருக்கிறது. நாட்டுப் பிரிவினையோ, பிரச்னையோ நாடு இரண்டாக்கப்பட வேண்டும் என்ற பிரச்னையோ முழக்கங்களோ நம்முடைய மனத்திலே கிடையாது. அத்தகைய ஒரு நல்ல நிலைமையைத் தோற்றுவித்ததற்காக நான் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'மனத்தில் ஒன்றும் வெளியில் ஒன்றும் சொல்லியிருப்பார்களோ' என்று அறிஞர் அண்ணாதுரை அவர்களை ராஜ்ய சபையில் குறிப்பிட்டுக் கேட்டபோது கூட, "சீனப் படையெடுப்பு எற்பட்டபோது எங்களுக்கு இந்த உணர்ச்சி தோன்றியது என்பது உண்மை தான், உதாரணத்துக்காக அதை ஒரு சின்னமாகத்தான் சொன்னேனே தவிர, நிரந்தரமாகவே நாடு ஒன்றாக இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு நாங்கள் வந்து விட்டோம், அதில் சந்தேகம் வேண்டியதில்லை" என்று பதில் அளித்திருக்கிறார்கள், திரு. அண்ணாதுரை. அவர்களின் கருத்துகள் அந்த வகையிலே எல்லாம் மாறுதல் அடைந்துகொண்டு வருகிறது. ஒரே நாடு, பெரிய தேசம், நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்தவர்கள் நாம். புதிய புதிய கொள்கைகள் உருவாக்கிக்கொண்டு வரும் சந்தர்ப்பத்தில் அவர்களுடைய மனத்திலே தோன்றக்கூடிய எண்ணங்கள் அலிக்கழிக்கப்படுவது உண்டு; உணர்ச்சிவசப்படுவதும் உண்டு. பல்வேறு வித்தியாசங்கள் பல்லாண்டுகளாக இருந்து வந்திருக்கின்றன. அவைகளெல்லாம் மாறுபட்ட நிலைமையிலே ஒரு முடிவுக்கு வரும்போது, ஒரு ஒட்டுமொத்தமான எண்ணத்தை உருவாக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் வரும்போது இத்தகைய கருத்து வேறுபாடுகள் இருப்பது சகஜம் தான். அந்தக் கருத்து வேறுபாடுகளைத் தெரிவிக்கும் முறையில் கடந்த காலத்தில் என்னதான் நடந்துவிட்டாலும் கூட, இனிமேல் எந்த விதமான உணர்ச்சிக்கும் வசப்படாமல் நாம் இந்தப் பிரச்னையை அணுகவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

3rd April 1965] *[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]*

எல்லா பாஷைகளிலும் ஏதாவது குறைபாடு இருக்கக்கூடும். இந்தி பாஷையில் மட்டும் தான் குறைபாடு என்பது அல்ல. இந்தியைப்பற்றிச் சொல்லும்போது மட்டும், 'அது இப்படிப்பட்டது, அப்படிப்பட்டது' என்று குறைத்துச் சொல்லக்கூடாது. ஒருவர் குருடாகவே இருந்தாலும், அவரைப் பார்த்துக் 'குருட்டுப் பயலே' என்று சொல்லும்போது தான் அவருக்கே ரோஷம் வருகிறது. ஆகையால், நல்ல மொழிக் கொள்கையொன்றை உருவாக்கவேண்டும் என்று சொல்லும்போது, இன்னொரு பாஷையைத் தாழ்த்தி, 'அது வளமான பாஷை அல்ல' என்றோ, 'அது கடுமுரடாக இருக்கிறது' என்றோ சொல்வோமானால், நாம் அவ்வாறு உணர்ச்சிவசப்படுவது போல, அவர்களும் உணர்ச்சிவசப்பட நியாயம் உண்டு. இந்தச் சபையில் பேசும்போது கூட நாம் அவ்வாறு பேச வேண்டாம். சுதந்திராக் கட்சித் தலைவர் இங்கே கொடுத்திருக்கும் திருத்தத்திலே கூட அப்படிப்பட்ட வாசகங்கள் காணப்படுகின்றன. 'இந்தி வளமில்லாத பாஷை' என்று அதிலே அவர்கள் சொல்கிறார்கள். இந்தியை நானும் கொஞ்சம் கற்றிருக்கிறேன். 'இருக்கிறேன்' என்பதற்கு 'ஹூம்' என்று மூக்கினால் பேசினால் போதும். அவ்வளவு சுருக்கமாக இந்தியில் அமைந்து விடுகிறது. இந்தியில் எட்டுப் பக்கம் உள்ள ஒரு விஷயத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தால் பத்துப் பக்கங்களுக்கு வரும். அதையே தமிழில் மொழி பெயர்த்தால் 12, 14 பக்கங்களுக்கு வரும். ஆக, ஒவ்வொரு மொழிக்கும் சில தனிச் சிறப்புகள் இருக்கின்றன. இதைச் சொல்வதனால், நான் ஏதோ தமிழ் வளத்தைக் குறைத்துப் பேசுகிறேன் என்பது அல்ல. தமிழை நன்றாகச் சுவைத்து உணர்ந்தவன் நான். அதிலிருந்து ஒரு எழுத்தைக் கூட எடுக்கக் கூடாது, தமிழுக்கு எந்த விதமான கௌரவக் குறைவும் ஏற்பட்டுவிடக் கூடாது. தமிழின் மீது எனக்குப் பாசம் உண்டு. அன்பு உண்டு. நானும் சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. கணேசன் அவர்களும் நீண்ட நேரம் மாற்றி மாற்றிக் கவிதைகள் சொல்லிக்கொண்டே பிரயாணம் செய்வதுண்டு.

> "அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றில் பிறந்த
> தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
> குணமதிகமாம் அருணைக் கோபுரத்தின் மேவும்
> கணபதியைக் கைதொழுதக் கால்"

என்று ஒரு பாட்டுச் சொன்னால் அப்பாட்டின் கடைசிவரியின் முதல் எழுத்துக்கு மற்றவர் பாட்டுச் சொல்ல வேண்டும். இப்படி 'அ'விலிருந்து ஆரம்பித்து பாட்டாகவே மணிக்கணக்காகச் சொல்வோம். மதுரையிலிருந்து காரைக்குடி வரையில் பிரயாணம் செய்யும்போது நாங்கள் போட்டியாகச் சொல்லிக்கொண்டு போவதுண்டு. அம்மாதிரியான பாட்டுக்களெல்லாம் இப்பொழுது என்னுடைய ஞாபகத்திற்கு வருகின்றன. எப்படி நமக்குத் தமிழின் மீதுள்ள அன்பு குறைந்து போகும்? தமிழ்ப் பற்று எப்படிப் போய்விட முடியும்? போகாது. அதேபோல், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கும் அதே உணர்ச்சி இருக்கக் கூடும். 'இந்தி வளம் குறைந்த பாஷை, அதிலே குறைபாடு இருக்கிறது' என்று சுட்டிக் காட்டுவது இந்தச் சந்தர்ப்பத்தில்

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [3rd April 1965

சரியல்ல என்று நான் கருதுகிறேன். 'இந்தி வளம் குறைந்திருக்கிறது' என்று சொல்லக்கூடிய வார்த்தைகள் சுமுகமான வார்த்தைகளா? இணக்கமான வார்த்தைகளா? என்று சிந்திக்க வேண்டும். ஆக, வெறுப்புத் தட்டக்கூடிய வார்த்தைகளைச் சொல்லாமல் இருக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். வேறு மொழிகள் பேசக்கூடியவர்கள் தங்கள் மொழிகளில் வரக்கூடிய, தொனிகளைக் குறிக்கும் சொற்கள் தமிழில் இல்லை என்று சொல்வார்களானால் நாம் அதை மறுக்க முடியுமா? ஆங்கிலத்திலும் சரி, இந்தியிலும் சரி, சமஸ்கிருதத்திலும் சரி, அவற்றில் உச்சரிக்கக்கூடிய தொனிகளுக்குரிய எழுத்துக்கெல்லாம் தமிழில் உள்ளனவா என்று நாம் சிந்திக்கவேண்டாமா? அதுவும் ஒரு குறைபாடுதானே? இம்மாதிரி ஒவ்வொரு மொழியிலும் சிற்சில குறைபாடு இருக்கிறது. அந்தந்த மொழி பேசக்கூடியவர்கள் அந்தந்த ஸ்தலத்தை விட்டு வெளியே செல்லாமல் இருந்த காலத்தில், இந்தக் குறைபாடுகள் தோன்றுமல் இருந்திருக்கலாம். உலகம் சுருங்கிவிட்டது, உலகம் உள்ளங்கையில் இருக்கிறது என்று சொல்லக்கூடிய காலத்தில் நாம் இன்று இருக்கிறோம். எத்தனையோ மொழிகள் பேசக்கூடிய பிராந்தியங்களை ஒரே நாளில் கடந்து செல்லக்கூடிய நிலையில் இன்று மனிதன் முன்னேறியிருக்கிறான். தன் மொழி, தன் பிராந்தியம் என்று எண்ணிக் கொண்டிருந்த காலம் போய், உலகத்தையே ஒன்றாக எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், பிற மக்கள் பிற நாடுகள் இவற்றோடு தொடர்பு கொள்ளும்போது நாம் எப்படிப் பட்டவர்களாக இருக்க வேண்டியிருக்கிறது? அப்பொழுது ஒவ்வொரு பாஷையிலும் குறை இருக்கிறது. 'ஆங்கிலம் தான் சிறந்த சஞ்சீவியா?' என்று நான் கேட்கிறேன். ஆங்கிலத்தில் 15 எழுத்துக்கள் கொண்ட வார்த்தையில் ஒருசில எழுத்துக்கள் தான் உச்சரிக்கப்படுகின்றன. ஒரு வார்த்தையில் உள்ள பல எழுத்துக்கள் உச்சரிக்கப்படாத நிலையும் இருக்கிறது. But என்ற வார்த்தையும், Put என்ற வார்த்தையும் ஆங்கிலத்தில் இருக்கின்றன. இரண்டுக்கும் வெவ்வேறு எழுத்துக்கள் இருந்தாலும், உச்சரிப்பில் 'பட்', 'புட்' என்றெல்லாம் வருகின்றன. இந்தக் குறைபாடு அங்கே இல்லையா என்ன? நான் ஆங்கிலத்தைக் குறைத்துப் பேசுவதாக நினைக்கக்கூடாது. ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு குறைபாடு இருக்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஒருவகையில் நான் சொல்வேன்; பாரத நாட்டில் இருக்கக்கூடிய மொழிகளில் சுறுசுறுப்பான காலத்தில் படித்துக் கற்றுக் கொள்ளக்கூடிய மொழி இந்தியைத் தவிர வேறு இல்லை. இதை நான் தைரியமாகச் சொல்வேன். நான் சிறையில் இருந்தபோது ஐந்து மாதங்களில் இந்தியைப் படித்து பிரேம் சந்த் எழுதியுள்ள சிறு கதைகளில் ஒன்றை மொழி பெயர்த்தும் இருக்கிறேன். அப்படி இந்தி சுலபமாகக் கற்றுக்கொள்ளக் கூடிய பாஷை. இன்றையதினம் சென்னை ரெயில்வே நிலையம், மதுரை ரெயில்வே நிலையம் ஆகிய இடங்களில் உள்ள போர்டர்களுக்கு எல்லாம் இந்தி தெரியும். வடக்கே இருந்து வருகிறவர்களுக்கு இங்கே பாஷை கஷ்டம் இல்லை. இதை அனைவரும் நடு நிலையில் இருந்து பார்த்தால் உணர முடியும். வட நாட்டைத் தெடுத்துக்கொண்டால்

3rd April 1965] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

தமிழர்கள் இல்லாத இடம் கிடையாது. போபாலில் இருக்கிறார்கள். பன்னிரண்டாயிரம் சிறுவர்கள் டெல்லியில் படிக்கிறார்கள். துர்க்காபூரை எடுத்துக் கொண்டால் 360 தமிழர் குடும்பங்கள் இருக்கின்றன. ஒரு கூட்டம் என்றால் எந்த இடத்திலும் ஆயிரம் தமிழர்கள்வந்து கூடமுடியும். இப்படி வட நாட்டோடு தொடர்பு கொண்டிருக்கிறோம்.

ஆகையால் நாம் ஒரு குறுகிய பிரதேசத்தை மனதில் வைத்துக்கொண்டு சிந்திக்கக் கூடிய விஷயம் அல்ல இது. இங்குள்ளவர்கள் இந்தி படிக்க வேண்டும் என்று விரும்பினால் அதற்கு இந்த அரசாங்கம் வழிவகை செய்து கொடுத்தால் அதை இந்தித் திணிப்பாகவும் எடுத்துக் கொள்ள முடியாது. என்னுடைய குழந்தைகளை இந்தி படிக்க வேண்டும் என்றால் அதற்கு அரசாங்கம் வழி செய்யத்தான் வேண்டும். பொதுவாக நிதான மாக ஆராய்ந்து பார்த்தால் நாம் நம்முடைய இளைஞர்களுக்கு எது நன்மை, நம்முடைய நாட்டுக்கு எது நன்மை என்பதை எதிர்காலத்தைக் கொண்டு முடிவு செய்ய வேண்டும். நாட்டின் நன்மைக்காக, நம் வருங்காலச் சந்ததிகளின் நன்மைக்காக நம்முடைய வைராக்கியத்தைக்கூட விட்டுக் கொடுக்க வேண்டும். அத்தகைய நடுநிலை மனப்பான்மை நமக்கு வர வேண்டும். ஆகவே தான் இந்தத் தீர்மானத்திற்குக் கொடுத்துள்ள திருத்தங்களை கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாபஸ் பெற வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த விவாதத்தில் கலந்து கொள்கிறவர்கள் கூட கடுமையான வார்த்தைகளை உபயோகப் படுத்தாமல், கலந்து கொள்ளவேண்டும். முதல் அமைச்சர் அவர் களும் இங்கு பேசுகின்ற கனம் அங்கத்தினர்களுடைய கருத்துக் களை அப்படியே மத்திய அரசாங்கத்திற்கும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I would like to say a few words on the discussion which has been initiated by the Hon. the Chief Minister on the Official Language Policy. I fully agree with him when he pointed out that while discussing the same the House must bear in mind the provisions of the Constitution and also the integrity and solidarity of the Nation as a whole.

Sir, the language controversy which has assumed much importance in recent times has aroused the feelings of several people in our State in several ways. With all that, I wish to point out that the official language, regional language and the link language and all these matters had been properly considered even at the time the Constitution was framed, and subsequently when the Official Language Commission was appointed. The various factors had already been taken into consideration and had been mentioned in the various reports of those bodies. The pros and cons and the consequences had all been thoroughly discussed in the past.

As the time at my disposal is rather short, I wish to confine my remarks to only a few points. When the country was fighting the British Government in those days, the leaders of the freedom movement, the liberators, had adopted several methods, several policies

in driving out the British from the Indian soil. One such thing that they had included even in their Election Manifesto was that they would carve out the States on a linguistic basis after independence. Of course, there are various ideas and views on the question of carving out States on linguistic basis. We have also seen the worst horrors of the formation of States on linguistic basis. I do not know how far we have improved on account of the various States having been carved out on the basis of language. We might have developed to some extent. We might have failed in certain other respects. But that apart, the consolidation of the Nation, the solidarity of the Nation as a whole need not be sacrificed on account of the carving out of States on the basis of language. Because, our aim is supreme. We wanted Swaraj and we have established Swaraj. At the time when they were discussing the question of official language a Committee of Parliament was also appointed to go into this question. The Report of the Committee of Parliament on Official Language was submitted. After some time, I happened to go to Delhi. There our most respected leader Mr. Ananthasayanam Iyengar, the present Governor of Bihar introduced me to one Mr. Thakurdas Bhargava, a senior Parliamentarian and senior Congressman who is no more now. He hailed from the Punjab. I would now like to quote from what he has stated in his note, as a member of the Committee and commend the same for the consideration of this House dispassionately. This is what he has stated.

" The comity of Language in the long run apart from official aspect a great cementing force and makes for National solidarity. All the regional languages are our National languges and we should make all possible endeavours to see that they progress as much as possible. Hindi whatever anybody may say is and is at least on the way to become the *lingua franca* of India. We want to enrich it with contributions from all the regional languages with words and expressions which are in common use so that all parts of India may regard it and use it as their common language for mutual intercourse. There is no rivalry or domination between Hindi or regional languages and just as the Union Government is equally the Government for all regions so is equally Hindi language the language of all regions. Let us all unite in respecting our sacred Constitution and give effect to it as early as possible. I do not want to conceal my feelings that the non-Hindi speaking areas are really under handicap and difficulty in the matter of language and they are making a sacrifice in the National cause by gladly accepting the Constitution and surmounting the difficulties natural to those whose mother-tongue is not Hindi. I read the well reasoned memorandum of the Madras Government with great appreciation and the statistics of students learning Hindi was very gratifying. How do I wish that they had also agreed with the rest of India to make Hindi compulsory in secondary education though I do not want to conceal that the statistics are eloquent to show that without making Hindi compulsory they are showing results which demonstrate as if it was virtually compulsory.

3rd April 1965] [Sri C. Chiranjeevulu Naidu]

All honour to those who make voluntary sacrifices in the cause of unity and freedom of the Nation which we are securing after thousands of years of foreign rule. May God give us all wisdom and strength to do what is best in the interest of the solidarity and unity of our Nation even at the sacrifice of parochial interests."

11-00 a.m.

This note which comes from the mouth of Pandit Thakurdas Bhargava, has been well sounded by him. As I have already stated, he hailed from the Punjab and his mother-tongue was Punjabi. Now, what I would like to say is with regard to the point whether I am in favour of Hindi being made the compulsory subject I am too small a person to express my feeling and I leave that to the Government and the educationists who know how best to safeguard the future of the State and the Country. At this juncture, I would only appeal to the students—I do not like to enter into controversies with regard to their apprehensions about the future of their interests—to repose confidence in the Hon. the Chief Minister who is interested in them and who is also very much interested in safeguarding the interests of the students and the future of this generation. I would also appeal to the educationists to consider his viewpoint with respect and also the Hon'ble legislators to strengthen the hands of the Hon. the Chief Minister irrespective of the party affiliations and ideologies. I also take this occasion to appeal to the Central Government to realise the stand taken by the Hon. the Chief Minister and also the fact that this Government have not let down the Central Government at a time when there was a crisis and a confusion in the entire State and when we were filled with a feeling whether we would be able to survive. He has taken a bold stand and said that the Government are there and will do the needful in the matter. I have read the statements of the Hon. the Chief Minister and the Prime Minister of India, Shri Lal Bahadur Sastri. In those days of confusion, when the statement made by the Prime Minister was not clear our Hon. the Chief Minister stated that he was encouraged by his statement. I say " We are one Nation and we must support the Central Government which is supreme ". At the same time, the Central Government also must respect the feelings of the South and the non-Hindi speaking areas and see that the interests of the non-Hindi speaking areas are safeguarded. Thank you, Sir.

* திரு. க. ர. நல்லசிவம் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, ஆட்சி மொழித் துறையில் அரசியல் சட்டம் இயற்றப் பட்டதற்குப் பின்னால், இந்த பதினைந்து ஆண்டுக்காலமாக அந்த ஆட்சிமொழிச் சட்டத்திலே ஆட்சிமொழி சம்பந்தமாக இருந்த கருத்துக்களை நல்ல முறையிலே மக்களிடத்திலே பரப்புவதற்கு இன்றைய ஆட்சியானது தவறிவிட்டது என்பதுதான் என்னுடைய கருத்து. அந்தக் கருத்துக்களைத் திட்டவட்டமாக, அழுத்தந்திருத்தமாக, முழு நம்பிக்கையோடு அமல் நடத்தாத காரணத்தால் தான் இந்த மொழிப் பிரச்னை பெரிதாக வந்திருக் கிறது என்று கருதுகிறேன். அது மாத்திரமல்ல, குறிப்பாக, ஆங்கிலத்திற்கு, ஆளுகின்ற கட்சியும்சரி, ஆளுகின்ற கட்சியி

னுள்ளே இருக்கின்ற பிரதானமானவர்களும்சரி, எதிர்க்கட்சிக் காரர்களும் சரி, அதற்கு எல்லையற்ற மதிப்பை நீண்டகால மாகவே கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆகையினாலேதான் அதனுடைய விளைவுகள் எல்லாம் சேர்ந்து இன்று இந்த உருவம் எடுத்திருக்கிறது. இதை நல்ல முறையில் சிந்தித்துப்பார்த்து, மொழிப் பிரச்னையைப் பொறுத்தவரையில் ஒரு திட்டவட்டமான, தெளிவான, அழுத்தந்திருத்தமான முடிவை மேற்கொண்டு அதன் மூலம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முதலில் சர்க்கார் தங்களைத் தயார் செய்துகொள்ளவேண்டும். காங்கிரஸ் கட்சி பெருமையோடு, காந்தியடிகள் இருந்த காலத்திலே, 'தேசீய மொழியாக ஆட்சிமொழியாக இந்தி தான் வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்' என்று சொல்லிக்கொள்கிறது. ஆனாலும், அந்தத் துறையிலே ஆளுங்கட்சியினர் குறிப்பாக நம்மூடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையிலே அதற்கான முயற்சிகளைத் தீவிரமாக எடுத்துக்கொள்ளவில்லை. மொழியைத் திணிக்கவேண்டு மென்று நான் சொல்லவில்லை. ஆளுங்கட்சியினர் தாங்கள் ஏற்றுக் கொள்கின்ற முடிவின்மீது தாங்களே நம்பிக்கைகொண்டு காரி யங்கள் செய்யவேண்டும். தாங்களே நம்பிக்கை கொள்ளாமல் காரியங்கள் செய்வதால்தான் அதிலே பிறரும் புகுந்து குழப்பத்தை விளைவிப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. தமிழகத்திலே அது இன்றைக்குக்கூட முடியாத ஒரு பிரச்னையாக இருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் எதிர்க்கட்சியைவிட ஆளுங்கட்சியைத்தான் நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு பாடம் கிடைத்திருக்கிறது. பாடத்தைப் படித்த பிறகாவது நாம் இந்த விஷயத்தில் மிகவும் தெளிவாக இருக்கவேண்டும். தமிழ் நாட்டு மக்கள் விரும்புகின்ற வரையிலே ஆங்கிலம் இந்த தேசத் தைப் பொறுத்தவரையில் துணை ஆட்சி மொழியாகவும், இந்தி பிரதான ஆட்சிமொழியாகவும் இருக்குமென்று சொன்னார்கள். பிரதான ஆட்சிமொழியாக இந்தியையும், துணைமொழியாக ஆங்கிலத்தையும் வைத்துக் கொள்ளலாமென்ற கருத்து தமிழ கத்தைப் பொறுத்த வரையிலே எல்லோருக்கும் உடன்பாடாக இருக்குமென்று நினைக்கிறேன். இருந்தபோதிலும், விரும்புகின்ற காலம் என்ருல் எத்தனை வருடங்கள் என்று இருக்கவேண்டும். இந்தி வருவதற்குப் பதினைந்து ஆண்டுக்காலம் என்று நிர்ண யித்தோம். ஆனல் அதைப்பற்றிக் கவலைப்படவேயில்லை. இப்பொழுது விரும்புகின்ற காலம் வரையில் என்ருல் யார் யார் விரும்புகின்ற காலம், எத்தனை வருடக்காலம் என்று குறிப்பிட வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், படித்தவர்களைத் தான் ஜனத்தொகையாக இந்த அரசாங்கம் கொள்கிறது என்று நினைக்கிறேன். இந்த நாட்டிலே அரசியல் துறையிலே இருக்கக் கூடியவர்கள், கல்வித் துறையிலே இருக்கக்கூடியவர்கள், ஆளுகின்ற துறையிலே இருக்கக்கூடியவர்கள். இவர்கள் மட்டும் தான் மக்களா? நிச்சயமாக அப்பாலே இருக்கக்கூடியவர்கள் தான் அதிகமாக இருப்பவர்கள். ஆகவே, அவர்களுடைய நலன்

3rd April 1965] [திரு. க. ர. நல்லசிவம்]

களையும் கவனிக்கவேண்டுமென்பதை அரசாங்கம் கணக்கில் எடுத்துக் கொள்வதே கிடையாது. அந்த மக்களின் நலன்களிலே மூழுமையாகக் கவனம் செலுத்தவேண்டும். ஆனல், அரசாங்கம் இதிலே கவனம் செலுத்துவது கிடையாது. ஆகவே, நம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்தி பேசாத மக்கள் இருக்கின்ற பகுதிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கிலம் இருக்கும் என்று சொல்கின்றபொழுது அதற்கு ஒரு கால வரையறை இருக்கவேண்டும். என்றுவது ஒரு காலத்தில் இந்தி வரவேண்டுமென்பதில் மறைமுகமாகவோ, அல்லது நேர் முகமாகவோ யாருக்கும் சந்தேகம் கிடையாது. ஆனல் அதற் கொரு கால வரையறை வைத்துக்கொண்டால்தான் அது இந்த நாட்டு மக்களுக்கு நல்லதாகும். இன்றுள்ள மாணவர்கள் நிலையைப் பார்க்கும்பொழுது வேடிக்கையாக இருக்கிறது. பாரதியார் அவர்கள்,

" கம்பனென்றொரு மானிடன் வாழ்ந்ததும்,
காளிதாசன் கவிதை புனைந்ததும்
உம்பர் வானத்துக் கோளையு மீனையு
மோர்ந்த எந்தோர் பாட்கரன் மாட்சியும் . . .
அன்ன யாவுமறிந்திலர் பாரதத்
தாங்கிலம் பயில் பள்ளியுள் போகுநர் "

என்று கூறுகின்றபடி இன்று பள்ளிக்கூடங்களிலே படிக்கின்ற பையன்களுக்கு தமிழ் இலக்கியம் பற்றிச் சிரத்தையில்லை. கிளியோபெட்ரா சினிமாவுக்கு ஒரு மாதத்திற்கு ரிசர்வ் ஆகியிருக் கிறது. இராமாயணம், அல்லது ஏதாவது புராணக் கதைகள் என்றல் கிழவிகள், அம்மாமிகள் தான் போகிறார்கள். இது எதனல் வந்தது என்பதைப் பார்க்கவேண்டும். நம்முடைய கதைகள், இதிகாசங்கள், நவீனக் கதைகள் என்ற ஏழுத காரர்களே அவைகளுடைய கருத்துக்களைப் பாருங்கள். ஆனல் மாணவர்கள் அதையெல்லாம் விட்டு விட்டு கிளியோபெட்ரா சினிமாவுக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் இவ்வளவு வேகத்திற்கும், இவ்வளவு ஆர்வத்திற்கும் பிறகுங்கூட மாணவர்கள் இந்த நிலையிலேதான் இருக்கிறார்கள். ஆகவே இதில் மாற்றம் ஏற்படுத்தவேண்டும்.

மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இரண்டு நாட் களுக்கு முன்னல் இந்த ஆட்சிமொழிப் பிரச்னையைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காக, முடிவு செய்வதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரில் தவறுகள் ஏற்படு கின்றன. அந்தக் கமிட்டியைப் போடும்பொழுது நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இங்குள்ள மக்களுடைய, நம்முடைய கருத்துக்களைப் பிரதிபலிக்கின்ற வகையிலே அந்தக் கமிட்டியில் யாரையாவது போட்டிருக்கலாம், அல்லது இங்கே

[திரு. க. ர. நல்லசிவம்] [3rd April 1965

இருப்பவர்களில் யாராவது ஒருவரைப் போட்டிருக்கலாம். நம்மூடைய உணர்ச்சிகளே அங்கே இருப்பவர்கள் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லே என்பதற்கு இதுவும் ஒரு ஆதாரம் என்று நினைக்கிறேன். ஆகவே, நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவதெல்லாம் மத்திய ஆட்சி மொழியாக இந்தியும், துணை ஆட்சிமொழியாக ஆங்கிலமும் இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரையிலே இருக்கவேண்டும் என்பதுதான். இதை ஏற்றுக்கொண்டாலும்கூட, விரும்புகின்ற காலம் என்றால் எத்தனே ஆண்டுகள் என்றும் வரையறை செய்யவேண்டும். விரும்புகின்ற காலம் என்பதில் திட்டவட்டமான ஒரு நிலே இருக்கவேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆங்கிலத்தின் பெருமையைப்பற்றி அளவுக்கு மீறி சொல்லப்படுகிறது. ஆங்கிலம் இல்லாவிட்டால் எல்லாமே போய்விடும் என்று சொல்கிறார்கள். ஆங்கிலத்தை எடுத்துக் கொண்டால் அதற்குள்ளே பிரெஞ்சு வார்த்தைகள், லத்தீன் வார்த்தைகள், கிரேக்க வார்த்தைகள் இன்னும் ஐரோப்பிய பாஷைகளிலே இருக்கக்கூடிய வார்த்தைகளே எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறது ஆங்கிலம். ஒரு வருடத்திற்கு 600 வார்த் தைகளே ஆங்கிலம் எடுத்துக்கொள்வதாகச் சொல்லப்படுகிறது. இந்த வார்த்தைகளேயெல்லாம் எடுத்துவிட்டால் கூடுதான் நிற்கும் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உடம்பிலே கூட ஸ்கெலிட்டனே மாத்திரம் பார்த்தால் அசிங்கமாகத்தான் இருக்கும். ஆகவே, ஆங்கிலத்திலே இருக்கிற வார்த்தைகளேயெல்லாம் எடுத்துவிட்டு ஆங்கிலத்தைப் பார்க்கக் கூடாது.

திரு. க. ர. நல்லசிவம் : இந்தி சக்தி இல்லாதது, ஆங்கிலம் சக்தியுள்ளது என்று சொல்லப்படுகிற வாதத்திற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். தமிழ் ஆட்சிமொழியாக முடியும். அப்படிப் பார்க்கும்பொழுது, தனித்தமிழா அல்லது இப்போது நடைமுறையிலுள்ள தமிழா என்பதைப் பார்க்கவேண்டும். தனித் தமிழ்தான் ஆட்சி மொழியாக வரவேண்டுமென்று சொன்னால் 500 ஆண்டுகள் கூட ஆகலாம். ஆறு மாதம் அல்லது ஒரு வருஷத்திற் குள்ளாக எல்லா நிலேகளிலும் தமிழை ஆட்சி மொழியாக கொண்டு வந்து விடவேண்டும். நான் எந்தக் கட்சியின் பெயராலே வந்திருக்கிறேனே அந்தக் கட்சியின் பெயராலே மட்டும் சொல்ல வில்லே; இந்த நாட்டின் நலனே உணர்பவன் என்ற முறையிலே சொல்கிறேன். இன்று நாட்டிற்கு ஆபத்து பெருகி இருக்கும் இந்தச் சமயத்தில் நிலேமை எங்கே போய் நிற்குமோ தெரியாது. இந்த நேரத்திலே இந்தப் பிரச்சினையிலே சண்டை போட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்த நேரத் திலே நாம் இங்கே நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறோமோ என்று நான் மனப் பூர்வமாக வருந்துகிறேன்.

3rd April 1965] [திரு. க. ர. நல்லசிவம்]

மொழி உணர்ச்சி சாதாரணமானது அல்ல. இங்கேதான் ஆங்கிலத்தில் பேசுவது பெருமையாக எண்ணப்படுகிறதே தவிர, டில்லியில, லக்னௌவில், பூனாவில், மற்றப் பல இடங்களில் ஆங்கிலத்தில் பேசவே மாட்டேன் என்கிறார்கள். இந்தியிலேதான் பேசுகிறார்கள். உண்மையிலேயே அவர்கள் மொழி வெறியோடு அப்படிப் பேசுவதில்லை. இங்கே நாம் ஆங்கிலத்தைக் கட்டிக் கொண்டு அதைப் படிப்பதற்காக நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர் களானாலும் சரி, பி.ஏ. படித்தவர்களானாலும் சரி, பி.ஏ., பி.எல்; படித்தவர்களானாலும் சரி, நாம் ஆங்கிலத்தில் பேசினாலும் அவர்கள் இந்தியிலேதான் பேசுகிறார்கள். அவர்கள் ஆங்கிலத்தை அதிகமாகப் பயிலுவதோ, நம்மைப்போல் பயன்படுத்துவதோ கிடையாது.

இங்கே மூன்றாவது பாரம், நான்காவது பாரம் படித்தவர் களுக்கு உள்ள ஆங்கில அறிவு கூட அங்கே பி.ஏ., பி.எல்., படித்த வர்களுக்குக் கிடையாது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த நாட்டில் ஒரு பகுதியில் இருக்கும் மக்களுடைய அறிவைப் பற்றி நாம் குறைத்துப் பேசக் கூடாது.

திரு. க. ர. நல்லசிவம்: அவர்களுடைய அறிவைக் குறைத்துப் பேச வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. அங்கே எந்த அளவுக்கு ஆங்கிலத்தில் பக்தி வைத்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டத்தான் தெரிவித்தேன். பொது வாழ்க்கையில் நம்முடைய தமிழ் மொழியை அதிகமாகப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழிலே பேசுவது பெருமையானதுதான், வாதம் செய்வது நியாயமானதுதான் என்ற நிலை ஏற்படும் வகையில் ராஜ்ய சர்க்கார் முதலிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டாகவேண்டும். அப்படிச் செய்தால்--நான் நம் பிக்கையோடு சொல்கிறேன்—சில அரசியல் கட்சிக்காரர்கள் ஐந்து ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே மொழிப் பிரச்சினையை வைத்துக் கொண்டு அரசியல் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டு விடும். உத்திரப் பிரதேசத்திலோ, பீகாரிலோ, மத்தியப் பிரதேசத்திலோ இந்தியையோ அல்லது ஆங்கிலத்தையோ அரசியல் பிரச்சினையாக வைத்துக் கொண்டிருக்கிறார்களா? காங்கிரசை ஆட்சி பீடத்தில் இருந்து அகற்றுவது என்றால் மொழியின் பிரச்சினையை வைத்துக்கொண்டு அகற்ற வேண்டிய அவசியமில்லை. மொழிப் பிரச்சினையை வைத்துக்கொண்டுதான் இந்தச் சர்க்காரை யாகித்து அதன் மூலம் பதவிக்கு வரவேண்டுமென்ற அவசியம் இல்லை. இதை விட ஆயிரமாயிரம் பெரும் பிரச்சினைகள் இருக் கின்றன. இது ஒரு சாதாரணப் பிரச்சினை. இதிலே இரண்டு தரப்பினரும் இன்று ஒன்றுபட்டுக் காரியங்கள் செய்யவேண்டும்.

தமிழைப் பொறுத்தவரையில் நாம் கூடியவரையில் எல்லா இடங்களிலும் ஆட்சி மொழியாகக் கொண்டு வரவேண்டும். 1956-ம் ஆண்டில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

[திரு. க. ரா. நல்லசிவம்] [3rd April 1965

இன்றைக்குப் பத்து வருஷம் ஆகிறது. அதிலே நாம் ஒரு படிதான் முன்னுல் வந்திருக்கிறோம். சட்டசபையில் முழுமையாகத் தமிழ் இல்லை; நிர்வாகத் துறையில் முழுமையாகத் தமிழ் இல்லை. கல்வித் துறையில் நினைத்தால் பயங்கரமாக இருக்கிறது. பி.யூ.சி.-யில் தமிழைக் கொண்டு வரலாமா என்று இப்போதுதான் மெள்ள யோசிக்கிறார்கள். நான் கனம் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், கல்லூரியில் தமிழைப் போதனு மொழியாகக் கொண்டு வாருங்கள்; அது கொஞ்ச நாள் தோல்வியாக இருந்தால் கூடப் பரவாயில்லை. கல்லூரியிலே போதனு மொழி தமிழ் மொழி, சட்டசபை நடவடிக்கைகளிலே தமிழ் மொழி, நிர்வாகத் துறையிலே எல்லா இடங்களிலும் தமிழ் மொழி என்று ஓராண்டு அல்லது இரண்டாண்டுக் காலத்திற்குள்ளாவது கொண்டு வரவேண்டுமென்று மன்றாடி, கெஞ்சி—எப்படி வேண்டுமானுலும்—கேட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். மாறில அளவில் தமிழ் முழுக்க முழுக்கக் கொண்டு வருவதன் மூலமாக அடியோடு இந்தப் பிரச்சினைக்கே இடம் இல்லாமல் செய்து விட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

யு.பி.எஸ்.சி. பொறுத்தவரை என்ன மொழி இருக்கவேண்டும்? இந்தியும் ஆங்கிலமும் மட்டும் போதுமா? அவர்கள் இந்தியை வைத்துக் கொண்டால் நிச்சயமாக மீதி இருக்கும் 14 மொழிகளும் அங்கே இடம் பெற வேண்டுமென்று வற்புறுத்தித்தான் நீர வேண்டும். நம்முடைய மாணவர்கள் தங்களுடைய முழுச் சக்தியையும் தாய்மொழியின் மூலமாகத்தான் வெளிப்படுத்த முடியும். ஆகவே, 14 மொழிகளிலும் மத்திய சர்விஸ் கமிஷன் பரிட்சை எழுதுவதற்கு வழி செய்யவேண்டுமென்று திட்டவட்டமாக முடிவுக்கு வரவேண்டும்.

'கோட்டா சிஸ்டத்'தைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். இந்தியா ஒன்று, இந்த தேசத்தின் பொது மொழி ஒன்று என்பதை ஒப்புக் கொள்ளாவிட்டால் நிச்சயமாக எனக்குத் தெரிந்த வரையில் நமக்குப் பாதகம் ஏற்படும். நான் 'கோட்டா' சிஸ்டமே வேண்டாம் என்று சொல்கிறேன். என்னிடம் இருக்கும் கணக்கைப் பொறுத்து தமிழ்நாடு, கேரளம், பஞ்சாப், வங்காளம் ஆகிய ராஜ்யங்களைச் சேர்ந்தவர்கள்தான் மத்திய அரசாங்க உத்தியோகங்களில் அதிகமான அளவுக்கு இருப்பதாகத் தகவல் இருக்கிறது. இதை நாம் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் மத்திய அரசாங்கத்தில் சாதாரணமான உத்தியோகங்களில் மட்டுமின்றி பெரிய உத்தியோகங்களில் தமிழ்நாடு, கேரளம், பஞ்சாப், வங்காளம் ஆகிய ராஜ்யங்களில் உள்ளவர்கள்தான் அதிகமாக உள்ளனர். மீதியுள்ள ராஜ்யங்களில் உள்ளவர்கள் இதைப் பற்றிப் பரிசீலித்துப் பார்த்து கோட்டா சிஸ்டம் வேண்டுமென்று வற்புறுத்த ஆரம்பித்து விட்டால் நம்முடைய நிலை நிச்சயமாகப் பலவீனப்பட்டு விடும். இதிலே சந்தேகமே கிடையாது. டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் எல்லாம் நம்மவர்கள்தான் பெருகியிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். நான் இந்தியைப் பெரிதாகச்

3rd April 1965] [திரு. க. ர. நல்லசிவம்]

சொல்லவில்லே. இந்தி வளராத மொழிதான், ஒப்புக் கொள்கிறேன். இந்தி வளர வேண்டிய மொழிதான், ஒப்புக்கொள்கிறேன். மத்திய சர்வீசிலே அதிகமாக நாம் வரவேண்டுமென்றால் இந்தியைக் கற்றுக் கொண்டாகவேண்டும். அப்போதுதான் நமக்கு அதிக மான சந்தர்ப்பம் கிடைக்கும். இந்தியைக் கற்றுக்கொள்வதிலே பெரிய கஷ்டம் ஒன்றும் இல்லே. இந்திக்காரர்கள் தமிழைக் கற்றுக் கொள்வது கஷ்டமான காரியம். இந்தியைக் கற்றுக் கொள்ள இங்கே இந்தி பிரசார சபை இருக்கிறது. இந்தியைத் தமிழ் மூலமாகக் கற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்குமென்று சொல்லவேண்டும். இந்தியா ஒன்று என்பதை ஒப்புக் கொள்ளக் கூடியவர்கள் பொது மொழி ஒன்றை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு சீக்கிரமாக தமிழை எல்லாத் துறைகளிலும் கொண்டு வருகிறார்களோ, அதற்கேற்ப இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியும். இதனே அவர்கள் முன்னதாகவே செய்திருந்தால் இவ்வளவு கலவரங்கள் ஏற்பட்டிருக்காது; பெரிய கிளர்ச்சிகள் நடந்திருக்காது. கிளர்ச்சி களுக்கெல்லாம் காரணம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் என்று கூறுவதை ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளாவிட்டா லும் தமிழ் மொழியை எல்லாப் பகுதிகளிலும் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அதன் மூலம் முதலமைச்சர் தம்மீது ஏற்பட்டிருக்கும் கரையைத் துடைத்துக் கொள்ள முடியுமென்று கூறி உரையை முடிக்கிறேன்.

(கனம் சபாநாயகர் திரு. சா. கணேசன் அவர்களைப் பேச அழைத்தார்.)

திரு. சா. கணேசன்: நான் கடைசியிலே பேசலாம்.

கனம் சபாநாயகர்: பிறகு நேரம் எப்படி இருக்குமோ தெரியாது. I leave it to the honourable Member.

* திரு. சா. கணேசன்: சபாநாயகர் அவர்கள் கூப்பிட்ட பிறகு வேறு சொல்வது நாகரிகம் இல்லே என்பதாலே தொடங்குகிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நம்மால் எடுத்துக் கொள்ளப் பெற்றிருக்கிற விஷயம் மிக மிக இன்றியமை யாத, ஆழ்ந்த சிந்தனேயோடு, விருப்பு வெறுப்பற்ற நிலேயிலே, பாரபட்ச உணர்வு இல்லாத நிலேயிலே, அணுகப்பட வேண்டிய நாசூக்கான--'டெலிகேட்'—ஒரு விஷயம்.

அதை நாம் முதலில் மனத்திலே கொள்ளவேண்டும் என்பது என்னுடைய கருத்தும், வேண்டுகோளும். இந்த விவாதத்திற்கு வித்திட்ட நம்முடைய மதிப்பிற்குரிய கனம் முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையிலே கூறுகிறபோது, "மொழிப் பிரச்சினேயே சுதந்திரம் வந்த பிறகுதானே ஏற்பட்டது; அதற்கு முன்னே எங்கிருந்து வந்தது?" என்பது போன்ற கருத்தைப் புலப்படுத்தினர்கள். உண்மை. சுதந்திரம் வந்த பிறகுதான் மொழிப் பிரச்சினேயே தோன்ற முடியும். அதற்கு முன்னே மொழிப் பிரச்சினேக்கு இடமே கிடையாது. சுதந்திரை வந்த பிறகுதான்

[திரு. சா. கணேசன்] [3rd April 1965

எப்படிக் கடிவாளம் போட வேண்டும் என்ற நிலை ஏற்படுமோ, அப்படித்தான் நாடு நம்முடையதான பிறகுதான் நாட்டை ஆளுவதற்குரிய மொழி எது என்று சிந்திக்க, கருத்து வேறுபாடு இருந்தால் அதைப்பற்றி விவாதிக்க, பின்னே முடிவு கட்ட வேண்டிய அவசியம் ஏற்படுமே அன்றி முதலிலேயே மொழியை முடிவு கட்டி விட்டு பின்னே சுதந்திரம் அடைவது என்ருல் சில இடங்களில் இந்த மாதிரியான சிக்கல் ஏற்படாத நிலையில் சாத்திய மாக இருக்கலாம். ஆனுல் பல்வேறு மொழிகள் பயிலப்படுகிற இந்தப் பெரிய உப கண்டத்தில் இந்தமாதிரியான ஒரு நிலைதான் ஏற்படும் என்பதை நாம் மறந்துவிடப் படாது. இன்னொன்று முதல் அமைச்சர் அவர்களும், திரு. தகஷிணமூர்த்தி கவுண்டர் அவர்களும் குறிப்பிட்டார்கள்.

"செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிற்தனை ஒன்றுடையாள்."

என்று பாரதி கூறிய வரிகளை இங்கு எடுத்துக் காட்டினர்கள். செப்பு மொழி 18-ல் இந்தி ஒன்று அல்லவே அல்ல. காரணம் என்ன? இந்தி மொழி என்று ஒன்று பிறந்தது கிட்டத்தட்ட 160 அல்லது 170 ஆண்டுகளுக்குள்ளேதான். அதற்கு முன்னே இந்தி எனற ஒரு மொழி இந்த நாட்டிலே இருக்கவில்லை. இந்தி ஏதோ வளம் இல்லாத மொழி, தகுதி இல்லாத மொழி, என்று கூறினுல் அதை அவமதிப்பதாகவோ அல்லது இந்தி பேசுகிறவர்களைப் பழிப்பதாகவோ கொள்ளக்கூடாது. சில சமயத்தில் நெறிப்படி, முறைப்படி, விஞ்ஞான ரீதியில் விமர்சனம் செய்யத் தொடங்குவோமானுல், உள்ளதை உள்ளபடியே திறனுய்வு செய்வோமானுல், அப்படிச் சொல்வதை கௌரவக் குறைவு என்று எடுத்துக் கொண்டால் அதற்கு என்னை பழியாக்கப்படாது. அந்த நிலையில்தான் பேசுகிறேன். இந்தி எப்படி ஆட்சிமொழியாயிற்று என்பதைப் பற்றியெல்லாம் நமக்குத் தெரியும். இப்போது அதை மாற்றுவதற்கெல்லாம், எத்தனை அளவு விகிதாசாரங்கள் அதிகப்படியான வோட்டுகள் வேண்டுமென்றெல்லாம் இருக்கின்றனவோ, அந்த மாதிரி விதிகள் எதுவுமில்லை ஆக்குவதற்கு. அந்த இந்தி ஆட்சி மொழியான ஒரு வரலாறு நமக்கெல்லாம் தெரியும். சமமாக இருந்தது இந்தி வேண்டும் எனபதற்கும், இந்தி வேண்டாம் என்பதற்கும் வாக்குகள். நம் மதிப்பிற்குரிய ராஜன் பாபு அவர்கள் தங்களுடைய காஸ்டிங், முடிவு செய்யும் வாக்கை அளித்து இந்திதான் அபிஷியல் லாங்குவேஜ் என்று முடிவு செய்யப்பெற்றது. இதை நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் மனத்திலே கொள்ள வேண்டும். இந்தியை அபிஷியல் லாங்குவேஜாகச் செய்யவேண்டுமா என்ற வாதத்தை எடுத்துக் கொள்கிறபோது அங்குள்ளவர்களில் சரி பாதி வேண்டும் என்றும், சரி பாதி வேண்டாம் என்றும் கருத்து உடையவர்களாக இருந்தார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் கவனத்தில் கொண்டால்தான் விஷயத்தைச் செம்மையாக, நெறிப்படி, முறைப்படி, விருப்பு வெறுப்பற்ற நிலையில் அணுகி அதை உணர்ந்து கொள்ள முடியும் எனபதற்காகத்தான் இங்கே அதைச் சுட்ட முயல்கிறேன். நம் கான்ஸ்டிட்யூஷனைப்பற்றி எல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கான்ஸ்டிட்யூஷ

3rd April 1965] [திரு. சா. கணேசன்]

னின் 343, 344, 345, 351 ஆர்டிகிள்ஸை—கூறுகளை—எல்லாம் நம் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். 343-வது கூற்றிலே இரண்டு, மூன்று ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் உள்ளே நாம் நுழைந்து காண்போமானால் அதனுடைய நிலையான, முடிவான விளக்கத்திலே இந்தி இந்த தேசத்தில் பூர்ணமாக நின்று விடும், ஆங்கிலம் நிற்கவே முடியாது, போதாக்குறைக்கு நாம் இப்போது கடிகாரங்களைப் பார்க்கிறோம் 1, 2, 3 என்று இதை அரபிக் ஃபிகர்ஸ், இந்தியன் ஃபிகர்ஸ் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். நம் அரசியல் சட்டத்தில் " International form of Indian figures "என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பழங்காலக் கல்வெட்டுகளில் இந்த ஃபிகர்ஸ், காணப்படுகிறது. இந்த ஃபிகர்ஸே இல்லாமல் போய் இந்தி எழுத்து, இந்தி எண் வரி வடிவம் வந்துவிடக்கூடிய நிலையில் அந்தப் பிரிவுகள் வழி செய்கின்றன, 351-வது கூற்றை எடுத்துக் கொண்டால் சர்வம் ஜகத் இந்தி மயம் என்ற நிலைக்கு முழுக்க முழுக்க அது வழிகோலுகிறது. பின்னர் இந்த போர்ஷன்களை இந்தச் சபை முன் படித்துக் காட்டி சமர்ப்பிக்கிறேன். ஆனால் ஒன்றை நாம் மறந்துவிடப்படாது. இவ்வளவு கூறுகளும் எதை அடிப்படையாகக் கொண்டு எண்ணம், நோக்கம் என்ன என்பதை வெளிப்படுத்துகிற ப்ரீயாம்பிள் அதாவது பீடிகை இருக்கிறதே அந்தப் பீடிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிற நோக்கை நாம் மனத்தில் செம்மையாக, தெளிவாக ஏற்றுக் கொள்ள வேண்டும். " Equality of status and of opportunity " என்பது என்ன வாகும் ? என்பதை நாம் யோசிக்க வேண்டும். அந்த நிலை சந்தர்ப்பத்தாலும், தகுதியாலும் சமத்துவம் என்ற நிலை தகர்ந்து, பொடிந்து, நொறுங்கித் தூள் பட்டுவிடும். அப்புறம் இந்திய ஒருமைப்பாடு என்ற ஒன்று கனவுலகத்திலே காண வேண்டிய காட்சியாகத்தான் போய் விடும் என்பதை நாம் மறந்து விடப்படாது. 14 மொழிகள் பேசப்படுகின்றன என்று நம் அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடிப்படையிலே அதிலே ஒரு வழு—அதற்கு மேல் கடுமையான சொல்லே உபயோகிக்க விரும்பவில்லை—அந்த வழு அங்கே காணப்படுகிறது. அந்த 14 மொழிகளில் இந்த நாட்டிலே பேசப்படுகிற மொழி அல்லாத ஒன்று சம்ஸ்கிருதம். பெயரைப் பார்க்கிறபோதே அது பேசப்படுகிற மொழி அல்ல என்பது நமக்குப் புலனாகும். ஆதலினால் தான் 14 என்று சொல்வதை நான் ஒரு மாயா வாதம் என்று சொல்கிறேன். சம்ஸ்கிருதம் மக்கள் மொழி அல்ல. என்னையும் உங்களையும் போன்ற மாந்தர்கள் உரையாடும், எழுதும், வழக்காடும் அல்லது அழுகை, சிரிப்பு இவைகள் எல்லாம் எற்படுவதற்குக் காரணமாக இருக்கிற உணர்ச்சிகளைத் தருகிற ஒரு மொழி அல்ல. ஆதலினால்தான் நம் முன்னோர்கள் அதற்குப் பெயர் தேவ பாஷை என்று வைத்தார்கள். கம்பனும் பேசுகிறான். " தேவ பாடையின் இக்கதை செய்தவர் " என்று கூறுகிறான், இராம காதையை வடமொழியில் தந்த வால்மீகியை. ஆனால் தமிழில் தான் மொழித் தேன் என்கிறான்.

" மூங்கையான் பேசலுற்றான்
என்ன யான் மொழியலுற்றேன் "

[திரு. சா. கணேசன்] [3rd April 1965

என்று தன் தமிழ்க் காதையைப்பற்றிச் சொல்லும்போது கூறுகிறான். செய்தல், மொழிதல் என்ற சொற்களின் நுண் பொருளை நாம் நன்குணர வேண்டும். அதன் தொனிப் பொருளை உணர்ந்து நாம் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கும் மேலாக இந்த நூலை நம் முன்னோர்கள் கிரந்தம் என்று சொன்னார்கள். இந்த மொழியை கிரந்த பாஷை என்று சொன்னார்கள். அந்த அட்சரத்திற்கு க்ருந்தாட்சரம் என்று சொன்னார்கள். பின்னே, இந்திக்கு ஒரு எழுத்துக் கிடையாது. நாகரி மொழியில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்தி ஒரு மொழியாக ஆகி 150 ஆண்டுகள்தான் ஆகின்றன. நான் ஆங்கிலத்திற்காக வக்காலத்து வாங்கி வாதாட வரவில்லை. ப்ரெஞ்ச், லாட்டின் சொற்கள் போன்றவைகளை எல்லாம் நீக்கி விட்டால் ஏதோ கொஞ்சம்தான் மிஞ்சும் என்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். அதே வாதத்தை திருப்பிப் போட்டால் நிலைமை தலை கீழாக ஆகி விடும். இந்தியிலிருந்து சமஸ்கிருதம், அரபிக், மைதிலி, கடிபோலி இத்யாதி 47 மொழிகளின் வார்த்தைகளை அதிலிருந்து எடுத்து விட்டால் டிக்ஷனரி அச்சடித்த காகிதம்தான் நிற்கும். ஒரு வார்த்தை கூட அதில் மிஞ்சாது. அந்தக் கணக்கை வைத்துக் கொண்டு இந்தியின் தரத்தை, வளத்தை மறுக்கவோ குறைக்கவோ வரவில்லை. இது வாதத்திற்குரிய நெறி அல்ல. ஆங்கிலம் எல்லாவற்றையும் ஜீரணித்துக்கொண்டு தனி முக்கியத்துவம் பெற்று ஆட்டி வைக்கும்—அதிகாரத்தால் இல்லை—அறிவு—அறிவாற்றலிலே எதையும் விளக்கக்கூடிய, உணர்த்தக்கூடிய செம்மையான ஒரு மொழியாக நிற்கிறது என்பதை நாம் மறந்து விடப் படாது. மேலும் இந்தி 42 சதமானம்; ஆங்கிலம் 2 சதமானந்தான் என்கிற வாதம், நல்ல முறை வாதம் ஆகமாட்டாது. இந்தி அறிந்தோர் தொகை உத்திரப் பிரதேசத்தில் 100 சதம். தமிழகத்தில் 1 சதம் இருந்தால் அதிகம். இப்படிப் பார்க்கும்போது ஆங்கிலம் அறிந்தோர் சதமானம் எல்லா மாநிலங்களிலும் கிட்டத்தட்ட சமமாக இருக்கும். இந்த உண்மையை நாம் விளங்கிக் கொண்டால்

11-30 a.m. ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருப்பதுதான் பாரபட்சம் அற்றதாகும் என்பது தெளிவு. கனம் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்கள் கூறினார்கள், ஆங்கிலத்திலேயிருக்கின்ற மொழி மரபு, அதிலுள்ள குறைபாடுகள் இவைகளைப்பற்றியெல்லாம் கூறினார்கள். அப்படியானால் இன்றைக்கு எல்லா மொழிகளுமே அப்படித்தான் இருக்கின்றன. தமிழைப் பொறுத்த வரையில், தமிழ் எழுத்துக்களினால் கூறமுடியாத தமிழ்ச் சொல் எதுவும் இல்லை, இதை யாராலும் மறுக்க இயலாது. பிறமொழிச் சொற்களை எடுத்துக்கொள்ளும்போதுதான், கஷ்டங்கள் வருகின்றன, பிறமொழிச் சொற்களை எடுத்துக்கொள்ளலாம் என்றபோது பிற சொற்களை எடுத்து வழங்குவது இலக்கண அனுமதியுள்ளதே. ஆனால் தமிழ்மரபுக்கேற்ப அச்சொல்லைக் கையாள வேண்டும். இதை மறந்து விட்டு, மறுத்துவிட்டு, பேசுவது, மொழித் துறையில், விஞ்ஞான ரீதியில் அமைந்த வாதமாகாது, நெறியும் ஆகாது, என்பதை நான் புலப்படுத்திக்கொண்டு மேலே செல்லுகின்றேன்.

3rd April 1965] [திரு. சா. கணேசன்]

என்னுடைய தீர்மானத்தின் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு கனம் உறுப்பினர் திரு. ஏ. பி. லி. வீரபாகு அவர்கள் விமரிசனம் கூறினர்கள், அவர்கள் கூறியதை வைத்துக்கொண்டு அவர்கள் மேற்கொண்ட வாதநெறியிலே சொல்வதாக இருந்தால், நானும் கேட்க முடியும், இந்தி மட்டும், சொந்தச் சொல்வளம் நிறைந்த மொழியா என்று. பிரஞ்சு, ஜெர்மன், லத்தின் முதலிய மொழிகளை எல்லாம் கொண்டுதான் ஆங்கிலம் வளர்ந்தது என்று கூறினர்கள். அந்தக் கணக்குப்படிப் பார்த்தால், சொல்வளமற்ற, எழுத்துவள மற்ற, இலக்கியவளமற்ற, இலக்கணவளமற்ற இந்தியை நாம் ஒரு மொழியாகவாவது எடுத்துக் கொள்ளலாமா? இது வாதத்தின் போக்குக்கு ஏற்றது ஆக மாட்டாது. கடன் வாங்குவது என்பது மனிதனுக்கும், மொழிக்கும் இருப்பதெல்லாம் ஒரே தன்மைதான். நான், எனது கையில் காலணாகூட இல்லாமல் ஆயிரக்கணக்கில், லட்சக் கணக்கில் கடன் வாங்கி தொழில் செய்தால், கடைசியில் சொந்தப் பணம் இல்லாமல், கடன் வாங்கின பணமும் இல்லாமல், கடன் வாங்கியதையும் திருப்பிக் கொடுக்க இயலாமல், கரையேற முடியாமல் என்னையே நான் அழித்துக் கொண்டு, சூட்டிச் சுவராக்கிக்கொள்கிற நிலைமைதான் ஏற்படும். அந்த நிலையில்தான் ஒரு மொழி தன்னுடைய இயல்பான மொழி வளம் இல்லாது, பிற மொழிச் சொற்களை கடன் வாங்கி வாழ்ந்தால் அது நீண்ட நாட்களுக்கு வாழ முடியாமல் சீக்கிரமாகவே அது தன்னையே அழித்துக்கொண்டு விடும். இது சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். நாம் எத்தனையோ ஃபைனன்ஸ் கார்ப்பரேஷன்களை எல்லாம் ஏற்படுத்துகிறோம். அவற்றிலிருந்து எந்த அடிப்படையில் கடன் கொடுக்கிறோம். கடன் கேட்கின்றவர்களுக்கு முதலாக என்ன இருக்கின்றது என்பதையெல்லாம் பார்த்து, அதற்குத் தக்கவாறு 10, 20, 50 சதமானம்தான் கடன் கொடுக்க முடியும் என்ற பல விதிமுறைகளை எல்லாம் வைத்திருக்கிறோம். ஒன்றுமே இல்லாமல் யாரும் கடன் கொடுத்துவிட மாட்டார்கள். அப்படியில்லையென்றால் 'இன்ஃபினிட்டி' யாக கணக்கில்லாத நிலை வந்துவிடும். அந்த நிலையில் ஒரு மொழி வளர முடியாது. மேலும் கனம் ஏ. பி. லி. வீரபாகு அவர்கள் கோட்டா முறையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் சொன்னர்கள். இதுவும் நல்லதல்ல. கோட்டா முறை வருமானால் நம்முடைய திறமை செயலற்றுப் போகும். நாடே சும்பிப் போகும், சுணங்கிப் போகும். மதம், ஜாதி, மொழி என்ற அடிப்படையில் பிரதிநிதித்துவத்தை பெறுவது என்பது, தேசத்தின் ஒருமைப்பாட்டு உணர்ச்சியின் அடிவேருக்கு வெந்நீர் ஊற்றுகின்ற நிலைதான். கோட்டா முறை என்று வந்தால், திறமை எல்லாம் போய், பிறந்த ஜாதி இது, பிறந்த மதம் இது, பயிலுகின்ற மொழி இது என்று சொல்லி பிரிவினை மனப்பான்மை வளர்ந்து அது நாட்டைக் கெடுக்கும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கோட்டா முறை வரவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அதை ஆதரிக்கிறேன் என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதெல்லாம் கோட்டா முறையில் கிடையாது. பிராந்திய அடிப்படை கொண்டது தான் கோட்டா முறை.

திரு. சா. கணேசன்: மன்னிக்கவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் பேசிய கருத்தின் மீதல்ல இப்பொழுது இங்கே நான் சொல்வது. கனம் உறுப்பினர் திரு. எ. பி. ஸி. வீரபாகு அவர்கள் சொன்ன கருத்துக்களின்மீதுதான் நான் இப்போது எனது கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். கோட்டா முறையை ஒப்புக்கொண்டால் என்ன என்று அவர்கள் வாதம் செய்தார்கள். அந்த வாதம் வேண்டாம், அது பொருளற்றது, தேவையற்றது, தீமையானது என்பதால்தான் அதை நான் மறுக்கிறேன். அதற்கு மேலே, இந்தியா எப்படி மொழி விஷயத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு தமிழர்களுக்கு சொல்ல என்ன உரிமை யிருக்கிறது என்று தொனிக்கும்படியாக அவர்கள் கேட்டார்கள். அப்படியானால் தமிழர்கள் இந்தியர் அல்லரா? தமிழரையும் தமிழ் நாட்டையும் விட்டுவிட்டுத்தான் இந்தியா இருக்கிறதா என்று நான் கேட்கக் கூடும் அல்லவா? மெஜாரிட்டியாக இருந்தா லும் சரி, மைனரிட்டியாக இருந்தாலும் சரி மொத்தமாக எங்கே எது இருக்கவேண்டும், எந்த மொழி ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்று சொல்வதற்கு இந்த இந்தியாவிலுள்ள எவருக்கும் உரிமை உண்டு, அதை யாராலும் மறுக்க முடியாது. அப்படியில்லையென்றால், இது அகண்ட இந்தியா, இது ஒரு தேசம்; இது பிரிக்க முடியாத தேசம், இது ஒருமைப்பட்டு இருக்கக்கூடிய தேசம் என்று சொல்வதெல்லாம் தானாகவே தகர்ந்து போய்விடும். இந்தியை வளர்ப்பதற்கு என்று இந்தி பிரசார சபை ஒன்று இருக்கிறது. இவற்றின் போக்கைப் பார்த்தால் எப்படி நாட்டில் மக்களின் உணர்ச்சிகளை கிளர்ச்சி செய்து வித்தியாசத்தை வளர்க்கின்றன என்பது நன்கு புலப்படும். இது ஆரம்பித்த காலத் தில் எல்லாம் நான் அதில் இருந்தவன்தான். ஆரம்பத்தில் ஹரிஹர சாஸ்திரி அவர்கள் தலைவராக இருந்தார். அப்போது இச்சபை கீற்றுக் கொட்டகையில் ஆரம்பித்தது. ஹரிஹர சாஸ்திரி என்கின்ற தமிழர் இருந்ததற்கு பின்னால் சத்யநாராயண என்கிற தெலுங்கு சகோதரர் வந்தார். இது எதற்காக நிறுவப் பட்டது, என்ன நோக்கத்திற்காக நிறுவப்பட்டது என்பதை யெல்லாம் நான் நன்கு அறிவேன். அந்த முறையிலே பார்த்தால் இரும்பவும் தட்சிண பாரத இந்திப் பிரசார சபையின் அதே இடத்தில் கன்னடக்காரர் வந்திருக்கவேண்டும், தெலுங்குக்காரர் வந்திருக்கவேண்டும் அல்லது மலையாளத்துக்காரர் வந்திருக்க வேண்டும், அதுதான் புத்திசாலித்தனமாக இருக்கும். இப்போது ஸ்ரீமான் சுமன் அவர்கள் வடக்கிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறார். இந்தியை வளர்க்க வேண்டுமென்றால் இப்போதுள்ள முறையில் யூனிவர்சிட்டிகள் என்ன பண்ணுகின்றன? அதற்குக் கீழேயிருக் கின்ற கல்லூரிகள் என்ன செய்கின்றன? நம்முடைய ஆட்சி என்ன செய்கிறது? நம்முடைய அரசாங்கத்தின்கீழ் இருக்கும் டைரக்டர் ஆஃப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் அவர்களும், அவர்களின் கீழ் இருக்கிற பல்வேறு பள்ளிகளும் என்ன செய்கின்றன? இவ்விதமெல்லாம் இருக்கும்போது, இந்தி பிரசார சபையின் மூலம் இவ்வாறு ஏன் திணிக்கப்படவேண்டும் என்பதுதான் தெரியவில்லை.

3rd April 1965] [திரு. சா. கணேசன்]

இனிமேல் மற்றொரு முறைகேட்டைக் கூற முன் வருகிறேன். பல்வேறு மொழிகளிலும் கையாளப்படும் டெக்னிகல் டெர்ம்ஸ்களை எல்லாம் நாம் எவ்வாறு எடுத்துக் கொள்ளவேண்டும்? அறிஞர் குழு முடிவு கூறியது அதற்கு. நாமும் வளர எம்முறையை வகுத்துக் கொள்ளவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் முன்னமேயே இம் மன்றத்தில் எனது கருத்துக்களைச் சமர்ப்பிக்கின்ற காலத்தில் எல்லாம் தெரிவித்திருக்கின்றேன். இன்டர்நேஷனல் டெர்ம்ஸ்களாக இருக்கின்றவைகளை எல்லாம் நமது தமிழ் மரபோடு ஒட்டி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என் கருத்து. டெஸ்ட் ட்யூபை எடு, அதில் தண்ணீரை ஊற்றி சோடியம் குளோரைடைப் போடு; கலக்கு; அது ஒன்றிவிடும் என்றெல்லாம் சொல்லலாம் என்பதுதான் என்னுடைய கருத்து. இந்த முறையை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணமுடையவன் நான். ஆனால் இப்போது நிலை என்ன ஆகிறது? ஆக்ஸிஜன் என்று ஒரு தனிமம் இருக்கிறது, தமிழில் அதை பிராணவாயு; உயிரக வளி என்றெல்லாம் கூறலாம். ஆனால் அறிஞர் குழு முடிவுப்படி அதைச் சொல்லும்போது, 'ஆக்ஸிஜன் பண்ணு' என்று தமிழில் சொல்ல வேண்டும், 'ஆக்ஸிஜன் மாடு' என்று கன்னடத்தில் சொல்ல வேண்டும், 'ஆக்ஸிஜன் செய்' என்று தெலுங்கில் சொல்ல வேண்டும், 'ஆக்ஸிஜன் கர்ஞ' என்று இந்தியில் சொல்லவேண்டும். கர்ஞ என்று இந்தியில் சொன்னலும்கூட, க்ரு என்னும் பகுதியடியாகத் தோன்றிய அது, செய் என்கிற பொருளைக் கொடுக்கிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், இப்போது என்ன வார்த்தை வருகிறது 'ஆக்ஸிஜனி' என்ற வார்த்தை வருகிறது. இந்த மாதிரி வருமானால் எங்கே நமது ஒருமைப்பாடு நிற்கும்? கர்ஞ என்றாலும், செய் என்றாலும், பண்ணு என்றாலும், மாடு என்றாலும் நம்மால் சீக்கிரத்தில் புரிந்து கொள்ள முடிகிறது. அதே நேரத்தில், ஆக்ஸிஜனி என்று சொல்லும்போது அது குழப்பத்தில் தான் கொண்டு போய்விடும். பிறமொழிகளிலிருந்து கலைச் சொற்களைத் தழுவிக்கொள்ளும்போது இப்படி எல்லாம்தான் தோன்றி நெறியில் செல்வது ஒருமைப்பாட்டுக்கு மட்டுமல்ல, வளரும் வாழ்க்கைக்கும் தடை ஏற்படுத்துவதாகும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் பல கருத்துக்களைக் கொண்ட நாம் இங்கே பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்த போதிலும், கனம் உறுப்பினர் அர்த்தநாரீச்வர வெண்டர் அவர்கள் சமர்ப்பித்த கருத்துக்களை உண்மையாகவே உண்மையான தமிழர்களுடைய உள்ளத்தின் பிரதிபலிப்பாக நான் கருதுகிறேன். அதற்காக நான் அவர்களை பாராட்டுகிறேன். இந்தியைப்பற்றி புள்ளி விவரங்களை மத்திய சர்க்காரே அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள். இது கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா பப்ளிகேஷன். இது ஒரு 'ஹாண்ட் புக்' 'பாக்கட் புக்' ஆஃப் எக்னமிக் இன்ஃபர்மேஷன்' என்ற இந்தப் புத்தகத்தில் சில விவரங்களைப் போட்டிருக்கிறார்கள். அதாவது இந்தி மொழியினர் 42 பர்சன்ட் என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தி என்பதில் எந்த மொழிகள் எல்லாம் சேர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். உருது, பஞ்சாபி, இந்துஸ்தானி முதலிய பல மொழிகளைச் சேர்த்துத்தான் இப்போது இந்தி

என்று போடுகிறார்கள். பஞ்சாபி என்பது வேறு, உருது என்பது முழுக்க முழுக்க வேறு. இந்திக்கும் உருதுவுக்கும் ஸ்நானப்பிராப்திகூட கிடையாது. உருது மொழியை எழுதுவதை எடுத்துக்கொண்டால் அது வலது புறத்திலிருந்து இடது புறமாக எழுதப்படுகிறது. உருதுவின் வரிவடிவம் சுருக்கெழுத்துப் போன்றது. நின்ற கோடும், கிடந்த கோடும் தோன்ற எழுதுகிற நாகரி எழுத்துக்களாக இருக்கின்றன இந்தியின் வரிவடிவம். அன்றியும் இந்தியோ இடப்புறத்திலிருந்து வலம் நோக்கி எழுதப் படுகிறது. இந்தியில் இருக்கின்ற வார்த்தைகளே எடுத்துக் கொண்டால்கூட, மத உணர்வுக்குத் தக்கபடி மாறிக்கொண்டு வருகிறது. இப்போது நிலை என்ன என்று பார்க்கும்போது முன்னுல் இந்தியில் 'மேரி கிதாப்' என்றிருந்தது இப்போது 'மோர் புஸ்தக் என்றாகியிருக்கிறது. உருதுமொழியை எடுத்துக் கொண்டால், அதில் பெர்ஷியன், அராபி முதலிய மொழிகள் அடங்கியிருக்கின்றன. உருது என்ற சொல்லுக்கே 'டென்ட்' அதாவது கூடாரம் என்பதுதான், ஹிந்தி என்பதற்குள் மைதிலி, அவதி ; கடிபோலி, பிராகிருதம் போன்ற பல மொழிகள் அடங்கி யுள்ளன. பஞ்சாபி என்பதில் குர்மகி, பஞ்சாபி முதலிய மொழிகள் அடங்கியுள்ளன. எல்லாவற்றையும் சேர்த்த ஒரு கதம்பமொழியை இந்துஸ்தானி என்றனர் முன்னுளில். எனவே, இந்தி என்று இப்போது சொல்வதிலே, இந்திக்குள் எத்தனையோ பாஷைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் சொல்லவேண்டும், ஆனுல் இப்போது நேரம் இல்லாத காரணத் தினுல் சொல்ல முடியாத நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன்.

ஆட்சி மொழி அறிக்கையில் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறார் கள். இந்தக் குழப்பங்களைப்பற்றி குறிப்பாக திரு. சுனித் குமார் சாட்டர்ஜி அவர்கள், வங்காள மேல் சபைத் தலைவர், அவர் எழுதிய இந்திப் புத்தகங்களுக்காகப் பல்வேறு பரிசுகள், மெடல் கள் பெற்றவர்கள், அகில உலக சபையில் பல நாட்டு, பன்மொழி பயின்றவர்களுக்குள் குறிப்பிடத் தகுந்தவராக, சிறந்தவராக விளங்குகிறவர், அவருடைய மறுப்புக் குறிப்பு இருக்கிறது, அதைப் படிக்கவேண்டும். அதுவே 60-70 பக்கங்கள் இருக் கின்றன. அடுத்தப்படியாக, தமிழ்நாட்டின் ஒரே பிரதிநிதியாக இருந்தவர் டாக்டர் சுப்பராயன். அவருடைய மறுப்புக் குறிப்பும் அரசாங்க வெளியீட்டிலே, ஆட்சி மொழி அறிக்கையிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அவருடைய மறுப்புக் குறிப்பையும் படித்துக்கொள்ளவேண்டும். நேரமின்மையால் அவற்றையெல்லாம் ஆளும் கணத்தார் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று மட்டும் சொல்லிவிட்டு மேலே செல்கிறேன்.

இந்திக்குள்ளே, கடிபோலி, மைதிலி, பீகாரி, அவதி முதலிய பலவேறு மொழிகள் அடக்கம் ஆகும். அவைகள் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு அற்றவை. இவற்றையெல்லாம் சேர்த்து இந்தி என்று போட்டிருக்கிறார்கள். இந்துஸ்தானி என்று எடுத்துக்கொண்டால் காஷ்மீரி, பிராக்ருத், உருது எல்லாம் அவற்றுக்குள் அடங்கி விடுகிறது. பஞ்சாபி என்ற மொழியை இந்திக்குள் பிராக்கெட்

3rd April 1965] [திரு. சா. கணேசன்]

செய்து போட்டிருக்கிறார்கள். அவற்றுள் குர்முகி, புஷ்டு இவை களெல்லாம் சேர்ந்து விடுகிறது. இவற்றையெல்லாம் சேர்த்து இந்தி என்று சொல்லி, அதிகப்படியாகப் பேசக்கூடிய மொழி அது தான் என்று சொல்வது இருக்கிறதே அது நெறியாள, சரியான வாதம் ஆக மட்டாது. அப்படியே வைத்துக் கொள்வோமே, இந்துஸ்தானி 42 சத வீதத்தைக் கொண்டது—அதை வாதத்திற் காக ஒப்புக் கொள்வோம். இதுதானு ஆட்சி மொழிக்கு உரியது? இந்தியாவில் படித்தவர்கள் எத்தனை பேர்? அதை எடுத்துக் கொண்டு அவர்களுள் இந்தி படித்தவர் எத்தனை பேர் என்று எடுத்துப் பாருங்கள்? அப்படிப் பார்க்கும்போது அது 30 சத வீதத்திற்குக் கீழேதான் போகும். நான் இதைப் பார்த்து விட்டுத் தான் சொல்லுகிறேன். எல்லா மாநிலங்களையும் எடுத்துக் கொண்டாலும் ஒவ்வொரு மாநிலத்திலும் படித்தவர்கள் எத்தனை பேர்? இங்கேயெல்லாம் படித்தவர்கள் எண்ணிக்கை 30, 31 சத விகிதம் இருக்கும்போது அங்கு 18 சதவிகிதம்தான். ஆட்சி புரிய வேண்டியவர்கள் படித்தவர்களா படிக்காதவர்களா? இதைப் பேசுகிறவர்கள் தொகையை வைத்துக்கொண்டா நிர்ணயிப்பது? (கனம் திரு. எம். பக்தவத்சலம் குறுக்கிடு) அதற்கு வருகிறேன். இதையெல்லாம் வைத்துக்கொண்டு பார்க்கிறபோது என்னென்ன லாபம், நஷ்டம் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சரி, அப்படியே இருக்கட்டும். . . . பெரும்பான்மையினர் மொழி தான் ஆட்சி மொழி என்றால், பெரும்பான்மைக்குத்தான் முக்கியத் துவம் என்ற நிலைமை ஏற்பட்டு விடுமானால், இந்த தேசத்தில் அவர்கள் கணக்குப்படி இந்தி பேசுகிறவர்கள் 42 சதவிகிதம். இந்தியாவிலே இந்துக்கள் எத்தனை சதமானம்? இந்துக்கள் அல்லாதவர்கள் எத்தனை சதமானம்? மிக, மிக மிகப்பெரும் மெஜாரிட்டி இந்துக்கள். ஆகவே இந்த நாட்டை இந்து ராஜ்யம்—இந்திய ராஜ்யம் என்று சொல்லாமல்—என்று தானே சொல்ல வேண்டும்? அப்படிச் சொல்ல வேண்டுமென்று நான் சொல்லவே இல்லை. அந்த நிலைமைக்கு நான் விரோதி—அப்படியானால், மெஜாரிட்டி பேசுகிற மொழி இந்திதான் ஆட்சி மொழி என்றால்—ஒரு நாட்டின் மதம் என்ன என்று பல நாடுகளில் நிர்ணயித்து இருப்பதைப் பார்த்திருக்கிறோம், பல்வேறு கான்ஸ்டிட்யூஷனைப் பார்த்தால் கிரிஸ்டியன் ராஜ்யம், மொஹமடன் ராஜ்யம் என்றெல் லாம் போட்டிருப்பதைப் பார்க்கிறோம்—இதை இந்து ராஜ்யம் என்று போடுங்கள் பார்க்கலாம்! நான் ஐயப்படுகிறேன். இந்த மாதிரி இந்தியைக் கொண்டு வந்து விட்டு, இதன் மூலமாக இந்த தேசத்தை இந்து ராஜ்யம் ஆக்குவதற்குச் செய்கிற முதல் வேலை களை இவை என்று—நான் தவறாக இருக்கலாம், தவறு என்றால் அது வேறு விஷயம்—அந்த ஐயம் என் உள்ளத்தில் இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் புலப்படுத்திக்கொள்கிறேன்.

இப்படித்தான் திமிர், கர்வம் என்று சொல்லுகிறோமே, இவை பிறக்கும் இடம் மூன்று—பணம், படிப்பு, பலம். இந்த மூன்று இடத்திலேதான் திமிர் தோன்றும். அது போல வெறி தோன்று கிற இடமும் மூன்று—சாதி, மதம், மொழி. சாதி வெறி, மத வெறி, மொழி வெறி—இந்த மூன்றையும் விட்டு அப்பால் நின்

[திரு. சா. கணேசன்] [3rd April 1965

வேண்டும் ஆட்சி. அதுதான் நல்லாட்சி. எந்த மொழியினும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல், எந்த மதத்தினும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாமல், எந்தச் சாதியினும் தன்னை உட்படுத்திக் கொள்ளாமல், இந்த மூன்றுக்கும் அப்பால் நின்று, மூன்றுக்கும் மோதல்கள் ஏற்படாமல் நியாயம் வழங்க வேண்டியவர்கள் என்று விளங்க வேண்டும் ஒரு ஆட்சி. அப்படிச் செய்வதுதான் நலம் உள்ளதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, முடிவாக, என்ன கருதுகிறேன்; என்ன செய்ய வேண்டுமென்று கருதுகிறேன் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். சம்ஸ்கிருதம் அல்லாத பதின்மூன்று மொழிகளும் மாநில மொழிகள். பதின்மூன்று மொழிகளும் மாநில அளவில், பரிபூர்ண ஆட்சி மொழியாக, கல்வி மொழியாக, அவை வளர்ந்து விட வழி செய்து கொடுக்க வேண்டும். அப்படியானால் நம்மைப் பொறுத்த வரையில் தமிழ். தமிழை மாநில அளவில் செய்து விட வேண்டும். அப்படிச் செய்தால் மாநிலத்தில் உள்ள யாருக்கும் "சந்தர்ப்பத்தினாலே, அந்தஸ்தினாலே, சமத்துவம்" என்பது இல்லாது போய் விடுகிறது என்ற குறை நேராது. ஆகவே அது அன்றிப் பிற மாநிலத் தொடர்புக்கும், மத்திய அரசோடு தொடர்புக்கும் ஒரு மொழி வேண்டும். உலகத் தொடர்புக்கும் ஒரு மொழி வேண்டும். இதற்கு ஏழு மொழிகளை ஏற்படுத்திக் கொள்ளுவானேன்? அது எல்லாம் ஒரே மொழியாக இருந்தால் அது ஒரு சிக்கனம் அல்லவா? 'இக்கானமி இன் லேர்னிங்' என்று ஆகாதா? ஆங்கிலம் உலகத் தொடர்பு மொழியாக நிலைத்து நிற்கிற நிலையில் ஆங்கிலத்தையே பிற மாநிலத் தொடர்புக்கும், மத்திய ஆட்சித் தொடர்புக்கும் உரிய மொழியாகக் கொண்டுவிடுவோமானால், நம்மைப் பொறுத்த வரையில் வேறு எந்த மாநிலத்தைப் பொறுத்த வரையினும் கூட, இருமொழி என்ற நிலை இருக்கும். இல்லாவிட்டால், நம்மைப் பொறுத்த வரையில் மூன்று மொழி என்ற நிலையும், யு.பி. போன்ற சில மாநிலங்களைப் பொறுத்த வரையில் இரு மொழி தான் என்ற நிலையில் அவர்களுக்கு வாய்ப்பும், வசதியும், அந்தஸ்தும் பெருகுவதாக ஆகும். அவர்களுக்கு வாய்ப்பு, வசதி எல்லாம் பெருகுவதில் நமக்கு ஆட்சேபணை இல்லை. உலகெல்லாம் வாழ வேண்டும் என்ற குறிக்கோள் உடையவர்கள் நாம். ஆனால் நாம் அழிய, அதனால் அவர்கள் வாழ என்ற நிலைமை இருக்கக் கூடாது. இந்த நிலையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டுக்கு இங்கிலீஷ்தான் பொது மொழியாக இருக்க வேண்டும் என்பது இன்று நேற்று ஏற்பட்ட கருத்து அல்ல, வாதம் அல்ல என்பதை நாம் புரிந்து கொண்டுவிட வேண்டும். ராஜா ராம் மோகன் ராய் 1774-ல் பிறந்தாரா, 1772-ல் பிறந்தாரா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆனால், அவர் இறந்தது 1833-ம் ஆண்டில் 62 வருஷம் வாழ்ந்தாரா அல்லது 60 வருஷம் வாழ்ந்தாரா என்பது கேள்வி. கிட்டத்தட்ட 190 ஆண்டுகளுக்கு முன்னே பிறந்தவர், சுமார் 130 ஆண்டுகளுக்கு முன்னே இறந்தவர். இந்தியாவின் மிகச் சில மாமேதைகளுக்குள்ளே அவரும் ஒருவர் என்பதை எவரும் மறுக்க முடியாது. அவர் எழுதிய கடிதங்கள்

3rd April 1965] [திரு. சா. கணேசன்]

பிரசுரமாகியிருக்கின்றன. அது நம் லைப்ரரியிலும் இருக்கிறது. துரதிருஷ்டவசமாக முதல் பாகம்தான் இருக்கிறது, இரண்டாவது பாகம் வாங்கவேயில்லையாம். அவர் பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்டுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் காணப்படுகிற சாரத்தை மட்டும், சபாநாயகர் அவர்களே! தங்கள் மூலமாகச் சபையின் முன்னிலையில் நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன். "இந்தியா ஒரு நாடு என்ற உணர்ச்சி எங்கட்கு இப்பொழுது தான் தோன்றியிருக்கிறது"—இதற்கு முன்பு ஐம்பத்தாறு தேசங்கள் அல்லவா?—"இந்தியா ஒரு நாடு என்ற உணர்ச்சி எங்கட்கு இப்பொழுதுதான் தோன்றியிருக்கிறது. ஆகவே, பன்மொழி பேசும் இந்த நாட்டிற்கு ஒரு பொது மொழி தேவை என்பதையும் உணரத் தொடங்கியிருக்கிறோம். வங்காளி, தமிழ்"—அப்போதே எழுதியிருக்கிறார்—"முதலிய சில மொழிகள் வளமானவை. ஆனால் எதுவும் எல்லாரும் அறியும் ஒரு மொழியாக அமைந்து விடவில்லை. இந்துஸ்தானி பலரும் பேசும் ஒரு மொழி என்று, பரவலான ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் அது முற்றிலும் சரியல்ல. இந்துஸ்தானி, பல்வேறு டயலெக்ட்களை"—டயலெக்ட் என்பதற்கு கிளை மொழிகள் என்று சொல்லலாம் என்று கருதுகிறேன்—"பல்வேறு கிளை மொழிகளையுடைய ஒரு கலப்பு மொழி. ஆகவே எல்லா வகையிலும் பொருத்தமான ஒரு மொழி எதுவும் இல்லை. ஆனதினாலே ஆங்கிலத்தையே மீடியம் ஆஃப் எக்ஸ்ப்ரெஷன்—ஆக விளங்கும்படி நீங்கள் கட்டாயமாகச் செய்ய வேண்டும்" என்று அந்தக் காலத்தில் பிரிட்டானிய அரசாங்கத்திற்கு அவர் கடிதம் எழுதியிருக்கிறார். சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த மாதிரிக் கருத்து இருந்து வருகிறது. என் இந்தி என்ற ஒரு மொழி புதியதாகப் பிறந்து வளர்ந்து, ஏதோ பேசுகிற அளவில் நிற்கின்ற நிலையே தவிர, வேறு ஒன்றுமில்லை. பல்வேறு மாநிலங்களிலும், பல்வேறு பகுதிகளிலும், தொனியில் அல்ல; முறையில் அல்ல; சொல்லின் பொருள் வேறுபாடுள்ள பல்வேறு 'டயலெக்ட்கள்' உள்ள ஒரு மொழியாக இருந்தது. இதில் இருந்து இந்தி முழுக்க முழுக்க தேசத்தில் ஆட்சி மொழியாக ஆவதிலே லாப நஷ்டம் அல்லது சாதக பாதகம் மக்களுக்குள் ஏற்படும் என்பதை நாம் யாரும் புரிந்து கொள்ள மறுக்கக் கூடாது. காந்தியடிகள் சொன்னது இப்பொழுது சொல்கிற கடிபோலி இந்தி அல்லவே அல்ல. அவர் இங்கு வந்து ஒரு வாரம் தங்கி இருந்தபோது கூடவே அவருடைய அணுக்கத் தொண்டனாக இருந்து, நான் பல நாட்களுக்குத் தொண்டாற்றி யிருக்கிறேன். அவர் இந்தி பிரசார சபையில் தங்கியிருந்தபொழுது நானும் கூடவே இருந்தேன். தினமும் நிர்மாணத் தொண்டர்களுக்காக ஒரு வகுப்பு நடத்தினர். அவர் அப்பொழுது என்ன சொன்னர்? இந்துஸ்தானி நாகரி எழுத்தையும், உருது எழுத்தையும் கொண்டு இரண்டு கலவைச் சொற்களையும் சேர்த்துக்கொண்டு வழங்க வேண்டும் என்று அப்போதே சொன்னர். ஆனால் உத்தரப் பிரதேசத்திலிருந்து பின் வந்த சில பண்டிதர்கள் தனிக் கடிபோலிச் சொற்களையே கையாள வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தினர். அதன் காரணமாக இந்திப் பிரசாரசபையின் புத்தக அல்மாரா வில் 'கிதாப்' என்று எழுதியிருந்ததை 'புஸ்தக்' என்று மாற்றி எழுதியதை நான் என் கண்ணாலேயே பார்த்தேன். ஏனென்றால்

[திரு. சா. கணேசன்] [3rd April 1965

"புஸ்தக்" என்பது சமஸ்கிருதச் சொல். "கிதாப்" என்பதோ உருதுச்சொல்; உருதுச் சொல்லே தீண்டுவார்களா? காந்தியடிகள் அன்று அப்படி கூறினர். அதையெல்லாம் விட்டுவிட்டு. . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆராய்ச்சியெல்லாம் எனக்குத் தெரியாது. 'புஸ்தக்' என்ருல் நமக்கு எல்லோருக்கும் தெரிகிறது. நமக்குப் பழக்கம் இல்லாத சொல்லைவிட 'புஸ்தக்' என்ற பழக்கப் பட்ட சொல்லையே உபயோகப்படுத்தலாமே. அதற்கெல்லாம் ஏன் ஆட்சேபணை சொல்லவேண்டும் என்று கனம் உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்களைக் கேட்கிறேன்.

திரு. சா. கணேசன்: என்னைப் பொறுத்த மட்டில், கிதாப் என்ற சொல்லைவிட புஸ்தக் என்றே இருக்கலாம். ஆனல் பொது மொழி என்று சொல்லும்பொழுது, சா. கணேசன் அவர்களுக்கோ, அல்லது முதல் அமைச்சர் அவர்களுக்கோ மட்டும் புரிந்தால் அதைக் கையாண்டு விட முடியாது. கன்யாகுமரியிலிருந்து, இமயமலை வரை இருக்கும் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். புஸ்தக் என்ருல் வடக்கே 100-க்கு 75 பேர்களுக்கு புரியாது, 25 பேர்களுக்குத்தான் புரியும். கிதாப் என்ருல் **எல்லா**ருக்கும் புரியும். என்னைப் பொறுத்த வரையில் புஸ்தக் என்று போடுவதில் ஆட்சேபணை இல்லை. பொது மொழியாக உபயோகப்படுத்தப்படுகிற மொழி என்ற அந்த நிலையில் அதை அணுகுவதுதான் நியாயமும் **தர்மமுமா**கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நெறியிலேயே வளர்க்கப்பட வேண்டும் என்ற சாசனம் பெற்றும் விட்டது.

இப்பொழுது ஆர்டிகிள் 351-ஐ பார்ப்போம்.

"It shall be the duty of the Union to promote the spread of the Hindi language to develop it so that it may serve as a medium of expression for all the elements of the composite culture of India and to secure its enrichment by assimilating without interfering with its genius, the forms, style and expressions used in Hindustani and in the other languages of India specified in the Eighth Schedule, and by drawing, wherever necessary or desirable, for its vocabulary, primarily on Sanskrit and secondarily on other languages.

இதிலிருந்து பார்க்கிறபொழுது இந்தி முழுக்க முழுக்க எல்லா வழிகளிலும் . . (திரு. எம். கலியாணசுந்தரம்: பொருத்தமானது.) கனம் கலியாணசுந்தரம் இப்படிக் குறுக்கிட்டு என் கருத்தைத் தடம் புரட்டுவது ஏன்? நான் பேசிய பிறகு தான் பேசலாம் என்று அவர்கள் தந்திரமாக வெளியே போய்விட்டு நான் பேசத் தொடங்கிய பின் இப்பொழுதுதான் வந்திருக்கிறர் போலும் அந்தத் தந்திரம் தெரியாதா? அப்படியிருக்கும்பொழுது இடையிலே தலையிடாமல், பின்னலே பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்துவிட்டபொழுது அப்பொழுது பேசலாமே?

3rd April 1965] [திரு. சா. கணேசன்]

இந்தியா, ஆங்கிலமா என்பதை ஒரு கட்சி விஷயமாக, அல்லது கட்சிப் பிரச்னையாகக் கருதப் படாது. அது பிராந்தியப் பிரச்சினை அல்லது மாநில மக்களுடைய பிரச்சினை. ஆகவேதான் வங்காளத்தில் எல்லோரும் கட்சி வேற்றுமையின்றிச் சேர்ந்து இந்தியை மறுக்கிறார்கள். வங்காள சட்டசபையில் தீர்மானமும் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. இந்தி என்களோடு ஓட்டிய கார்னேயெல்லாம் பிடித்து மடக்கியிருக்கிறது அந்தச் சர்க்கார். இதை நாம் மனத்திலே கொள்ள வேண்டும். இந்திக்கு தகுதி உண்டா என்பதை இந்தியினுடைய தொடர்பற்ற பிறமொழி மக்கள் நிர்ணயிக்க வேண்டும். இந்திக்கு தகுதி உண்டா ஆட்சி மொழியாவதற்கு என்பதை நிர்ணயிப்பதற்கு, இந்தி தொடர்புள்ளவர்களைக் கொண்டு முடிவு செய்யப்படாது. இந்தி தொடர்பற்ற மொழி பேசும் எல்லா மாநிலத்தினரையும் கொண்டு இந்தி ஆட்சி மொழி ஆவதற்குத் தகுதி உண்டா என்று கணிக்க வேண்டும். இதைத் தானே பாரதியார் சொன்னார்:

> "திறமான புலமை எனில் பிறநாட்டார் அதை
> வணக்கம் செய்தல் வேண்டும்"

திறமான வளம் ஒன்று இருக்கிறது என்று சொன்னால், அதை மற்றவர்கள்தான் ஒப்புக்கொண்டு சொல்ல வேண்டும். ஆகவே, இதை நாம் உணர்ந்து இதற்குத் தக்கபடி கட்சிப் பிரச்சினையாக இதை அணுகாமல், இது மாநில மக்கள் பிரச்சினை தமிழ் மக்களின் பிரச்சினை என்ற கருத்தோடு இதை அணுக வேண்டும். அதைப்போலவே காங்கிரஸ் உறுப்பினர்களெல்லாம் அவரவர்கள் இஷ்டப்படி வாக்களிக்கலாம் என்ற உரிமையையும் ஆளும் கட்சியினர் கொடுத்துவிட வேண்டும் என்றும் நான் விண்ணப்பித்துக் கொள்கிறேன். ஏனென்றால், கட்சிப் பிரச்சினை என்று நாம் கருதாமல் மாநில, அதாவது இம்மன்றத்தைப் பொறுத்தவரை தமிழ் மொழி பேசுகிற மக்களுடைய, லாப நஷ்ட அடிப்படையிலே அதைக் கவனிக்க வேண்டும். அவரவர்கள் இஷ்டத்திற்கு வாக்கு அளிக்கிற நிலையை, உரிமையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்துவிட வேண்டும். தமிழ் மக்களுடைய உள்ளத்தையும், உணர்ச்சியையும் சர்க்கார் புரிந்துகொள்ள வேண்டும், மதிக்க வேண்டும், பிரதி பலிக்கவும் வேண்டும். மேலிடத்துடன் நிலையை தெளிவாக எடுத்துக் காட்டி வாதிட வேண்டும். தாங்கள் காங்கிரஸ் கட்சி என்பதை முற்றிலும் மறந்துவிட்டு, தமிழ் மக்களின் பிரதி நிதிகள் என்பதை ஆளும் கணத்தினர் மனதில் கொள்வார்கள் என்று நிச்சயம் நம்புகிறேன். ஆகவே, அப்படிச் செய்வதானது இப்போது இருக்கிற கட்சிக் கோட்பாடு –கட்சி தெரிமுறையிலிருந்து தவறுவது என்ற பொருள் அல்ல—அந்தக் கட்டாய நிலையைக் கைவிட்டுவிட்டு, பிடிவாதத்தை அறவே நீக்கி விட்டு, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொண்டு, முழுக்க அதை அப்படியே நிறைவேற்றினால், இந்திய நாடு வளம்பெறும்; மாநிலங்கள் நலன் பெறும். வருங்கால மக்கள் இதனாலே பலன் அடைவார்கள். இதனாலே பல கஷ்டங்களும், துன்பங்களும் இல்லாமல் தீரும்; இந்திய ஒருமைப்பாடும் நிலைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சா. கணேசன்] [3rd April 1965

இன்னொன்றும் இறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தியிலேயே எல்லாம் வந்துவிடுமேயானால், தந்தி செய்திகள், அறிக்கைகள், ரிபோர்ட்ஸ் என்று சொல்லுகிறோமே சுற்றறிக்கைகள், வெளியீடுகள், 'சர்குலர், கம்யூனிக்கே ?' என்றெல்லாம் பல சொற்களால் சொல்லுகிறோமோ இவையெல்லாம் இந்தியில் வரும் என்றால், அவ்வப்பொழுது இந்தி பத்திரிகைக்காரர்கள், இந்தியுடன் தொடர்பு கொண்டவர்கள், இந்தி தெரிந்தவர்கள் மட்டும், அதைக் கண்டதுமே, டெலிபிரிண்டரில் அடித்து வந்ததுமே, பதிக்கத் தொடங்கிவிடுவார்கள், பிரசுரிக்கத் தொடங்கிவிடுவார்கள். மற்ற மொழியினர்கள் அதை மொழி பெயர்த்துக் கொண்டு திண்டாடுவார்கள். அப்படிப் பார்க்கும்பொழுது ஒரு சூறிப்பிட்ட மொழியினருக்கு இடையூறு ஏற்படும். ஆனால், ஆங்கிலமே இருக்க வேண்டுமென்றால், எல்லா மொழியினருக்கும் அந்தச் சிரமம் இருக்கிறது, கஷ்டம் இருக்கிறது, நஷ்டம் இருக்கிறது. எதுவும் சமமாக இருக்குமாதலால், எவரும் அதனால் பாதிக்கப்படாத நிலை இருக்கிறது என்பதை மனத்திலே கொள்ள வேண்டும். இம்மாதிரி ஒரு நெறிமுறையிலே, ஏற்படக்கூடிய இடைஞ்சல்களை, சிக்கல்களை யெல்லாம் மனதில் கொண்டு இந்த விஷயத்தை அணுக வேண்டும் என்று நான் உங்கள் மூலமாக சபாநாயகர் அவர்களே, அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயத்தில், முழுக்க முழுக்க ஆங்கிலமே தொடர்பு மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் நிலவுவது தான் இந்தியாவின் ஐக்கியத்தைக் காப்பாற்றும், ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தும், இந்தியாவுக்கு அந்தஸ்தையும், எல்லாருக்கும் சமத்துவத்தையும் கொடுக்கும் என்றெல்லாம் கூறி, எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

12-00. noon

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இதுவரையிலே மதிப்பிற்குரிய நண்பர் சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் இடிமுழக்கம் போல் பேசினார்கள். தான் இப்பொழுது என்னுடைய மெல்லிய குரலில் பேச வேண்டியிருக்கிறது. இருப்பினும், நான் கூறக்கூடிய விஷயத்தின் நியாயத்திலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த தேசத்தின் ஸ்திற்மை, எதிர்காலம் இவற்றில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆகவேதான், அவர்கள் இந்திமொழி பற்றி அதன் பலஹீனங்களைச் சுட்டிக்காட்டிய பிறகும், என்னுடைய திருத்தத்தை வலியுறுத்திப் பேசுவதற்குள்ள துணிவு வந்திருக்கிறது. இந்தச் சபையிலே மூன்று வகையான தீர்மானங்கள் இருக்கின்றன. தாதிருஷ்ட வசமாக கனம் முதல் அமைச்சர் எழுத்து மூலமாக எந்த அறிக்கையையும் சபை முன் வைக்கவில்லை. அவர்கள் என்ன சிபாரிசு செய்ய விரும்புகிறார்கள் என்பது அவர்களுடைய பிரசங்கங்களிலிருந்து தான் ஓரளவுக்குத் தெரிந்து கொள்ள முடிகிறதே தவிர, எழுத்து மூலமாக சபைமுன் எந்த அறிக்கையும் இல்லாதது ஒரு குறை தான். எவ்வளவு சிறிய விஷயமாக இருந்தாலும், ஒரு தீர்மானம் என்ன வகையில் இருந்தால், நலமாக இருக்கும். அதிக பட்சம் ஒற்றுமையை ஏற்படுத்தும் முறையில், ஒரு தீர்மானமாகவே நிறை

3rd April 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

வேற்றி அனுப்புவது உசிதமாக இருந்திருக்கும். என்ன காரணமோ தெரியவில்லை, முதல் அமைச்சர் நான் அதைப் பற்றிச் சுட்டிக் காட்டிய பிறகும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. எவ்வளவு நல்ல காரியமாக இருந்தாலும் நான் சுட்டிக்காட்டினால் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வேறு யாராவது சொன்னாலாவது ஏற்றுக்கொள்ளுவார்கள். அது போகட்டும். இங்கே வந்திருக்கக் கூடிய திருத்தங்களிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், கனம் எதிர்க் கட்சித் தலைவர் கொடுத்திருக்கும் தீர்மானம் ஒன்று; கனம் சுதந்திரா கட்சித் தலைவர் கொடுத்திருக்கும் தீர்மானம் இன்னொன்று; இவை இரண்டுக்கும் வேற்றுமை இருந்தாலும் கூட நோக்கத்தில் ஒன்றுதான். இவற்றிலிருந்து நான் கொடுத்திருக்கும் தீர்மானம் முற்றிலும் மாறுனது.

இப்பொழுது நம் விவாதத்தில் இருக்கும் விஷயத்தின் ஒரு முக்கிய எல்லையைப் புரிந்துகொண்டால் நல்லது என்று நினைக்கிறேன். இன்றைக்கு ஒரு மொழி மத்திய சர்க்காரின் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். அப்படி ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்றால், என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி தெளிவாகப் புரித்துகொண்டால், எந்த மொழி சாத்தியம் என்பதை எடுத்துச் சொல்ல முடியும்; நாம் இப்பொழுது விவாதிப்பது நம்முடைய சட்ட சபையிலே; ஆனால் நாம் விவாதிக்கும் பிரச்சினை இந்தியா பூராவிற்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று; தேசம் ஒற்றுமையாக வாழ வழிகாணும் பிரச்சினை. நம்முடைய மாநிலத்தில் மக்களுடைய உணர்ச்சியைத் தட்டி விடும், மக்கள் உணர்ச்சியைப் பூர்த்தி பண்ணும் பிரச்சினை அல்ல. இந்தியா பூராவும் ஒரு நாடு, பல மொழிகள் பேசினாலும், இது ஒரே நாடு என்கிற உணர்வு முக்கியம். பல மொழிகள் பேசுவதால் நாட்டில் பல கஷ்டங்கள் ஏற்படலாம், பல சிக்கல்கள் ஏற்படலாம். அவற்றை எப்படித் தீர்ப்பது? இதிலே அகில இந்தியக் கட்சிகளுக்கும், மாநிலத்திற்கு மட்டும் என்று இயங்கும் கட்சிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. மாநிலத்திற்கு மட்டும் என்று இயங்குகிற கட்சிகள், மாநில மக்களுடைய நன்மையை மட்டும், அவர்களுடைய கோரிக்கைகளை மட்டும், எடுத்து வைக்கலாம். அதை அவர்கள் சொல்லுவது நியாயம் என்றும் கருதலாம். மாநிலத்தில் மட்டும் இயங்கும் கட்சிகள் சொல்லுகிறதை, அவர்களுடைய காரணங்களைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அகில இந்தியக் கட்சிகள், இந்தியா பூராவுக்கும் ஆன கட்சிகள், 44 கோடி மக்களும் ஒன்று என்று நினைக்கும் வகையில் இயங்கும் கட்சிகள் எடுக்கும் நடவடிக்கைகள் வேறு வகையானதாக இருக்கவேண்டும். இது வடக்கே இருக்கிறவர்களுக்கும் பொருந்தும், தெற்கே இருக்கின்றவர்களுக்கும் பொருந்தும். இன்று அகில இந்தியத் தலைவர்களாக அதுவும் பிரதமர் நேரு அவர்களுக்குப் பிறகு அகில இந்தியக் கண்ணோட்டமும், 44 கோடி மக்களும் ஒன்று என்கிற எண்ணமும் குன்றியவர்களாக இருப்பது வருந்தத்தக்கது. என்னுடைய கட்சி அகில இந்திய கட்சியானாலும், அதற்கு அந்தஸ்து கிடையாது. அதனால் அதற்கு அந்த பலஹீனம்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [3rd April 1965

இருக்கிறது என்பதை உணர்ந்துதான் பேசுகிறேன். நாட்டின் துரதிருஷ்டம், அகில இந்தியக் கட்சிகளும், பேச்சு சுதந்திரம் என்கிற பேரில், கட்டுப்பாடு இல்லாமல், ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு கொள்கையைப் பேசுவது இன்றைக்கு நாம் காணும் காட்சி. ஒரே அகில இந்தியக் கட்சியின் ஒரு கிளை ஆங்கிலம் வேண்டும் என்பதும், அதே கட்சியின் மற்றொரு கிளை அது கூடாது, இந்தியேதான் இருக்க வேண்டும் என்பதும், இப்படி ஒரே கட்சியின் இரண்டு கிளைகள் வேறுவேறு கொள்கைகளைப் பேசும்போது, அவர்களுடைய நோக்கம் என்ன என்றே நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. (குறுக்கீடு) எந்தக் கட்சி என்று நான் குறிப்பிடவில்லை. அமைச்சருக்கு சந்தர்ப்பம் வந்தால் அவர்கள் சொல்லலாம், அல்லது கனம் முதல் அமைச்சர் பதில் சொல்லும்போது சொல்லலாம். அவர்களுடைய நோக்கம் என்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை. எப்படியிருக்கிறது என்றால், 'அந்தப் பகுதியில் நீங்கள் ஆட்சியைக் கைப்பற்றுங்கள், இந்தப் பகுதியில் நாங்கள் ஆட்சியைக் கைப்பற்றுகிறோம்' என்பதாகத்தான் இருக்கிறது. அப்படி ஆட்சியைக் கைப்பற்ற மொழிப் பிரச்சினையை உபயோகிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். மொழி கட்சிகளுக்கு அப்பாற்பட்ட தாகக் கருதப்படவேண்டும். இது ஆளும் கட்சிக்கும் சரி, எதிர்க் கட்சிகளுக்கும் சரி, எல்லோருக்கும் பொருந்தும். எப்படியும் தேசத்தின் நலன்தான் பெரிது என்ற எண்ணம் இருக்கவேண்டும். கட்சி நலனே பெரிது என்று கருதக்கூடாது. அதிலும், கட்சி நலனையும் விட, சொந்தக் கவுரமே பெரிது என்று நினைப்பவர் களும் இருக்கிறார்கள். சொந்த நலன், கட்சி நலன் இவைகளை தேச நலனைவிட பெரிதாக நினைப்பதால் தான், அப்படிப்பட்ட நல்ல எண்ணம் இல்லாததால்தான் பல சிக்கல்கள் அதிகமாகிக் கொண்டு இருக்கின்றன. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இது சிக்கல் மிகுந்த பிரச்சினை என்று சொன்னார்கள். இது சிக்கலாக்கப் பட்ட பிரச்சினை; இயற்கையிலேயே, சிக்கலானது அல்ல. தீர்க்கக் கூடிய பிரச்சினை; தீர்க்க முடியாத பிரச்சினை அல்ல. தீர்க்கமுடியாத, மனித சக்திக்கு அப்பாற்பட்ட பிரச்சினை அல்ல. நம்முடைய விருப்பு வெறுப்பு காரணமாக, அரசியல் நோக்கங்கள் காரணமாக, இந்த மொழிப் பிரச்சினையில், மக்களின் உணர்ச்சிகள் தட்டிவிடப்படுகின்றன. இன்று நேற்று ஏற்பட்ட பிரச்சினை அல்ல இது; பல ஆண்டுகளாக இருக்கும் பிரச்சினை இது. இதற்கும் ஒரு பெரிய சரித்திரம் உண்டு. அந்த சரித்திரத்தைப் புரிந்து கொண்டால், இதில் ஒரு முடிவு எடுப்பது சுலபமாக இருக்கும்.

முன்பு சுதந்திரத்திற்காகப் போராடிய காலத்தில், தேசீய ஒற்றுமைக்காக, தேசீய மொழி என்று நாம் எல்லோரும் பேசி வந்தோம். ஆனால் சுதந்திரம் அடைந்தபிறகு, நம்முடைய கண்ணோட்டத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இந்தி பேசக் கூடியவர்கள் பதவிகள் வகிக்கும்போது, இதன் தன்மையை உணர்ந்தால், பிரச்சினையை கொஞ்சம் சுலபமாகத் தீர்க்கலாம்.

3rd April 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

திரு. சா. கணேசன் அவர்கள் கூறினார்கள், இந்தியின் பலஹீனம் பற்றி. 'இந்துஸ்தானியா?' 'இந்தியா?' என்பது பற்றி இருந்த சர்ச்சைகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் எதுவும் புதிதாகக் குறிப்பிடவில்லை. ஏற்கனவே சுதந்திரப் போராட்ட காலத்திலேயே, விடுதலைக்காக நாம் பாடுபட்ட காலத்திலேயே, ஏற்பட்ட சர்ச்சைகளே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். காந்திஜிக்கும், புருஷோத்தமதாஸ் டாண்டனுக்கும் இடையே இருந்த சர்ச்சைபற்றிச் சொன்னார்கள். காந்திஜி இந்தியின் நிலையைப் பற்றிச் சொன்னதை கணேசன் அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கலாம் . . .

திரு. சா. கணேசன்: நான் ஒன்றும் புதிதாக 'இன்வெண்ட்' பண்ணிவிட்டேன் என்று சொல்லவில்லை.

கனம் சபாநாயகர்: இரண்டு பேரும் ஒன்றையேதான் சொல்லுகிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் சொல்லுவதைத்தான் திரு. கணேசன் அவர்களும் சொல்லுகிறார்கள்; ஆனால், சற்று உரக்கச் சொல்லுகிறார்கள். மனதில் இருப்பதை வஞ்சகமாகச் சொல்லுகிறார்கள். காந்திஜியே வலியுறுத்தியிருக்கிறார்கள், இந்தி பொதுச் சிறப்பு உடையதாக இருக்கவேண்டும் என்று. அன்று இந்துக்களும், முஸ்லிம்களும் சேர்ந்து சுதந்திரத்தை அடையவேண்டும் என்று ஒன்றுக நின்று போராடியகாலம். அன்றைக்கு நல்லதொரு மொழி, மக்கள் புரிந்துகொள்ளக் கூடிய மொழி, சமுதாயத்தில் பெரும்பாலான மக்கள், வயலில் வேலை செய்யும் விவசாயிகளும், தொழிற்சாலைகளில் வேலைசெய்யக் கூடிய தொழிலாளர்களும், அலுவலகங்களில் வேலைசெய்யக் கூடிய படித்தவர்களும், சமுதாயத்தில் மெஜாரிடி மக்கள், பெரும் பான்மையான மக்கள் இருக்கிறார்களே அவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய மொழி ஆட்சிமொழியாகவும், கல்வி மொழியாகவும் போதிக்கப்பட்டால்தான் நாடு முன்னேறமுடியும் என்கிற நம்பிக்கை அந்தக்காலத்தில் இருந்தது. அப்பொழுது, தேவநாகரி லிபியில் எழுதலாம், உருது லிபியில் எழுதலாம், ஆனால் தேசிய மொழி இந்துஸ்தானியாக இருக்கவேண்டும் என்று காந்திஜி எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு, சுதந்திரம் பெற்ற ஆர்வத்தில், சுதந்திரம் பெற்ற இறுமாப்பில் என்றுகூடச் சொல்லலாம், பாகிஸ்தான் பிரிந்துபோய்விட்ட கோபத்தில், சம்பந்தப்பட்டவர்கள், நாட்டின் ஒற்றுமைக்குப் பாடு பட்டவர்களும்கூட, பிரிவினை வேண்டிச்செய்தவர்கள் ஏற்படுத்திய அபாயத்தைவிட, இவர்கள்தான் அபாயத்தை நீடிக்கின்றவர்கள் என்பது என் அபிப்பிராயம். அன்றைக்கே பண்டித நேருவும், அபுல்கலாம் ஆஸாதும், அதை எதிர்த்தார்கள். ஆனால் அவர்களுடைய எதிர்ப்பு வெற்றியடைய முடியவில்லை. சம்ஸ்கிருதத்தைத் தழுவிய இந்திதான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்றவர்களே வெற்றிபெற்றார்கள். அதுபோகட்டும். நல்ல வேளை

யாக, அரசியல் சட்டத்தில் வரவேற்கத்தக்க மாறுதல் செய்திருக்கிறார்கள். இந்தியை ஆட்சிமொழி என்று மட்டுந்தான் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மற்ற 14 மொழிகளையும் தேசியமொழி என்று அரசியல் சட்டத்தில் குறிப்பிடாவிட்டாலும், வழக்கத்தில் இருக்கும் ஆங்கிலம் சேர்க்கப்படவில்லை, இந்தியாவின் 14 மொழிகளும் நம்முடைய சொந்த மொழிகள் என்ற வகையில் சேர்க்க வேண்டும் என்கிற யோசனை இருக்கிறது; அதே போல, ஆங்கிலத்தையும், ஆங்கிலோ-இந்தியர்களும் இருக்கிற காரணத்தினால், எட்டாவது ஷெட்யூலில் சேர்க்க வேண்டும் என்கிற யோசனையும் இருக்கிறது. அப்பொழுது அது 14-ல் ஒன்றாக, அல்லது 16-ல் ஒன்றாக வரக்கூடிய நிலைமை ஏற்படக்கூடும். அப்படி பதினைந்து மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் முயற்சியில், அரசியல் சட்டத்தை மாற்றி அமைக்க ஆரம்பம் செய்யப்படுகிறது. அரசியல் சட்டத்தின் பதினேழாவது பிரிவு நம்முடைய நாட்டின் எதிர்காலத்தை தூரதிருஷ்டியோடு பார்த்ததாகச் சொல்ல முடியாது. அதிலே பலஹீனம் இருக்கிறது. பதினைந்து வருஷங்களுக்குப் பின் ஆங்கிலம் அகற்றப்பட்டு இந்தி ஒரே ஆட்சி மொழியாக அமையவேண்டும் என்று அரசியல் சட்டத்திலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதுதான் அதனுடைய குறிக்கோள். அனுபவத்தில் பார்க்கும்போது சாத்தியம் அல்ல. சாத்தியம் அல்ல என்பது மட்டும் அல்ல. இப்பொழுது இந்தியும் ஆங்கிலமும் தொடர்ந்து—இரு மொழிகளும்—ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும் என்ற நிலைமைக்கு இன்று நாம் வரநேர்ந்திருக்கிறது. ஆகவே, சுதந்திரம் பெற்ற ஆர்வத்திலே உணர்ச்சிவசப்படாமல், அரசியல் சட்டத்தை நிறைவேற்றிய சமயத்தில் நீண்ட தூர திருஷ்டியோடு, பிற்கால சந்ததிகளின் நன்மையை முன்னிட்டு, இந்த நாட்டின் ஒற்றுமையை மனத்திலே வைத்து, அவர்கள் சிந்தித்து எழுதியதாக நான் சொல்ல முடியாது. அந்த அளவுக்கு இந்தத் திட்டத்தில் மாறுபாடு அவசியமா என்றால் அதற்கு அவசியம் உண்டு என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அந்த மாறுபாடு எத்தகையதாக இருக்க வேண்டும்? எதற்காக இருக்க வேண்டும்? ஒரு சிலர் சொல்கிறார்கள். "ஆங்கிலத்தில் நாம் பயிற்சி பெற்றிருக்கிறோம். ஆங்கிலம் சொம்ப வளமுள்ள மொழி. உலகத்தோடு தொடர்பு கொள்வதற்கு அவசியமான மொழி. உலகத் தொடர்புக்கு ஒரு மொழி, இந்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ள ஒரு மொழி என்று இரண்டு மொழி எதற்காக இருக்கவேண்டும், அந்தச் சங்கடம் எதற்காக? ஆகவே, ஆங்கிலமே மத்திய அரசாங்கத்தின் ஒரே ஆட்சிமொழியாக இருக்கவேண்டும். அதற்காக வேண்டி அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டியதில்லை, ஆங்கிலமே இருக்கட்டும்" என்ற நோக்கம் உடையவர்கள் இருக்கிறார்கள். இது காரியசாத்தியமா என்று முதலில் சிந்திக்கவேண்டும். அவர்கள் சொல்லக் கூடிய வாதங்களை யெல்லாம் ஒத்துக்கொள்ளலாம். இந்தி மொழியில் குறைபாடுகள், பலவீனங்கள் இருக்கின்றன என்கிறார்களே,

3rd April 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

வந்த வாதத்தையும் ஒத்துக்கொள்ளலாம். ஆனால், இது காரிய சாத்தியமா? இந்த நாட்டின் ஒற்றுமைக்கு உகந்ததாக இருக்க முடியுமா? தெரிந்தோ தெரியாமலோ அரசியல் சட்டத்தில் 'இந்தி ஆட்சிமொழியாக ஏற்படும்' என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டோம். 42 சத விகிதமாக இருக்கட்டும், 40 சத விகிதமாக இருக்கட்டும், கணிசமான தொகையுள்ள இந்தி பேசும் மக்களுக்கு 'ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்காது' என்ற நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டு, இப்போது இந்தி ஆட்சிமொழி யாகாது, ஆங்கிலம் ஒன்று தான் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும் என்று அரசியல் சட்டத்தை மாற்ற முயற்சி செய்தால் இந்தி பேசக்கூடிய மக்களிடத்திலே ஆங்கிலத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யவேண்டிய நிலை, தேச பக்தியின் பேரால், மொழி வெறியைத் தூண்டிவிடுவதற்கு வாய்ப்பு ஏற்படாதா என்பதை 'மொழி வெறி கூடாது' என்று சொல்லக்கூடிய நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதோடு அப்படி மீறி, அவசியம் இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் அது முடி யாது. ஆங்கிலத்தை ஒரே ஆட்சி மொழியாக அமைக்கவேண்டும் என்று கூறக்கூடியவர்களுடைய வாதத்தை ஏற்றுக்கொண்டு, ஆங்கிலம் ஒரே ஆட்சி மொழியாக மத்திய ஆட்சியில் ஏற்படு மானால், மாநிலத்தினுடைய நிலை என்ன ஆகும், கல்லூரியில் பயிற்சி மொழி என்ன ஆகும் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்த்தார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். மத்திய ஆட்சியில் ஆட்சி மொழியாக ஆங்கிலம் மட்டும் இருக்க வேண்டும் என்பதனுடைய கோரிக்கை என்னவென்றால், மாநிலங்களிலும் ஆட்சி மொழி ஆங்கிலமாகத் தொடர்ந்து நடக்க வேண்டும், ஆங்கிலமே தொடர்ந்து இருக்கவேண்டும், கல்லூரியில் பயிற்சி மொழியும் ஆங்கிலமாக இருக்கவேண்டும் என்ற கோரிக்கையை நேரடியாகச் சொன்னால் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வில்லை என்று கூக்குரல் போடுவார்களே என்று இந்த முறையில் சொல்கிறார்கள் அல்லது தெரிந்தோ தெரியாமலோ இந்த முறை யில் சொல்கிறார்கள் என்று தான் நான் நினைக்கிறேன்.

மத்திய அரசாங்க ஆட்சி மொழியாக ஆங்கிலம் மட்டுமே இருக்குமானால் என்ஜினீரிங் கற்கிறவர்கள் தமிழில் படித்துவிட்டு அங்கே போனால் என்ன செய்ய முடியும்? தமிழ் எப்படி இங்கே பயிற்சி மொழியாக வர முடியும்? தெலுங்கு எப்படி ஆந்திரத்தில் பயிற்சி மொழியாக ஏற்பட முடியும்? அப்போழுது மாநிலங் களின் நிலை என்ன ஆகும்? பயிற்சி மொழியும் ஆங்கிலமாக இருக்கவேண்டும். பயிற்சிமொழி ஆங்கிலமாக இருந்தால் ராஜ்ய அரசாங்கங்களை எப்படி நடத்த முடியும்? ராஜ்ய அரசாங்கங் களும் ஆங்கிலத்தின் மூலம் தான் நடத்த வேண்டியிருக்கும். கிராம மட்டத்தில் பழையபடி கணக்கு வைப்பது மட்டும் வேண்டு மானால் தமிழில் இருக்கலாமே தவிர, மற்ற எல்லா மட்டங்களிலும் தமிழ் ஆட்சிமொழியாக வர முடியாத நிலை வந்துவிடக்கூடும். இப்பொழுது பல மட்டங்களில் தமிழை நாம் ஆட்சிமொழியாக்கி

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [3rd April 1965

யிருக்கும்போது, அதையெல்லாம் கூட ரத்துசெய்து, படிப்படியாக ஆங்கிலமே எல்லா மட்டங்களிலும் ஆட்சிமொழியாக வரவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். ஆக, ஆங்கிலம் எல்லா மட்டங்களிலும்—பயிற்சி மொழியாகவும், ஆட்சி மொழியாகவும்—வரக்கூடிய திசையில்தான் கொண்டுபோய்விடும், மத்திய அரசாங்க ஆட்சிமொழியாக ஆங்கிலம் மட்டும் தான் இருக்கவேண்டும் என்ற வாதத்தை ஏற்றுக்கொண்டால். இந்தி மட்டும் இருக்கலாமா என்ரூல், இருக்கக் கூடாது என்று ஒத்துக் கொள்கிறேன். அகில இந்திய காங்கிரஸ் மகாசபையும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் கிட்டத்தட்ட ஒரே நோக்கத்துடன்தான் இந்தப் பிரச்னையைப் பரிசீலித்து ஒரே விதமான முடிவுக்கு வந்திருக்கிரூர்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். எனவே, மத்திய அரசாங்கம் இரண்டு ஆட்சி மொழிகள் வைத்துக் கொள்ளட்டும். ஒன்று இந்தி; இன்னொன்று ஆங்கிலம். ஆங்கிலம் காலவரையறையின்றி தொடர்ந்து துணை ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். எந்தக் காலவரையறை இருக்கலாம் என்பதைக் குறித்து கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு சமயத்தில் கூறினர்கள். "பர்மனென்ட் ஆகவே இருக்கட்டும்' என்ரூர்கள். பர்மனென்ட்டாக இருக்கவேண்டுமானால் அதைக்கூட ஆலோசிக்கலாம். எதுவும் இந்த உலகத்திலே நிலையானதல்ல. 'பர்மனென்ட்'டாகப் போட்டாலும், இன்னொரு தலைமுறையில் ஆங்கிலம் தேவை இல்லை என்ரூல், அவர்கள் மாற்றி விட்டுப் போகலாம். பர்மனென்ட்டாக ஆங்கிலமே இருக்க வேண்டும் என்று செய்வதா, அல்லது இந்தியோடு ஆங்கிலமும் துணை மொழியாக, இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில் இருக்கவேண்டும் என்று செய்வதா என்று மத்திய சர்க்கார் முடிவு எடுக்க வேண்டிய விஷயம். அது எப்படியிருந்தாலும் வரவேற்கத் தகுந்தது. எப்படியிருந்தாலும், இதை நிறைவேற்றித்தான் ஆக வேண்டும். இந்திய ஒற்றுமையைப் பாதிக்காத வகையில், இந்தி பேசாத மக்களுடைய உரிமையைப் பாதுகாக்க இருக்கக்கூடிய ஒரே வழி அரசியல் சட்டப்படி இந்திமொழி மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக இருந்துகொண்டு போகட்டும், நடைமுறையில் ஆங்கிலம் துணை மொழியாக இருந்து, ராஜ்யங்களுக்கு ராஜ்யம் தொடர்பு கொள்வதற்கும், ராஜ்யங்கள் மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொள்வதற்கும் இணைப்பு மொழியாக ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமானால் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும், அல்லது ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்தினால் போதும் என்று நினைப்பார்களானால், ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்தியாவது இந்த உரிமையை வழங்கவேண்டும். நான் சட்டப் பிரச்னைக்குள்ளே போகவில்லை. எனக்கு இருக்கும் தகவல்படி, நான் வழக்கறிஞர்களைக் கலந்தாலோசித்ததில், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்படலாம் என்று தான் தெரிகிறது. ஆங்கிலத்தைத் தொடர்ந்து துணை ஆட்சி மொழியாக கொள்ளவேண்டுமானால், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்படும் என்று கூறுகிரூர்கள். என்னுடைய கட்சியிலும் அதுபற்றிய பரிசீலனை எல்லாம் இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் தான் எங்களுடைய தீர்மானம்

3rd April 1965] [திரு. ச. கலியாணசுந்தரம்]

களிலே 'சட்டபூர்வமான பாதுகாப்பு காலவரையறையின்றி வேண்டும்' என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம். ஏனென்றால், அதிலே உடனே அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்பது இல்லை. அரசியல் சட்டத்தைத் திருத்துகிற முறையில், பார்லிமென்டரி முறையில் பல சங்கடங்கள் இருக்கும் என்ற காரணத்தால், அப்படியும் நம்முடைய நோக்கம் நிறைவேற வேண்டும் என்ற கருத்தோடு, ஆங்கிலத்தை, துணைமொழியாக்க சட்ட பூர்வமான பாதுகாப்பு வேண்டும் என்று வலியுறுத்திக் கூறக்கூடிய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அதனால் அரசியல் சட்டத்தைத் திருத்தக்கூடாது என்பது அர்த்தமல்ல. அவசியமானால் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்ற கருத்தை உள்ளிட்டுத்தான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

அடுத்தபடியாக, என் ஆங்கிலம் மட்டும் ஆட்சி மொழியாக இருக்கக்கூடாது, ஆங்கிலத்தினால் என்ன நன்மை ஏற்படாது என்பதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஆங்கில மொழிக்கு நான் விரோதி அல்ல. யாருக்குமே மொழி மீது பகை கிடையாது. காந்திஜி கூட என்ன சொல்லியிருக்கிறார்? காந்திஜி 1947-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் எழுதிய தூலில்,

"My plea is for banishing English as a cultural usurper as we successfully banished the political rule of the English usurper. The rich English language will ever retain its natural place as the international speech of commerce and diplomacy."

என்று அவ்வளவு வலுவாகச் சொல்லியும் கூட, அரசியல் ரீதியில் அடிமைத்தனத்தை போக்க எந்த இடத்திலிருந்து வெள்ளையர்களை விரட்டினோமோ அது போலவே நம்முடைய கலாசாரத்திலும் ஆங்கில மொழி வகிக்கக்கூடிய ஆதிக்கத்தை அகற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ஆங்கில மொழியை அகற்றவேண்டும் என்று அவர் சொல்லவில்லை. ஆங்கிலம் எந்த எந்தக் காரியத்திற்கு அவசியமோ அந்த காரியத்திற்கு அதைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல், நாம் 200 வருஷ காலம் பழக்கப்பட்ட ஆங்கில மொழியை விட்டுவிட்டு வேறொரு உலக மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதற்காக ஆங்கில மொழியைத் தொடர்ந்து கற்றுக்கொள்வதற்கும் அதை எந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தலாமோ அந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கும் அதை ஒரு 'மொழி'யாக வைத்திருப்பதில் என்னுடைய கட்சிக்கு ஆட்சேபணை இல்லை; ஆங்கிலம் இருக்க வேண்டும். அது பயன்படுத்தப்படவேண்டும். அதில் ஆங்கிலத்தின் அந்தஸ்து என்ன? வெள்ளைக்காரர்கள் காலத்தில் அதற்குக் கொடுக்கப்பட்டிருந்த அந்தஸ்தை இப்போது கொடுக்க முடியாது. அந்த அந்தஸ்தில் இருந்து அகற்ற வேண்டும் என்பதில் எனக்குக் கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை. ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று இன்றைக்கு திரு. ராஜாஜி அவர்கள் சுயராஜ்யா பத்திரிகையில் எழுதலாம். திராவிட் முன்னேற்றக் கழகத்தினர் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டாலும்கூட, "எனக்கே இன்றைக்குப் பிரிவினை உணர்ச்சி வந்து விட்டது" என்று அவர்கள் சொல்லலாம்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [3rd April 1965

ஆனல் 1948 வரையில் அவர் நம் பக்கத்தில் இருந்தபோது என்ன என்ன சொல்லி வந்திருக்கிறார்கள்? சர்வகலாசாலைப் பட்ட மளிப்பு விழாவில் அவர்கள் பேசிய பேச்சுக்களை எல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாகப் போட்டிருக்கிறார்கள். அதில் பத்துப் பன்னிரண்டு பிரசங்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பிரசங்கத்திலும் அவர் எதை வற்புறுத்துகிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். அந்தப் புத்தகத்தில் இருந்து சில பகுதிகளைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

" The English language sits on our thoughts even as this academic robe sits upon me. This robe may be beautiful and may sometimes protect one against the weather, but it is on the whole an inconvenience; just so, the English language may be beautiful but it sits heavily on our thoughts and does not let them grow, or move about freely."

சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவுக்காக—பிரத்தியேகமான உடை அணிந்து போவார்களே, அந்த உடையைப் போட்டுப் போயிருக்கிறார்கள் போலிருக்கிறது. மிகவும் அழகாக அந்த உடையோடு ஆங்கில மொழியை இணைத்துப் பேசுகிறார். "இந்த உடை உடலை அமுத்திக்கொண்டிருப்பது போல ஆங்கில மொழி நமது சிந்தனையை அமுத்திக்கொண்டிருக்கிறது" என்கிறார்.

" The English language sits on our thoughts even as this academic robe sits upon me. "

" The English language may be beautiful but it sits heavily on our thoughts and does not let them grow, or move about freely."

என்பதாக இவ்வளவு வன்மையாகச் சொல்கிறார். "சுதந்திரமாக சிந்திக்கக்கூட அனுமதிக்கவில்லை. நம்முடைய சிந்தனை வளர்வதற்கும் தடையாக இருக்கிறது, முட்டுக்கட்டையாக இருக்கிறது" என்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

" Education does not rest like a brick structure on foundations below but grows like a living tree."

என்பதாக கல்வியை உயிருள்ள மரத்திற்கு ஒப்பிட்டு—காரையைக் கொண்டு கட்டப்படுகிற கட்டடமாக நினைக்கக் கூடாது என்று சொல்லி—கல்லூரிகளைப் பொறுத்த வரையில் ஆங்கிலத்தைப் போதனை மொழியாக வைத்துக் கொள்வதனல் உயர்நிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளியின் நிலை என்ன ஆகும் என்று மிக அழகாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

" The University gives the lead to the High Schools and the High Schools to the Primary Schools, very much like a tree ramifying from the stem upwards to the branches. That is how living things grow and yield ; the University is the stem, the High Schools the bigger branches, with the Primary Schools as their off-shoots.

This leads us to the principle that applies to the medium of instruction. If you retain English as the medium of instruction in the University, it is next to impossible that students and teachers will reconcile themselves to non-English medium in teaching boys and girls in the High Schools."

3rd April 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

என்பதாகக் கல்கத்தா யுனிவர்சிடியில் பேசும்போது சொன்னார்கள். பிரதேச மொழியை மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷனை ஆக்குவதில் சிரமம் இல்லே. நம்முடைய நாட்டில் பல்வேறு மொழிகள் இருக்கின்றன என்பதாகப் பரிகாசம் செய்தவர்களுக்குச் சொல்கிறார்:

"I want you to adopt your mother-tongue as the medium of instruction in the University of this Province . . . Even if India is a museum, we should retain it as a grand museum."

"இது ஒரு சிறப்பான கண்காட்சிசாலேயாக இருக்கட்டும்" என்கிறார்கள். இந்த மொழிப் பிரச்னை சிக்கலானது அல்ல. நாட்டின் ஒற்றுமையையும், கவரவத்தையும் நிலேநாட்ட இந்த 12 மொழிகளேயும் பயன்படுத்தலாம்" என்கிறார்:

"Apart from that, the main languages we have in India are just about a dozen, namely, Hindi, Urdu, Bengali, Marathi, Gujarathi, Kanarese, Tamil, Telugu, Malayalam, Assamese, Oriya, and let us add to this list English too."

ஆங்கிலத்திற்கு என்ன இடம் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுங்கள். ஆனல் பயிற்சி மொழியாக ஆக்கக் கூடாது என்கிறார்கள்.

"By all means give English the importance it deserves, but please do not make it the medium of all instruction."

அதேசமயம் உருது மொழியில் படித்துப் பட்டம் பெறுகின்றவர் களிடத்தில்—உஸ்மானியா சர்வகலாசாலேயில் பேசும்போது,

"You will be rigorously judged by critics who have received their own training through the unnatural, though may-be-at-present richer, medium of a foreign language."

என்பதாக அவர்களுக்கு உற்சாகம் கொடுக்கும் வகையில் பேசியிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

"Not only have you no cause to feel inferior,"

"நீங்கள் மற்றவர்களேவிட மட்டமாகக் கருத இடம் கொடுக்கக் கூடாது."

"but you have every reason for just pride and confidence."

"பிற்காலத்தில் நம்பிக்கைக்கும், பெருமைக்கும் இடம் உண்டு" என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்படி ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்கக் கூடாது என்பது மட்டும் அல்ல, அது நமது சிந்தனேயின் ஓட்டத்தைத் தடுக்கின்றது என்பது மட்டும் அல்ல, நம்முடைய வளர்ச்சிக்கே மூட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர் தமிழின் சிறப்புப்பற்றி பேசியிருக்கின்றவைகளே எல்லாம் பார்த்தால் கவிதைச் சுவை சொட்டும்.

இன்றைக்கு திரு. ராஜாஜி அவர்களுடைய கருத்துக்களேயும் நாம் அறிகிறோம். தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால் 200 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு திரு. ராஜாஜியைப் போல ஆங்கிலத்தில் பேசக்கூடிய, எழுதக்கூடியவர்கள் எத்தனே பேர் இருக்க முடியும்? திரு. வி. பி. ராமஸ்வாமி ஐயர் இருக்கலாம்,

டாக்டர் ராதாகிருஷ்ணன் இருக்கலாம், திரு. லட்சுமண சுவாமி முதலியார் இருக்கலாம், திரு. ராமஸ்வாமி முதலியார் இருக்கலாம்; இப்படி எண்ணிப் பார்த்தால் பத்துப் பதினேந்து பேர்களே இருக்க முடியும். நாம் எல்லாம் ஆங்கிலம் எழுதிப் பேசினாலும், பிழை இல்லாமல் அவர்களைப் போல ஆங்கிலத்தை உபயோகப்படுத்த முடியும் என்று நான் கருதவில்லை. அதுவும் இப்போது வருகிற பி.ஏ. மாணவர்களையோ, பி.எல். மாணவர்களையோ பி.எஸ்ஸி., மாணவர்களையோ பார்க்கிறபோது—என்னுடைய தரம் கூட உயர்வாகத் தோன்றுகிறது. நான் கிராஜுவேட் அல்ல. இதனால் மாணவர்களைக் குறை சொல்வதாக நினைக்கக்கூடாது. இன்றைக்குள்ள பயிற்சி அமைப்பில் உள்ள கோளாறை எடுத்துக் காட்டவே விரும்புகிறேன்.

நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் 341-ஆவது பிரிவை எடுத்துவிட்டு ஆங்கிலம் என்ற ஒன்றைமட்டும் the Official language of the Union shall be English என்று போட்டுவிட்டால் என்ன ஆகும்? இந்தமாதிரி பிரிட்டனில் போடுவார்களா? அமெரிக்காவில் போடுவார்களா? சீனாவில் தான் போடுவார்களா? ஆங்கிலத்திற்குரிய ஸ்தானத்தைக் கொடுப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆங்கிலத்தில் கவிதை எழுதக்கூடியவர்கள் நம்மில் இருக்கலாம். சரோஜினி தேவியை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அவர் ஆங்கிலத்தில் எத்தனையோ கவிதைகள் எழுதியுள்ளார்கள். பெங்காலிச் சேர்ந்த சாருட்டத்தைகளை—அதுவும் ஒரு சவுக்கு மரத்தை வைத்து அவர்கள் எழுதியுள்ள கவிதையை நான் அந்தக்காலத்தில் படித்திருக்கிறேன். நாம் வேண்டுமானால்—தவறாக நினைக்கக் கூடாது—மேலைநாட்டாரின் கவிதைகளை—ஷேக்ஸ்பியர் கவிதைகளைப் பாட புத்தகத்தில் சேர்த்து வைக்கலாம்—அவர்கள் இந்தக் கவிதைகளைப் பாடப் புத்தகத்தில் சேர்ப்பார்களா? ஆங்கிலத்தை எந்த எந்த மட்டத்தில்—அந்தஸ்தில் வைக்கலாமோ அதில் தான் வைக்க முடியும். நம்முடைய கலாசாரத்தை அழிக்கின்ற வகையில் வைக்க முடியாது. ஆனால் அதனாலே நம்முடைய மக்கள் பயனடைய முடியாது. மொழி யாருக்காக? நம்முடைய மக்களுக்காக. ஆகவே, நிர்வாகத் துறையிலும் கல்வித் துறையிலும் எந்த மொழி இருந்தால் சிறப்பாக இருக்கு மென்பதைப் பார்க்கவேண்டும். நிர்வாகப் பொறுப்புக்களும் கல்வித் துறை நடவடிக்கைகளும் ஆங்கிலத்திலேயே இருந்து கிராமத்திலே இருக்கின்ற விவசாயி மட்டும் நவீன விவசாய முறைகளைத் தமிழிலே தானே கற்றுகொண்டு முன்னுக்கு வந்துவிடுவான் என்று எதிர் பார்க்க முடியாது. ஒரு அறிக்கையிலே பார்த்தேன், நம்முடைய நாட்டிலே எல்கிலட் லேபரர்ஸ், அதாவது திறமையான தொழிலாளர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று என்ஜினியரிங் கல்வி வசதிகள் எல்லாம் இருந்தும்கூட, திறமையான தொழிலாளர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்தப் பலஹீனத்தின் காரணம் என்ன? தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள்

12-30 p.m.

3rd April 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

திறமையாகத் தங்கள் வேலைகளைச் செய்யவேண்டுமானால் அவர்கள் பேசுகின்ற மொழியில் நூல்கள், அவர்களுடைய பயிற்சி இவைகள் இருக்குமானால் தொழிலாளர்களும், விவசாயிகளும் திறமையாக வேலை செய்யலாம். அவர்களிலே பல நிபுணர்கள் தோன்றலாம். அரிய அரிய காரியங்கள் செய்யலாம். அது பொருளாதார வளர்ச்சிக்கும், விவசாய அபிவிருத்திக்கும் சாதகமாக இருக்கும். அன்னிய மொழியில் இருக்குமானால் முன்னேற்றம் தடைப்படுமே தவிர, வளர்ச்சிக்கு வாய்ப்பு இருக்காது. அன்று ராஜாஜி அவர்கள் சொன்னதை நான் ஒத்துக்கொள்கிறேன். நம் சிந்தனையை ஓடுக்குகின்றது, சிந்தனை சுதந்திரமாக வளர்வதைத் தடுக்கின்றது என்று சொன்னார்கள். ஆகவே, ஆங்கிலத்தைத் தொடர்ந்து ஆட்சிமொழியாகக் காலவரம்பின்றி வைத்துக் கொள்ளலாம். தொடர்ந்து ஆங்கிலத்தைக் கைவிடக்கூடிய சூழ்நிலை இல்லை என்று வேண்டுமானால் வருந்தலாமே தவிர அதுதான் பெருமைக்குரியது என்று நாம் நினைக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய திருத்தத்திலே ஆங்கிலமும் ஹிந்தியுடன் துணை ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று தான் குறிப்பிட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பயிற்சிமொழியைப் பார்க்கும்பொழுது, இந்த ராஜ்யத்திலே என்ன நிலை இருக்கிறது? பயிற்சிமொழியைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் இனிமேல் ஒன்றும் சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இதில் துரதிருஷ்டம் என்னவென்றால், காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இருப்பவர்கள் காங்கிரஸ் கொள்கையைப் புரிந்துகொண்டு அதன்படி சரியாக இருப்பது இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு குரலில் பேசுகிறார்கள். தமிழ் பயிற்சிமொழியாக இருக்குமென்ற உத்திரவு யார் காலத்தில் போடப்பட்டது; அவர்களுக்குள்ளே யாரால் உத்திரவுகள் போடப்பட்டன என்பதைப்பற்றியெல்லாம் எனக்குக் கவலையில்லை. முன்பு இருந்த கல்வி மந்திரி திரு. சி. சுப்பிரமணியம் அவர்களாக இருந்தாலும் சரி, அல்லது தற்போது இருக்கிற திரு. பக்தவத்சலமாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் அதைப்பற்றி கவலையில்லை. இரண்டு பேரும் அமைச்சர்கள் தான். யார் யார் காலத்தில் எது நடந்தது என்று ஆராய வேண்டிய அவசியமில்லை. ஆனால், தமிழ் பயிற்சி மொழியாக ஆவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும்.

மலையைக் கெல்லி எலியைப் பிடித்ததுபோல், தமிழைப் பயிற்சி மொழியாக்கி அதில் 115 பேர் படித்திருக்கிறார்கள். அந்த 115 பேருக்கும் வேலைவாய்ப்புக்கு என்ன இடமிருக்கிறது? ஆகவே, தமிழைப் பயிற்சிமொழி ஆக்காமல், மத்திய அரசாங்கத்தின் ஆட்சிமொழிபற்றிப் பேசுவதற்கு நமக்கு அருகதை கிடையாது. ஆகவே, நாம் தமிழைப் பயிற்சிமொழியாக்கி இங்கேயிருந்து தமிழிலே எல்லாம் அனுப்பவேண்டும். அவர்கள் எந்த மொழியை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளட்டும். ஒரு உண்மையை திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னார்கள். திமிர் என்பது பணம், பதவி, படிப்பு என்ற மூன்றினாலும் வருகிறது என்று

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [3rd April 1965

சொன்னார்கள். ஒரு சிலர் தங்களுக்கு வசதியாக இருக்கவேண்டு மென்பதற்காகவே ஆங்கிலம் இருக்கவேண்டுமென்று சொல் கிறார்கள். 2% மக்கள் மட்டுமே படித்திருக்கக்கூடிய ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று சொல்லும் பொழுது அது ஹிந்தியுடன் துணை ஆட்சி மொழியாகத்தான் இருக்க வேண்டும். இன்னும் இந்தி பேசக்கூடிய பகுதிகளில் இருக்கக் கூடிய சிலர் நினைக்கிறார்கள், ஆங்கிலம் என்னென்ன காரியங்களுக் காகப் பயன்படுத்தப்பட்டு வந்ததோ அந்த காரியங்கள் எல்லா வற்றிற்கும் இந்தி பயன்படுத்தப்பட வேண்டுமென்று நினைக் கிறார்கள். அவர்களையும் தேச ஒற்றுமைக்கு விரோதிகள் தான் என்று நான் கருதுகிறேன். இந்தி வெறியர்களால்தான் இன்றைக்கு இந்த ஆபத்து வந்தது. இன்றைக்கு இந்தி பேசாத மக்கள் இவ்வளவு தீவிரமான வகையில் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு, தடுக்க முடியாத அளவுக்கு அந்த நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. அது தவறு என்றும் சொல்ல முடியவில்லை. இதற்கெல்லாம் யார் பொறுப்பாளி? சென்னை சர்க்கார் மீது மட்டும் பழியைப்போட்டுவிட்டு தப்பித்துக்கொள்ளக் கூடாது. ஏதோ அடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கலாம். திறமையாக அதில் இருந்திருக்கலாம். இந்த மொழிப் பிரச்னை இன்று நேற்று ஏற்பட்டதா? தி.மு.க.-வால் ஏற்பட்டதா? இந்தியின் ஆபத்தைப்பற்றி மற்றவர்களும் சுட்டிக் காட்ட வில்லையா? இந்தப் பதினைந்து ஆண்டுகளுக்குள் என்ன என்ன ஏற்படும் என்பதை யோசித்து பார்த்து, அதற்கு வேண்டிய பரிகாரங்கள் அக்கறையுள்ளவர்கள் செய்யாத காரணத்தால்தான் இத்தகைய ஆபத்து ஏற்பட்டது. மத்திய அரசாங்கத்தில் உள்ள வர்கள், பிரதம மந்திரி உட்பட இதற்குப் பதில் சொல்லவேண்டிய வர்கள். தற்போது இருக்கிற பிரதம மந்திரியைச் சொல்கிறேன். அவர்களிடத்திலே இந்த மனம் இல்லையென்று யாரும் நினைக்க வேண்டாம். இந்த வகையில் திரு. சா. கணேசன் அவர்கள் சொல் வதை நான் ஒப்புக்கொள்கிறேன். எப்படியாவது "சான்ஸ்கீரீட் டைஸ்டு" இந்தி வந்துவிடவேண்டுமென்று தான் அவர்கள் நினைக்கிறார்கள். எப்படி ஆங்கிலம் மட்டும் ஒரு ஆட்சி மொழியாக இருப்பது சாத்தியமாக இருந்ததோ அதேபோல் மூன்று ஆங்கிலம் எந்தெந்தக் காரியங்களுக்கெல்லாம் பயன்படுத்தப் பட்டு வந்ததோ அந்தந்தக் காரியங்களுக்கெல்லாம் இந்தியைப் பயன்படுத்தவேண்டுமென்று இந்தி பேசுகின்ற பகுதியிலுள்ள சிலர் நினைக்கிறார்கள். அதுவும் இந்த நாட்டிலே நடக்காது. அதனால் ஏற்படக்கூடிய ஆபத்து இதைவிடப் பெரிய ஆபத்தாகத் தான் இருக்கும்.

பொருளாதாரத்திலே சமத்துவம் வேண்டுமென்றும், அரசிய லிலே ஜனநாயகம் வேண்டுமென்றும் கூறுகிறோம். பஞ்சாயத்து ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால், பஞ்சாயத்து உரிமைகள் பற்றிச் சிபாரிசு செய்யும் பொழுது, அந்தக் கமிட்டி, ஓட்டுரிமை இருக்கவேண்டும் என்பது மட்டுமல்ல, அந்த உரிமையைப் பயன் படுத்துவதற்கும் வழிசெய்யவேண்டும் என்று சொல்லியிருக்கி றார்கள். ஆகவே, அரசியல் ரீதியாக நாம் அவ்வளவு அதிகமாக

3rd April 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

உரிமைகள் வேண்டுமென்று நினைக்கிறேம். ஆகவே, மொழி விஷயத்திலும் அப்படித்தான் இருக்கவேண்டும். கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையிலே எந்த மொழிக்கும் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது. இந்திய மொழிகள் அத்தனைக்கும் சம அந்தஸ்து இருக்கவேண்டுமென்பதில் சுருக்கமாக முதலமைச்சர் அவர்களுக்கு யோசனை சொல்லவேண்டுமானால் இந்தப் பிரசங்கத்திலே சொல்லிவிட முடியாது. நான் திருத்தங்களின் மூலம் சில யோசனைகளைத் தெரிவித்திருக்கிறேன். இதற்கு முன்பெல்லாம் இதைப்பற்றி விரிவாக விவாதித்திருக்கிறோம். கனம் முதலமைச்சர் அவர்கள் அப்பொழுது கல்விப் பொறுப்பிலே இல்லையென்ற காரணத்தால் அந்த விவாதங்களில் கலந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம். எனவே, அப்பொழுது நடந்த விவாதங்களையும் இப்பொழுது படித்துப்பார்க்கவேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் வேண்டுமானாலும் உட்கார்ந்து விவாதிக்கலாம். இதைத் தீர்ப்பதற்கு சாத்தியம் உண்டு. சென்னை அரசாங்கம் எல்லா அரசாங்கத்திற்கும் சேர்ந்து சமர்ப்பித்த திட்டமானது ஆங்கிலம் தவிர ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருக்கவேண்டுமென்பது. இதை வலியுறுத்தி அதிலே வெற்றி பெறுவார்களானால்—இந்த மொழிப் பிரச்னை, அவ்வளவு சிக்கலான அபாயமான, பயமுறுத்தக்கூடிய பிரச்னை, தேசத்தையே துண்டு துண்டாகச் சிதறிவிடச் செய்யுமோ என்று பயப்படக்கூடிய பிரச்னை, பிறநாட்டு எதிரிகள் நம்மைப்பார்த்து ஏளனம் செய்யக்கூடிய பிரச்னை—இதை நாம் தீர்த்துவிட முடியும். சோவியத் யூனியன் நமக்கு வழிகாட்டியாக இருக்கிறது. சோவியத் யூனியனைப்பற்றி மட்டும் பேசுகிறேன் என்று அர்த்தமல்ல. வேறு சில நாடுகளையும் எடுத்துக்கொண்டால் நமக்கு வழி காட்டியாக இருக்கின்றன. ரஷ்யாவிலே எல்லா மொழிகளையும் கற்றுக்கொடுக்கிறார்கள் பரந்த மனத்தோடு. அதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். லெனின்கிராடிலே தமிழ் போதிக்கப்படுகிறது. தமிழ் மட்டுமல்ல, தெலுங்கு, மலையாளம் போன்ற இந்திய மொழிகள் எல்லாம், மற்றும் உலகத்திலே உள்ள வேறு மொழிகள் எல்லாம், கிட்டத்தட்ட 83, 86 மொழிகள், அங்கே கற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றன. எல்லா மொழிகளிலும் அச்சடிக்கிறார்கள். அங்குள்ள மக்களும் எல்லா மொழிகளையும் கற்றுக்கொள்கிறார்கள். ரஷ்யாவில் எல்லா விஷயங்களிலும் முன்னேறி இருக்கிறார்கள். அவர்கள் ஆங்கிலத்திலிருந்தா அறிவு பெற்றார்கள்? ரஷ்யா விஞ்ஞான ரீதியாக, ஆங்கிலம் பேசுகின்றவர்களைவிட முன்னேறி இருக்கிறது. சீன மொழிகூடக் கடுமையானதுதான். ஆனால் அவர்கள் ஆங்கிலத்தின் மூலமா அறிவு பெற்று விஞ்ஞானத்தில் முன்னேறி இருக்கிறார்கள். ஸ்விட்சர்லாந்தில் பல மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. ஆனால் அங்கிருப்பது யூனிடரி கவர்ன்மெண்ட். நம் முடைய நாட்டில் இருப்பது ஃபெடரல் கவர்ன்மெண்ட். பல மொழிகள் இருக்கும் நிலையில் அந்தந்த ராஜ்யத்தில் அந்தந்த ராஜ்ய மொழி ஆட்சி மொழியாக இருக்கவேண்டும், பயிற்சி மொழியாக இருக்கவேண்டும்; அப்போதுதான் நிர்வாகம் திறமையாக நடைபெறும் என்று நாம் வகுத்திருக்கிறோம். பதினைந்து மொழி

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [3rd April 1965

களும் மத்திய ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென் பது நியாயமான கோரிக்கை அல்ல. எது காரிய சாத்தியமோ அதைத்தான் செய்யவேண்டும். பதினைந்து மொழிகளிலும் இனசரி வேலைகளைக் கவனிக்க முடியுமா என்பது சிந்தனைக்குரிய ஒன்றாகும்.

திரு சா. கணேசன் அவர்கள் கடைசியாக 'இதைக் கட்சிப் பிரச்சினையாகப் பாராது, கட்சி விருப்பு வெறுப்புக்கு இடம் இல்லாத வகையில் கவனிக்கவேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். அதையேதான் நான் அவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியின் மேல் எப்படி கெட்ட பெயர் உண்டாக்குவது, ஆட்சியில் இருந்து அவர்களை அகற்றுவதற்கு எப்படி இதைப் பயன்படுத்திக் கொள்வது என்ற முறையில் இதைப் பார்க்கக் கூடாது. காங்கிரஸ் கட்சியைப் பதவியிலிருந்து கவிழ்க்க பல ஆயிரக்கணக்கான, நியாயமான காரணங்கள் உண்டு. யார் வேண்டுமானாலும் மந்திரியாக இருக்கட்டும்; பதவியில் இருக் கட்டும். ஆட்சியிலிருப்பவர்களைப் போக்க வேண்டுமென்ற குறுகிய நோக்கம் இதிலே இருக்கக்கூடாது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கொடுத்துள்ள திருத்தங்களை முதலமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். இந்தச் சபையி லிருந்து ஒரே மாதிரியான தீர்மானத்தை அனுப்பினால் அது காரிய சாத்தியமானதாக இருக்கும். மத்திய அரசாங்கம் இதைப் பற்றி ஆராய ஒரு காபினட் சப் கமிட்டி போட்டிருக்கிறார்கள். அதிலே நம்முடைய தமிழ் நாட்டைச் சேர்ந்த அமைச்சர் யாரும் இல்லை. தமிழ் நாட்டு அமைச்சர்கள் யாரும் இல்லாவிட்டாலும் அவர்கள் நல்ல முறையிலே முடிவு எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது; அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றேன். அவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் நம்முடைய சபையி லிருந்து சொல்லக்கூடிய தீர்மானம் இருக்கவேண்டும். ஒருமித்த கருத்தாக இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் மாறுபட்ட திருத் தங்களை கொடுத்திருக்கிறோம். கனம் முதலமைச்சர் அவர்கள் எந்தத் திருத்தத்தையும் உருப்படியாக வைக்கவில்லை. எப்படி மத்திய சர்க்காருக்கு அறிவிப்பது என்பதையும் சிந்திக்க வேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போது கூட நான் தெரிவித்த கருத்து பிரதம மந்திரி அவர்களுடைய உறுதிமொழி சட்ட பூர்வமானதாக ஆக்கப்பட வேண்டுமென்பது. அதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை. அதை எதோபித்து எல்லா மன்ற உறுப்பினர்களும் ஒப்புக் கொள்வதாக இருந்தால் இப்போதே திருத்தம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அப்படி இல்லையென்றால் திருத்தம் கொடுத்துப் பயன் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அதே மாதிரித்தான் வங்காளத்தில் கூடத் தீர்மானம் போட்டு அனுப்பினார்கள். அந்த மாதிரிப் போடுவதுதான் சரியாக இருக்கும்; சாத்தியமானதாகவும் இருக்கும். அப்படியானால் என்னுடைய திருத்தத்தை மாற்றிக் கொள்ள அல்லது வாபஸ் வாங்கிக்கொள்ளக் கூடத் தயாராக இருக்கிறேன். நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்கள் ராஜ்ய

3rd April 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

சர்க்கார் தொடர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் கூறுகின்றன. நமது கனம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக வைத்திருப்பார்களேயானால் அதற்காக வேண்டுமானால் நாம் கிளர்ச்சி நடத்தலாம். அது நம்முடைய முதலமைச்சருக்கும், நமக்கும் இருக்கக்கூடியது. அது இந்திய அரசாங்கத்திற்கும் தமிழ் நாட்டுக்கும் உள்ள பிரச்சினை அல்ல. இங்கிருந்து அனுப்பக்கூடிய தீர்மானம் ஒருமித்த கருத்துக் கொண்டதாக இருக்கவேண்டும், இந்த விவாதம் அந்த முறையிலே முடிய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. சா. கணேசன்: கனம் உறுப்பினர் கலியாணசுந்தரம் அவர்கள் பேசும்போது ஆங்கிலத்தைப் பேசுகின்றவர்களின் விகிதாசாரம் மிகக் குறைவு, நான் சொன்னது சரியல்ல என்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆங்கிலம் பேசுபவர்களின் விகிதாசாரம் ஒன்றும் குறைவு அல்ல. ஒவ்வொரு மாநிலத்திலும் எத்தனை சதமானம் இருக்கிறது என்பதுதான் கேள்வி. இந்தி தெரிந்தவர்கள் தமிழ் மாநிலத்தில் எத்தனை சதமானம்? உத்தரப் பிரதேசத்தில் எத்தனை சதமானம்? உத்தரப் பிரதேசத்தில் 100 சதமானம்; தமிழ் மாநிலத்தில் ஒரு சதமானந்தான். இந்தக் கணக்கை வைத்துப் பார்ப்பதுதான் நியாயம். இந்தியா பூராவையும் மொத்தமாக வைத்து இந்தி பேசுவோர்—மற்றவர்கள் என்று பார்ப்பது தீமை பயக்கக்கூடும்.

MR. SPEAKER: I cannot allow a second debate.

திரு. சா. கணேசன்: கடைசியில் சொல்கிறபோது காங்கிரசைக் கவிழ்ப்பதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன என்றும் சொன்னார்கள். அதைப்பற்றிப் பேச வரவில்லை. எங்களுடைய கொள்கை காங்கிரசைக் கவிழ்க்க வேண்டுமென்பது அல்ல; காங்கிரசை நெறியிலே செலுத்த வேண்டுமென்பதுதான். அது மட்டுமல்லாமல், இந்த ஒரு காரணத்தைக் கொண்டு காங்கிரசைக் கவிழ்க்க வேண்டுமென்று சொன்னாலும் அது தவறு இல்லை.

கனம் சபாநாயகர்: எக்ஸ்பிளனேஷன் என்று ஒவ்வொரு கட்சியினுள்ளவர்களும் பதில் சொல்ல ஆரம்பித்தால் அதற்கு முடிவு இல்லை. Unless it affects any hon. Member personally, I do not think that this sort of explanation is necessary.

*** டாக்டர் பா. நடராஜன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தை இரண்டு நாட்களாகக் கேட்டதும், எனக்கு உமர்கயாம் பாடலில் இருந்து ஒரு அடி ஞாபகத்திற்கு வந்தது.

"I heard great arguments about it and about it and I went out by the same door as I came in"

என்ற முறையிலேதான் பல பேருடைய வாதங்கள் இருக்கின்றன. எதிர்க்கட்சியார் யாரும் புதிதாக ஒன்றும் சொல்லவில்லையே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது சோஷலிஸ்டுக் கட்சி தலைவர் கனம் நல்லசிவம் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சி

[டாக்டர் பா. நடராஜன்] [3rd April 1965

தலைவர் கனம் கலியாணசுந்தரம் அவர்களும் பல விஷயங்களை எடுத்து விளக்கமாகச் சொன்னார்கள். இருட்டறையின் பலகணிகள் சற்று திறந்தன போலிருந்தன.

முதலில், இந்தி இந்த நாட்டின் பொதுமொழியாக ஆக வேண்டுமென்ற கருத்து எப்படி வந்தது என்று அடிப்படையாகப் பார்க்க வேண்டும். வரலாற்று முறையாகப் பார்த்தால், இந்தியை அரசாங்க அலுவல் மொழியாக முதலில் கொண்டுவரக் கருதியவர்கள் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அல்ல. பக்கிம் சந்திர சாட்டர்ஜி, கேசப் சென், அரவிந்த கோஷ், திலகர், காந்திஜி போன்றவர்களால்தான் இந்தி இந்தியாவின் அரசாங்க அலுவல் மொழியாக ஆக வேண்டுமென்ற கருத்து கொண்டு வரப்பட்டது. இவர்கள் எல்லாம் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அல்ல. இவர்களெல்லாம் வங்காளிகள், மராத்தியர், குஜராத்தியர்; ஆயினும் இந்திய ஒற்றுமை மலர்ந்து நிலைபெறவேண்டுமென்று வேட்கை கொண்டவர்கள். இவர்கள் தங்களுடைய தாய் மொழி நாட்டின் தொடர் மொழியாக இருக்கவேண்டுமென்று கருதினார்களே. இந்தியைத்தான் கருதினார்கள். எதற்காக அதைக் கருதினார்கள்? இந்தி பெருவாரியான மக்களின் தாய்மொழி என்பதால் அல்ல. புள்ளி விவரங்களைப் பார்த்தால் மக்களில் 34 சதத்தினர் மட்டுந்தான் இந்தியாவில் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளார்கள். இந்தி பேசும் மாநில ரீதியான புள்ளி இது. ஆனால் அங்கு பின் தங்கிய மக்கள், ஆதிவாசிகள் என்று சொல்லக்கூடிய தொல்குடி மக்கள் போன்றவர்கள் தொகையைக் கழித்துப் பார்த்தால்—அவர்கள் பேசுவது இந்தி மொழி அல்ல; அவை பழைய புராதண மொழிகள்—அந்த மக்கள் தொகையை எல்லாம் கழித்துப் பார்த்தால் உண்மையில் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் 20 சதவீதந்தான். ஆகவே, பெரும் பாலோரின் தாய் மொழி என்ற காரணத்தால் இந்தியை அரசாங்க அலுவல் மொழியாகக் கொள்ளவில்லை. இந்தியை ஆட்சி மொழி என்று நாம் சொல்லக்கூடாது; அரசாங்க அலுவல் மொழி என்றே சொல்லவேண்டும். ஆட்சிமொழி என்ற தப்பான மொழி பெயர்ப்பால், அதற்கு இல்லாததொரு ஆதிக்க உயர்வைக் கொடுக்கிறோம். எனவே, அரசாங்க அலுவல் மொழியாக இந்தி வருவது அது பெரும்பாலான மக்களுடைய தாய்மொழி என்பதால் அல்ல; அல்லது அவர்களால் திணிக்கப்படுவதும் அல்ல. இந்தியைக் கொண்டு வந்தவர்கள் இந்தி பேசாதவர்கள், நம் போன்றவர்கள். ஆனால் இந்தி பெரும்பாலான மக்களால் புரிந்து கொள்ளப்படுகிறது, பேசப்படுகிறது என்பதால் இந்தியைக் கொண்டு வந்தார்கள். பெரும்பாலான மக்கள் அதைப் பேசுகிறார்கள்; புரிந்து கொள்கிறார்கள். அதனால் இதை அரசாங்க அலுவல் மொழியாகக் கொண்டு வந்தார்கள். அதைக் கொண்டு வந்த போது, எல்லா மாகாணமும் அதை ஒத்துக்கொண்டு, 1950-ல் அரசியல் நிர்ணயச் சட்டத்திலும் பொறித்துவிட்டோம். அவ்வாறு பொறித்ததில் ஒன்று தவறி விட்டோம். உடனடியாக,

3rd April 1965] [டாக்டர் பா. நடராஜன்]

1950-லிருந்தே இந்தி அலுவலக மொழி என்று சொல்லியிருந்தால் இப்போது அதை நம்முடைய அரசாங்க அலுவல் மொழியாக நடத்திக் கொண்டிருப்போம். ஆனல் 15 ஆண்டுகளுக்குப்பிறகு வரட்டும் என்று சொன்னபோது அதில் பலவித சர்ச்சைகளுக்கு இடம் கொடுத்து விட்டோம்.

நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் நன்கு எடுத்துக் காட்டினர்கள். முன்பு இந்தி வேண்டும் ஆங்கிலம் கூடாது என்பதற்காக எவ்வளவோ வாதங்களை எல்லாம் சொன்னர்கள், ராஜாஜி போன்றவர்கள். இப்போது ஆங்கிலம் ஒன்றுதான் வேண்டும், இந்தி கூடவே கூடாது என்று கூறுகிற அளவில் அவர்கள் அறிவு வளர்ச்சி பெற்றுவிட்டது! அவர்கள் நாட்டுப் பற்றுனது இப்போது சிறந்து, தமிழ் நாடு தனியாக பிரியட்டும், நாட்டுப் பிரிவினையை ஆதரிக்க வேண்டிய நிலைமை வரும் என்று சொல்லக்கூடிய அளவில் சிறந்துவிட்டது! சமீப காலத்தில் அவர்கள் என்ன சொன்னர்கள்? 1959-ல் ராஜாஜி சொன்னர்கள்:

" Passing on to the question of the official language, the biggest language group of the people of India is the Hindi-speaking population. This may be admitted straightaway. If India is to be one people in politics, in commerce and in arts, Hindi is the one language that must claim attention from all the people of India, besides their own regional language in whatever part of the country they may be living. Trade cannot for long remain confined within the borders of one language area. So it is impossible to confine the literary and cultural or political activities of the people within the boundaries of any mono-lingual area. If an Indian citizen desires to be cultural and educated in a true sense, he must be able to express himself and feel at home wherever he may be in India. A man whose ambition is to be a cultured Indian, cannot enclose himself in his mono-lingual shell. It follows that a sound knowledge of Hindi must be one of the aims of all education in all parts of India. Hindi is bound to be the national language of India."

என்று சொன்னவர்கள் இப்போது வேறுவிதமாகச் சொல்கிறார்கள். அபிஷியல் லாங்குவேஜ் காண்ட்ரவெர்சி என்ற புத்தகத்தில் ராஜாஜியின் பேச்சும், மேற்கோள்களும் இருக்கின்றன.

அடிப்படையாக நாம் இந்த பிரச்சினையில் பார்க்க வேண்டியது என்னவென்றால், ஜனநாயக ரீதியில் பெரும்பாலான மக்களால், பெரும்பாலான மாநிலங்களால் இந்தியை நம் அரசாங்க அலுவல் மொழியாக ஏற்றுக்கொண்டுவிட்டோம். அப்படி அதை ஏற்றுக் கொண்டு வருடங்கள் 15 ஆகிவிட்டன. நாம், சிறுபான்மையோர், என்ன கேட்கலாம் என்றால் நமக்கு இன்றியமையாத பாதுகாப்பு வேண்டும் என்று கேட்கலாம். ஜனநாயகம் என்றால் விட்டுக் கொடுத்து நடக்கக் கூடிய ஒரு அரசாட்சி முறை. அதில் பெரும் பான்மையோர் சிறுபான்மையோர் இவர்களுக்கு இடையே கருத்து வேற்றுமை இருந்தால், அதற்கு ஒரு வகையில் சமரசம் கண்டு கொள்ளலாமே தவிர, பெரும்பான்மையினர் கருத்தை சிறு பான்மையினர் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றே அல்லது

[டாக்டர் பா. நடராஜன்] [3rd April 1965

சிறுபான்மையோர் தங்கள் கருத்தைப் பெரும்பான்மையோர் கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தல் செய்தலோ கூடாது. இது ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இந்த அடிப்படையில் 1950-ல் இதை சட்டமாக்கி விட்டார்கள். அதை நாம் எல்லோரும் ஒப்புக் கொண்டோம். இந்தி பேசுகிற மாநிலங்கள் மட்டும் அல்ல, அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. பஞ்சாப், குஜராத், வங்காளம், மகாராஷ்ட்ரா, கர்நாடகம், கேரளம், தமிழ் நாடு ஆக எல்லோரும் சேர்ந்துதான் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். அப்படி கொண்டு வந்தது மட்டுமல்ல. இந்த பதினேந்து வருடங்களாக நம்மைத் தவிர எல்லோரும் இந்தியை கட்டாய பாடமாக்கி அவரவர்கள் பள்ளிகளில் வைத்து, அதற்கு வேண்டிய வளர்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. நாம் மட்டும் கட்டாயம் வேண்டாம் என்று தனித்து நிற்கிறோம். 1959-ல் அபீஷியல் லாங்குவேஜ் சட்டம் வந்தபோது பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், தாம் யாரையும் கட்டாயப்படுத்துவது இல்லை என்று சொன்னார்கள். "தமிழர்கள் இந்தி படிக்க வேண்டாமென்று கருதினால், அவர்கள் படிக்க வேண்டாம். நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை, அவர்கள் ஆங்கிலம் வேண்டுமானால் வைத்துக்கொள்ளட்டும். அதை அரசாங்க அலுவல் துணை மொழியாக நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம், இந்த முறையில் நான் அதற்கு வாக்குறுதி கொடுக்கிறேன்" என்று சொன்னார்கள். அந்த வாக்குறுதி இப்போது சட்டமாக்கப்படவேண்டும் என்பதான் இருக்கிற விவகாரம். வேறு ஒன்றுமில்லை. சமீபத்தில் ஏதோ சில மத்திய அரசாங்க சுற்றறிக்கைகள் இந்தியில் மட்டும் வந்தன. இந்தியிலும் ஆங்கிலத்திலும் வரவில்லை, ஆகவே ஒரு சந்தேகம் நாட்டில் ஏற்படவும், நேருவின் உறுதிமொழியை சட்டமாக்க வேண்டுமென்று கூறுகிறோம். இதைத் தவிர இந்தி வேண்டாம் என்று சொல்வதற்கு நமக்கு எவ்வித நியாயமும் இல்லை. நமக்கு வேண்டுமானால் இந்தி வேண்டாமென்று வைத்துக் கொண்டு நம் பிள்ளைகளுக்கு, எதிர்கால சந்ததியினருக்கு, அகில இந்திய வாழ்வில் பங்கு இல்லாத வகையில் செய்யலாம். அது அவர்கள் தலைவிதி. நம் பிள்ளைகளாக பிறந்ததற்கு அவர்களுக்கு நாம் செய்யும் உதவி. தந்தை மகற்காற்றும் நன்றி. பழைய சரித்திரத்தைப் பார்த்தால் 1937-ல் ஜஸ்டிஸ் பார்ட்டி இருந்த போது அவர்கள் ராஜாஜி இந்தியை கட்டாயமாகக் கொண்டு வந்ததை எதிர்த்தார்கள். அப்போது ஆரியர் திராவிடர் என்ற உருவத்தில் அந்த எதிர்ப்பு வந்தது. இப்போது அன்று அதை எதிர்த்தவர்களும், எதிர்க்கப்பட்டவர்களும் ஒரே தரையில் ஒன்று சேர்ந்து நிற்கிறார்கள். "இந்தியை எதிர்ப்போம், ஆனால் நீ மட்டும் ஆரிய திராவிடத்தைக் கொண்டு வந்து விடாதே, நான் உன் கூடச் சேர்ந்து இந்தியை எதிர்க்கிறேன்" என்று இப்போது இணைந்து விட்டார்கள். அப்படியானால் இருவரும் ஆங்கிலத்திற்காக வாதாடுவோம் என்று கூடி நின்று சொல்கிறார்கள். ஆகவே, 1937-ம் ஆண்டு எதிர்ப்பு உருவம் மாறியிருக்கிறதே தவிர புதிதாக அதில் ஒன்றுமில்லை. ஆனால் தமிழ் நாட்டின் துரதிருஷ்டம்,

3rd April 1965] *[டாக்டர் பா. நடராஜன்]*

தமிழர்களின் தூரதிருஷ்டம் தமிழர்கள் வாழ்வதற்கு வழி யில்லாமல், தொடர்ந்து இப்படியே நடந்து கொண்டிருக்கிறது. வடநாட்டு நாகரீகமும், தென்னாட்டு நாகரீகமும், பல்லாயிரம் ஆண்டுகளாக கலந்து பலவித மாறுதல்கள் நாட்டில் ஏற்பட்டிருக் கின்றன. ஆனால் எப்படி இந்த மாறுதல்கள் உருவாக்கப்பட்டன, எப்படி மோதல்கள் இல்லாது சமாளிக்கப்பட்டன என்றால் அதில் தென்னாட்டின் பங்கை குறைத்துக் கொண்டல்ல, தமிழர்களின் பங்கை குறைத்தல்ல, பாரதப் பொதுவாழ்வில் கலந்து இறுதியில் "தோற்றவர்கள் வென்றவர்கள்" என்ற முறையில் தமிழர்களின் பங்கைப் பெருக்கியே இந்தக் கலப்பு நடத்தப்பட்டிருக்கிறது என்பதை வரலாறு கூறும். ரிக் வேத காலத்தில் அவர்கள் எப்படி யிருந்தார்கள்? ஏனோ 'சிசுநதேவன்' என்றும் மூச்சந்தியில் தான் இருப்பதற்குரியவன் என்றும், யாக குண்டத்தில் இடம் பெற இயலாதவன் என்றும் ரிக் வேதத்தில் கூறினார்கள். வருணன், அக்னி, வாயு என்றெல்லாம் அவர்கள் கடவுள்களாக இருந்தார்கள். இன்று சிவன் கைலை உச்சியில் வீற்றிருக்கிறார். இங்கும் சிவன் என்றும்போல் கடவுளாக இருக்கிறார். தென்னாடுடைய சிவன் என்னாட்டுக்கும் இறைவன் ஆனார். வேத காலத்தில் பூஜை உண்டா? இப்பொழுது யாகசாலைகள் எங்கே? வருணன், அக்னி, வாயுவுக்கு கோயில்கள் எங்கே? மாரியம்மனுக்கும் கருப்பண்ணசாமிக்கும் அன்றுபோலவே இன்றும் இருக்கிறது. வேதக் கடவுள்கள் இருந்த இடம் தெரியவில்லை. மலர் இட்டு, நீராட்டி, அருச்சனையால் செய்யும் வழிபாடு எல்லாம் இருந்ததா? கோயிலுண்டா? குளமுண்டா? மோகஞ்சதாரோ நாகரீகத்தில் அவை இருந்தன. இப்பொழுதும் இருக்கின்றன. ஆக நம் கருத்து, நம் நாகரீகம் வடநாடெல்லாம் வலுப்பெற்றிருக்கிறது என்பதை சரித்திரம் கூறும். நாம் மற்றவர்களை கவர்ந்திருக்கிறோம். எப்படி? அவர் களோடு கலந்து வாழாது, ஒதுங்கி நின்றால் வாழ்வு நம்மை ஒதுக்கி ஓடும். ஆகவே நான் கூற விரும்புவது என்னவென்றால், தமிழர் களாகிய நாம் அகில இந்திய வாழ்வில் தகுந்த ஒரு இடம் பெற வேண்டும். அதற்கு இந்தி பயில்வது அவசியம். வெறுப்பையூட்டி, இந்தியை ஒதுக்கி தமிழர்களின் முன்னேற்றத்தை தடுப்பது சற்றும் பொருத்தமல்ல. ஆங்கிலமே அரசாங்க அலுவல் மொழி யாக இருந்தால் என்ன? என்று சொல்கிறார்கள். ஆங்கிலத்தின் ஆற்றலைப்பற்றியும், அதன் வரலாற்றைப்பற்றியும் நான் நன்கறி வேன். அது இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கும், தொழில் நுணுக்க முன்னேற்றத்திற்கும், உலகப் பலகணியாகி சொற் செல்வம் நிறைந்துள்ளதையும் அறிவேன். ஆனால் ஆற்றல் உள்ள மொழியாக, சொற் செல்வம் நிறைந்த மொழியாக இருக்கிறது என்பதற்காக, அதை அரசாங்க அலுவல் மொழியாக்கி விட முடியுமா? பெரும்பாலான இந்திய மக்கள் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு அதற்கில்லை. அது இந்திக்குத்தானிருக்கிறது. இந்தி ஆற்றல் உள்ள மொழியென்றோ, வளப்பம் பெற்ற மொழியென்றோ அதை அரசாங்க அலுவல் மொழியாகச் செய்யவில்லை. ஆனால் அகில இந்தியத் தொடர்புக்கு ஏற்ற மொழி என்று கண்டுதான் அப்படி நமது தேசத்தந்தை முடிவுசெய்தார். நிர்வாகம் என்பது

[டாக்டர் பா. நடராஜன்] [3rd April 1965

இன்று பாதுகாவல் செய்வது மட்டும் அல்ல. எவ்வளவோ விரிந்துள்ளது. ஜனநாயகத்தில் அது எல்லோராலும் புரிந்து கொள்கிற வகையில் அமைய வேண்டும். அதற்கு இந்திதான் ஏற்ற மொழி. ஆங்கிலேயர் ஆண்டபோது, மகமதியர்கள் ஆண்ட போது, மராத்தியர்கள் ஆண்டபோது, விஜய நகர அரசர்கள் ஆண்டபோது இருந்த நிர்வாகம் அல்ல இன்று இருப்பது. இன்று நிர்வாகம் வாழ்வில் எல்லாத் துறைகளிலும் விரிந்து, பரந்து, ஊடுருவி இருக்கிறது. தாய்மொழியில் நிர்வாகம் நடந்தால் தான் எல்லோருக்கும் நிர்வாகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியும். அந்த முறையில் தான் தமிழ் நாட்டில் தமிழில் நிர்வாகம் நடைபெறுகிறது. அகில இந்தியாவில் பெருவாரியான மக்கள் விரும்புகின்ற மொழியை வைத்தால் நிர்வாகத்தை மக்கள் புரிந்து கொள்ள முடியும். நிர்வாகம் மிகவும் விரிந்து வருகிற ஜனநாயக சோஷலிசத்தில் ஆங்கிலம் தான் அலுவல் மொழியாக இருக்கவேண்டும் என்று சொன்னால், என்ன நிலைமை ஏற்படும்? ஆங்கிலம் தெரிந்த ஜாதி என்றும், தெரியாத ஜாதி என்றும் இரண்டு பிரிவுகள் ஏற்படும். ஆங்கிலத்தை வைத்துக்கொண்டு ஒரு சிலர் எப்படி அந்த நாளில் தெரியாத பலரை ஆட்சி செய்து வாழ்ந்து கொண்டிருந்தார் களோ, அந்த நிலை தொடர்ந்து இருக்கவேண்டும் என்று விரும்பு கிறவர்கள் தான் இந்த நாட்டில் ஆங்கிலம் இருக்கவேண்டும் என்று கருதுவார்கள். எந்த காரணத்தினாலும் அந்நிய மொழி தொடர்பு மொழியாக இருக்க முடியாது. நம் உடலுக்குப் புறம்பாக நமது இதயம் இருந்து வேலை செய்கின்றதா? நம்முடைய இதயம் நம் உள்ளேதான் இருக்கவேண்டும். அந்த முறையில், நம்முடைய நாட்டில் இருக்கின்ற ஒரு மொழிதான் தொடர்பு மொழியாக இருக்கவேண்டுமே ஒழிய, வேறு ஒரு மொழி தொடர்பு மொழியாக வரலாகாது; வர இயலாது.

1-00 p.m.

அதனால், ஆங்கிலத்தை முறை சொல்வதாகவோ, வேண்டா மென்று கூறுவதாகவோ, கருதிவிடலாகாது. அதற்குரிய இடத்தில் அது இருக்க வேண்டும். ஆங்கிலம் உலக மொழியாக இருக்கும். விஞ்ஞானத் துறையில், ஆராய்ச்சித் துறையில், தொழில் நுட்பத் துறையில், உயர் கல்வித் துறையில் வைத்துக்கொள்ளலாம். நாம் விரும்புகிற வரையிலும் வைத்துக்கொள்ளலாம், அதை கூட்டு அலுவல் மொழியாக வைத்துக்கொள்ளலாம் என்று பண்டித நேரு உறுதி மொழி கொடுத்திருக்கிறார்கள். அதைத்தான் இப்பொழுது சட்டமாக நிறைவேற்றப் போகிறோம். ஜனநாயக நாட்டில் இதை விட வேறு என்ன உறுதிமொழி கொடுக்கமுடியும்? என்று கூறி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

*திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, இந்த துயரமான நீண்ட தொடர் கதையில் ஒரு முடிவு எழுதுகின்ற கட்டம் ஏற்படவேண்டும் என்று நான் கருதுகின்றேன். ஆனால் நம்முடைய அரசு வகுத்திருக்கின்ற கொள்கை இந்தத் தொடர் கதையின் ஒரு அத்தியாயமாகத்தான் இருக்கிறது. முடிவுரையிலே 'சுபம்' போடுகின்ற கட்டமாக இல்லை! இந்த நாட்டில் இருக்கின்ற —தேசிய மொழிகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட—அத்தனை

3rd April 1965] [திரு. இராம. அரங்கண்ணல்]

மொழிகளுக்கும் சம உரிமை, சம மரியாதை ஏற்பட்டால் ஒழிய நம்முடைய நாட்டில் நாம் காண விரும்புகின்ற ஒருமைப்பாடு மலருமா என்பது ஐயத்திற்குரிய விஷயம். இந்தியினுடைய தன்மையைப்பற்றியும், இந்தி பொதுமொழியாக ஆவதற்கு தகுதியான மொழிதானு என்பதுபற்றியும் இங்கு பலர் எடுத்துச் சொன்னார்கள். இந்தி தகுதியான மொழி யல்ல என்று நான் எடுத்துச் சொன்னால் டாக்டர் நடராஜன் போன்றவர்கள் 1938-லிருந்தே இவர்கள் இந்தக் கருத்தைத்தான் சொல்லுகிறார்கள் என்று கருதக் கூடும். ஆனால் பல ஆண்டுகாலமாக காங்கிரலில் பணியாற்றியது மட்டுமன்றி, இந்தியை வளர்க்கவேண்டும் என்பதில் தன்னே அர்ப்பணித்து பணிபுரிந்த திரு. சா. கணேசன் போன்றவர்கள் இன்றையதினம் தந்த விளக்கத்திலிருந்து இந்தியினுடைய நிலைமை என்ன என்பதை நாம் நன்றாக அறிவோம். இந்தி மொழி எப்போதிலிருந்து உருவான மொழி என்பதைப் பார்த்தால் 1888-ல் கல்கத்தாவில் இருக்கின்ற ஆசிய சங்கம் என்கின்ற சங்கம் தந்திருக்கின்ற விளக்கத்தில், "மராட்டிய மண்டலம் சிதறி, சிப்பாய் கலகமும் அடக்கப்பட்ட பிறகு, வட இந்தியாவில் அச்சகங்கள் உருவாயின. பிறகு, ஐரோப்பியர்களால் அழைக்கப்பட்ட 'இந்தி' என்கிற மொழி பிறந்தது. 1803-ல் கில்கிரெயிட் என்பாரின் போதனைப்படி லல்லுஜிலால், பிரேம்சாகர் நூலை எழுதினார். அதில் அக்பரின் ஆஸ்தான புலவர்கள் பழகிய உருது மொழியும் சந்தைக்கடை பேச்சும் சேர்ந்தது தான் இந்தி என்றும், இதை ஐரோப்பியர்கள் ஆரம்பத்தில் 'இந்தி' என்றும் அழைக்கலாயினர்", என்றும் சொல்லப்படுகிறது. இந்திமொழியை தாழ்த்திக் கூற வேண்டும் என்ற எண்ணமோ சுபாவமோ எனக்கு இல்லை. தமிழ் மொழிக்கு எந்த விதமான மரியாதையும், உரிமையும் கொடுக்கவேண்டும் என்று விரும்புகிறோமோ, அதே மரியாதையும் உரிமையும் இந்தி மொழிக்கும் ஏற்படவேண்டும் என்பதில் எனக்கு அபிப்பிராய பேதம் எதுவுமில்லை. இந்தியில் வருகின்ற கீதங்கள் வெறும் காட்டுக் கூச்சல்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு வரட்டு பிடிவாதக்காரர்கள் அல்ல நாங்கள். நல்ல இந்திப்பாடல்கள் என்றால் நாங்களும் கேட்கிறோம்; ரசிக்கிறோம் இந்திய தூது சண்டம் விடுதலை பெற்றிருக்கிறது. நமது சபையின் முதல்வர் அவர்கள், அடிக்கடி இங்கே குறிப்பிடுகிறார்கள். மொழிப்பிரச்சனை என்பது குழப்பம் நிரம்பிய பிரச்சனை. இந்தியா விடுதலை பெற்ற பிறகு குழப்பம் அதிகமாகிவிட்டது என்று குறிப்பிடுகிறார்கள். யாருக்கு குழப்பம் நிரம்பிய பிரச்சனை என்றால், அவர்களுக்குத்தான் இது ஒரு குழப்பம் நிறைந்த பிரச்சனையாக இருக்கிறது. என்னைய தினம் 343-வது பிரிவு அரசியல் சட்டத்தில் உருவாயிற்றோ அப்போதிருந்தே இந்தக் குழப்பம் உருவாயிற்று என்று கூறலாம். இந்தப் பிரிவு அரசியல் சட்டத்தில் சேர்க்கப்படுவதற்கு முன்னால், அரசியல் நிர்ணய சபையில் இது பற்றிய குழப்பம் உருவாயிற்று; அதற்கு முன்பு காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் எழுபத்திஏழா, எழுபத்திஎட்டா என்று வோட்டுப்பிரச்சனை வந்தபோதே இந்த குழப்பம் உருவாயிற்று! இந்த மொழிப்பிரிவை அரசியல் நிர்ணய சபையில் யார் பிரேரேபிப்பது, சட்ட மந்திரியாக இருந்த

[திரு. இராம. அரங்கண்ணல்] [3rd April 1965

அம்பேத்காரா அல்லது தென்னுட்டைச் சேர்ந்திருந்த கோபால் சாமி அய்யங்காரா என்கின்ற பிரச்னை வந்தபோதே இந்தக் குழப் பம் உருவாயிற்று! இந்தக் குழப்பத்தைப் போக்க வேண்டும் என் கின்ற முயற்சியில், இந்த 17 ஆண்டு காலமாக இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இப்போ துள்ள 343-வது பிரிவை எடுத்துப் பார்த்தால் அதில் உள்ளடங்கி யிருக்கிற 'ஸ்பிரிட்' என்ன? அதில் அடங்கியிருக்கிற உணர்ச்சி என்ன? இந்தியைத் திணிக்க வேண்டும் என்கின்ற உணர்ச்சி அதில் இல்லையா? இதில் இருக்கின்ற 'ஸ்பிரிட்' என்ன என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். இந்தியினுடைய நிலைமையைப் பற்றியும் காந்தியடிகள் விரும்பிய இந்துஸ்தானியினுடைய நிலைமை யைப்பற்றியும் இங்குள்ள உறுப்பினர்கள் பலர் பேசினர்கள். இந்தி எத்தனை பேரால் பேசப்படுகிறது என்கிற விளக்கத்தையும் எடுத்துக் கூறினர்கள். இந்தி பேசப்படுகின்ற மாநிலங்கள் நான்கு. அவை ஒரே வட்டாரத்தில் இருக்கின்றனவே ஒழிய, இந்தி மொழி இமயம் முதல் குமரி வரை பேசப்படுகின்ற ஒரு மொழியாக எடுத்துக் கொள்வதற்கில்லை. மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஐக்கிய மாகாணம், பீகார்—இந்த மாநிலங்களில் தான் இந்தி பேசப்படுகிறதே தவிர தமிழ்நாட்டிலோ அல்லது ஆந்திர நாட்டிலோ பாவலாக இருக்கின்ற மொழியாக இருக்கு மானுல் இந்தப் பிரச்னையே வருவதற்கு இடமில்லை. குறிப்பாக இந்தி நான்கு மாநிலங்களில் தான் பேசப்பட்டு வருகிறது. அது மட்டுமல்ல, இந்தியை எடுத்துக்கொண்டாலும், எந்த இந்தியை கைக்கொள்வது என்பதைப் பார்க்கும் போது, சான்றியார் சொல் கின்ற கடிபோலி இந்தியை எடுத்துக்கொள்வதா, அல்லது டாக்டர் பிரசாத் அவர்கள் கூறிய போஜ்பூரி இந்தியை எடுத்துக்கொள்வதா என்பதும் பிரச்னையாக இருக்கிறது. எனக்குத்தெரிந்த நண்பர் ஒருவர் திரைப்படத் தயாரிப்பாளர். இந்தியில் படம் எடுப்பதாக அவருடைய திட்டம். வசனம் எழுதுவதற்காக, ஒரு வசன கர்த் தாவை நியமித்துக்கொண்டார், அவர் ஐக்கிய மாகாணத்தை சேர்ந்தவர்கள். நடிப்பதற்கு கதாநாயகியை தேர்ந்தெடுத்தார். அவர் மாராட்டிய மண்டலத்தை சேர்ந்தவர். கதாநாயகனைத் தேர்ந்தெடுத்தார், அவர் பஞ்சாபைச் சேர்ந்தவர். கதாநாயகியின் தந்தை பீகாரைச் சேர்ந்தவர். இந்திப்படங்களுக்கு வசனம் எழுதும் முக்கியமான ஒரு நிலை நான் நண்பர்களாகப் பெற் றிருக்கிறேன். அவர்கள் இந்தியில் எழுதுவதில்லை—உருது மொழி யில் தான் எழுதுகிறார்கள். ஏனென்று கேட்டால் அதில் எழுதினால் தான் கவிதை நயத்தைக் கொண்டு வரமுடிகிறது என்று சொல் கிறார்கள்! உருது மொழியில் வசனகர்த்தா எழுதியிருந்தார். இந்தியில் துணை வசனகர்த்தா சொன்னர், அப்படி எழுதப்பட்ட வசனம் சரியில்லை, இந்த வார்த்தைதான் போடவேண்டும் என்று. மாராட்டிய கதாநாயகி மறுக்க, பீகாரைச் சேர்ந்தவர், அதுசரி யில்லை, அந்தப் பொருள்வர இந்த வார்த்தையைப் போடவேண்டும் என்று இன்னொரு வார்த்தையைச் சொல்ல, அந்த வார்த்தை உகந்ததாய் இல்லை என்று இன்னொருவர் சொல்ல, இதில் எது சரி யென்று கண்டு முடிவு செய்ய தமிழ்த் தயாரிப்பாளர் திண்டாடி,

3rd April 1965] [திரு. இராம. அரங்கண்ணல்]

இப்படி ஒருநாள் முழுவதும் வீணுயிற்று என்று என்னிடம் வருத்தப்பட்டார். இதை நான் எடுத்துக்கூறுவதற்கு காரணம், இந்தி மொழி வளம் பெறுவதற்கு இன்னும் எத்தனை காலமாகும் என்பதைப் பார்க்கவேண்டும். இந்தி மொழியில் 81 வகைகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. கோபால்சிங் என்கிற எம்.பி. ஒரு கட்டுரையில் தருகிற புள்ளி விவரப்படி, இந்தியாவில் இந்தி பேசுகின்றவர்கள், 13 கோடி பேர்கள் இருக்கிறார்கள். இந்த 13 கோடியில் உருதுவை மட்டும் பேசக்கூடியவர்கள் 3 கோடி பேர்கள். அந்த நான்கு மாநிலங்களில் இருக்கிறார்கள். உருது மட்டுமின்றி, பிற புராதன மொழிகளை பேசுகின்றவர்கள் மூன்று கோடி பேர்கள் இருக்கிறார்கள். இதையெல்லாம் கழித்துப்பார்த்தால் ஏழு கோடி பேர்கள் தான் இந்தி பேசுகின்றவர்கள் இருக்கிறார்கள். இந்த ஏழு கோடி பேர்களுக்காக 30 கோடி மக்களின் உரிமையையும், அந்தஸ்தையும் பணயம் வைக்க வேண்டுமா என்பதை கனம் முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். "இந்தியாவுக்கு ஒரு பொது மொழி தேவையில்லையா" அந்த முறையில்தான் இந்தியை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இதைத்தான் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முன்பே ஒப்புக்கொண்டிருக்கிறோம்" என்று முதலமைச்சர் சொல்வார்கள். ஆனால், இவ்விதம் இந்தியைப் பொது மொழியாக நாம் ஏற்றுக்கொண்டது எந்தச் சந்தர்ப்பத்தில்? வெள்ளைக்காரன் நம்மை ஆண்டுகொண்டிருந்தபோது அவனை விரட்டவேண்டும் என்ற உத்வேகம் நம்மிடையே இருந்த நேரத்தில், நமக்கென்று ஒரு மொழிவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்ட நேரத்தில், இந்தியினுடைய பிரச்னை வந்தது. அப்போது காந்தியடிகள் சொன்னது இந்துஸ்தானி. ஆனால் பீகாரில் இருந்தவர்களும், ஐக்கிய மாகாணத்தில் இருந்தவர்களும் தங்களுடைய கருத்தை வலியுறுத்த வேண்டுமென்ற காரணத் தினாலே, தன்னிகர் இல்லையென்று காட்டிக்கொள்ள இந்தியைக் கொண்டு வந்து புகுத்தினார்கள். இன்றைய தினம் கூடச் சொல்லிக்கொள்வேன், அகில இந்திய ஒருமைப்பாடு காப்பாற்றபட வேண்டும் என்று அக்கறை கொண்ட நல்லவர்கள் இந்தி பேசும் பகுதியிலும் இருக்கிறார்கள். ஆனால் ஜனசங்கைச் சேர்ந்தவர் களும், அவர்களுக்கு ஆதரவு அளிக்கிற ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தீவிர வாதிகளும் தான் இன்றைய தினம் அதிர்ச்சியை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நண்பர்கள் கூறக் கூடும், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தினால் தான் தீ பற்றி எரிகிறது என்று பற்றி எரிகிற தீ அணைக்கப்பட வேண்டும் என்று, இந்தப் பிரச்னையில் சமாதானம் எற்பட நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் வடக்கே இருக்கிறவர்கள் ஐக்கிய மாகாணத்தில் இருக்கிறவர்கள், அவர்கள் உணர்ச்சி என்ன, அவர்கள் தன்மை என்ன என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

•

கனம் சபாநாயகர்: நேரம் ஆகி விட்டது . . . கனம் அங்கத் தினர் எவ்வளவு நேரம் வேண்டுமானலும் பேசட்டும்; எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் சரியாக 1-30 மணிக்கு சபையை ஒத்தி வைத்து விட்டுப் போகிறேன். அவ்வளவுதான்.

[3rd April 1965

திரு. இராம. அரங்கண்ணல்: இந்தியாவின் ஒற்றுமை காப்பாற்றப்படவேண்டுமென்று சொன்னால் அத்தகைய உணர்வை, அடக்கத்தைப் பெற வேண்டியது தென்னாட்டில் இருக்கிற மாநிலங்கள் அல்ல. எதிர் காலத்தில் ஒற்றுமை காப்பாற்றப்படவேண்டுமென்றால் நான்கு பிரதேசங்களைச் சேர்ந்த இந்தி பேசுகின்றவர்கள் எந்த உணர்வைப் பெறுகிறார்களோ அதைக் கொண்டு தான் இந்திய ஒற்றுமை காப்பாற்றப்படும். இந்திக்கு வேட்டு வைக்கிறவர்கள்—இந்தி மொழி மட்டுமே இருக்கவேண்டும் என்று சொல்லக்கூடியவர்கள் தான்! இந்தி மொழி மட்டுமே வளரவேண்டுமென்று சொல்லக் கூடியவர்கள் தான்! இந்தி பேசப்படும் ஐக்கிய மாகாணத்தில் இருக்கிற அலகாபாத் உயர் நீதி மன்றத்தின் நீதிபதி திரு. எஸ். எஸ். தவன் அவர்கள் ஒரு அறிவுரை சொல்லியிருக்கிறார். அதைப் புத்தகமாகப் போட்டு இலவசமாகக் கூட இந்தி பேசும் பகுதியிலிருக்கும் எல்லோருக்கும் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். அவர் குறிப்பிடுகிறார்:

"Mr. Dhavan who was speaking at the annual function of a Local college, said he was willing to accept the Language of the Hotentots (South-west African mixed Pastoral race) or even the Chinese as the official language of the Republic if this was the only way of preserving the integrity of the nation."

தேசத்தினுடைய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றவேண்டுமென்று சொன்னால் தென்மேற்கு ஆப்பிரிக்கர்கள் மத்தியிலே பேசப்படக் கூடிய ஓர் ஹாட்டென்டாஸ் மொழியாக இருந்தால் கூட நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன், சீன மொழி பேசினால் தான் இந்திய ஒருமைப்பாடு காப்பாற்றப்படும் என்று சொன்னால் அதைக் கூட ஏற்றுக்கொள்ளத் தயார் என்று சொல்லிய அவர்

"India has 14 mother-tongues none of which can be displaced in its own sphere by Hindi" என்று சொல்லியிருக்கிறார். அவர் இன்னும் அழுத்தமாகப் பல எண்ணங்களைச் சொல்லியிருக்கிறார். அவருடைய கருத்துக்கள் மார்ச் 14-ம் தேதி இதழ்களில் நல்ல முறையில் வந்திருக்கிறது. இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் பல விதக் கருத்துக்களைப் பேசுகிறார்கள். மதர் டங் (தாய் மொழி), ரீஜனல் லாங்குவேஜ் (வட்டார மொழி), அஃபிஷியல் லாங்குவேஜ் (அரசு மொழி), லிங்க் லாங்குவேஜ் (தொடர்பு மொழி), காமன் லாங்குவேஜ் (பொது மொழி), நாஷனல் லாங்குவேஜ் (தேசிய மொழி) என்று சொல்லுகிறோம். இதில் எந்தத் தகுதியை இந்திக்கு உண்டாக்க வேண்டுமென்று நாம் எல்லாம் ஆசைப்படுகிறோம்? இந்திக்கு அளிக்கவேண்டுமென்று ஆசைப்படுவது நாஷனல் லாங்குவேஜ் என்ற தகுதியா, அஃபிஷியல் லாங்குவேஜ் என்ற தகுதியா, அல்லது காமன் லாங்குவேஜ் என்ற தகுதியா, அல்லது லிங்க் லாங்குவேஜ் என்ற தகுதியா என்றுதான் பார்க்கவேண்டும். இன்றைய தினம் இருக்கிற உத்வேகத்தைப் பார்க்கிற நேரத்தில் அரசியல் நடத்து

3rd April 1965] [திரு. இராம. அரங்கண்ணல்]

வதற்கு ஒரு மொழி வேண்டும், இந்திய ஒருமைப் பாட்டைக் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் இந்தி காமன் லாங்குவேஜாக இருக்கவேண்டும், அதை லிங்க் லாங்குவேஜாக வளர்க்கவேண்டுமென்ற கருத்து ஏற்பட்டிருக்கிறது. இதைப் பற்றி எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது "இந்தியாவின் ஒற்றுமைக்காக ஒரு பொது மொழி தேவை என்று சுலபமாக வாதிடலாம். இந்த வாதத்தைக் கவனித்துப் பார்ப்பதற்கு முன், 'ஒற்றுமை' என்பதற்கும் 'ஒரேவிதம்' என்பதற்குமுள்ள வேறுபாட்டை இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பொது மொழி ஒன்றின் மூலம் இந்தியா முழுவதையும் ஒன்றுபடுத்த நீங்கள் விரும்புகிறீர்கள்; அல்லது ஒரே விதமாக்க முயலுகிறீர்கள். இதில் தெளிவு வேண்டும். இந்தியா முழுவதையும் ஒரே மட்டமாக்கிவிடுவதுதான் உங்கள் முயற்சி என்றால், இப்பொழுதே கூறுகிறேன்—இந்த முயற்சியில் நீங்கள் துளிகூட வெற்றி பெறப்போவதில்லை. எது நேரிடினும் சரி—காலஞ்சென்ற தலைமையமைச்சர் கூறியதுபோல—இந்தியாவில் பலதரப்பட்ட இன-கலாச்சார மொழிப் பிரிவுகள் இருக்கின்றன. இத்தகைய பலதரப்பட்ட தன்மைகளை ஒத்துக்கொண்டு, மதிப்பளித்து, ஓர் ஒற்றுமையை உண்டாக்க வேண்டுமேயன்றி, ஒற்றுமையென்றால் ஒரே விதமாக இருக்கவேண்டுமென்று தவறுகருதி, வேறுபாடுகளையெல்லாம் அழிக்க முற்படக் கூடாது. ஒரு நாட்டில் ஒற்றுமையுண்டாக்க, மொழி ஒன்றுதான் அடிப்படையா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். ஒற்றுமை உண்டாக்குவதற்கு மொழி ஒன்றுதான் தடையாக இருக்கிறதா?—நிச்சயமாக இல்லை" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை உணரவேண்டும். அந்த வகையிலே நம்முடைய தமிழ் மொழியை நாம் வளர்க்க வேண்டும். தமிழ் மொழியும் பதிமூன்று மொழிகளோடு டில்லியில் அரியாசனத்தில் வீற்றிருக்கவேண்டும் என்று நாங்கள் கூறுகிற நேரத்தில் பதினான்கு மொழிகளும் எப்படி . .

(மணி அடிக்கப்பட்டது)

*** திரு. ரா. சுப்பிரமணியம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆட்சி மொழி பற்றிய விவாதத்தில் எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆட்சி மொழி பற்றி விவாதம் இங்கே நடந்துகொண்டிருக்கும்போது சில அடிப்படை அம்சங்களை, முக்கியமான அங்கங்களை நாம் மனத்திலே கொள்ளவேண்டும். நம் தேசம் ஒன்றுபட்ட நாடு, ஒரே தேசம். ஒரே நாடாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் எண்ணுகிறோம். திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் கூட ஏற்கனவே அவர்கள் பிரிவினையைச் சொல்லி வந்தார்கள். ஆனால் பிரிவினைத் தடைச் சட்டம் வந்த நேரத்தில் நாங்களும் இந்தப் பிரிவினையை விட்டு விட்டோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். எனவே, இப்போது இந்த நாடு துண்டிக்கப் பட வேண்டும் என்று எண்ணுபவர்கள் யாரும் கிடையாது என்று எண்ணுகிறேன். ஆனால் வாயளவில் சொல்லுவதால்மட்டும் பிரயோசனம் இல்லை. காரிய அளவில் நாம் காட்ட வேண்டும். இப்போது அவர்கள் என்ன திருத்தம் கொடுத்து

[திரு. ரா. சுப்பிரமணியம்] [3rd April 1965

இருக்கிறார்கள் என்றால் நம்முடைய ஆட்சி மொழியாக பதிநான்கு மொழிகளும் இருக்க வேண்டும் என்று. இது என்ன வென்றால், தெளிவற்ற மனப்பான்மையைக் காட்டுகிறது. அவர்களுடைய மனதில் இருக்கிற குழப்பத்தை அது நன்கு வெளிப்படுத்துகிறது. அவர்களுடைய மனதில் எந்த விதத் தெளிவும் கிடையாது. 'சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்' என்று சொல்லுவார்கள். மனதில் தெளிவு இல்லாததால் ஏதாவது சொல்ல வேண்டும், குழப்பம் செய்யவேண்டுமென்று நினைக்கிறார்கள். அவர்கள் பிடிவர்தமாக இருக்கக் காரணம் '1938-ம் வருஷத்திலேயே நாம் இந்தியை எதிர்த்தோம், ஆகையால் விட்டு விடக் கூடாது" என்ற மனப்பான்மையோடு இந்திப் பிரச்சினையை மேலும் மேலும் அதிகப்படுத்திக் கொண்டு வருகிறார்களே தவிர, இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர வேண்டும் என்ற எண்ணம் கிடையவே கிடையாது. இந்தப் பிரச்சினை தீர என்ன செய்ய வேண்டுமென்று கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் விவாமாகச் சொன்னார்கள். இந்தப் பிரச்சினை தீரவேண்டுமென்றால் 'நாங்கள் ஆட்சிக்கு வரவேண்டும், அதுதான் விமோசனம்' என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி சொன்னபோது 'உங்கள் கட்சியை அழிக்க இந்திப் பிரச்சினை ஒன்றே போதும்' என்று சொன்னார்கள். ஆகவே, இந்திப் பிரச்சினையை என்றென்றும் வைத்துக்கொண்டு இருக்கவேண்டும். அதன் மூலமாக ஆட்சிக்கு வரவேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர இதில் சுமுகமான முடிவு காணவேண்டுமென்று அவர்கள் நினைக்கவில்லை. அத்துடன் கூட இரண்டாவது அம்சமாக கவனிக்கும்போது நம்முடைய நாடு ஜனநாயக நாடு. நாம் ஜனநாயக ஆட்சியை விரும்பி ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எல்லா ஆட்சிகளிலும் ஜனநாயக ஆட்சிதான் சிறந்தது என்று நம் நாட்டில் உள்ள தலை சிறந்த தலைவர்களெல்லாம் எண்ணி அதை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எதிர்த்தரப்பில் உள்ளவர்களுக்கும் ஜனநாயக ஆட்சி தான் சிறந்தது என்பதில் எந்தவித ஐயப்பாடும் இருக்காது என்று நினைக்கிறேன். அம்மாதிரி ஏற்றுக்கொண்ட பிறகு எந்த முறையில் செயல்பட வேண்டும்? மெஜாரிட்டி கருத்துக்கு மைனாரிட்டியினர் நெருங்கி வரவேண்டும்; அத்துடன் மைனாரிட்டி கஷ்டங்களைப் போக்க மெஜாரிட்டியினர் வழிவகை செய்ய வேண்டும். அந்த முறையில் நாம் பார்க்க வேண்டுமே தவிர, மைனாரிடி எண்ணத்தை மெஜாரிடி ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும் என்று நாம் வற்புறுத்துவது சரியாகாது. அத்துடன் கூட நாம் ஏற்படுத்தியிருக்கக்கூடிய சட்டங்களை மதிக்கவேண்டும். மூன்றாவது அம்சமாக நாம் இப்பொழுது போடக்கூடிய தீர்மானம் இந்த ராஜ்யத்தை மட்டும் பொருத்ததில்லை. நாம் எந்தவித தீர்மானம் செய்தாலும்கூட, இந்தியா பூராவுக்கும் அது ஒத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். அந்த முறையில் நாம் இந்தப் பிரச்சினையை அணுகவேண்டுமே தவிர, தனிப்பட்ட பிரச்சினை அல்லது தமிழர் பிரச்சினை என்ற முறையில் அணுகினால் அதில் எந்த விதத்திலும் பிரயோசனம் கிடையாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

3rd April 1965] *[திரு. சா. சுப்பிரமணியம்]*

அடுத்தபடியாக, இப்பொழுது ஆட்சி மொழியாக இந்தி மட்டும் இருக்க வேண்டுமா அல்லது இந்தியும், ஆங்கிலமும் இருக்க வேண்டுமா அல்லது ஆங்கிலம் மட்டும் இருக்கவேண்டுமா என்பதைப்பற்றி இப்பொழுது பேசப்பட்டு வருகிறது. இந்தி ஆட்சி மொழியாக இருப்பதற்கு லாயக்கா, லாயக்கு இல்லையா என்பதைப்பற்றி எல்லாம் எதிர்தரப்பில் உள்ளவர்கள் சொன்னார்கள். இந்தி ஆட்சி மொழியாக இருப்பதற்கு லாயக்கில்லை, இலக்கணம் இல்லை, இலக்கியம் இல்லை, 120 வருஷங்களுக்கு முன்னால் தான் இந்தி மொழி என்று ஒன்று கொண்டுவரப்பட்டது, 46 மொழிகளிலிருந்து வார்த்தைகளை இரவல் வாங்கியிருக்கிறார்கள் என்றெல்லாம் வாதம் எழுப்பப்பட்டது. இலக்கணம் இருக்கிறதோ, இலக்கியம் இருக்கிறதோ எனக்குத் தெரியாது. அதைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்வதற்கு நேரமும் இல்லை. நான் சொல்கிறேன், வளரக்கூடிய மொழிகளெல்லாம், மற்ற மொழிகளிலிருந்து வார்த்தைகளை எடுத்து சேர்த்துக்கொள்வதில் எந்தவிதத் தப்பும் கிடையாது. 46 மொழிகளிலிருந்து வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், வளர்ந்து வரக்கூடிய மொழி அது என்று யாருக்கும் சொல்லவேண்டியதில்லை. ஒன்று நான் சொல்கிறேன், இலக்கணம், இலக்கியம், காவியம், கவிதை இதை யெல்லாம் பார்ப்பதைவிட இது ஆட்சி மொழியாக இருப்பதற்கு தகுதியா என்பதைப்பற்றி நாம் கவனித்து முடிவு செய்யவேண்டும். இந்தி ராஜ்யங்களை எடுத்துக்கொண்டால், இந்தி ராஜ்யங்கள் எல்லாவற்றிலும் இந்தி இன்றைக்கு கல்லூரியில் போதனை மொழியாக ஆகியிருக்கிறது. அவர்கள் ராஜாங்க அலுவல்களையெல்லாம் இந்தியிலேயே நடத்திக்கொண்டு வருகிறார்கள். எனவே, நாம் இப்பொழுது போய் அந்த மொழியை சரியான மொழியல்ல என்ற வாதம் செய்வது எந்த விதத்திலும் பொருத்தமானதாகாது என்று தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தி வந்தது, ஏதோ ஒரு வோட்டு மெஜாரிடியில் அப்பொழுது கொண்டுவரப்பட்டுவிட்டது, ஆகவே அதை எடுத்துவிடவேண்டும் என்ற வாதம் எழுப்பப்படுகிறது. ஒன்று சொல்கிறேன். மெஜாரிடி ஆட்சி என்றால், ஒரு வோட்டோ, இரண்டு வோட்டுகளோ, எப்படியோ அது ஆட்சி மொழியாக வந்துவிட்டது. இப்பொழுது நாம் என்ன செய்யவேண்டும்? நமக்கு அது தேவையில்லை என்றால், அதற்கான காரணங்களைச் சொல்லி, நமக்கு எந்த வகையில் பலன் ஏற்படவேண்டுமோ அதைச் சொல்லிக்கொள்வது தான் மிகவும் நலம் என்று நான் நினைக்கிறேன். அதே சமயத்தில், இந்தி ஆட்சி மொழியாக வருமானால், இந்தி பேசாத மக்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இருக்கக் கூடாது என்பது தான் நம்முடைய எண்ணம். நம்முடைய செயல் அந்த அளவில் தான் இருக்கவேண்டும். இந்தி பேசாத மக்களுக்கு கஷ்டம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதைப்பற்றி நம்முடைய ஆட்சியாளர் ஏற்கனவேயிருந்து இதை ஒரு நீலியான கொள்கையாகக் கடைப் பிடித்து வருகிறார்கள். அதற்குத் தகுந்த அத்தாட்சியாக

[திரு. S.S. சுப்பிரமணியம்] [3rd April 1965

அபீஷியல் லாங்குவேஜ் கமிஷனிடம் நம்முடைய அரசாங்கம் ரிபோர்ட் ஒன்றை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதில் அவர்கள் இரு மொழிக்கொள்கை நிரந்தரமாக இருக்கவேண்டும் என்பதைப்பற்றி மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சிலவற்றை நான் இங்கே படித்துக்காட்ட ஆசைப்படுகிறேன். அதிலே சொல்லப்பட்டிருக்கிறது :

" Total suppression of English by Hindi as sole official language of the Union will not in fact be achieved before 1965."

"1965-க்கு முன்னால் இங்கிலீஷை முழுவதுமாக நிக்கிவிட்டு இந்தியே இந்திய யூனியன் ஆட்சிமொழியாகிவிட முடியும் என்பது உண்மையிலேயே நடவாத காரியம்."

"அடுத்தபடியாக, சொல்கிறார்கள், படிப்படியாக சொல்லிக் கொண்டு வருகிறார்கள்."

" To attempt the elimination of English for all official use by the target year 1965 would be to attempt the impossible."

"அதாவது குறிப்பிடப்பட்டுள்ள வருஷமான 1965-க்குள் எல்லா அரசாங்க காரியங்களிலிருந்தும் இங்கிலீஷை நீக்கிவிட முயற்சிப்பது, முடியாத ஒன்றிற்கு முயற்சிப்பதாகும் என்று சொல்லியிருக்கிறார்கள்."

கடைசியில்,

" It is necessary that these administrative organizations should evolve a measure of permanent bilingualism."

"அதாவது, நிரந்தர இரு மொழிக் கொள்கையைக் கடைப் பிடிக்க நிர்வாக இயந்திரங்கள் வழிவகை செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. இருமொழிக் கொள்கை வேண்டும் என்பதுபற்றி அப்பொழுதே தெளிவாக . . ."

(மணி அடிக்கப்பட்டது)

* **திரு. பி. கே. மூக்கையா தேவர் :** கனம் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் நமது மொழிப் பிரச்சினையைப் பொதுவாக விவாதிக்கவேண்டும் என்று இந்த விவாதத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதில் ஒன்றும் குறிப்பிடாமல், திட்ட வட்டமாக ஒரு தீர்மானம் கொண்டு வராமல் இருப்பதினால், மீண்டும் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துகிற அளவுக்கு, குழப்ப எண்ணத்தை உண்டாக்குகிற அளவுக்குத் தான் நிலைமை இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த நாட்டில் மாணவர்களுடைய பெரும் கிளர்ச்சி நடந்திருக்கிறது. காரணம் என்னவென்றால், திட்டவட்டமாக தைரியமாக நல்ல முறையில் நமது அமைச்சர்கள் மொழி சம்பந்தமாக இந்த அபாய நிலையை வடக்கே இருக்கிறவர்களுக்கு எடுத்துக் கூறவில்லை. நமது அமைச்சர்கள் வடக்கே போகிறபோது தி.மு. கழகத்தினர்தான் நாட்டு பிரிவினைக் கொள்கையை பேசி வருகிறார்கள், இந்தி எதிர்ப்பு செய்து வருகிறார்கள் என்று பேசுவது ; தெற்கே வந்தவுடன் நமது நாட்டு மொழிக்கும் நமக்கும் எந்த ஆபத்தும்

3rd April 1965] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

இருக்காது, நேரு வாக்குறுதி இருக்கிறது என்று சொல்லிக் கொண்டே வந்ததால்தான் அரசாங்கம் இன்று ஒரு குழப்பமான நிலையை ஏற்படுத்திவிட்டது. நாட்டில் இன்னும் குழப்பமான நிலைதான் இருந்து வருகின்றது. அப்படியிருக்கும்போதுகூட திட்டவட்டமாக, குழப்பத்திற்கு இடமில்லாமல் இந்தி எங்களுக்குத் தேவையில்லை புகுத்தக்கூடாது என்று ஒரு தீர்மானத்தை முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவராமல் இருப்பது வருந்தத்தக்கது. எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து (குறுக்கிடு), பொதுவாக இந்தி கூடாது என்பதை ஆதரித்து, இந்தியைப் புகுத்தக்கூடாது என்பதுதான் எல்லா திருத்தங்களின் நோக்கம், ஆகையினால் இந்தி கூடாது. இந்திய தேசம் ஒன்று பட்டு இருக்கவேண்டும், அதற்கான நிலையில் ஒரு மொழி ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற நிலைமையிலே நாங்கள் யாருக்கும் பின்நிற்பவர்கள் அல்ல. சுதந்திரத்திற்கு முன்னால் இருந்த நிலைமைகள், தலைவர்கள் வேறு, இன்று சுதந்திரம் கிடைத்த பிறகு இருக்கும் நிலைமை, தலைமை வேறு. பின்னால் ஆட்சி பீடத்திற்கு வந்தவர்கள், வடக்கே இருக்கக்கூடியவர்கள் ஆளும் வர்க்கமாக வெள்ளையர்கள் இருந்த இடத்திலே வந்து உட்கார்ந்திருக்கிறார்கள் என்பதை மற்றவர்களைவிடத் தமிழகத்திலுள்ளவர்கள் ஆற்றல், அறிவு, திறமை படைத்தவர்களாக இருப்பதால் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இங்கே உள்ளவர்களின் எண்ணங்களுக்கு வடகதே இருப்பவர்கள் மதிப்புக் கொடுப்பதில்லை. தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் அந்தக் காலத்தில் ஆங்கிலம் படித்து 'நோபல் பிரைஸ்' பெற்றிருக்கிறார்கள். வங்காளத்தைச் சேர்ந்தவர்களும், இந்த மகானைத்தைச் சேர்ந்தவர்களும் உலக சரித்திரத்திலேயே இந்தியாவின் பெருமையை, நிலைமையை உலகத்துக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த நாட்டினுடைய பெருமையும், ஒற்றுமையும், ஆத்மீகமும், அமைதி வழியும் சுதந்திரம் அடைந்த பிறகு உலகுக்கு வழிகாட்டும். நம்முடைய நாகரிகம் உலகத்திற்கே எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும் என்று நமது தலைவர்கள் கனவு கண்டார்கள் அது நிறைவேறவில்லை. நேர்மாறுகப் போய்விட்டது. எதிர்பாராதவிதமாகத் திடீரென்று சுதந்திரம் கிடைத்ததால் அவசரத்தில் பல காரியங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் ஒன்று ஆட்சி மொழி. ஏதோ ஒரு தீர்மானம் போட்டு பிறப்பிடமோ இருப்பிடமோ தெரியாத இந்தியை ஆட்சி மொழியாக அப்பொழுது ஒப்புக்கொண்டு வந்துவிட்டோம். இப்பொழுது சந்தேகம் வந்துவிட்டது. பாதிக்கத் தொடங்கிவிட்டது. வாக்குறுதி இருக்கிறது. நேரு அவர்களின் வாக்குறுதி இருக்கிறது என்றால் என்ன அர்த்தம்? வாக்குறுதி என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம்? காரண்டி என்று அர்த்தம் அதாவது அரசியல் சட்டம் அந்த அளவுக்கு பேசவில்லை, உறுதிகொடுக்கவில்லை. இந்தி பேசாத மக்களுக்கு சரியான சரியான பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை இருப்பதினால், நேரு அவர்களின் வாக்குறுதி நமக்குக் கொடுக்கப்பட்டது. ஜனவரி 25-ம் தேதியன்றே அந்த வாக்குறுதியும் மாற்றப்பட்டு 26-ம் தேதி முதல் இந்தி புகுத்தப்பட்டுவிட்டது. இந்தி பேசாத மக்களுடைய எதிர்ப்பை எடுத்துக் காட்டத்தான் இந்த கிளர்ச்சிகளெல்லாம் நடந்தன. நிலைமையை தங்களுக்கு ஆதராமாகப்

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [3rd April 1965

1–30 p.m

பயன்படுத்திக் கொள்ளவேண்டும், அதிகாரத்தில் இருப்பவர்களை கீழே இறக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்திருந்தால், அவர்கள் தேசத்திற்கு வேண்டாதவர்கள்தான். அந்த நிலையில் எங்கே இருக்கிறது நேருவினுடைய உறுதிமொழி? வாக்குறுதி சட்டமாக ஆகப்படும் என்கிறார்கள். சட்டமாக்கப் பட்டால், வசதி, வாய்ப்பு இருக்கிறது, பாதுகாப்பு இருக்கிறது என்கிறார்கள். வேண்டுமானால் திருத்தம் செய்ய உத்தேசம் இருக்கலாம். அப்படிப் போட்டாலும் அங்கே இருக்கும் நிலைமை என்ன? சட்டம் பெரிதா? சாசனம் பெரிதா? என்கிற பிரச்சினை. சாசனத்தில் என்ன சொல்லப் பட்டிருக்கிறது? 343 பிரிவுப்படி இந்தி மொழி, ஆட்சிமொழியாக இருக்கும். 344-வது பிரிவின்படி, என்ன சொல்லப்பட்டிருக்கிறது? 10 வருஷத்திற்கு ஒரு முறை ஒரு கமிட்டி போட்டு, எப்படி இங்கிலீஷைக் குறைத்து எப்படி இந்தியை அதிகப்படுத்துவது என்று ஆராய பிரசிடெண்ட் தலைமையில் இயங்கி அதெல்லாம் கவனிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உறுதியைச் சட்டமாக்கினாலும், அது செல்லாது, சட்டத்திற்கும் சாசனத்திற்கும் முரண்பாடு இருக்கிறது. அதோடுகூட இருமொழிக் கொள்கையை வைத்துக் கொண்டால், இந்தியையும், ஆங்கிலத்தையும் வைத்துக் கொள்கிறோம் என்றால், அது நெருப்பையும் பஞ்சையும் சேர்த்து வைத்தாற்போலத்தான் இருக்கும். இந்தியைப் பொறுத்த வரையில், அது திணிக்கப்படும் அந்த ஆபத்து இருக்கிறது. அது முதலமைச்சருக்கும் தெரியும். நிட்டவட்டமாகத் தெரியும். இன்றைக்கு நம் மாநிலத்தில் இந்தி வந்தால், கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய கலாசாரம், பழக்கம் எல்லாம் வந்துபுகும். குல்லாய் வைத்துக்கொள்ள வேண்டும். பைஜாமா போட்டுக் கொள்ள வேண்டும், இங்கு இருக்கிற அமைச்சர்களெல்லாம். பைஜாமா போட்டுக் கொள்ள வேண்டும்; வடக்கே உள்ளவர்கள் மெஜாரிட்டியாக இருக்கிறார்கள் என்றால் இதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? கோமுமை சாப்பிடவேண்டும். பொருளாதார சமூக அடிமைத்தனம் பெருகும். சமத்துவம் இருக்காது. இப்படிப் படிப்படியாக ஒவ்வொன்றும் வரும். ஆகவே, இங்கே டெமாக்ரெடிக் சோஷலிசம் இயங்கவில்லை. அங்கே இருக்கிறவர்கள் நம்மை வயிற்றுப் பிழைப்புக்கு வந்தவர்கள், வாடகைக்காரர்கள் என்று அவமானப் படுத்துகிறார்கள். திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி திரு. சி. சுப்பிரமணியம் போன்ற பெரிய மந்திரிகள் அங்கே காபினெட் மீட்டிங் முடிந்ததும் வெளியே வந்தார்கள். திரு. மகாவீர் தியாகியும் வெளியே வந்தார். அவரை இந்திக்காக நீங்கள் ராஜினாமா செய்வீர்களா என்று பத்திரிகைக்காரர்கள் கேட்டதற்கு தியாகி என்ன சொன்னார்? 'நான் வீட்டுக்காரன்' வாடகைக்காரன் அல்லா ராஜினாமா செய்ய என்றார். இந்திய நாட்டுக்கு 'நான் வீட்டுக்காரன் நீங்கள் வாடகைக்காரர்கள்' என்பவர்களா நம்மைக் காப்பாற்றுவார்கள்? இவ்வளவு அறிவாளிகளும் மந்திரியாக இருக்க சகல அம்சங்களும் உள்ள, நாட்டுக்காகத் தியாகம் செய்த தமிழ்நாட்டு அறிஞர்கள், பெரியவர்கள் நீங்களெல்லாம் இருக்கிறபோது, இந்த நிலைமை என்றால் வருங்காலத்தில் என்ன நிலைமை இருக்கும் என்று சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். நீங்களெல்லாம் தமிழை,

3rd April 1965] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

தமிழ்நாட்டைக் காப்பாற்ற உறுதிகொள்ள வேண்டும். இதை ஒரு கட்சிப் பிரச்னையாக நீனைக்கக் கூடாது. இது ஒரு தேசப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையை சுதந்திரமாக ஓட்டுச் செய்ய அனுமதி கொடுத்தால், நிச்சயம் உங்கள் வாதம் நிற்காது. எல்லோரும் ஆங்கிலம் வேண்டும் என்று சொல்லிவிட்டால், வடக்கே போய் நீங்கள் சண்டை போட முடியுமா என்று பார்க்க வேண்டும். இன்றைக்கு இப்படி இந்திக்காகச் சண்டை போட்டால் தான் நாளைக்கு கவர்னர் பதவி கிடைக்கலாம். அதற்காக நீங்கள் இன்றைக்கு இந்தி வேண்டும் என்று சொல்லுகிறீர்கள்.

MR. SPEAKER : So far the hon. Member has been talking about the language policy. But now he is talking about the personal problem of his political enemies and I cannot allow such things.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : ஆகவே, இதை ஒரு கட்சி பிரச்சினையாக பார்க்கக் கூடாது. இதை ஒரு தேசப் பிரச்சினையாக நினைத்தால்தான் இதைத் தீர்க்க முடியும். ஆகையினால் இதைக் கட்சி நோக்கத்தோடோ, அல்லது தேர்தலை நினைத்தோ பார்க்காமல், தேசப் பிரச்சினையாக இதை அணுக வேண்டும். வடக்கே இருப்பவர்கள் ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும், இந்தி ஆட்சிமொழி என்பதில் ஒன்று பட்டு இருக்கிறார்கள். இந்த நாடு ஒன்று படவேண்டும் என்றால், நல்ல முறையில் இந்த தேச ஒற்றுமையைக் காப்பாற்ற, பாடுபட்ட நிலைத்து நிற்க வேண்டும் என்றால், ஜனவரி 25-ம் தேதி எந்த நிலை இருந்ததோ, அதை நிலைநிறுத்த வேண்டும். இதிலே மைஞரிடி, மெஜாரிடி என்கிற நிலைகள் இல்லாமல், தேசிய பிரச்சினையாகக் கருதி, இன்றைக்கு நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிற ஆபத்தை மனதில் வைத்து, இதையெல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்க இந்தச் சபையிலே, மேற்கு வங்காளத்திலே நிறைவேற்றிய தீர்மானம் போல, இந்தியப் பகுதிகளிலும் இங்கிலீஷ் நீடிக்க வேண்டும் என்று தெரியமாக, தெம்போடு, தீர்மானம்போட்டு எங்களை உங்களுக்கு பக்க பலமாகக் கொண்டு காரியத்தில் ஈடுபடுங்கள் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

MR. SPEAKER : The House will now rise for lunch and meet again at 3 p.m. 1-35 p.m.

The House then rose.

(After lunch—3 p.m.)

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

* **திரு. இரா. நெடுஞ்செழியன்** : மதிப்பிற்குரிய துணைத்தலைவர் அவர்களே, ஆட்சி மொழிக் கொள்கையைப் பற்றி நான் கொடுத்துள்ள திருத்தத் தீர்மானத்தையொட்டி சில கருத்துக்களை வழங்க விரும்புகிறேன்.

நாட்டிலே தீர்க்கப்பட வேண்டிய சிக்கல்கள் பலவற்றில், இப்பொழுது தலைதூக்கி நிற்கின்ற பெரும் சிக்கல், ஆட்சி மொழிச் சிக்கல் என்பதை நாட்டிலுள்ள அத்தனை பேரும் அறிந்திருக்கின்றோம். ஆட்சி மொழிச் சிக்கலைத் தீர்க்கின்ற பிரச்சனையில் இந்தியப்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1965

பாராளுமன்றத்தினரும், பல்வேறு மாநிலங்களில் அமைந்திருக்கிற சட்ட மன்றத்தினரும், நாட்டிலுள்ள கல்வித் துறையினரும், பேராசிரியர்களும், வழக்கறிஞர்களும், பொது மக்களும் மிகவாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நன்றாக உணரவேண்டும். ஆட்சி மொழிப் பிரச்சினை எந்த அளவுக்கு மக்களுடைய உள்ளத்தைப் பற்றியிருக்கிறது என்பதை நாட்டிலே நடைபெறுகின்ற பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகள் ஆகியவற்றின் மூலமாகவும், பாராளுமன்றம், சட்ட மன்றம் ஆகியவற்றிலே நடைபெறுகின்ற விவாதங்களின் வாயிலாகவும் நன்றாக அறிந்து கொள்ளலாம். ஆட்சி மொழிப் பிரச்சினையை அணுகுவதிலே நாம் ஒரு முறையோடு, கிட்டவட்டமாக அணுகி நல்லதொரு முடிவு எடுத்தால்தான் எதிர்காலத்திலே ஏற்படக்கூடிய பல குழப்பங்களைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை நாம் கண்டவர்களாவோம்.

எந்த அளவுக்கு சமய உணர்வு மக்களுடைய உள்ளத்தைப் பற்றி நிற்கின்றதோ, அந்த அளவுக்கு மொழி உணர்வும் மக்களுடைய உள்ளத்தைப்பற்றி நிற்கும் ஒன்றாகும் என்பதை உலக வரலாறு மிக நன்றாக பலவழிகளில் எடுத்துக் காட்டியிருக்கிறது. தங்களுடைய சமயம் வளர வேண்டும், தங்களுடைய சமயம் மேன்மை பெறவேண்டும், தங்களுடைய சமயம் இழுக்குபடக் கூடாது, என்று சமயப் பற்றுடைய ஒவ்வொருவருக்கும் எவ்வளவு ஆழ்ந்த பற்று ஏற்பட்டிருக்கிறதோ, அவ்வளவு ஆழ்ந்த பற்று, தாய்மொழியினிடத்தில் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது தங்களுடைய மொழி வாழ வேண்டும், தங்களுடைய மொழி வளர வேண்டும், தங்களுடைய மொழி ஏற்றம் பெற வேண்டும், தருந்த நாகரிகம் படைத்திருக்கும் தங்களுடைய மொழி ஆட்சியில் நல்லதொரு இடத்தைப் பெறவேண்டும் என்ற உணவு அத்தனை பேருடைய உள்ளத்தையும் பற்றி நிற்கின்றது.

நம்முடைய நாடு ஒரு சமயம் கொண்ட ஒரு நாடு அல்ல. இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு சமயங்கள் இருக்கின்றன. பெரும்பான்மையினராக, கிட்டத்தட்ட 85 சத விகித மக்களைக் கொண்டவர்களாக இந்து சமயத்தினர் இருக்கிறார்கள். பல்வேறு சமயத்தினர் வாழ்கின்றார்கள். ஆனால், எந்தவொரு சமயத்தினருடைய உணர்ச்சியும் பாதிக்கப்படக்கூடாது, அவர்களுடைய சமய உணர்ச்சி மதிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான், ஒரு சுமுகமான சூழ்நிலையைக் காணவேண்டும் என்ற நோக்கோடு, இந்திய அரசு கூட மதச்சார்ப்பற்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. எந்த வகையிலும் அவரவர்களுடைய மத உணர்ச்சி புண்படுதல் கூடாது என்று கருதுகிறது. ஒரு குறிப்பிட்ட மதம்தான் இந்த நாட்டைச் சார்ந்த மதம் என்று கூறுவோமானால், அதன் காரணமாக, உணர்ச்சி கொப்பளித்து எழக் கூடும், அதனால், குழப்பங்கள், மாச்சரியங்கள் பல ஏற்படக் கூடும் என்று கருதுகிறது. மதச்சார்பற்ற அரசு என்று சொல்வதன் மூலம், அவரவர்கள் மத உணர்ச்சிக்குத் தனி வாய்ப்பு அளிப்பதன் மூலம், அவரவர் மத உணர்ச்சியை சட்டத்திற்குட்பட்ட முறையிலே வளர்த்துக்கொள்ள, பாராட்ட, போற்ற, இடம் தருவதன் மூலம்

3rd April 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் என்று கருதி, மதச் சார்பற்ற அரசாக ஆட்சியை வைத்துக் கொள்வதற்கு இந்தியப் பேரரசு முடிவு செய்திருக்கிறது.

அதைப் போன்றுதான் மொழி உணர்ச்சியைப் பொறுத்தும் மக்களின் மனநிலை கருதப்பட வேண்டும் என்பதை முதலிலே நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த வரையில், இது ஒரு மொழி கொண்ட ஒரு நாடு அல்ல; ஒரு சமயம் கொண்ட ஒரு நாடு அல்ல; பல மொழிகள், பல சமயங்கள், பல நாகரிகங்கள், பல பண்பாடுகள், பல பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு துணைக்கண்டமாகும். ஆனால் சட்டப்படி ஒரே அரசியலமைப்பின் கீழே அமைந்திருக்கிற ஒரு ஒன்றிப்பு நாடு ஆகும். அரசியல் அதிகாரம்தான் இந்த நாட்டின் எல்லையை வரையறுத்துக் காட்டியிருக்கிறது. மொழியோ, சமயமோ, பண்பாடோ, பழக்க வழக்கமோ, கொள்கையோ கோட்பாடோ, உணவு வகையோ இந்தியாவின் எல்லையை அமைக்க வில்லை. ஒரு அரசியலமைப்பின் அதிகாரம் இந்தியாவின் எல்லையை அமைத்திருக்கிறது. ஒரு காலத்தில் பர்மாவையும் சேர்த்து இந்தியா என்ற அரசியல் அதிகாரம் இந்த நாட்டின் எல்லையை வகுத்திருந்தது. 1947 ஆகஸ்டு 15-ஆம் நாளுக்குப் பிறகு, பாகிஸ்தான் நீங்கிய மற்ற பகுதி இந்தியாவின் எல்லையாக அரசியல் அதிகாரம் வகுத்தது. இந்த நாடு அரசியல் அதிகாரத்தின் அடிப்படையில்தான் ஒரு நாடாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே இந்த நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு அத்தனைப் பேர்க்கும் ஏற்பட்டிருக்கிறது. அதிலும் இப்பொழுது மாறுபட்ட கருத்து யாருக்கும் இல்லை. இந்திய அரசியலமைப்புக்கு உட்பட்ட நிலப்பரப்பில் ஜனநாயகம் காப்பாற்றப்படுதல் வேண்டும், இந்தப் பகுதி பாதுகாக்கப்படுதல் வேண்டும். இங்கே இருக்கும் பல்வேறு நாகரிகங்கள், பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், மொழிகள் ஆகிய அத்தனையும் காப்பாற்றப்படுதல் வேண்டும், அதற்கேற்ற முறையில், ஒற்றுமை உணர்ச்சி அடிப்படையில் இந்த அரசு அமைதியான முறையில், ஜனநாயக நெறியில் நடைபெறவேண்டும் என்ற கருத்தைத் தி.மு. கழகத்தினர் உள்ளிட்ட அத்தனைப் பேரும் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அத்தனை மொழி பேசுகிறவர்களுடைய உணர்ச்சிக்கும் மதிப்பு அளிக்கும் நிலைமை ஏற்பட்டால் மொழிய, மொழிப் பிரச்சினைக்கு எதிர் காலத்தில் நல்லதொரு தீர்வு காண முடியாத என்பதை, இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது இந்திய அரசு கொடுக்கின்ற சலுகைகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட இந்தி மொழியினருக்குப் போகிறது. தங்களுடைய தாய்மொழி புறக்கணிக்கப்படுகிறது; தங்களுடைய தாய் மொழி எவ்வளவு ஏற்றம் பெற்றிருந்தாலும், அறிவியல் ஆற்றல் பெற்ற மொழியாக இருந்தாலும் கூட, அது புறக்கணிக்கப்படுகிறது; அறிவியல் ஆற்றல் அற்ற, தகுதியற்ற, வளமற்ற, பயன்படாத, எந்த வகையிலும் மக்களுக்கு ஏற்றம் தர முடியாத, அரசியல் அறிவைத் தர முடியாத, உலகத் தொடர்பை ஏற்படுத்த

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1965

முடியாத, உலக வாணிகப் பெருக்கம் தர முடியாத, தொழிலறிவைத் கொடுக்க முடியாத ஒரு இந்தி மொழிக்கு ஆட்சி மொழி தகுதி தரப்பட்டிருக்கிறது என்ற உணர்வு இந்தி பேசாத மாநிலத்தார்க்கு ஏற்பட்டிருக்கிறது. ஆளும் நிலையை இந்தி மொழிக்கு மட்டுமே தர யாரும் ஆயத்தமாக இல்லை என்ற அடிப்படை உணர்வை நாம் ஒப்புக்கொண்டால் தான், ஆட்சி மொழிப் பிரச்சினைகளை எதிர்காலத்தில் நல்ல முறையில் தீர்ப்பதற்கான வழிவகைகளை நாம் காண முடியும். அந்த முறையிலேதான் காணுதல் வேண்டும். இப்பொழுது ஏற்பட்டிருக்கிற விளைவுகள் என்னவென்று பார்க்க வேண்டும். அந்தந்த மாநில மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. அதிலே பிரச்சினைகளும் அதிகமாக இல்லை. இந்தியத் துணைக் கண்டத்தை ஆளுகின்ற ஆட்சி மொழி எதுவாக இருப்பது, இணைப்பு மொழி எதுவாக இருப்பது என்பதிலே ஏற்பட்ட சிக்கல்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை, அந்தச் சிக்கல்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகின்றன என்று நாட்டின் அரசியல் வாதிகள் பலரும் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டி வருகின்றனர். இன்றைக்கு இந்திய அரசினர் கொண்டிருக்கிற போக்கைப் பார்த்தால், இதற்கு அமைதியான ஒரு தீர்வைக் காணுவதற்கான வழியை அவர்கள் தேடுவதாக தெரியவில்லை. இந்தியாவிலுள்ள அத்தனை பேரும் தங்கள் தங்கள் மொழி தகுந்த தகுதியைப் பெற வேண்டும் என்று எண்ணுவதில் தவறு இல்லை. அந்த எண்ணம் எங்கு பார்த்தாலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்த உணர்ச்சி வளர்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு எதிராக அரசினர் எந்த முடிவு எடுத்தாலும், எதிர்காலத்தில் அந்த முடிவு தகர்க்கப்படக்கூடிய நிலைமைதான் ஏற்படும். அந்த உணர்வைத் தடுக்க முடியாது. அந்த உணர்ச்சி தமிழகத்தில் மட்டுமல்ல; கேரளம், ஆந்திரம், கருநாடகம், வங்காளம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களிலும் தோன்றிவிட்டது. தங்களுடைய மொழி எந்த அளவுக்கும் குறைந்த ஒன்று அல்ல. அது பெறவேண்டிய தகுதியைப் பெறுதல் வேண்டும்; தங்களுடைய தாய் மொழியைவிடக் குறைந்த ஒரு மொழி ஒரு தகுதியைப் பெறுகிறதென்றால், அந்தத் தகுதியைக் கொடுப்பதற்கு இந்திய அரசு ஆயத்தமாக இருக்கிறது என்றால், அந்த இடத்தைத் தங்களுடைய மொழியும் பெற முடியும் என்ற உணர்வு எழுந்து விட்டது, வளர்ந்து விட்டது. அடக்கு முறையினாலோ, அதிகாரத்தினாலோ, வேறு பல உருட்டல் மிரட்டல்களினாலோ அந்த உணர்ச்சிகள் அடங்கி ஒடுங்கி விடும் என்று ஆட்சியினர் கருதிவிட வேண்டாம். என் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், மறுபடியும் இந்தப் பிரச்சினை தீர முடியாமல் மேலும் வளரும் முறையிலேயே அமைந்திருக்கிறது.

ஜனவரித் திங்கள் 26-ஆம் நாள்—இந்தியை ஆட்சி மொழியாகப் புகுத்துகின்ற நாள். அன்று மத்திய அரசாங்க உள்துறை மந்திரி திரு. நந்தா அவர்கள் வானொலி மூலமாக ஒலிபரப்பிய தம் முடைய பேச்சில்

" We are celebrating the 15th anniversary of our democratic Republic. I extend my greetings on this sacred day to my brothers and sisters all over the country. From this day, Hindi

3rd April 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

takes its place as the official language. It is a great day of rejoicing.'' என்பதாக மிக்கப் பெருமைப்படுகின்ற அளவுக்குக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே வாஞ்லெி பேச்சில் மேலும் குறிப்பிடுகிறபோது

'' Because of these reasons, the introduction of Hindi as the Union Official language is an event of great significance in our history. It is the sacred duty of each one of us to help in the development and propagation of Hindi with co-operation, love and friendliness. . . . As I said earlier, Hindi will take its place as the Official language of the Union from to-day.'' என்று கூறியுள்ளார். இதில் இந்தியை ஆட்சிமொழியாகக் கொண்டு வந்து தீருவது என்ற முனைப்பே இருக்கிறது. இதில் இருந்தே எதிர் காலத்தில் இந்திய பேரரசு எந்த வழியில் செல்லும் என்பதை நம் மால் ஊகித்துக் கொள்ள முடியும். அந்த அளவுக்கு உள்துறை அமைச்சர் அவர்களுடைய பேச்சு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இந்த நிலையில் நாம் ஒன்றை நன்றாக உரை வேண்டும். அதுதான் ஒற்றுமையைப் பற்றிய நிலைமை.

இன்றைய தினம் உலக ஒற்றுமை வேண்டும் **என்று** உலகப் பேரறிஞர்கள் எல்லாம் ஒரு பக்கத்தில் கூறி வருகிறார்கள். ஆசியாக் கண்டத்தைப் பொறுத்த வரையிலும் ஒருவகை ஒற்றுமை இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த தலைவர்கள் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். இந்திய துணைக்கண்டத்தைப் பொறுத்த வரையிலும் —இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அதிகாரத்திற்குட் பட்ட நிலப்பரப்பைப் பொறுத்த வரையிலும் ஒருவகை ஒற்றுமை இருக்க வேண்டும் என்பதை நாம் உணர்கிறோம். வெளித் தாக்குதல் இல்லாமல் இந்த நிலப்பரப்பு பாதுகாக்கப்பட வேண்டும். சீனா போன்ற வேறு ஏகாதிபத்திய நாட்டின் தாக்கு தலினால் இந்த நிலப்பரப்பின் ஜனநாயக அமைப்புப் பாதிக்கப் படாமல் பாதுகாக்கப்பட வேண்டும்—அந்த அளவுக்கு ஒரு ஒற்றுமை ஏற்பட்டாக வேண்டும் என்கிற மனப்பான்மை நம் மிடையே வளர்ந்திருப்பதையும் பார்க்கிறோம். அந்த வகையில் தான் அறிஞர் அண்ணா அவர்கள் டெல்லி மாநிலங்கள் அவையில் 'ஒற்றுமை' பற்றியும், 'ஒருமைப்பாடு' பற்றியும் எடுத்துக் காட்டி னார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. 'ஒற்றுமை' என்பதற்கும், 'ஒருமைப்பாடு' என்பதற்கும் எத்தனையோ வேறுபாடு உண்டு. ஆங்கிலத்தில் ' unity ', uniformity ' என்று இரு சொற்களை பயன்படுத்துகிறோம். 'ஒற்றுமை' வேறு 'ஒருமைப்பாடு' வேறு. ஒருமைப்பாட்டினால் தான் ஒற்றுமை வரும் என்பதை ஒப்புக் கொள்ள முடியாது. ஒரே வகை உணவை உண்டால்தான் ஒற்றுமை ஏற்படும் என்றோ, ஒரே வகை உடையை உடுத்தினால் தான் ஒற்றுமை ஏற்படும் என்றோ, ஒரே சமயத்தைப் பின்பற்றி னால்தான் ஒற்றுமை ஏற்படும் என்றோ, ஒரே மொழியை பயன்படுத்தினால்தான் ஒற்றுமை ஏற்படும் என்றோ கொள்ள முடியாது. அப்படி ஏற்படுத்துவதன் மூலமே நாம் எதிர்பார்க் கின்ற ஒற்றுமை வந்து விடாது. இன்றைக்கு இங்குள்ள கட்சி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1965

களில் உள்ளவர்களைப் பார்த்தாலேயே தெரியும். எல்லோரும் ஒரே வகையில் உடுத்துகிறார்கள் என்று சொல்ல முடியாது. ஒரே வகையான உணவை உட்கொள்ளுகிறார்கள் என்றும் சொல்ல முடியாது. ஒரே மொழியைப் பேசுகின்றார்கள் என்றும் சொல்ல முடியாது. அவைகளில் உள்ள வேறுபாடுகளால் இங்குள்ளவர்களிடையே இயங்கி வருகின்ற ஒரு விதமான ஒற்றுமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்ல முடியாது. 'ஒற்றுமை' என்பது அகவுணர்வைப் பொறுத்தது; 'ஒருமைப்பாடு' என்பது புறத் தோற்றத்தைப் பொறுத்தது. ஆகவே ஒற்றுமை இருக்க வேண்டுமென்றால் ஒருமைத் தன்மை இருக்க வேண்டும் என்பதில்லை. உடை வேற்றுமைக்கிடையே உணவு வேற்றுமைக்கிடையே பழக்க வழக்கங்களிடையே உள்ள வேற்றுமைக்கிடையே சமய வேற்றுமைக்கிடையே, மொழி வேற்றுமைக்கிடையே ஒற்றுமை ஏற்பட முடியாது என்றும் சொல்வதற்கில்லை. ஆகவே, ஒற்றுமை வேண்டும் என்பதற்காக இமயம் முதல் கன்னியாகுமரி வரையில் உள்ளவர்கள் ஒரே மொழி பேசுகின்ற ஒருமைத் தன்மைதான் வேண்டும் என்று சொல்வதற்கில்லை. இந்திய துணைக்கண்டத்தில் உள்ள நம்மைப் பொறுத்த வரையிலும் ஒரு வித ஒற்றுமை வேண்டும். அதை யாரும் மறுக்கவில்லை. ஒற்றுமை வேண்டும் என்பதற்காக காஷ்மீர் முதல், கன்னியாகுமரி வரையில் உள்ள மக்கள் ஒரேவிதமான உடையைத்தான் உடுக்க வேண்டும், ஒரே விதமான உணவைத்தான் உட்கொள்ள வேண்டும், ஒரே விதமான மொழியைத்தான் பேச வேண்டும் என்பதான ஒருமைப்பாட்டைக் கொண்டுவர முயற்சி தேவையில்லை. ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டுக்கும் தொடர்பே இல்லை. இன்றைய தினம் அதிகாரத்தைக் கொண்டு, எல்லாவற்றையும் ஒருமைப்படுத்தி விடலாம் என்று நினைப்பது சரியல்ல. இருக்கக்கூடிய வேற்றுமையில் எந்த அடிப்படையைப் பின்பற்றினால் ஒற்றுமை பாதுகாக்கப்படும், ஒற்றுமை என்றைக்கும் நிலைநாட்டப்படும் என்றே நம் சிந்தனை செல்ல வேண்டும். இந்திய அரசு ஆட்சிமொழிக் கொள்கையைப் பற்றிக் கொண்டிருக்கிற கருத்தில் ஒற்றுமை சிதறுண்டு போவதற்கான வாய்ப்புதான் இருக்கிறது. காரணம் நாற்பது ஆண்டுகளாக நமது அண்ணல் காந்தியார் தம் கருத்தை எடுத்துச் சொல்லியும், மாபெரும் போராட்டங்களின் மூலம் உணர்த்தியும், நமது மதிப்பிற்குரியவராக இருந்த பண்டித நேரு அவர்கள் கடந்த 16 ஆண்டுகளாக அடிக்கடி எடுத்து வற்புறுத்தி வந்தும், மாநில முதல் அமைச்சர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லி வந்தும், ஒற்றுமை உறுதிப்படவில்லை. இன்னமும் மத்திய அரசாங்கத்தில் உள்ளவர்களின் போக்கு இந்த மொழிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் ஒற்றுமையை நிலைநாட்டக்கூடிய திசையில் செல்லவில்லை. உள்ள ஒற்றுமையையும் சீர்குலைத்துக் கொண்டிருக்கிறது. மொழி அடிப்படையில் தங்களுடைய அதிகாரத்தைக் கொண்டு ஏற்படுத்த நினைக்கின்ற ஒருமைப்பாட்டின் மூலம் அவர்கள் இந்த பரந்த துணைக்கண்டத்தில் நிரந்தரமாக வேற்றுமையையும், பிளவையும் ஏற்படுத்தத்தான் வழி வகுக்கிறார்கள். நமது மதிப்பிற்குரிய பண்டித நேரு அவர்கள் 16 ஆண்டு காலமாக எடுத்துச் சொல்லி வந்தும்கூட, வடக்கே உள்ளவர்களின் மனதில்

3rd April 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மாற்றம் ஏற்படவில்லை என்பதைத்தான் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை நமக்குத் தெரிவிக்கிறது. 'யார் என்ன சொன்னால் என்ன? எந்தப் பகுதி மக்கள் எதிர்த்தால் என்ன? அதிகாரம் நம்மிடத்தில் இருக்கிறது. சட்டத்தை ஏற்படுத்துகின்ற வன்மை நமக்கு இருக்கிறது. இந்திதான் ஆட்சிமொழி என்கிற சட்டத்தை நாம் இயற்றி விட்டால் எந்தப் பகுதி மக்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும், அது இருக்கக்கூடாது என்பதற்கு எத்தனை வாதங்கள் வைத்தாலும்கூட—எல்லோரும் இதை ஏற்றுக் கொண்டே தீரவேண்டும்' என்கிற அதிகார தோரணையில்தான் சென்று கொண்டிருக்கிறார்களே தவிர உண்மை நிலையைப் புரிந்து கொண்டு ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படவில்லை. இந்திய அரசு கொண்டு வந்துள்ள இந்தி ஒரே ஆட்சி மொழியாகும் சட்டத்திற்கு, இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்கின்ற மக்கள் அத்தனை பேரும் மதிப்புச் செலுத்தியே தீர வேண்டும் என்கிற அதிகார தோரணைதான் வளர்ந்து போகிறது. இந்தியைச் செல்லப் பிள்ளையாக, செல்ல மொழியாக இந்தியப் பேரரசு கருதுகிறது. இந்தியைத் தலையில் தூக்கி வைத்துக் கொள்கிற நிலையில் இந்த நாட்டின் மொழிவாரி மக்கள் நிச்சயம் அதனை ஒத்துக்கொள்ளப் போவதில்லை. அதற்குத் தனிச் சலுகை காட்டுகின்ற வரையில் ஒரு நாளும் ஒற்றுமை ஏற்படப்போவதில்லை. இந்திக்குத் தனிச் சலுகை காட்டுவதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை—எந்த வகையில் பார்த்தாலும் தரத்தில் தாழ்ந்திருக்கிற, தகுதியற்று இருக்கிற இந்திக்குச் செலவழித்துக் கொண்டிருக்கிற வரையில், மற்ற மொழிக்காரர்கள் பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. எல்லா மொழிகளுக்கும் மதிப்பும், வாய்ப்பும் கொடுக்கிற மனநிலை ஏற்படுகிற வரையில் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண முடியாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆங்கிலத்தை ஆட்சிமொழியாக வைத்துக்கொள்ளக் கூடாது என்பதற்கு, ஆங்கில எதிர்ப்பாளர்கள் எடுத்துச் சொல்கிற காரணம் எல்லாம்—'அது அந்நிய மொழி அல்லவா? அதை வைத்துக் கொள்வது நமக்கு அவமானம் இல்லையா?' என்ற ஒன்றே ஒன்றுதான். ஐயாயிரம் மைலுக்கு அப்பாலுள்ள ஒரு நாட்டினரின் மொழியை—அது எவ்வளவு தான் உலகத் தொடர்புள்ள மொழியாக இருந்தாலும், அறிவியலைத் தருகின்ற மொழியாக இருந்தாலும், தொழில் நுட்பத்தைக் கற்றுத் தருகின்ற மொழியாக இருந்தாலும், வாணிபத்தைப் பெருக்கித் தருகின்ற மொழியாக இருந்தாலும்—அது நமக்கு அந்நிய மொழி. ஆகவே, அதை வைத்துக்கொள்வது நம்முடைய தன்மதிப்பை வளர்க்கக் கூடியதாக இருக்காது என்பதை நான் ஒன்றும் குறைத்து மதிப்பிடவில்லை. அந்த வாதத்திற்கு போதிய மதிப்பு அளிக்கத்தான் செய்கிறேன். ஆங்கிலம் இந்த நாட்டில் இருந்துதான் தீரவேண்டும் என்ற ஆசையின் அடிப்படையில் எடுத்துச் சொல்லவும் வரவில்லை. இன்றைய நிலையில் அதனுடைய இன்றியமையாத் தன்மையைத் தான் சுட்டிக்காட்டுகிறேன். நாமாவது கடந்த இரு நூறு ஆண்டுகளாக ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டு வந்திருக்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1965

கிறோம். நமது நாட்டில் அது ஆட்சிமொழியாக இருந்து வந்திருக்கிறது. ஆங்கிலத்துடன் கொஞ்சங்கூட தொடர்பு இல்லாத சீனு, ஜப்பான், ருஷ்யா போன்ற நாடுகள் எல்லாம்கூட இன்றைய தினம் ஆங்கிலம் கற்றுக்கொள்வதன் அவசியத்தை உணர்ந்து—எல்லாவற்றையும் இதுவரை அவர்களுடைய தாய்மொழியின் மூலமே பெற்று வந்திருந்தாலும்—இன்றையதினம் அறிவியலில், தொழிலியலில், கலையியல் துறையில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களுடைய நாடுகளில் அதை 2-ஆவது மொழியாகக் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்து வருகிறார்கள். திருமதி இந்திரா காந்தி அவர்களும் அதை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, ஆங்கிலத்தினுடைய முக்கியத்துவத்தை நாம் அறவே விலக்கிவிட முடியாது. அதையும் கட்டாயம் படித்துத்தான் தீரவேண்டும் என்ற கருத்து எல்லோராலும் சொல்லப்படுகிறது. ஆயினும், அது சட்டப்படி நம்முடைய தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதனை ஆட்சி மொழி என்று சொல்வது நமக்கு அவமானம் என்று கருதப்படுகிறது. ஆகவே தான் நாங்கள் சொல்கிறோம், இந்தியாவின் ஆட்சி மொழிகள் எவை என்றால், முக்கியமான 14 மொழிகளும் இந்த நாட்டின் ஆட்சிமொழி என்று சொல்லத்தக்க நிலைமையை ஏற்படுத்த வேண்டும். சுவிட்ஸர்லாந்துக்காரர்களைக் கேட்டால் 3 மொழி தங்கள் ஆட்சி மொழி என்பார்கள். கனடாவைக் கேட்டால் 2 மொழிகள் என்று சொல்வார்கள். இந்தியாவைக் கேட்டால், ஆங்கிலம் என்று சொல்லி அவமானத்தைத் தேடிக் கொள்ளாமல் 14 மொழிகளும் ஆட்சிமொழியாகும் என்று சொல்லி பெருமையை நிலைநாட்டிக் கொள்ளலாமே. இந்திக்கு முடிசூட்டினால், மற்ற மொழிகளுக்கும் முடிசூட்ட வேண்டும். இந்திக்குக் கொற்றைக்குடை பிடித்தால், அந்தக் கொற்றக்குடையை மற்ற மொழிகளுக்கும் பிடிக்கவேண்டும். ஆகவே, 14 மொழிகளையும் ஆட்சிமொழிகளாக ஆக்கவேண்டும். சமஸ்கிருதம், பேச்சு வழக்கில் இல்லை என்று சொல்லி அதை எடுத்துவிட வேண்டுமென்றால் அதை எடுத்துவிடலாம். மற்ற 13 மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்கலாம். 14 மொழிகள்தான் இருக்கவேண்டும் என்பதல்ல. ஆங்கிலத்தையும் சேர்த்துக்கொள்ளலாம் என்றால், மொத்தம் 15 மொழிகளையும், சிந்தியையும் சேர்த்துக்கொள்ளலாம் என்றால் 16 மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்கவேண்டும். எப்படியும் எனது தாய்மொழி ஒரு ஆட்சிமொழியாக இருந்து தீரவேண்டும். சமஸ்கிருதம் பேச்சு வழக்கிலே இல்லாத காரணத்தால் அதை நீக்கிவிட வேண்டுமென்று கனம் முதலமைச்சர் கூறினால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார். ஆகவே, இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆகுதல் வேண்டும்; அவைகள் எல்லாம் ஆட்சி மொழிகளாக ஆகுகின்ற தகுதியைப் பெறுகின்ற காலம் வரையிலும், ஆங்கிலம் துணை மொழியாக இருக்கவேண்டுமென்று கூறுகின்றோம்.

3rd April 1965] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

ஜனவரி 26-ஆம் நாளிலிருந்து இந்தி ஆட்சி மொழியாக்கப் பட்டிருக்கிறது. இந்தியாவின் ஆட்சிமொழி எதுவென்றால் இந்தி தான். 'அசோசியேடெட் லாங்குவேஜ்' ஆக, இணைப்பு மொழியாக தேவைப்பட்டால், ஆங்கிலம் பயன்படுத்தப்படலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தைத் துணைமொழியாகப் பயன்படுத்தியே தீரவேண்டுமென்ற நிலையை ஏற்படுத்துவதா? அல்லது, வேறு எந்த நிலையை உண்டாக்குவது என்பதைப் பற்றியெல்லாம் இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். 14 மொழிகளும் ஆட்சிமொழிகளாக இருக்கவேண்டுமென்று நாங்கள் சொல்லும்போது, சாத்தியமற்றது என்ற கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தி ஆக்கப்பட்டிருக்கிறது; இது சாத்தியப்பட்ட நிலையிலா ஆக்கப்பட்டிருக்கிறது? இந்தி, தமிழகத்திலே இருக்கின்ற அலுவலகங்களிலே, இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கின்ற அலுவலகங்களிலே, உத்திரப் பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களின் அலுவலகங்களிலே முழு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறதா? இல்லையே! பெயரளவுக்குத்தான் இந்தி ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டிருக்கிறது, ஆங்கிலம் தான் நடைமுறையில் ஆட்சிமொழியாக இருந்து வருகின்றது. தமிழகத்திலே சாத்திய அளவிலே இந்தி ஆட்சிமொழியாகவில்லை; ஆங்கிலம்தான் ஆட்சிமொழியாக இருந்து வருகிறது. அதேபோல 14 மொழிகளையும் ஆட்சிமொழிகளாக ஆக்குங்கள். இந்தி பெயரளவில் ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டு ஆங்கிலம் எப்படி நடைமுறையில் இருந்து வருகிறதோ, அப்படியே 14 மொழிகளும் சட்டப்படி ஆட்சிமொழிகளாக ஆகட்டும்; ஆங்கிலம் நடைமுறையைப் பார்த்து கொண்டுவரட்டும். 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாக இருக்கவேண்டுமென்று சொன்னால், அந்த நிலைமை பெயரளவுக்குத் தான் இருக்கும் என்று சொல்லக்கூடும். ஜனவரி 26-ஆம் நாளுக்குப் பிறகு இந்தியும் பெயரளவுக்குத்தானே ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டிருக்கிறது? அதைப்போல் என் 14 மொழிகளையும் ஆக்கமுடியாதா? சாத்திய அளவிலே இந்தி ஆட்சிமொழியாக இல்லை, ஆங்கிலம்தான் பார்த்துக்கொண்டு வருகிறது என்று சொல்லும்பொழுது, அதேபோல 14 மொழிகளும் ஆட்சிமொழிகளாக இருக்கட்டும், ஆங்கிலம் பார்த்துக்கொண்டு வரட்டும் என்றுதான் வற்புறுத்துகிறேன்.

பத்து ரூபாய் நோட்டிலே பார்த்தால் 14 மொழிகளையும் போட்டிருக்கிறார்கள். தமிழன் ஐந்து ரூபாய் நோட்டை வாங்கிப் பார்க்கும் போது தமிழில் 'ஐந்து ரூபாய்' என்று எழுதியிருப்பதால், அவன் அதைப் புரிந்துகொண்டு திருப்தியடைகிறான். அதேபோல் தெலுங்கன் 'ஐந்து ரூபாய்' என்று அவனுடைய மொழியிலே இருப்பதைப் பார்த்துப் புரிந்துகொண்டு திருப்தியடைகிறான். இந்தியப் பேரரசு வெளியிடுகின்ற 10 ரூபாய், 5 ரூபாய், 1 ரூபாய் நோட்டுகளிலே எல்லாம் 13, 14 மொழிகளும் இருப்பதால், அந்தந்த மொழிக்காரர்கள் தங்கள் தங்கள் மொழிகள் இருக்கின்றன என்ற அளவில் திருப்தியடைய முடிகிறது.

அதுபோல பற்பல வகைகளிலும் செய்யலாமே! எந்த அளவுக்கு 14 மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்கமுடியுமோ, அந்த அளவுக்கு ஆக்கி, ஆங்கிலத்தின் உதவியைத் தேவையான காலம் வரையில் தொடர்ந்து வைத்துக்கொள்வதிலே என்ன தவறு? 14 மொழிகளையும் ஆட்சிமொழிகளாக்கி, ஆங்கிலத்தையே தேவைப்படும் காலம்வரையில் தொடர்புமொழியாக வைத்துக்கொள்ளலாம்.

தமிழகத்திலே அஞ்சல் அலுவலகத்திற்குப் போனால், அங்கு அஞ்சலட்டை தமிழிலே தான் இருக்கும்; பண விடைத் தாள் தமிழிலேதான் இருக்கும்; தலைகள் தமிழிலேதான் இருக்கும். அதேபோன்று குஜராத்திலே அஞ்சலட்டை குஜராத்தியிலே தான் இருக்கும்; பணவிடைத் தாளும் குஜராத்தியிலே தான் இருக்கும். தமிழ் மக்கள் தமிழ் இருக்கிறது என்ற உணர்ச்சியில் திருப்தியடைய முடியும். குஜராத்தைச் சேர்ந்தவர்கள் குஜராத்தி இருக்கிறது என்ற உணர்ச்சியில் திருப்தியடைய முடியும். 'செரிமோனியல் அபிசியல் லாங்குவேஜ்களாக' அதாவது பெருமைக்குரிய ஆட்சிமொழிகளாக 14 மொழிகளும் இருக்கலாமே! 'குவின் ஆப் இங்கிலாண்ட்' இருக்கிறார்கள். அவர்கள் இங்கிலாந்திற்குத் தலைவியார் என்ற முறையில் இருக்கிறார்கள். இருந்தாலும்கூட அங்குள்ள நடைமுறைகளைக் கவனிப்பது பிரைமினிஸ்டர்தான். அதேபோல் குடியரசுத் தலைவர் இருக்கிறார்கள். அவர் சிறப்பான அதிகாரங்களைப் பெற்றிருந்தாலும்கூட, பணிகளைச் செய்வது பிரதம மந்திரி அவர்களேயாவார். ரூபாய் நாணயங்களைப் பொறுத்தவரையில் 1 கோடி ரூபாய் வெளியிடுகிறோம் என்று சொன்னால் 10 இலட்ச ரூபாய் தமிழிலே, 10 இலட்ச ரூபாய் தெலுங்கிலே என்று மொழி வாரியாக அச்சிட்டு அங்கங்கே அனுப்பிவிடலாம். என்னுடைய தமிழிலே ரூபாய் இருக்கிறது, என்னுடைய தெலுங்கிலே ரூபாய் இருக்கிறது, என்னுடைய மராட்டிய மொழியிலே ரூபாய் இருக்கிறது என்ற அளவிலே அந்தந்த மொழிக்காரர்கள் திருப்தியடைய முடியும். இந்தி இன்று பெயரளவுக்குத்தான் ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டிருக்கிறது; ஆங்கிலத்தைத் தான் இன்று நடைமுறையில் ஆட்சிமொழியாக வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, 14 மொழிகளையும் ஆட்சிமொழியாக்க முடியும். தேவையான அளவுக்கு ஆங்கிலத்தை ஆட்சிமொழியாகவும், தொடர்புமொழியாகவும் வைத்துக்கொள்ளலாம். என்றைக்கு இந்த மொழிகள் எல்லாம் முழு வளர்ச்சியடைகின்றனவோ, என்றைக்கு ஆங்கிலம் எடுபடலாம் என்று தோன்றுகிறதோ அன்றைக்கு ஆங்கிலத்தை அப்புறப்படுத்தலாம் என்ற அளவில் முயற்சிகள் செய்யவேண்டும். இதற்கான வழிமுறைகளைக் காணவேண்டுமென்று நிபுணர்களிடம் கேட்டால், அவர்கள் ஏற்ற வழி முறைகளைக் கண்டுபிடித்துத் தருவார்கள். தமிழகத்தில் தமிழிலேயே எல்லா நடவடிக்கைகளும், மேற்கொள்வதற்கு வழிவகை செய்தல் வேண்டும் தமிழோடு ஆங்கிலமும், தெலுங்கோடு ஆங்கிலமும், இந்தியோடு ஆங்கிலமும், வங்காள மொழியோடு ஆங்கிலமும் இருக்கவேண்டும். அவர்களும் எப்படியும் ஆங்கிலத்தைப் படித்துத் தீரத்தான்

3rd April 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

போகிறார்கள். இந்தி பேசுகின்ற மாநிலங்கள் எல்லாம் ஆங்கிலத்தை அடியோடு அகற்றிவிடப் போவதாகச் சொல்லிவிட வில்லை. ஆகவே, தமிழிலே இங்கே இருக்கிறவர்கள் எழுதியனுப்பினால் உடனடியாக அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பிறகு அந்தந்த மொழிகளில் மொழி பெயர்த்துக்கொள்ள முடியும். முடியுமா, முடியாதா என்று நாம் ஐயப்படவேண்டிய இன்றியமையாமை இல்லை. இதை வல்லுநர்களிடம் விட்டுவிட்டால் அவர்கள் வழிவகை காண்பார்கள். சிறிது கூடுதலாகச் செலவாகும் என்று சொல்லலாம். ஜனநாயகத்திலே செலவு ஆகத்தான் செய்யும். ஜனநாயக அமைப்பே செலவுடைய ஒன்றுதான். சர்வாதிகார நாடாக இருந்தால் அவ்வளவாகச் செலவாகாது. கேரளாவில் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிட்டது. அங்கே ஆகும் செலவுகள் குறைகின்றன. அங்கே அங்கத்தினர்கள் வாங்குகின்ற படிகள் குறையும். சட்டமன்றச் செலவுகள் குறையும். கவர்னர் மட்டும் இருந்து ஆளுகின்றார். சர்வாதிகாரியினுடைய ஆட்சியாக இருந்தால் செலவுகள் குறையும். காட்டாட்சியாக இருந்தால் இன்னும் செலவுகள் குறையும். அடியாட்களை வைத்து ஆட்சி நடத்தினால் செலவுகள் இன்னும் குறையும். ஆனால் மொழி போன்ற உணர்ச்சிக்கு அதிகாரத்தின்மூலம் தடை விதித்தால் என்றேனும் ஒரு நாளைக்கு அது பிறிட்டுக்கிளம்புமே தவிர அடங்காது, ஒடுங்காது. ஆகவே, 14 மொழிகளுக்கும், ஆட்சி மொழியாகக்கூடிய தகுதியைக் கொடுங்கள் என்றுதான் அரசினருக்குத் நங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். ஆங்கிலம் தொடர்ந்து துணை ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்படலாம். அதில் கஷ்டமோ நஷ்டமோ, வெட்கமோ, துக்கமோ இல்லை என்ற கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தக் கருத்தை நாங்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டே வருகின்றோம்.

மாநிலங்களின் அவையிலே பேசுகின்றபோதுகூட அறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் கருத்தைத்தான் வெளியிட்டார்கள். ஆனால், அவருடைய பேச்சு எந்தச் செய்தித் தாளிலும் தொடர்ந்தாற்போல் முழுவதும் தொகுத்து வெளியிடப்பெறவில்லை. செய்தித்தாளினர் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செய்திகள் எடுத்துப் போட்டிருக்கின்றார்கள். அவருடைய பேச்சு முழுமையும் செய்தித்தாள்களிலே வராத காரணத்தால், மாநிலங்களின் அவையிலே அவர்கள் பேசிய பேச்சைத் தி.மு. கழகம் புத்தக வடிவிலே வெளியிட்டிருக்கிறது. அண்ணா அவர்கள் மொழிப் பிரச்னையைப்பற்றிப் பேசுகின்றபொழுது, "பதினைந்து மொழிகளும் ஆட்சிமொழியாக வரும் வரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும். தொடர்பு மொழியாக எது இருக்கவேண்டும் என்பதில் இயல்பான காலவளர்ச்சிக்கு அதை விட்டுவிடலாம். இப்பொழுதும்கூட இந்திக்காகச் செய்த பிரச்சாரத்தில் அரசாங்க முயற்சியை விட தனிப்பட்ட அமைப்பின் முயற்சியே பலன் தந்துள்ளது. அந்தப் பிரச்னையை மக்களிடம் விட்டுவிடுங்கள். காலப்போக்கில் அவர்கள் இயல்பாகத் தேர்ந்தெடுத்து வழங்கிக் கொள்கிற மொழி தொடர்பு மொழியாகப் பிறகு வளரட்டும்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1965

அவ்வாறு அரசாங்கக் கட்டாயமில்லாமல் மக்களே இந்திதான் தொடர்பு மொழியாகவேண்டுமென்று நினைப்பார்களானால் அது முதலில் நடைமுறையில் de facto தொடர்புமொழியாக வந்து பிறகு சட்ட சம்மதம் de jure பெற்றுக்கொள்ளட்டும்." என்ற கருத்தைத்தான் சொன்னார்கள். இதையேதான் பல இடங்களிலே பேசுகின்றபொழுது எடுத்துச் சொல்லி வருகின்றோம். இந்தி ஆட்சிமொழியாகும் தகுதி பெற்றதல்ல. பேசுகின்றவர்களுடைய எண்ணிக்கையை மாத்திரம் எடுத்துச் சொல்லி தகுதி படைத்தது என்று சொல்வது சரியல்ல. அதைவிடப் பல மொழிகள், தகுதி படைத்த மொழிகள் இருக்கின்றன. ஆகவே, 14 மொழிகளும் முழுத்திறமை படைத்த ஆட்சிமொழிகளாக ஆகும் வரை ஆங்கிலமும் இருக்கட்டும். மக்களுடைய உணர்ச்சி எந்த அளவுக்கு இருக்கிறது, எந்த அளவுக்கு அவர்களுடைய மனநிலை மாறியிருக்கிறது என்பதைப் பொறுத்த தொடர்பு மொழி ஒன்று தானாக அமையட்டும். ஆகவே இதில் அரசாங்கம் தனது அதிகாரத்தைச் செலுத்துமானால் அது மக்களிடையே மாச்சரியத்தையும், எழுச்சியையும் உண்டாக்குமே தவிர, அமைதியை நிலைநாட்டுவதற்கு வழிகாட்டாது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

3.30 p.m. அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சைப் பற்றிப் பல கனம் உறுப்பினர்களும், கனம் முதலமைச்சர் அவர்களும் குறிப்பிட்டுப் பேசினார்கள். கனம் முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் அந்தப் பேச்சினாலே ஏற்படுகின்ற நிலைமைகளைப்பற்றி எப்படி கருதினாலும், அதைப்பற்றி 'இந்து' பத்திரிகை போட்டிருக்கிற வாசகத்தை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாநிலங்கள் அவையில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசிய பேச்சைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது,

"A well-reasoned and persuasive speech by the D.M.K. Leader Mr. C. N. Annadurai pleading for a reappraisal of the language policy of the Government."

என்று 'இந்து' இதழ் நிருபர் கூறுகிறார். அவர் குறிப்பிட்டிருக்கும்— "well-reasoned and persuasive speech" என்ற சொற்றொடர் கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும். அந்த அளவுக்கு அவர்களுடைய பேச்சு தெளிவுபட அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், மற்றொன்றையும் உணர்த்த விரும்புகிறேன். மாநிலங்கள் அவையில் பேசிய பேச்சுக்குப் பிறகு இரண்டு நாட்கள் கழித்து நிருபர்கள் கூட்டத்தில் அவர்கள் பதில் அளித்ததைப் பற்றிச் சில கனம் உறுப்பினர்களும் மற்றவர்களும் பல்வேறுக எடுத்துப் பேசினார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் கூடச் சுட்டிக் காட்டினார்கள். மொழியைப் பற்றிப் பேசுகிறபோது பல்வேறுனை பிரச்சினைகள் எழுகின்றன. தாய் மொழி என்கிறோம், வட்டார மொழி என்கிறோம், தேசிய மொழி என்கிறோம், பொது மொழி என்கிறோம், ஆட்சி மொழி என்கிறோம், இணைப்பு மொழி என்கிறோம். இவ்வாறு ஒவ்வொரு தன்மையில் மொழியைப் பார்க்கின்றபோது, அதன் தகுதியும், நிலையும், நோக்கமும், பொருளும்

3rd April 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மாறுபடவே செய்கின்றன. தாய் மொழி என்பது நாமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடியது அல்ல. தாய் மொழி என்பது நம்மைத் தாய் மூலம் ஆட்கொள்ளுகின்ற மொழி. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையிலும் 723 தாய்மொழிகள் இருக்கின்றன. 544 கிளை மொழிகள் இருக்கின்றன. 179 முக்கிய மொழிகள் இருக்கின்றன. அவற்றிலே 14 மொழிகளுக்குத் தேசீய மொழிகள் என்ற தகுதி தரப்பட்டு அரசியல் நிர்ணயச் சட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. 723 தாய்மொழிகள் இருந்தாலும், ஒவ்வொருவரும் தாங்களாகப் பார்த்து இதுதான் என்னுடைய தாய் மொழி என்று தேர்ந்தெடுத்துக் கொள்வதில்லை. என்னுடைய தாய்மொழி தமிழாக அமைந்தது; இயற்கையாகவே அமைந்த ஒன்று அது. தமிழ் என்னை ஆட்கொண்டிருக்கிறதே தவிர, நானாக அதைத் தேர்ந்தெடுக்கவில்லை. தேசீய மொழிகளாக பெருமைக்குரிய அந்தஸ்து 14 மொழிகளுக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆட்சி மொழி என்பது நாமாகப் பார்த்து, விரும்பி தேர்ந்தெடுத்துக் கொள்கிற ஒன்று. அந்நியர்கள் நம்மை ஆண்டார்கள்; அப்போது அவர்கள் ஆங்கிலந்தான் இந்த நாட்டின் ஆட்சி மொழி என்றார்கள். பாண்டிச்சேரி, காரைக்கால், ஏனம், மாகி போன்ற பகுதிகளைப் பிரஞ்சுக்காரர்கள் ஆண்டார்கள். அங்கே பிரஞ்சு மொழிதான் ஆட்சி மொழி என்றார்கள். மொகலாயர்கள் ஆண்ட சமயத்தில் உருது மொழிதான் ஆட்சி மொழி என்றார்கள். இப்போது, ஜனவரி 26-ம் நாள் முதல் இந்தி மொழிதான் இந்தியாவின் ஒரே ஆட்சி மொழி என்று தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதிலே தேர்ந்தெடுக்கிற முறை இருக்கிறதே தவிர, ஆட்கொள்ளுகிற முறை இல்லை. ஆட்சிமொழியைத் தேர்ந்தெடுப்பது நம் முடைய கையிலேதான் அமைந்திருக்கிறது. அதே போன்று இணைப்பு மொழி என்றால் ஒரு மாநிலத்தவர் மற்றொரு மாநிலத் தவரோடு பேசுவதற்கு எந்த மொழியைப் பயன்படுத்துகிறார்களோ அது இணைப்பு மொழி. இந்த மாநிலத்தில் ஆட்சி மொழி தமிழாக இருந்தாலும் எனக்குத் தெரிந்த தெலுங்கரோடு தெலுங்கில் பேசும்போது இணைப்பு மொழி தெலுங்குதான். பல வேறு நிலைமைகளில் மாநிலங்களுக்குத் தகுந்தவாறு இணைப்பு மொழி அமைகிறது. அப்படி ஆட்கொள்ளும் வகையில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று கூறி இருக்கிறார்கள். இந்தி மட்டுமே மத்திய ஆட்சி மொழியாவதற்குத் தகுதி படைத்தது அல்ல என்பதற்கான காரண காரிய விளக்கங்களைத் தெளிவுபட மாநிலங்கள் அவையில் பேசியிருக்கிறார்கள். மாநிலங்கள் அவையில் பேசிய பேச்சில் கழகத்தினுடைய கொள்கையை விளக்கிப் பேசினார்கள். ஆனால் நிருபர்கள் கூட்டத்தில் அவர்கள் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிற கட்டந்தான் வருகிறது. பல நிருபர்கள் பல்வேறு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். கேள்வி பதில்கள் பத்திரிகைகளில் வந்தாலும் இந்த மன்றத்தில் சிலவற்றை வைக்க விரும்புகிறேன். இதைப் பற்றித்தான் ஒரு குழப்ப நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சில பத்திரிகைகள் திருத்தி செய்திகளைத் தலைப்பாக வெளியிட்டிருக்கிறார்கள். பத்திரிகைகளிலே திருத்திப் போட்டதிலே குழப்பம் ஏற்பட்டிருக்கிறதே

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1965

தவிர, நிருபர்களுக்கு அளித்த பதிலிலே ஒரே கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார்கள். குழப்பம் அறிஞர் அண்ணாவிடத்திலல்ல; கனம் முதலமைச்சரின் உள்ளத்தில்தான் ஏற்பட்டிருக்கிறது.

"மொழி விஷயமாக உங்கள் கொள்கை என்ன?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

அதற்கு "தேசிய மொழிகளெல்லாம் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அந்தக் கட்டம் வரையில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரவேண்டும். இதற்கு நாமாக ஒரு காலக் கெடு வைத்துக்கொள்ளக்கூடாது" என்று பதில் கொடுத்தார்கள்.

"பிறகு, ஒரு தொடர்பு மொழி வேண்டுமே. அது எது?" என்று கேட்டார்கள்.

அதற்குப் பதில் அளிக்கும் வகையில் "அது எது என்பது மக்களாகப் பார்த்து, காலப் போக்கில், இயற்கையான சூழ்நிலையில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். சர்க்கார் இன்ன மொழிதான் தொடர்பு மொழி என்று ஆணையிடக்கூடாது; ஆதரவு தரக் கூடாது. மக்களே தீர்மானிக்க வேண்டும்" என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

"பதினான்கு மொழிகளில் எது தொடர்பு மொழியாகும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

அதற்குப் பதில் கூறும்போது, "பதினான்கு மொழிகளில் ஏதாவது ஒன்று. தமிழுக்கு என்ன! வளமான மொழி! தொன்மையான மொழி! இலக்கியச் செறிவுற்றது! தொடர்பு மொழியாகத் தமிழ் இருக்கலாமே." என்று தமிழ் தொடர்பு மொழியாக இருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இன்னொருவர் அதைப் பற்றி வற்புறுத்திக் கேட்டபோது காலப்போக்கில்தான் அதைப் பற்றித் தீர்மானிக்க வேண்டுமென்று கூறினர்.

காலையில் பேசிய தி. மு. கழக உறுப்பினர்கள் தெளிவாகக் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். தமிழ் மொழி நம்முடைய மாநிலத்திலேயே முழு அளவுக்கு ஆட்சி மொழியாகும் நிலைமையை இன்று பெற்றிருக்கிறதா? என்றால் இல்லை! பதினான்கு மொழிகளில் எந்த மொழி முயன்று தகுதி, திறமை, ஆகியவற்றைப் பெற்றுத் தொடர்பு மொழி ஆகிறதோ அந்த மொழியைத் தொடர்பு மொழியாக்கிக் கொள்ளலாம்; அதைக் காலப் போக்கில்தான் அறிந்துக் கொள்ளவேண்டும். அந்தக் காலம் வரை தொடர்ந்து செய்ய வேண்டிய பணிகளை ஆங்கிலத்தின் மூலமே செய்யலாம்; எதிர் காலத்திலே தமிழ் மொழியே கூட அந்த அளவுக்கு வளப்பமான மொழியாக வரலாம் என்ற கருத்தையும் கூறியிருக்கிறார்கள்.

"இந்தி ஆட்சி மொழி என்ற திட்டத்தைச் சர்க்கார் விட்டு விட்டால், பிறகு இந்தி பரப்பப்படுவது பற்றி உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?" என்று ஒருவர் கேட்டார்.

3rd April 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுகின்ற வகையில் "இல்லை! ஆனால் அதைப் பரப்பும் காரியத்தைச் சர்க்கார் செய்யக்கூடாது, மக்களின் அமைப்பு (அதிகார பூர்வமல்லாத) செய்ய வேண்டும்" என்று சொன்னார்கள்.

அதற்குப் பிறகு ஒரு நிருபர் "நீங்கள் உதவி செய்வீர்களா?" என்று கேட்டதற்குப் பதில் சொல்லும்போது "அந்த அறை கூவலை ஏற்றுக்கொள்கிறேன். இந்தி ஆட்சி மொழி அல்ல என்று சர்க்கார் அறிவிக்கட்டும், இந்தியைப் பரப்பும் காரியத்தில் சர்க்கார் ஈடுபடாமல் இருக்கட்டும்." என்றுதான் கூறியிருக்கிறார்கள். கேள்விக்குப் பதில் சொல்லியிருப்பதை நன்குக் கவனிக்க வேண்டும். "இந்தி ஆட்சி மொழியாக்கப்படாமல், கட்டாயப் படுத்தப்படாமல், சர்க்கார் அந்தப் பரப்பும் காரியத்தைச் செய்ய யாமல் இருந்தால் நான் அந்த அறைகூவலை ஏற்றுக் கொள் கிறேன்" என்றுதான் கூறியிருக்கிறார்கள். இந்து பத்திரிகையில் இதைப்பற்றித் தெளிவுபட வந்திருப்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

"The D.M.K. leader asserted that his party would help in propagating Hindi in the South if official attempts at imposition of Hindi were stopped." என்று 7—3—1965 "இந்து" பத்திரிகையில் வந்திருக்கிறது. மேலும் இந்து பத்திரிகை

"He was provoked to make the comment" என்பதும் குறிப்பிடுகிறது.

"I will take up the challenge and help in the propagation of Hindi."

என்று அறிஞர் அண்ணா அவர்கள் விடையிறுத்ததாகவும் "இந்து" இதழ் தெரிவிக்கிறது.

இந்தியை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதைக் கட்டாயப் படுத்துவதை நிறுத்தி விட்டால், உதவி செய்வோம் என்று கூறி யிருக்கிறார்கள்.

"I will take up the challenge and help in the propagation of Hindi".

என்ற விடையைச் சொல்கிற அளவிற்கு அவர்கள் நிருபரின் கேள்வியால் சினமூட்டப்பட்டார்கள் என்று "இந்து" இதழ் தெரிவிக்கிறது.

'I will take up the challenge'

"அந்த அறைகூவலை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறி னார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், சில செய்தித்தாள் களில் அண்ணாத்துரை இந்திக்கு ஆதரவு தருகிறேன், என்று சொல்லி விட்டார்கள், என்று தப்புந்தவறுமாகத் திருத்திப் போட்டு விட்டன. அதை வைத்துக் கொண்டு அண்ணாத்துரை இந்திக்கு ஆதரவு தர முன் வந்துவிட்டார் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் திரும்பத்திரும்பக் கூறுகிறார்கள். எந்தக் கட்டத்தில் அவர்கள் ஆதரவு தர முன் வந்தார்கள் என்பதை உணர வேண்டும். 'அறைகூவலாக ஏற்றுக்கொள்கிறேன்' என்று எடுத்துச் சொன்னார்கள். நாம் சாதாரணமாகக் காணலாம்,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1965

குப்பன் என்றும் சுப்பன் என்றும் இரண்டு பேர்கள் இருப்பார்கள். இடையில் இருப்பவர்கள் அறைகூவல் விடுவார்கள். "குப்பன் வெட்ட வெளியில் பட்டப்பகலில் ஒற்றைக் காலில் ஒரு மணி நேரம் நின்றால் உன் மீசையை எடுத்துக் கொள்கிறாயா?" எவ்று சுப்பனைக் கேட்பார்கள். அதற்கு சுப்பன். "குப்பன் வெட்ட வெளியில் பட்டப்பகலில் ஒற்றைக் காலில் ஒரு மணி நேரம் நின்றால் நான் மீசையை எடுத்துக் கொள்கிறேன்" என்று சொல்வான். இது ஒரு அறைகூவல். உடனே "சுப்பன் மீசையை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டான்! மீசையை எடுத்துக் கொள்கிறேன்! என்று சொன்னால் என்ன பொருள்? எந்த நிலையில் என்ன நடந்தால் அப்படிச் செய்வதாகச் சொன்னான் என்பதைப் பார்க்க வேண்டாமா? வெட்ட வெளியில் பட்டப்பகலில் ஒற்றைக் காலில் ஒரு மணி நேரம் நின்றால் மீசையை எடுத்து விடுவேன் என்றான், அறைகூவலை ஏற்றுக் கொள்ளும் வகையில் தான் அப்படிச் சொன்னான். அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அதே போல், "இந்தியை ஒரே ஆட்சிமொழியாக ஆக்க வில்லை என்றால், இந்தியை பாய்ச்ச வருகிறேன்" என்று அறிஞர் அண்ணா கூறினார்கள். எந்தக் கட்டத்தில் வரத் தயார் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா?

"I will take up the challenge" என்று தான் குறிப்பிட்டுள்ளார்கள். அதை விட்டு விட்டு இந்திக்கு ஆதரவு தேட அவர்கள் தாமாகவே வந்து விட்டதாக காங்கிரசுக்காரர்கள் கூறுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது. அறைகூவலின்படி 'இந்தியை நாங்கள் ஒரே ஆட்சி மொழியாக ஆக்கவில்லை, அதனை நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை, அதற்கு அரசாங்கத்தின் தனிச் சலுகை அளிக்கப்படவில்லை' என்பதை அமைச்சர்கள் நிலைநாட்டி விட்டல்லவா, அறிஞர் அண்ணா அவர்களை இந்திப் பிரச்சாரத்திற்கு அழைக்கவேண்டும்? நிபந்தனைகளை நிறைவேற்றினார்களா? இப்படிப்பட்ட செய்தி சில பத்திரிகைகளில் தவருக வந்திருக்கிறது. பல்வேறு சமயங்களில் இங்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் பேசியதாக வந்திருக்கிற பல செய்திகளை சுட்டிக்காட்டும் போது, என்ன சொல்லியிருக்கிறார்கள்? பத்திரிகைகளில் பல் வேறுபோடுவார்கள், அவற்றை நம்பவேண்டாம் என்று கூறி யிருக்கிறார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: குப்பன் சுப்பன் என்று சொன்னார்கள். இவர்களுடைய தலைவர் சுப்பனு குப்பனு என்று சொல்வார்களா?

திரு. இரா. நெடுஞ்செழியன்: இலக்கணம் அறிந்தவர்கள் அதை நன்கு உணருவார்கள். கனம் உறுப்பினர் தம்மைக் குறிப்பிடுவதாகக் கருதிக் கொள்ளவேண்டாம். எடுத்துக்காட்டுக்காக பெயர்களைப் பயன்படுத்துவது உண்டு. தமிழ் இலக்கணப்படி. யாரையும் தனிப்பட்ட முறையில் குறிப்பிடுவதற்கல்ல இதைக் கூறுவது என்பதை உறுப்பினர் அவர்கள் உணரவேண்டும். அறைகூவலை ஏற்றுக்கொள்கிற நிலையில்தான் சொல்லப்பட்டது. பத்திரிகைகளில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் பேசியதாக

3rd April 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வந்ததை எடுத்துக் காட்டியபோது பல தடவை அவர்களே கூறியிருக்கிறார்கள், இது சரியல்ல, இதை நம்புவதற்கில்லை, மாறுபட்ட கருத்து போடப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். 'பிரியாணி' என்ற சொல் என் வாயிலேயே வராது, பத்திரிகைகளில் அது தவருக வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறினேம். 'வாலே ஒட்ட நறுக்கி விடுவேன்' என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறியதாக வந்த செய்தியைச் சுட்டிக் காட்டியபோது, "என் வாயில் அப்படி வராது, பத்திரிகைகளில் அப்படி செய்தி வந்திருக்கிறது என்றால் அது தவருன செய்தி" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, பத்திரிகைகளில் தவருன செய்தி அளிக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு ஐயப்பாடு ஏற்பட்டால், அதற்கான முழு விளக்கத்தையும் தரவேண்டியவர்கள் அந்தக் கூற்றுக்கு உரியவர்களே தவிர, மற்றவர்கள் அல்லர். உரியவர்கள் அதற்கு ஒரு விளக்கத்தைத் தருவார்களேயானால் அதற்கு மேலேதான் வாதங்களை எழுப்ப வேண்டும். பத்திரிகைகளில் திரித்துக்கூறும் நிலை இங்கு மட்டுமல்ல. ஐக்கிய நாட்டு சபைக்கு சென்றிருந்தபோது திரு. வி. கே. கிருஷ்ண மேனன் அவர்களின் பேச்சுகூட அகில உலகச் செய்தித்தாள்களில் திரித்துக் கூறப்பட்டிருந்ததைக் குறித்து விளக்கம் தந்து அதை மறுத்திருக்கிறார்கள். இந்திய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள்கூட கேரளாவிற்கு சென்றபோது மொழிப் பிரச்னையை நடுவர் தீர்ப்புக்கு அதாவது 'ஆர்பிட்ரேஷனுக்கு' விடலாம் என்று சொன்னதாக செய்தித்தாள்களில் செய்தி வந்தது. டெல்லிக்கு சென்று, பத்திரிகைகளில் செய்தி தவருக வந்திருக்கிறது, அது என் கருத்து அல்ல, நான் அப்படிச் சொல்லவில்லை என்று விளக்கம் தந்தார்கள். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இங்கு வந்திருந்தபோது, ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்படும் என்று பேசியதாக வந்த செய்தியை மாநிலங்களவை உறுப்பினர் ஒருவர் எடுத்துக் காட்டி, ஒரு அமைச்சர் அங்கு போய் ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்படும் என்று திட்டவட்டமாக எடுத்துச் சொல்லியிருக்கிறாரே, அப்படி முடிவு எடுத்த பிறகு எங்களைக் கூப்பிட்டு ஆலோசனை கேட்பானேன், இவ்வளவு பேர்களையும் பின் ஏன் கூப்பிட்டிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு திரு. பி. சுப்பிரமணியம் அவர்கள், நான் அப்படிச் சொல்லவில்லை, பத்திரிகைகளில் என் கூற்று திரித்துக் கூறப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதை நான் எதற்காக சொல்கிறேன் என்றால், ஒரு ஐயப்பாடு ஏற்பட்டால், அதற்கு உரியவர்கள் யார், அவர் என்ன விளக்கம் தருகிறார்கள், அந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்கிறோமா இல்லையா என்பதைக் காணவேண்டும். அதற்காகத்தான் பொறுப்பு வாய்ந்த செய்தித்தாள்களில் ஒன்று என்று கருதப்படுகிற 'இந்து' இதழில் வந்த சொற்றொடர்களின் அடிப்படையில் அவர்கள் கூறிய கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஒரு சில செய்தித்தாள்களில் வந்ததை வைத்துக்கொண்டு விளையாடுகிற நிலையில், 'அண்ணாத்துரை இந்தியை ஆதரிக்கிறார்கள்' என்ற முடிவிற்கு வந்து விட வேண்டாம் என்று ஆளும் கட்சியினருக்குக் கூறிக்கொள்ள

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1965

விரும்புகிறேன். பதினைந்து மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும். இந்திக்கு கொடுக்கப்படுகிற அத்தனைச் சலுகைகளும் முக்கிய தேசிய மொழிகளுக்கும் தரப்பட வேண்டும் என்ற கருத்தைத்தான் கூறியுள்ளார்கள். மேலை நாடுகளின் நிலை கூட எடுத்துச் சொல்லப்பட்டது. இங்கு ஆட்சி மொழிபற்றிய அறிக்கையிலே இரஷ்யாவின் நிலைபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 1956ல் வெளியிட்ட ஆட்சி மொழிக் கழக அறிக்கையில், "தலைமை சோவியத் கூட்டத்தில் எந்த ஒரு பிராந்தியத்தைச் சேர்ந்த உறுப்பினரும் அந்தப் பிராந்திய மொழியிலேயே பேசலாம். மேலும், அந்தப் பிராந்தியத்தில் உள்ள சட்ட சபைகளிலும், பிராந்திய மொழியே பயன்படுத்தப் பெறுகிறது. நீதிமன்றங்களிலும், அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தும் பொழுதும், அவரவர்கள் பிராந்திய மொழியிலேயே பேசலாம். முக்கிய சோவியத்தில் நிறைவேற்றப்படும் எல்லாச் சட்டங்களும் யூனியனில் வழங்கப் பெறும் முக்கியமான 16 மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடப்படுகின்றன. முக்கிய சோவியத்தின் கெஜட்டும் 16 மொழிகளில் வெளியிடப்படுகின்றன. கொள்கை அளவில் எந்த இரஷ்ய பிரஜையும், இரஷ்யாவில் வழங்கும் எந்த மொழியில் வேண்டுமானாலும் தன்னுடைய மகஜரை எழுதலாம்" என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது. ஆக வட்டார மொழிகளுக்கு உரிமை தரப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் யார் வேண்டுமானாலும் தம் தாய் மொழியில் பேசலாம், அதற்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது. யார் வேண்டுமானாலும் தன் தாய் மொழியில் மனுக்கள் எழுதி அனுப்பலாம், அதற்கு வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. நீதிமன்றங்களில் அவரவர்கள் வட்டார மொழியிலே பேசலாம், நடத்தலாம், அதற்கு வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர்: திரு. அண்ணாதுரை அவர்கள் சொன்னதை வம்புக்காக இழுத்துப் பேசவில்லை. ஆனால், நிலைமை எப்படி இருந்தாலும் ஜனநாயகத்தின் போக்கை ஏற்க வேண்டும், ஏற்க வேண்டியிருக்கிறது என்பதை அது புலப்படுத்துகிறதா, இல்லையா?

திரு. இரா. நெடுஞ்செழியன்: ஜனநாயகப் போக்கை ஏற்பது வேறு. அவர்கள் சொல்லுகிற கருத்து வேறு. "இரஷ்யா தேசத்தைப் பொறுத்த மட்டில் மொழிப் பிரச்சினையால் ஏற்படும் மனக்கசப்பைத் தவிர்ப்பதற்காக அரசாங்கத்தார் ஒவ்வொரு மொழியையும் தாய் நாட்டின் பண்பாட்டை வளர்க்கக்கூடிய மொழி என்ற கருத்தில் நன்முறையில் ஆதரித்துப் போற்றுகிறார்கள். இரஷ்ய மொழி பெற்றிருக்கின்ற தனிப்பட்ட சிறப்புக் காரணமாக, இரண்டு மொழிகளுக்கிடையே ஏற்படக் கூடிய போராட்டம் தவிர்க்கப்படுகிறது." வட்டார மொழிகளுக்கு முழு வாய்ப்பும் தரப்படும் நிலை இருக்கிறது. ஆனால் இரஷ்ய மக்கள் இணைப்பு மொழியாகப் பயன்படுத்தும் மொழி இரஷ்ய மொழி என்று ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அங்குள்ள எல்லா மொழிகளையும்விட இரஷ்ய மொழி எல்லா வகையிலும் வளமுள்ளதாக இருப்பதினால் தான், அது இணைப்பு மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்

3rd April 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கிறது. பெரும்பாலான மக்கள் பேசுகிற மொழி என்ற காரணம் மட்டும் அல்ல, அறிவியல் அறிஞர்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள பயன்படுத்துகிற மொழி, மற்ற மொழிகளை விட வளமுள்ள மொழி என்பதினால் அது இணைப்பு மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே அரசியல் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள, மற்ற 200 மொழிகளை விட வளம் பொருந்தியது இரஷ்ய மொழி. இந்திய துணைக்கண்டத்தில் அண்ணல் காந்தி அடிகளைத் தலைவராக ஏற்றுக்கொள்ளத் தகாறு இருக்கப் போவதில்லை. புலவர் குழாத்தில் வள்ளுவரைத் தலைவராக ஏற்றுக் கொள்வதில் தகாறு இல்லை. அதுபோல, 200 மொழிகளில் தகுதியும், வளமும், திறமையும் மிக்க மொழி இரஷ்ய மொழி என்பதினாலேயே இரஷ்ய மொழி இணைப்பு மொழியாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் இந்தியை இரஷ்ய மொழிக்கு ஈடாகச் சொல்ல முடியாது. இந்தி அதைப்போன்று வளம் பெற்று வளர்ந்துள்ளதல்ல; தமிழ், வங்காளம், தெலுங்கு, மலையாளம் ஆகிய வற்றைவிட வளம் மிக்க மொழி அல்ல இந்தி. இரஷ்ய மொழி வளம் பொருந்திய மொழியாதலால் அதை அங்கு இணைப்பு மொழியாக ஏற்றுக் கொள்வதில் தகாறு ஏற்படவில்லை. ஆனால் இந்தியை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம் இதை விடத் தகுதி பெற்ற மொழிகள் இருக்க, இந்தி அந்த நிலையை, அந்த இடத்தைப் பெறுவதா? என்ற நிலை இங்கு இருக்கிறது. ஐக்கிய நாட்டு அவையிலே ஏழு மொழிகளை மொழி பெயர்க்க வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. திரு. இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள்கூட இந்தக் கருத்தைக் கூறினர்கள். மூன்னாள் கவர்னர் திரு. ஸ்ரீ பிரகாசா அவர்கள்கூடக் கூறியிருக்கிறார்கள் "எல்லா மொழியினரின் உணர்ச்சியையும் மதித்துத் தர வேண்டும்" என்று. "அப்படி மதித்தால்தான் இந்தியாவின் ஒற்றுமை காப்பாற்றப்படும், அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்; நான் இந்தி பேசும் மாநிலத்தைச் சார்ந்தவன்தான் என்றாலும், என் தாய்மொழி இந்தி என்றாலும் 14 மொழிகளுக்கும் மதிப்பு அளிக்கும் வகையில் அவற்றுக்கு ஆட்சிமொழியாக ஆனும் தகுதியை ஏற்படுத்தித் தர வேண்டும், அப்படித் தருவதினால்தான் மொழி உணர்ச்சியை ஆங்காங்கே திருப்தி செய்ய முடியும்" என்று கூறியிருக்கிறார்கள். அப்படி செய்தால்தான் இந்தியாவினுடைய ஒற்றுமை காப்பாற்றப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

"If India wants to continue as one, that is, as the British left it—they have already taken away big chunks to create their Pakistan—all the languages spoken in this vast sub-continent must be recognised, and given equal status—whether in the law court or the legislature, whether in the executive work of various Government departments or inter-state gatherings. There is no other go. If the United Nations can manage with its hundred and more languages, so can we with only our 14 or so. In the old Austro-Hungarian Parliament, they spoke 19 languages. In many countries of to-day three languages are thus recognised. Those who insist on either English or Hindi—I speak with all respect—are not helping the unity of the country, but encouraging disruption and fomenting mutual bitterness."

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1965

என்பது முன்னுள் கவர்னராக இருந்த திரு. ஸ்ரீ பிரகாசா அவர்களின் கருத்து ஆகும். பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை தமிழகத்திலுள்ளவர்கள் மட்டுமல்ல, வேறு பல இடங்களிலிருந்தும் இந்த கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பேராசிரியரும், கேரளத்தில் முன்னுள் அமைச்சராக இருந்தவரும் ஆன திரு. ஜோசப் முண்டசேரி, அவர்களும் இதே கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்திக்குக் கொடுக்கின்ற தகுதியை மற்ற எல்லா மொழிகளுக்கும் கொடுத்து திருப்தி ஏற்படுத்தினுல் ஒழிய அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த முடியாது. குறிப்பிட்ட அளவில் ஒரு மொழியினருக்குச் சலுகை காட்டும்போது, மற்ற மொழியினருக்கு அதிகமான உணர்ச்சி ஏற்படத்தான் செய்யும் என்பதை ஆட்சியினர் உணரவேண்டும். அழகப்பாக் கல்லூரி முதல்வர் டாக்டர் வி.எஸ்.பி. மாணிக்கம் அவர்கள் எப்படியாவது அனைவருடைய உணர்ச்சிகளையும் காப்பாற்றுதல் வேண்டும்; இந்திக்கென்று ஒரு இடம் ஏற்படுத்தும்போது, மற்றைய மொழிகளுக்கும் உரிய இடம் ஏற்படுத்திக் கொடுக்கத்தான் வேண்டும். அவ்விதம் உரிய இடம், மதிப்பு, கொடுப்பதன் மூலம், மொழிச் சிக்கலைத் தீர்க்க முடியும்' என்பதை அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த முறைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தி மொழிப் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டும். பிரச்னைக்கு இந்த முறையில் தீர்வு காணுத வரையில், அமைதி ஏற்படாது. இந்தி மொழிக்கு மதிப்பு எந்த விதத்தில் அளிக்கப்படுகிறதோ, எந்த விதத்தில் தகுதி அளிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு மற்றைய மொழிகளுக்கும் மதிப்பு, தகுதி இவை அளிக்கப்படாத போக்கு எதிர் காலத்திலும் குழப்பமான நிலைமையை ஏற்படுத்திக்கொண்டுதான் இருக்குமே தவிர மொழிப் பிரச்னையில் சுமுகமான நிலைமையை உண்டுபண்ணுது. இந்தி உணர்ச்சிக்காரர்களுக்கு சலுகை காட்டுவது, மதிப்புத் தருவது, தனித்தகுதி தருவது போன்றவைகள் எல்லா வகையிலும் ஊறு பயக்கும். மற்ற மொழியினருக்கும் மதிப்புத் தரவேண்டும், தகுதி தரவேண்டும். இந்தி பேசுகின்றவர்களுக்கு மட்டும் சலுகை கொடுப்பது, அவர்களுடைய எண்ணங்களுக்கு மதிப்புத் தருவது என்ற நிலையில் இந்திய அரசினர் வளைந்து கொடுக்கிற நிலை ஏற்படுமானுல், அது நாட்டுக்கு நல்லதல்ல. இந்தி மொழிக்கு மட்டுமேதான் தியாகம் செய்கின்றவர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணம் வேண்டாம். மற்ற மொழிகளுக்காகவும் தியாகம் செய்யக்கூடியவர்கள் ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில் இருக்கிறார்கள் என்பதை இந்த அரசினர் உணருதல் வேண்டும். மொழி உணர்ச்சி என்பது எல்லோருடைய உள்ளத்திலும் வளருகின்ற ஒன்றுதான். அதை சட்டத்தின் துணை கொண்டு, வலுவின் காரணமாக ஏதோ ஓரளவுக்கு அடக்கி ஒடுக்கலாம் என்ற எண்ணம் ஏற்படக் கூடும். ஆனால் ஒவ்வொரு வருடைய உள்ளத்திலும் தாய்மொழி உணர்ச்சி இருக்கத்தான் செய்யும். இதே நேரத்தில் எல்லா மொழியினருடைய திருப்திக்கும் என்ற வகையில் முடிவு எடுக்கவேண்டும் என்பது சாத்தியமா என்றுல் இப்போது இந்தியை எந்த அளவுக்கு, பெயரளவுக்கு ஆட்சிமொழி என்று வைத்துவிட்டு, ஆங்கிலத்தை எப்படிப்

3rd April 1965] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

பயன்படுத்திக் கொண்டிருக்கிறோமோ--அந்த அளவில் இப்போது எல்லா மொழிகளையும் ஆட்சி மொழிகளாக நடைமுறைப் படுத்துவது சாத்தியமில்லாவிட்டாலும் கூட, 30, 40 ஆண்டுகளிலாவது சாத்தியமாகும் என்பதனை இந்த அரசினர் உணருதல் வேண்டும். அண்மையில் முற்போக்கு அடைந்த இரஷ்யா நாட்டிலிருந்து வந்த தூதுகோஷ்டியில் வந்த தலைவியார் அவர்கள் கூறினார்கள். 'நாற்பது ஆண்டு காலமாக இரஷ்ய மொழியை நாடு முழுவதும் கொண்டு வரவேண்டும் என்று பாடுபடுகிறோம்; முழு வெற்றி ஏற்படவில்லை. இன்னும் சுமார் 25 ஆண்டு காலத்தில் இது நாடு முழுவதும் பரவிவிடும் என்று எதிர்பார்க்கிறோம்' என்கிற அளவுக்குச் சொன்னார்கள். உடனடியாகச் சாத்தியப்படுமா, படாதா என்பதல்ல இப்பொழுதுள்ள கேள்வி. எந்த அளவிலும் எல்லா மொழிகளுக்கும் சமத்துவம் அளிக்கவேண்டும் என்பதே பிரச்சினையாகும். எதிலும் சமத்துவம் இருக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கின்ற நேரத்தில், சாதாரணமாக கேள்வி நேரத்தில் கூட குறிப்பிட்ட மாவட்டத்தைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில் எங்கள் மாவட்டம் என்னவாயிற்று என்றும், தொகுதியைப்பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில் என் தொகுதி என்னவாயிற்று என்றும், வீடுகளைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில் என்னுடைய வீடு என்னவாயிற்று என்றும் கேட்பது இயல்பாக இருந்து வருவதை நாம் அறிவோம். அண்ணனுக்கு இருக்கிறது என்று சொல்லும்போது, தம்பிக்கு என்ன இருக்கிறது என்று கேட்கின்ற உணர்வு இருக்கின்ற நிலையில், எல்லா மொழிகளுக்கும் மதிப்பு அளிப்பது மிகவும் அவசியம் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பண்டித நேரு அவர்கள், அடிக்கடி கூறி வந்திருக்கிற உறுதி மொழியில் சொல்லப்படுவது—இந்தி பேசாத மாநிலங்களுடைய கருத்தை அறியாமல் இந்தி திணிக்கப்பட மாட்டாது, இந்தியை அவர்களாகவே ஏற்றுக்கொள்ளும் வரையில் திணிக்கப்பட மாட்டாது, இந்தி வேண்டுமா? வேண்டாமா? என்று நிர்ணயிக்க வேண்டியவர்கள் இந்தி பேசாத மாநிலங்களைச் சார்ந்த மக்களே தவிர, இந்தி பேசுகின்ற மாநிலத்திலுள்ள மக்கள் அல்ல. இந்தி பேசாத மாநிலத்திலுள்ள மக்கள்தான் இந்தியை எப்போது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி தீர்மானிக்கவேண்டும். இந்தி பேசுகின்ற மாநிலத்திலுள்ளவர்கள் எப்போது இந்தியைக் கொண்டுவரவேண்டும் என்பதைப்பற்றி நிர்ணயிக்கக்கூடாது என்றும் பல வாய்ப்புகளில் பண்டித நேரு அவர்கள் தன் உறுதி மொழியாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அதுபற்றிச் சொல்லுகின்றபோது கூட,

> "I shall go further and tell them that if they do not want to learn Hindi, let them not learn Hindi".

என்ற அளவுக்கு, இந்தி பேசாத மாநிலங்களிலுள்ள மக்கள் அவர்களாகவே ஏற்றுக்கொள்ளுகிற வரையிலும் இந்தி திணிக்கப்படாது என்பதைத் தனது உறுதிமொழியில் தந்திருக்கிறார்கள். அந்தப்படி, இந்தி பேசாத மாநிலத்திலுள்ள மக்களுக்கு அந்த

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1965

உரிமை இப்போது வழங்கப்படவில்லை. இந்தி பேசுகின்ற மாநிலத்திலுள்ளவர்கள் தான் தங்கள் கருத்தைத் தெரிவிக்கின்ற நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்தி பேசாத மாநிலத்திலுள்ளவர்கள் இதைப்பற்றி எதையும் சொல்வதற்கு தகுந்த நிலை அளிக்கப்படவில்லை. முதலமைச்சர் மகாநாட்டில் ஏற்பட்ட முடிவுகளின் மூலமாக இதற்குத் தீர்வு காண முடியாவிட்டாலும் இடைக்காலத் திட்டமாக ஏதாவது முடிவு ஏற்படுமா என்று எதிர் பார்க்கின்ற நிலைமையும் ஏற்படவில்லை. இதைப்பற்றி முடிவு செய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற குழுவில்—தென்னகத்தில் இது குறித்து உணர்ச்சிகள் அதிகமாக இருந்தும்—மொழி சம்பந்தமாக ஏராளமான குறைபாடுகளைக் கொண்டிருந்தும் தென்னகத்தை சார்ந்த யாரும் இந்தக் குழுவில் இடம் பெறவில்லை. இதில் ஏற்படக்கூடிய முடிவு பாராளுமன்றத்தின் இக்கூட்டத் தொடரிலேயே வருவதும் ஐயத்திற்கு இடமாக இருக்கிறது, அடுத்தக் கூட்டத்தொடரில்தான் வரும் என்று சொல்லப்படுகிறது. பிரச்னையை இழுத்துப்போட்டுக்கொண்டு செல்லுகின்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறதே தவிர, காரணத்தைத் தெரிந்துகொண்டு, சிக்கலைத் தீர்ப்பதற்கு வழிகளைக் காண்பதாகத் தெரியவில்லை. இந்தியை மனப்பூர்வமாக இங்குள்ளவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்ற தவறான கருத்தை இந்த அரசினர் வடநாட்டினும், மத்திய அரசினரிடத்தினும் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பார்களேயானால் அது உண்மையான நிலை அல்ல, உண்மைக்கு மாறுகப் பேசுகின்ற ஒன்று. தென்னகத்தில் வாழ்கிற 3½ கோடி மக்கள் இந்தியை ஏற்றுக்கொள்கிறார்கள், ஆனால் இந்தி திணிப்பதைத்தான் எதிர்க்கிறார்கள் என்கிற கருத்து தொடர்ந்து மத்திய அரசிற்குச் சொல்லப்படுமானால், தென்னகத்தைப் பொறுத்தவரையில், தாய் மொழி தமிழ், அதுதான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும், மற்ற மொழிகள் எதுவும் தேவையில்லை. அதோடு ஆற்றலையும் அறிவையும் பெருக்கிக் கொள்வதற்குத் தமிழோடு ஆங்கிலமும் தேவை, உலகத்தோடு தொடர்பு கொள்வதற்கும், உலகத்தோடு பொது அறிவுத்துறையினும், அறிவியல் துறையினும் தொடர்பு கொள்வதற்கு ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளவேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழ்—ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள்மட்டும் போதும் என்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கு அரசியல் சட்டத்தை மாற்றினும் சரி, ஆட்சி மொழிச் சட்டத்தை திருத்தினும் சரி, அந்த நிலையைத்தான் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்தியைத் திணித்து, அதன் மூலமாக இந்தியை ஏற்றுக்கொள்வார்கள் தமிழர்கள் என்பதை யாரும் எதிர்பார்க்க வேண்டாம். இங்கு இருக்கின்ற உணர்ச்சிக்கு மதிப்பளித்து, இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்து, பல்வேறு வழிவகைகளையும் பார்க்கும்போது, அவரவர்களுக்கு மதிப்பு அளிக்கின்ற வகையில், 14 மொழிகளையும் ஆட்சிமொழியாக ஆக்கி, அவைகளில் எது அகில இந்தியத் தொடர்பு மொழியாக இருப்பதற்குத் தகுதியுடையது என்பதை மக்கள் தாமாக ஏற்றுக்கொள்ளும் காலம் வரையினும், எல்லா மொழிகளும் வளம் பெறுகிற வரையினும், **ஆங்கில மொழியைத்தான், தொடர்பு மொழியாக வைத்துக்**

3rd April 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கொள்ளவேண்டும் என்பதனையும் மனதில் கொண்டால்தான் இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும். அப்படியல்லாமல், ஒரு மொழிக்கு மட்டும் மதிப்பளித்து, மற்ற மொழிகளுக்கெல்லாம் மதிப்பளிக்காத நிலை இருக்கும் வரையிலும், மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்காத நிலை இருக்கும் வரையிலும், இப்போது மொழிப் பிரச்னையில் இருக்கின்ற குழப்பமான நிலை இருந்து கொண்டுதான் இருக்கும். ஆகவே இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் கருத்தில் கொண்டு, எல்லா மக்களுடைய மொழி உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில், சீரிய வகையில் நல்ல முறைகளை ஏற்றுக்கொண்டு ஆட்சிமொழிப் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மொழிப் பிரச்னையின் முக்கியத்துவத்தை வற்புறுத்திக் கூறினார்கள். மொழி உணர்ச்சி எங்கும் உள்ளது, யாரிடத்தும் உள்ளது என்பதுபற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த மொழி உணர்ச்சிக்கு அவர்கள் சமய உணர்ச்சியை ஒப்பிட்டார்கள். ஆனால், நான் அதற்கு ஒரு படி மேலேயே போகத் தயாராக இருக்கிறேன். சமய உணர்ச்சி முக்கியமானதுதான். ஆனால், சமயப்பற்று இல்லாதவர்கள் சிலர் இருக்கிறார்கள், எல்லோருக்கும் சமயப்பற்று இருக்கிறது என்று சொல்லுவதற்கில்லை. ஆனால் ஒன்று, சமயப் பற்று உள்ளவர்களாக இருந்தாலும், சமயப் பற்று இல்லாதவர்களாக இருந்தாலும், அவர்கள் எல்லோரும் சமரசத்தில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும். சமயப் பற்று என்று சொல்லும்போது, சமய வெறியைப் பெற்றிருந்தாலும் சமரசத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும். உயர்ந்த சமயம் எது என்றால் சமரசம், சன்மார்க்கம். அதுதான் சரியான சமய உணர்ச்சி. ஒரு சிலருக்கு சமயப்பற்று இல்லை. சமயப் பற்று இல்லாதிருந்தாலும், மொழி உணர்ச்சி இல்லாதவர்கள் யாரும் இருக்க முடியாது. ஒரு வேளை ஊமைகள் அந்த மாதிரி இருக்கலாம்—பேச முடியாதவர்கள் இருக்கலாம். மற்றவர்கள் எல்லோருக்கும் மொழி இன்றியமையாத சாதனம். ஆகவே, மொழி உணர்ச்சி எல்லோருக்கும்தான் இருக்கிறது. சமய உணர்ச்சி இல்லாதவர்களுக்குக் கூட மொழி உணர்ச்சி இருக்கிறது. இவ்வளவு முக்கியமான பிரச்சினை மொழிப் பிரச்சினை. இன்னும் பல உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் கலந்துகொள்ள விரும்பினார்கள். இன்னும் ஒரு நாள் அவகாசம் இருந்தால் கூட நலமாக இருந்திருக்கும். ஆனால் அதற்கு அவகாசம் இல்லாமல் போய்விட்டது.

4-00 p.m.

இன்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதிலே இந்தி எதிர்ப்புப் பிரச்சினை என்று ஒன்று இருக்கிறது. மொழிப் பிரச்னை ஒன்று, இந்திப் பிரச்னை ஒன்று, இந்தி எதிர்ப்பு பிரச்னை ஒன்று. சிலர் இந்தி வேண்டாமென்று உணர்கிறார்கள், பேசுகிறார்கள். அந்தக் கருத்தைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நான் புரிந்துகொண்ட வரையில், வற்புறுத்திப் பேசினார்கள். இன்னும்கூட சில உறுப்பினர்கள் இந்தி மொழி ஆட்சிமொழி ஆகக்கூடாது என்று விரும்புவது சகஜம். அப்படி

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd April 1965

வற்புறுத்துகிறவர்களுங்கூட ஒரு மொழியைக் குறைவாகப் பேச வேண்டியதில்லை. 'அது அங்காடி மொழி', 'வளர்ச்சி இல்லை', 'சரித்திரம் இல்லை' என்றெல்லாம் பேசவேண்டியதில்லை. கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களுங்கூட, இந்தியின் பூர்வ சரித்திரத்திற்குப் போகவேண்டியதில்லை. மொழியை ஒரு வாகனமாகக் கொள்ளுகிறோம். பெரிய காராக, ஐந்து லட்சம் ரூபாயில் கூட ஒரு கார் வைத்துக்கொள்ளலாம். ஆயிரம் ரூபாயில் ஒரு ஓட்டைக் கார் வைத்துக்கொண்டு போகலாம். எந்தக் கார் கிடைக்கும், எந்தக் கார் வைத்துக்கொண்டு போக முடியும் என்பதைப் பொறுத்து இருக்கிறது. இன்னொருவர் வைத்துக்கொண்டிருப்பதைப் பழிப்பது சரியல்ல. 'ஃபியட்' (Fiat) கிடைக்கவில்லை, 'ஸ்டாண்டர்ட் கார்' (Standard car) தான் கிடைத்தது, என்றால், 'ஃபியட்' (Fiat) கார் தான் கார் என்று சொல்வது சரியல்ல. 'ஃபியட்' (Fiat) காரிலும் போகலாம், அல்லது 'ஸ்டாண்டர்ட்' (Standard) காரில் போகலாம், இன்னும் கிடைத்தால் 'ரோல்ஸ் ராய்ஸ்' காரிலே கூடப் போகலாம். அவரவர்கள் அவரவர்களுக்குக் கிடைக்கும் காரை வைத்துக் கொண்டு போகிறார்கள்.

அந்த மாதிரி அகில இந்தியாவிற்கு ஆட்சி மொழி எது? தி.மு.க. தலைவர் அவர்கள் கூட—அவர்கள் பேச்சு தமிழிலே அச்சிடப்பட்டு, அவர்களே அனுப்பி இருப்பதைப் பார்த்தேன்—"இந்தியாவுக்கு ஒரு பொது மொழி இருக்கலாம்" என்று சொல்லியிருக்கிறார். அந்த வாக்கியத்தை நான் பார்த்தேன். அந்தப் பொது மொழியாக எது இருப்பது என்ற பிரச்னை வருகிறது. அப்படி இருப்பதிலே அது இந்தி என்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்றால் இதிலே பூர்வோத்திரம், பூர்வ சரித்திரம் இதெல்லாம் வரவேண்டியதில்லை. இன்றைக்குப் பல மொழிகள் பேசப்படுகின்றன. ஒரு மொழியை இன்னொரு மொழியோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதில்லை. இன்றைக்கு உலக மொழியாக இருக்கிற ஆங்கிலத்திற்குக் கூட குறை சொல்லலாம். இத்தனை எழுத்துக்கள், இத்தனை சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன, இது அசல் மொழியாக விளங்கவில்லை, அல்லது ரோமன் காலத்தில்—பழைய காலத்தில்—இருந்தபடி, அதே மொழியாக இல்லை, மாறுபட்டிருக்கிறது என்ற சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், நாம் நமது உபயோகத்திற்கு எதை வைத்துக்கொள்ளுவது என்று கவனிக்கும்போது ஒரு மொழியை ஏன் குறை கூறவேண்டும்? வேண்டாமென்றால், வேண்டாமென்று விட்டு விடலாம். இன்றைய தினம், "கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், தமிழ் அன்னையின் உதிரத்திலிருந்து உதித்தெழுந்தது" என்று சொன்னால்,—எனக்குப் பின்னாலே எங்கள் கட்சிக் கொறடா இருக்கிறார், அவர் தெலுங்கு பேசுகிறவர், கனம் அங்கத்தினர் நஞ்சுண்ட ராவ் அவர்கள் இருக்கிறார்கள், அவர் கன்னடத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்—நம் பெருமையை நாம் பேசிக்கொண்டிருந்தால், பேசிக்கொண்டிருக்கலாம். கன்னடமோ, களிதெலுங்கோ தமிழ் அன்னையிலிருந்து வந்தது என்று சொன்னால் யார் ஒத்துக் கொள்வார்கள்? நாம் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். **தாம் பேசலாம்.** அவர்களைக் குறைவாகச் சொல்லலாமா?

3rd April 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கனிதெனுங்கு என்று பாரதியார் கூட வர்ணித்திருக்கிறார். 'இல்லை, இல்லை, நாங்கள் தான் தாய்; நீ என் மகள்' என்று சொல்லிக் கொண்டிருந்தால் என்ன பயன்? முதலிலேயே இந்தி நமக்கு வேண்டாமென்று இருக்கலாம்—பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் அந்த மொழி பற்றி இப்போது எதற்காகப் பேசவேண்டும்? இலக்கியக் கருத்தாங்கு இருந்தால் அப்போது பேசலாம். அங்கு 'இது பழமையான மொழி, இது உயர்ந்த மொழி, இது வளர்ச்சி அடைந்த மொழி' என்று பேசலாமே தவிர வாகனமாக அல்லது சாதனமாக இருக்கின்ற எந்த மொழியையும் குறைவு படுத்திப் பேசவேண்டிய அவசியம் இல்லை.

இப்போது தாய்மொழிக்குக் குறைவு ஏற்படுகிறது, சம அந்தஸ்து இல்லை என்று குறிப்பிட்டார்கள். தாய்மொழி புறக்கணிக்கப்படுவதாகச் சொன்னார்கள். நாம் ஒன்று மட்டும் கவனிக்கவேண்டும். நம்முடைய நாட்டின் அமைப்பு, வேறு பல நாடுகளின் அமைப்பு பற்றிக்கூட கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம்முடைய நாடு பல மொழிகள் பேசுகிற நாடு. அந்தந்த ஸ்தலங்களிலே விவகாரங்கள் தாய் மொழியிலேயே நடத்தப்படுகின்றன. ஸ்தலங்களிலே மட்டுமல்ல, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள், "இப்போது தமிழ் மத்திய ஆட்சி மொழியாக இல்லாத வரையில் யாராவது தமிழில் எழுத முடியுமா? மத்திய அரசாங்கத்திற்குத் தமிழில் எழுதினால் கவனிப்பார்களா?" என்றெல்லாம் சொன்னார்கள். இதே அரசியலமைப்புச் சட்டத்தில், "Part XVII—Chapter IV—Special Directives" என்ற தலைப்பில் 350-வது ஆர்ட்டிக்கிள் இருக்கிறது. அதில்,

"Every person shall be entitled to submit a representation for the redress of any grievance to any officer or authority of the Union or a State in any of the languages used in the Union or in the State, as the case may be."

என்று இருக்கிறது. ஆகையால், எந்த மொழியினும் எழுதலாம் மாநிலத்திலே நம்முடைய தாய்மொழியை உபயோகப்படுத்துவதிலே ஒன்றும் கஷ்டம் இருக்காது. ஆனால் மத்திய ஆட்சிக்கு எந்த மொழி என்பதுதான் இப்போது பிரச்னை. பதினைந்து மொழிகளும் இருந்தால் என்ன என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு ஏற்ற திருத்தப் பிரேரணைகளைப் பிரேரேபித்திருக்கிறார்கள். பதினைந்து மொழிகளையும் வைத்துக்கொண்டு ஆட்சி நடத்துவது எப்படி என்பதுதான் பிரச்னை. மணி ஆர்டர் ஃபாரத்தில் எல்லா மொழிகளும் இருக்கலாம், இருக்கத்தான் வேண்டுமென்று நாமும் வற்புறுத்துவோம். போஸ்ட் கார்டில் நம் மொழி இருக்கலாம், நாணயத்தில் இருக்கலாம்; கரென்ஸி நோட்டில் இருக்கலாம். இது இன்று நேற்று ஏற்பட்டதல்ல, ரொம்ப நாளாக இருக்கிறது. அதை அப்படியே வைத்துக்கொள்ளலாம். ஆனால் அது அல்ல ஆட்சி.

கரென்ஸி நோட்டுகளை அச்சிட்டு வினியோகித்தலும், நாணயங்களைத் தயாரித்து வினியோகித்தலும், போஸ்ட் கார்ட் தயாரித்து வெளியிடுதலும் ஆட்சி அல்ல. ஆட்சி என்றால் வேறு. அதற்குப்

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd April 1965

பதினைந்து மொழிகளையும் வைத்துக்கொண்டு நடத்துவது சாத்தியமா என்று பார்க்கவேண்டும். இரண்டு மொழி இருக்கலாம், மூன்று மொழி இருக்கலாம், நான்கு மொழி இருக்கலாம். உலக ஸ்தாபனங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். உலக ஸ்தாபனங்களிலே நியூயார்க்கில் ஐக்கிய நாடுகள் சபை (United Nations) இருக்கிறது. ஜினிவாவில் இண்டர்நேஷனல் லேபர் ஆர்கனிசேஷன் (International Labour Organisation) போன்ற வேறு பல சர்வ தேச ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அங்கே எத்தனை மொழிகள் இருக்கின்றன? உலகத்திலிருக்கிற எழுபது நாடுகளுக்கு மேல் அங்கே வருகின்றன. பல மொழி பேசுகிறவர்கள் வருகிறார்கள். ஐரோப்பாவிலேயே எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன? ஆஃப்ரிக்காவில் எவ்வளவு மொழிகள் பேசப்படுகின்றன? ஆங்கிலம், ஃபிரெஞ்ச் தவிர எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன. ஆனால் உலக ஸ்தாபனங்களில் ஐந்து மொழிகளில்தான் எல்லாம் மொழி பெயர்க்கப்படுகின்றன. மொழி பெயர்க்கப்படுவதே ஐந்து மொழிகளில்தான். அது கூட இன்னும் சொல்லப் போனால் நான்கு மொழிகளில் தான். மற்ற மொழிகள் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். அதற்காக 'எங்களைப் புறக்கணிக்கிறார்கள், அவமானப்படுதுகிறார்கள். அலட்சியப்படுத்துகிறார்கள், என்று சொல்லுகிறார்களா என்ன? யாரும் அப்படி நினைக்கவில்லை. நினைத்தால் சொல்லுவார்கள். நடவடிக்கைகள் இருக்கிறதே (Proceedings) அவைகளை இரண்டு மொழிகளில் தான் வழங்குகிறார்கள்—அதாவது ஆங்கிலம், ஃபிரெஞ்ச். உபயோகப்படுகிற மற்ற மொழிகளில் கூட வழங்குவதில்லை. ஆங்கிலம், ஃபிரெஞ்ச் இரண்டிலும், இரண்டையும் எதிரெதிர்ப் பக்கங்களில் போட்டு வழங்குகிறார்கள். ஆகவே, பதினைந்து மொழிகளும் மத்திய ஆட்சி மொழியாக அமையவேண்டும் என்று கூறுவது சாத்தியப் பட்டதல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் என்ன சொன்னார்கள், எது சொன்னார்கள் என்பதைப்பற்றியெல்லாம் நான் கூற வேண்டிய அவசியமில்லை. இரண்டு மூன்று பத்திரிகைகளில் பார்த்தோம், அதை எடுத்துச் சொன்னேம். இப்படிச் சொல்லவில்லை என்றாலும் சரி. அவர்கள் என்ன சொன்னார்களோ அதை வைத்துக்கொண்டு, எங்களுடைய வாதத்தை நாங்கள் நிர்ணயிக்கிறோம், சொல்லுகிறோம் என்பது அல்ல. அவர்கள் கூட என்ன சொன்னார்கள். எதிர்க்கட்சியினர் சொல்லியிருப்பது என்ன வென்றால், தொடர்பு மொழி ஒன்று, ஆட்சி மொழி ஒன்று; இரண்டும் வேறாக இருக்கிற மாதிரி சொன்னார்கள். எனக்கு அது புரியவில்லை. கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சுக்கு, அவர்களே தமிழ் வெர்ஷன் (version) வழங்கியிருக்கிறார்கள். இப்பொழுது கூட அதைப் படித்துப் பார்த்தேன். தொடர்பு மொழி ஒரு பொது மொழியாக இருக்கலாம் என்று ஒரு இடத்தில் சொல்கிறார்கள். இன்னொரு இடத்தில் 'லிங்க் லாங்வேஜ்' (link language) தொடர்பு மொழியாக இருக்கலாம் என்றால், அது ஒரு மொழியாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றிக் கூறும்

3rd April 1965] *[திரு. எம். பக்தவத்சலம்]*

பொழுது, 14 மொழிகளில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற ஒரு கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பது அவர்களுடைய தமிழ்படுத்தப்பட்ட பேச்சிலிருந்து எனக்குப் புலப்படுகிறது. (திரு. கே. ஏ மதியழகன்.—குறுக்கீடு) அதை நான் பின்னும் சொல்லத்தான் வந்தேன். பதினைந்து மொழிகளில் ஒன்று தொடர்பு மொழியாக இருக்கலாம் என்று சொல்கிறார்கள். பதினைந்து மொழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும், தாங்களாகவே மக்கள் அதை உருவாக்கிக் (evolve) கொள்ளவேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி எந்த மொழி வேண்டுமானாலும் வரலாம், தமிழே இருக்க வேண்டுமென்பதில்லை. இந்திக்குப் பதிலாக குஜராத்தி வரலாம். அப்பொழுது அந்த மொழி ஏற்றுக் கொள்ளப்படுமா? அப்பொழுது ஒரு மொழியை ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும். தொடர்பு மொழி (link language) பதினைந்து மொழிகளில் ஒரு மொழியாக இருக்கலாம். எனக்குத் தெரிந்த வரையில், என்னுடைய சிற்றறிவிற்கு எட்டியவரையில், தொடர்பு மொழிக்கும், ஆட்சி மொழிக்கும் வித்தியாசம் இருக்கிறதா என்று புரியவில்லை. தொடர்பு மொழி என்று சொல்கிறார்கள். ஆட்சி மொழி, பொது மொழி, இணைப்பு மொழி என்று சொல்லுகிறார்கள். எல்லோருக்கும் ஒரு பொது மொழி இருக்கவேண்டும், ஆட்சிக்கும் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

இப்பொழுது கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தப் பிரேரணையின்படி 14 மொழிகளும் இருக்க வேண்டும், அவை ஆட்சி மொழிகளாக இருக்கவேண்டும்; அப்படி 14 மொழிகளும் ஆட்சி மொழியாக வரும் வரையில் ஆங்கிலம் இருக்கவேண்டும். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் கூறியது, ஒரு இடத்தில் கூறியது—எல்லாவற்றையும் படித்தால் எனக்கு ஒரே குழப்பம் வந்துவிடும், கூடிய வரைக்கும் குழப்பத்தைத் தவிர்க்கவேண்டும் என்று தான் விரும்புகிறேன்—14 மொழிகளும் இருக்கட்டும், அதிலிருந்து ஒரு மொழி வெளிவரவேண்டும்; அது தொடர்பு மொழியாக இருக்க வேண்டும். எது தகுதியான மொழி என்று மக்கள் தேர்ந்தெடுக்கிறார்களோ அந்த மொழி வரட்டும்; அதுவரையிலும் ஆங்கிலம் இருக்கட்டும் என்பது தான். இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 14 மொழிகளும் எப்பொழுதும் இருக்கவேண்டும் என்ற திருத்தப் பிரேரேபணையைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களே ஒப்புக்கொண்டு, அவர்களே வெளியிட்டிருக்கிற தமிழ் வெர்ஷன் (version) படி 14 மொழிகளில் ஒன்று தொடர்பு மொழியாக வரக்கூடும், வர வேண்டும், மக்களே அதை 'இவால்வ்' (evolve) செய்ய வேண்டும், அது வரையிலே ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்பதாகும். ஒன்றுக்கு ஒன்று வித்தியாசம் இருக்கிறது.

இதற்கு முன்பெல்லாம் பேசப்பட்டது என்ன? ஜனவரி 25-ம் தேதிக்கு முன்னமே, ஜனவரி 17-ம் தேதியிலிருந்து 23-ம் தேதி வரையில் சட்ட மன்றக் கூட்டம் நடந்தது. அப்பொழுதெல்லாம் இங்கு மொழியைப்பற்றிப் பேசப்பட்டது. கவர்னர் உரையின்

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd April 1965

மீது நடைபெற்ற விவாதத்தில் பேசினேன். அப்பொழுது தி.மு.க. முன்னேற்றக் கழகத்தினரிடமிருந்து நான் பெற்ற விளக்கம் வேறு வகையாக இருந்தது. கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கூறியபடி, அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தப் பிரேரேபணையின்படி, அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும், ஆட்சிமொழி ஆங்கிலமாக இருக்கவேண்டும், இந்தி கூடாது என்ற கருத்துத் தான் அப்பொழுது தெரிவிக்கப் பட்டது. ஆனால், இப்பொழுது கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தி.மு.க. முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கொடுத்திருக்கிற திருத்தப் பிரேரேபணையின்படி 14 மொழிகளும் இருக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மற்றொன்று, எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம், தலைவர் களெல்லாம் பிரதம மந்திரி அவர்களுடைய உறுதிமொழி நிறை வேற்றப்படவில்லை, அதற்குரிய சட்டம் இயற்றப்படவில்லை, என் சட்டம் இயற்றப்படவில்லை என்றெல்லாம் வற்புறுத்திக்கொண்டே வந்தார்கள். நான் முன்பே விளக்கியிருக்கிறேன். அரசாங் கத்தைப் பொறுத்த மட்டில் ஒரே நிலைதான். அது இன்று அல்ல, நேற்று அல்ல, அரசியல் அமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நிலிருந்து, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு ஆட்சி மொழிக் கமிஷன் (Official Language Commission) நியமிக்கப்பட்டதிலிருந்து தமிழ் நாடு அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், இந்தியோடுகூட ஆங்கிலமும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற கருத்துத்தான் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நான் குறிப்பிட்டது போல், எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து, ஒரு கமிட்டி போட்டு, அவர்களுடன் கலந்து ஆலோசித்து—அப்பொழுது தி.மு. க. முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களும் இங்கே உறுப் பினராக எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள்—நாம் உருவாக் கிய யாதாஸ்து என்னவென்றால், இந்தியோடு கூட ஆங்கிலமும் இருக்க வேண்டும், தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதுதான். அதுவே நாம் வற்புறுத்தியது, எல்லோரும் ஒப்புக்கொண்டது. அதற்குப் பின்னால் சட்டம் வந்தது. அப்பொழுதெல்லாம் அந்தச் சட்டம் போதவில்லை என்று குறை சொல்லப்பட்டது. அப் பொழுது நான் விளக்கம் கூறினேன். அந்தச் சட்டத்தோடு கூட பிரதம மந்திரியின் உறுதிமொழியும் இருக்கிறது என்று நான் விளக்கினேன். இப்போழுது, அந்த உறுதிமொழிக்குத்தான் சட்டம் வரும் என்று நான் குறிப்பிட்டேன்.

அந்த உறுதிமொழிக்குச் சட்டம் வரவில்லையே என்று கேட்கப் பட்டது. கடைசியில் முடிக்கும்பொழுது கூட கனம் எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் இன்னும் சட்டம் செய்வதாக இல்லையே என்று கூறினர்கள். சட்டம் செய்வதைப்பற்றித்தான் இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்; சீக்கிரம் சட்டம் வரும். இந்தச் சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்பு என்னுடைய கருத்தைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்றும் நான் குறிப்பிட்டேன். ஆனால், உறுதிமொழி சட்ட பூர்வமாக ஆக்கப் படுவதுபற்றி இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது

3rd April 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

என்ருல், கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்களா என்பதுதான் இப்பொழுது இருக்கக்கூடிய பிரச்னை. இன்று பேசியது, திருத்தப் பிரேரேபணை, இதையெல் லாம் பார்த்தால், அதை ஏற்றுக்கொள்வதாக இல்லை என்றுதான் தோன்றுகிறது. இங்கே கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்களும், மற்றவர்களும் 'ஏன் அரசாங்கத்தின் சார்பாக, நீங்கள் ஒன்றும் உருப்படியான கருத்தைத் தெரிவிப்பதற்கு முன்வர வில்லை, நீங்கள் ஏன் ஒரு திருத்தம் கொடுக்கவில்லை?' என்று கேட்டார்கள். மேற்கு வங்காளத்தில் கருத்து தெரிவிக்கப் பட்டிருப்பதை எடுத்துக் காட்டினர்கள். மேற்கு வங்காளத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்து என்ன? இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில் இந்தியோடு ஆங்கிலமும் கூட தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதுதான் அந்தக் கருத்து. அந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டார்கள், எல்லா கட்சியினரும் ஏற்றுக்கொண்டார்கள். இப்பொழுது கூட அரசாங்கம் திருத்தம் கொண்டுவந்தால், அதை ஏகோபித்து இந்த மன்றம் ஏற்றுக் கொள்வதாக இருந்தால், எல்லாக் கட்சியினரும் ஒப்புக் கொள்வதாக இருந்தால், "பிரதம மந்திரி அவர்களின் உறுதி மொழியை சட்டபூர்வமாக ஆக்கவேண்டும், அதை வற்புறுத்துகிற முறையில் அதற்குச் சட்டம் செய்யவேண்டும்," என்று நானே திருத்தம் கொண்டுவருகிறேன். "எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டால்" என்று நான் கூறினேன். கனம் சபாநாயகர் அவர்களும் துவக்கத்திலேயே, 'இதிலே ஒன்றும் ஆத்திரம் கூடாது, சூடு இருக்கக்கூடாது, சுவையாக இருக்கவேண்டும்' என்று கூறினர்கள். ஏதோ கூடியவரைக்கும் அந்த மாதிரிக் கொஞ்சம், கொஞ்சம் இருந்து வருகிறது; சில சமயங்களில் கொஞ்சம் புகைகிறது. இதே போல் ஒரு மாதம் கூட்டம் நடந்தது. ஆரம் பித்து ஒரு மாதமாக நடந்து, இப்பொழுது முடியப்போகிறது, தீர்மானத்தை நாங்கள் ஏதோ எங்கள் பலத்தை வைத்துக்கொண்டு நிறைவேற்றப் போகிறோம் என்று இப்பொழுதே கூட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் கூறினர்கள். அப்படி பலத்தை வைத்துக்கொண்டு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியதில்லை. எங்களுடைய கருத்து, அரசாங்கத்தின் கருத்து என்ன என்பது பார்லிமெண்டில் இருப்பவர்களுக்கும் நன்றாகத் தெரியும், மத்திய சர்க்காருக்கும் தெரியும். மேலும், இன்றைக்குக் கூட எனக்கு டெல்லியிலிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. "நீங்கள் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு உங்கள் கருத்தை ஏப்ரல் மாதத்தில் வந்து விளக்கவேண்டும், நீங்கள் ஒரு நாளைக்கு டெல்லிக்கு வந்து விளக்கவேண்டும்", என்று முக்கியமாக காங்கிரஸ் கட்சி உறுப் பினர்கள் சார்பாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் 350 பேர்கள் இருக்கிறார்கள். "நீங்கள் ஒரு நாளைக்கு வரவேண்டும், நீங்கள் வந்து நிலைமையைப் பூராவும் விளக்கவேண்டும்" என்று ஒரு கடிதம் வந்திருக்கிறது. "ஏப்ரல் கடைசி வாரத்தில் ஏதாவது ஒரு நாள் குறிப்பிட்டால் நான் வருவதற்குத் தயாராக இருக்கிறேன்", என்று கூறியிருக்கிறேன். ஆகவே தான், நாங்கள் அரசாங்கத்தின் சார்பாக, அரசாங்கத்தின் கருத்தைத் தெரிவிக்கும் கையில் திருத்தப் பிரேரேபணை ஒன்றும் கொடுக்கவில்லை.

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd April 1965

டில்லியிலிருந்து வந்த செய்தியைப் பற்றிக் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே மந்திரிசபையின் குழு ஒன்று அமைத்து இதைப் பரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். அந்தக் குழுவில் யார் இருக்கிறார்கள், யார் இல்லை என்பது பிரச்னை அல்ல. ஏனென்றால், நமக்கு வேண்டியது என்ன என்பதை நாம் கொஞ்சங்கூட சந்தேகத்திற்கு இடமில்லாமல் விளக்கியிருக்கிறோம். எப்படிச் சட்டம் செய்வது என்பது தான் பிரச்னையே தவிர, சட்டம் செய்வதா, சட்டம் செய்வதில்லையா என்பது பிரச்னை அல்ல. பத்திரிகைகளில் செய்தி வரும்போது அது பல வியாக்கியானங்களுக்கு இடம் கொடுக்கிறது என்றாலும், எனக்கு நன்றாகத் தெரியுமாதலால் நிலைமையை நான் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறேன். சட்டம் எப்படிச் செய்வது என்பது தான் முக்கியம். அந்தச்சட்டத்தை உருவாக்கி அதை finalise பண்ணுவதற்கு முன்பு எங்களுடைய கருத்து கோரப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். "சீக்கிரத்தில் சட்டம் வரவில்லையே" என்று சொன்னார்கள். நான் அன்றே கூறினேன். இன்றைக்கு நிலைமை ஒன்றும் கெட்டுப் போகவில்லை. இந்தியோடு ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும் நிலை தான் இன்றைக்கு. சட்டம் வந்தால் அது நல்ல சட்டமாக வரவேண்டும், நிரந்தரமான தீர்வாக இருக்க வேண்டும். ஆகவே, என்னைப் பொறுத்த மட்டில், சட்டம் சீக்கிரத்திலே வந்தால் நலம் தான். அதை நான் வரவேற்பேன், வற்புறுத்துவேன். ஆனால், அவசரப் பட்டு, அதனால் தவறு ஏற்பட்டுவிடக் கூடாது என்பது தான் என்னுடைய கவலை. ஆகவே, எப்படியும், இந்த அரசாங்கம் கோருகிற வகையிலே சட்டம் வரும். ஆனால், இந்தக் கருத்தை நாம் எல்லோரும் ஒரே வகையாகத் தெரிவித்தால் நலம்.

இங்கே கருத்துக்கள் தெரிவித்த கனம் உறுப்பினர்களில் சிலருடைய பேச்சு, இந்திக்கு மாத்திரம் எதிர்ப்பு தெரிவிப்பதாகத்தான் புலப்பட்டது. Anti-Hindi என்பது இங்கே இன்னும் இருப்பதாகத்தான் புலப்பட்டது. ஆனால், நான் முன்பே கூறினேன். இந்த நாட்டிற்குப் பொது மொழி எது என்று ஆராயப்பட்டு, அது இந்தியாகத்தான் இருக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் 343-வது ஆர்ட்டிகிளின்படி முடிவு செய்யப் பட்டிருக்கிறது. எங்களைப் பொறுத்த மட்டில் அதை மாற்றுவதாக உத்தேசம் இல்லை. அதை மாற்றுவதற்கு நியாயம் இல்லை என்பது தான் எங்களுடைய கருத்து. 'எங்களுடைய கருத்து' என்று நான் சொல்கிறேன். தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்கு எந்தவிதப் பாதகமும் ஏற்படக் கூடாது. மாணவர்களுக்கும் பாதகம் ஏற்படக் கூடாது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கும் பாதகம் ஏற்படக் கூடாது. பொது மக்களுக்கும் பாதகம் ஏற்படக் கூடாது. அவர்கள் மத்திய ஆட்சியில் தங்களுக்குரிய பங்கை வகிப்பதிலும் எந்த விதமான பாதகமும் ஏற்படக் கூடாது என்பது இந்த அரசாங்கத்தின் கவலை. அதற்கேற்ற வகையில் தான் என்ன வேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம். 'இது வேண்டும்', 'அது வேண்டும்' என்றெல்லாம் வற்புறுத்துகிறோம்.

3rd April 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

'ஜனவரி 26-ம் தேதியன்று இந்தி புகுத்தப்பட்டது' என்று கூறினார்கள். அரசியல் சட்டப்படி அன்றைக்கு அது அமுலுக்கு வந்தது. ஆனால், நான் முன்பே எடுத்துக் காட்டியது போல, அரசியல் சட்டத்திலே குறிப்பிட்டுள்ளபடி உடனடியாக இந்தி வந்துவிடாது; ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும். பதினைந்து ஆண்டுகள் வரை இருக்கும், பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் இருக்கும் என்று அரசியல் சட்டத்திலேயே—அதை அவர்கள் எதிர் பார்த்து அதற்கு— வேண்டிய வகை செய்திருக்கிறார்கள் என்று நான் மீண்டும் நினைவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அரசியல் சட்டத்தின் இந்த 343-வது ஆர்ட்டிகிளின்படி உள்நாட்டு அமைச்சர் கனம் திரு. நந்தா அவர்கள் அதை 'வரவேற்றுப் பேசியதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். பேசுவதிலே எத்தனையோ விதம் உண்டு. கொண்டாடுவதிலும் எத்தனையோ விதம் உண்டு. சிலருக்குத் தங்களுடைய பிறந்த நாள் என்றைக்கு என்று கூடத் தெரியாது. சில பேர் ஆடம்பரமாகக் கொண்டாடுவார்கள், சில பேர் கோயிலுக்குப் போவார்கள். இதெல்லாம் அவரவர் மனப் போக்கைப் பொருத்தது. அது போல, மொழி விஷயத்திலும், 'இந்தி வந்துவிட்டது' என்று சிலர் சொல்வார்கள். 'இந்தி திணிக்கப்பட்டு விட்டது' என்று சிலர் சொல்வார்கள். ஒவ்வொரு வர் பேசும் முறை ஒவ்வொரு விதமாக இருக்கலாம். அந்த முறை யில் எத்தனையோ விதம் இருக்கிறது. அளவு கடந்த உற்சாகத் தோடு பேசும்போது பிறருக்கு வேறு விபரீதமான கருத்துக்கள் ஏற்படுகின்ற வகையிலே சிலர் பேசிவிடுகிறார்கள். எது எப்படி இருந்தாலும், இந்தி மொழியை மாணவர்கள் விரும்பிப் படிக் கிறார்கள். இந்தி படிப்பதனால் அவர்களுக்கு நலம் என்று படிக் கிறார்கள். இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள், 'இது மறைமுகமான திணிப்பு' என்று கூறினார்கள். மறைமுகமாகக் குழந்தைகளுக்கு மருந்து கொடுக்கிறோம் என்றால், குழந்தைகளின் நலத்திற்காகத்தான் கொடுக்கிறோம். குழந்தைகள் கெடுவதற்காகக் கொடுப்பதில்லை. சொம்பக் கசப்பான மாத்திரையாயிருந்தால், மாத்திரையைச் சர்க்கரையில் தோய்த்து (sugar -coated pill) என்ற வகையில் குழந்தைகளுக்குக் கொடுக்கிறோம். அப்பொழுது மாத்திரையின் கசப்புத் தெரிவது இல்லை; சாப்பிட்டால் உடம்புக்கு நன்மை. அம்மாதிரிதான் மாணவர்கள் இந்தி படிப்பதென்றால், அதிலே கட்டாயம் இல்லை. மாணவர்கள் ஆங்கிலம் படிக்க வேண்டியிருக் கிறது. அதற்கு ஒன்றும் குந்தகம் இல்லை. மாணவர்கள் தங்கள் தாய் மொழியை இப்பொழுது கற்பது போல் அல்ல, இன்னும் நன்றாகக் கற்க வேண்டும் என்பது தான் எனது அவா. அதற்கும் ஒன்றும் குறைவு இல்லை. இரண்டுக்கும் குறைவு இல்லாமல் அவர்கள் ஓரளவு இந்தி படிக்க முடியும். இந்தி படித்தால் அவர் களுக்கு நன்மை. அப்படி அவர்கள் படிக்கின்றார்கள் என்றால், ஏதோ தவறான காரியத்தில் அவர்களை ஈடுபடச் செய்வது போல, அவர்கள் செய்யத் தகாததைச் செய்யும்படி அவர்களை நாம்

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd April 1965

மறைமுகமாக ஊக்குவிப்பது போல, பின்னல் அவர்களுக்கு ஏதோ கேடுவரக்கூடிய வகையில் அவர்களை ஊக்குவிப்பது போல, புலவர் திரு. கோவிந்தன் அவர்கள் பேசியது சரியல்ல.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, "நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் இந்தி கட்டாயப் பாடமாகப் புகுத்தப்படுவதை ஒத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று ஆந்திர மாநில முதல் அமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்களிடத்தில் சொன்னார்கள். அதையே வலியுறுத்துவது போல், மைசூர் மாநில முதல் அமைச்சர் திரு. நிஜலிங்கப்பா அவர்களும், "இந்தி பேசுகிற மாநிலத்தவர்களுக்கு 50 சத வெற்றி, இந்தி பேசாத மாநிலத்தவர்களுக்கு 50 சத வெற்றி" என்று சொல்லியிருக்கிறார். எப்படியென்றால், இந்தியைத் தமிழ்நாட்டு மாணவர்கள் படிக்க வேண்டும் என்று நாம் ஒத்துக்கொண்டதாக அவர்கள் சொன்னார்கள். இதை நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் மறுக்கவில்லை. ஆகையால், இப்பொழுது இந்தி கட்டாயமாகத் தமிழ்நாட்டில் புகுத்தப்படுமா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆந்திரத்திலும் மைசூரிலும் கட்டாயமாகத்தான் இந்தி கற்றுக் கொடுக்கிறார்கள். கனம் அங்கத்தினருக்குக் 'கட்டாயம்' என்ற வார்த்தை தான் தெரியும். நான் முன்பே கூறினேன். ஆந்திர முதலமைச்சர் யாரிடத்தில், எதற்காக, எந்தச் சமயத்தில், என்ன (context) நிலைமையில் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது. மற்றவர்கள் சொல்வதற்கெல்லாம் நான் பொறுப்பு அல்ல. இங்கே ஒன்றும் கட்டாயம் இல்லை என்று நான் மறுபடியும் சொல்கிறேன். ஆனால் மும்மொழிக் கொள்கையை அகில இந்தியாவும் ஏற்றுக் கொண்டிருக்கிறது; 'ஆங்கிலம் வேண்டாம்' என்கிற மாநிலங்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஆங்கிலமும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்கிற மாநிலங்களுக்கு அது ஓரளவுக்கு வெற்றி என்று சொல்லலாம். ஆங்கிலம் வேண்டாம் என்று சொன்ன மாநிலங்கள் ஆங்கிலத்தை ஏற்றுக் கொண்டதென்றால், வாதம் என்கிற வகையில் பார்த்தால் அது நமக்கு வெற்றியாக இருக்கலாம். இந்தியோடு ஆங்கிலமும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, 'ஆங்கிலமே கூடாது' என்று இந்தி பேசுகிற மாநிலங்கள் சொல்கிறார்கள். சில மாநிலங்கள் நாம் செய்தது போல் சட்டம் கூடச் செய்யவில்லை. ஆங்கிலத்தையும் தங்களுடைய சட்டமன்றத்தில் உபயோகிக்கலாம் என்ற வகையில் சில மாநிலங்கள் சட்டம் கூடச் செய்யவில்லை. இருந்தாலும் இது எல்லாம் அதற்கு முன்பே இருந்ததுதான். புதிதாக ஒன்றும் இல்லை. இப்பொழுது மும்மொழிக் கொள்கையை எல்லா மாநிலங்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஆங்கிலம் இருக்கவே இருக்காதோ என்று கவலைப்படுகிறவர்களுக்கு நான் குறிப்பிட்டேன். இந்தி மாநிலத்தவர்களும் தங்களுடைய குழந்தைகள் ஆங்கிலம் படிக்க

3rd April 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது ஒரு வகையில் வெற்றி என்றாலும், இங்கே கனம் உறுப்பினர் திரு. மதியழகன் கேட்கிற மாதிரி அங்குள்ளவர்களும் கேட்பார்கள், அந்த முதலமைச்சர் திண்டாட வேண்டும், திண்டாட மாட்டார்கள் என்றே நான் நம்புகிறேன். என்னைப் பொறுத்த வரையில் நான் திண்டாட வில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: தமிழ்நாட்டில் இந்தி கட்டாயமாகப் புகுத்தப்படுமா?

MR. DEPUTY SPEAKER : The Hon. the Chief Minister has stated that it is not so.

SRI K. A. MATHIALAGAN : Sir, it is an important point. We want to know whether the study of Hindi is compulsory now and if not, whether it is going to be made a compulsory subject. This is an important matter which requires clarification.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நல்லது என்றால், கட்டாயமாகப் படிப்பது நல்லது. இந்தி படிக்கவில்லையானால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள். இப்பொழுது இந்தி கட்டாயம் இல்லை. நான் கட்டாயப் படுத்துவதாகவும் இல்லை. அதை எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன். நான் கட்டாயப்படுத்துவதாகச் சொல்லி, அல்லது நான் கட்டாயம் என்று சொன்னதாகச் சொல்லி, அதற்கு ஒரு கிளர்ச்சி பண்ணி வேண்டுமென்றால், அது வேறு விஷயம். (சிரிப்பு.) இப்பொழுது இந்தி கட்டாயம் இல்லை. என் கட்டாயம் இல்லை என்றால், கனம் எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களை விட எனக்கு நம்முடைய மாணவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை உண்டு; நம்முடைய மாணவர்களின் ஆற்றலில் நம்பிக்கை உண்டு; அவர்களுடைய மனோபாவத்தில் நம்பிக்கை உண்டு. மாணவர்களுக்கு எது நலம் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆங்கிலம், தமிழ் இந்த இரு மொழிகளைப் படிப்பதோடு, இந்தியும் படித்தால் அவர்களுக்கு நல்லது. வேறு யாருக்காகவோ அவர்கள் படிப்பது என்பது அல்ல. அவர்களுடைய நலத்திற்காகவே அவர்கள் படிக்கிறார்கள். இன்றைக்கும் படிக்கிறார்கள். ஒரு லட்சத்து ஐயாயிரம் பேர்கள் இப்பொழுது ஸ்கூல் ஃபைனலில் இந்தி படிக்கிறார்கள். படிப்பது நல்லது. அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்கிறோம். அவர்களே உணர்ந்து படிக்கிறார்கள். இப்பொழுது கட்டாயம் பண்ணவில்லை. கட்டாயம் பண்ணுவதாகவும் இல்லை என்று நான் தெளிவித்துக் கொள்கின்றேன்.

4-30 p.m.

"ஆங்கிலம் உலகத் தொடர்புக்காக வேண்டியிருக்கிறது. அதே மாதிரி இந்தியாவிற்கும் என் ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளக் கூடாது" என்பது ஒரு வாதம். உலக மொழிக்காக வேண்டுமென்று எவ்வளவு பேர் அதைக் கையாளுகிறார்கள்? ஒருசிலர்தான் அதைக் கையாளுகிறார்கள். உயர்ந்த படிப்புப் படிக்கின்றவர்களை எடுத்துக் கொண்டாலும் மாணவர்களில் ஒருசிலர்தான் இருக்கிறார்கள். ஆனால் மத்திய ஆட்சியில் நம் நாட்டில் உள்ள எல்லோருக்கும் பங்கு இருக்கிறது. இந்த மாநில ஆட்சியில் எப்படிப் பங்கு இருக்கிறதோ அந்தமாதிரி மத்திய ஆட்சியிலும் பங்கு

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd April 1965

இருக்கிறது. அந்தப் பங்கைச் சரியாக வகிக்க வேண்டுமென்றால் அதற்கு ஆங்கிலம் மட்டும் போதுமா? ஆங்கிலத்தை இந்தியாவில் தொடர்பு மொழியாக வைத்துக் கொள்ளலாம் என்பதை வேறு மாநிலத்தில் இருக்கிறவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நாம் ஏற்றுக் கொள்கிறோமா இல்லையா என்பதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம். அதை மத்தியப் பிரதேசத்தில் ஏற்றுக் கொள்வார்களா? பீகாரில் ஏற்றுக் கொள்வார்களா? ராஜஸ்தானில் ஏற்றுக் கொள்வார்களா? மைசூரில்தான் ஏற்றுக்கொள்வார்களா? ஆந்திராவில் ஏற்றுக் கொள்வார்களா? ஏற்றுக் கொள்வார் யாரும் இல்லை. ஆகவே, மத்திய ஆட்சிக்கு ஒரு பொது மொழி வேண்டும், தொடர்பு மொழி வேண்டும், ஆட்சி மொழி வேண்டும் என்றால் அது தான் இந்தி மொழி. அந்த இந்தியைக் கையாள்வதற்குப் பக்குவம் அடையும் வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும். பிரதம மந்திரி நேருஜி அவர்கள் கூறியதை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் பாராளு மன்றத்தில் பேசிய பேச்சைக் கனம் உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 'ஆங்கிலம் செகண்டரி லாங்குவேஜ் (Secondary Language) ஆக, இரண்டாம் பட்ச மொழியாகத்தான் இருக்கும்" என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த உறுதி மொழிகள் எல்லாம் அதையொட்டித்தான். ஆங்கிலத்திற்குச் சம அந்தஸ்து கூடக் கொடுக்கவில்லை. எல்லோரும் பிரதம மந்திரி நேருஜியின் பேச்சை மேற்கோளாகக் காட்டுகிறார்கள். ஆகையால்தான் நான் இதைச் சொல்லுகிறேன்.

இன்னொரு விசித்திரமான வாதம் கிளப்பப்பட்டது. கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. இந்தி இந்த நாட்டுப் பொது மொழி என்றால் இந்து ராஜ்யத்திற்குச் சொல்வது மாதிரி இருக்கிறது என்று கூறினார்கள். நான் தாழ்மையுடன் சொல்கிறேன்—இது விதண்டா வாதம். இந்தி பொது மொழி என்றால் இந்து ராஜ்யம் என்று சொல்வதா? நான் இதிலே அரசியலைக் கூடக் கொண்டு வரக் கூடாது என்று விரும்புகிறேன். ஆனால் அரசியல் பின்னிக் கொண்டிருக்கிறது. அரசியலை இதிலிருந்து எடுக்கவே முடியவில்லை. இந்த விவாதத்திலேயே பார்த்தோம். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் எப்படித் தம்முடைய பேச்சை முடித்தார்கள்? மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு என்ன? "இந்த நாற்காலியில் வந்து நாங்கள் உட்கார வேண்டும். அதுதான் தீர்வு" என்று சொல்லிவிட்டார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: மந்திரி வேலை வேண்டுமென்பது பஞ்சமா பாதகங்களில் ஒன்றல்ல. அவர்களைத் தவிர வேறு யாரும் மந்திரியாகக் கூடாது என்று இல்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போதே ப்ளான் (Plan) இருக்கிறது. யார் முதலமைச்சர், யார் நிதியமைச்சர் என்றெல்லாம் இப்போதே திட்டம் இருக்கிறது. அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தனி ஹோதாவில் கூறிக் கொள்கிறேன்; கட்சி ஹோதாவில் அல்ல. 'மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு நாங்கள் மந்திரியாக வேண்டும்' என்று சொல்கிறார்கள். மொழிப்

3rd April 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

பிரச்சினையைப் பாரபட்சமில்லாமல் (dispassionate) ஆராய வேண்டும். மொழிப் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு காண வேண்டுமென்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். நம்முடைய நாட்டின் நிலை என்ன? இருக்கிற சூழ்நிலை என்ன? இணக்கமாகத் தீர்வு காண்பது எப்படி? என்ற வகையிலே கவனம் செலுத்தி அந்த வகையிலே வழி காணவேண்டும்.

இந்தியா அல்லது இந்துஸ்தானியா என்ற ஆராய்ச்சிக்கு நாம் போக வேண்டியதில்லை. இன்று இந்தியை மத்திய ஆட்சி மொழி யாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அது பிற்பட்ட மொழியா, அதிலே எத்தனை மொழிகள் கலந்திருக்கின்றன என்ற சரித்திரம், ஆராய்ச்சி எல்லாம் நமக்கு எதற்கு? நான் தமிழ் பேசுகிறேன்; தமிழ் ஆராய்ச்சியிலே ஈடுபடவில்லை. இலக்கிய ஆராய்ச்சிக்கும் எனக்கும் சொம்ப தூரம். தமிழிலே எதிர்க்கட்சி உறுப்பினர் களுக்கு இருக்கும் ஆர்வத்தில், என் ஆர்வம் கொஞ்சம் கூட குறைந்ததல்ல. சமைத்த பண்டத்தைச் சாப்பிடுகிறோம். சமைக்கத் தெரிந்துகொண்டா சாப்பிடுகிறோம்? எவ்வளவு உப்புப் போடவேண்டும், எவ்வளவு புளி போடவேண்டுமென்று பேசி விட்டா சாப்பிடுகிறோம்? சாப்பிடுவது உடம்புக்கு ஆரோக்கிய மானதாக இருக்கவேண்டும்; ருசியாக இருக்கவேண்டும். அதை விட்டுவிட்டு எவ்வளவு புளி, எவ்வளவு உப்பு, எவ்வளவு சர்க்கரை போடப்பட்டிருக்கிறது என்று கேட்பதில்லை. உடம்புக்குக் கெடுதல் வரக்கூடாது; ருசியாக இருக்க வேண்டும். இந்தியில் எத்தனை மொழி சேர்ந்திருந்தால் நமக்கு என்ன? அப்படிப் பேசுவதானால் ஒவ்வொரு மொழியைப் பற்றியும் பேசிக் கொண்டே போகலாம். (குறுக்கீடு: கல்வெட்டுக்களில் . . .) கல்வெட்டுக்களில் இருக் கிறது. நானும் படித்திருக்கிறேன். சில புரியவில்லை, சில புரிகின்றன.

கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு திருத்தப் பிரேரேணை கொடுத்திருக்கிறார்கள். திருத்தப் பிரேரேணைகளுக் கெல்லாம் பின்னால் வருகிறேன். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த திருத்தப் பிரேரேணை, அவர்கள் பேசியது எல்லாம் அநேகமாக எனக்கும் உடன்பாடுதான். 'அநேகமாக' என்றுதான் சொல்ல முடியும். (சிரிப்பு) 'முன்னால் இருந்த கல்வி அமைச்சர் ஒன்று சொன்னார்; அவர் சொன்னதைப் பிறகு இந்தக் கல்வி அமைச்சர் மாற்றிக் கொண்டார்' என்று அவர்கள் கூறினர் கள். நான் இதைப்பற்றி எத்தனையோ முறை விளக்கி இருக் கிறேன்.

கல்லூரியில் போதனு மொழி பற்றிப் பலமுறை விளக்கி இருக் கிறேன். இந்த மன்றத்திலும் குறிப்பிட்டு இருக்கிறேன். போதனு மொழிக் கொள்கையில் மாறுதல் சற்றும் இல்லையென்று கூறியிருக் கிறேன். தமிழைப் போதனு மொழியாக வைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்குப் பரிபூரணமாக உண்டு. ஆனால் அதை எப்படிச் செய்வது? எவ்வளவு ஒக்கிரத்தில் செய்வது? எந்த அளவுக்குச் செய்வது? என்பதுதான் பரிசீலனை செய்ய

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd April 1965

வேண்டிய விஷயம். உயர் படிப்புக்கு (Post-Graduate Course) என்ன வழி? வேறு ஒரு கல்லூரி வைக்கலாம் என்றாலும் மிகுந்த அக்கறை காட்டுகிறோம். 'கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு' என்று கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு எந்தெந்த வகையில் நம்முடைய மாணவர்களையும் மாணவிகளையும் உயர்ந்த அறிவு பெறச் செய்ய வேண்டுமென்பதில்தான் நம்முடைய முதல் கவனம் இருக்க வேண்டும். மொழி எப்போதும் இருக்கும். மொழி நம்மை விட்டுப் போகாது. கல்லூரிகளிலே தமிழுக்காக எம்.ஏ. படிப்பு வைத்திருக்கிறோம். அதற்கு இரண்டு, மூன்று பேருக்கு மேல் வருவது கிடையாது. நான் அன்றே கூறினேன். தமிழ் போதனு மொழியாக எடுத்துப் படித்த சரித்திர ஆசிரியர்கள் இரண்டாயிரம் பேர் உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையாக இருக்கிறது என்று கூறினேன். ஆனால் வேறுவேறு காரணங்களால் வருவதில்லை. உயர் படிப்புப் படிக்க வேண்டும். உயர்ந்த பதவியைப் பெற வேண்டுமென்று விரும்புகிறார்கள். சில கல்லூரிகள் தமிழைப் போதனு மொழியாக வைத்து நடத்த முன் வந்தாலும் ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறோம். தமிழ் இலக்கியத்தைச் சொல்லிக் கொடுக்கத் தமிழ்க் கல்லூரி வைக்க முன் வந்தாலும் ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இந்தியை எப்படிக் கட்டாயப்படுத்தக் கூடாது என்று சொல்கிறார்களோ, அதேபோன்றுதான் இந்த நிலைமையும்; இந்தியை நான் கட்டாயப்படுத்துவேன் என்ற நிலைமை இருந்தால் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பார்த்தார்கள். மாணவர்களை ஓளவுதான் கட்டாயப்படுத்தலாம். மாணவர்களை விரட்டி அடிக்கக் கூடாது. ஆனால், தாய்மொழியில் உயர்ந்த படிப்புக் கூடப் படிக்கும் நிலை சீக்கிரத்தில் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறேன், நம்புகிறேன். அதற்கு எவ்வளவு ஆதரவு கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்துக் கொண்டுதான் வருகிறோம். இதில் அபிப்பிராய வேற்றுமை இல்லை; போக்கிலே வேற்றுமை இல்லை. அதே மாதிரி நம்முடைய மாநிலத்தில் தமிழை ஆட்சி மொழியாக எவ்வளவு வேகமாகக் கொண்டு வர வேண்டுமோ அந்த வகையில் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறோம்.

இப்போது கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்துள்ள திருத்தப் பிரேரணையைப் பொறுத்த மட்டில் எட்டாவது ஷெட்யூலில் கண்ட 14 மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும்; அதுவரையில் ஆங்கிலம் நீடித்து இருக்க வேண்டும் என்பது கருத்து. இதை நான் ஒருகாலும் ஏற்றுக் கொள்ள முடியாது. 14 மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக வர வேண்டுமென்று நாம் நினைப்பது தவறு; சாத்தியமற்றது. இதனால் ஆட்சி சீராக நடைபெறுது என்று நான் முன்பே விளக்கி இருக்கிறேன். ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்றால், இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் விரும்புகின்ற வரையில் இந்தியோடுகூட ஆங்கிலம் இருக்கவேண்டுமென்பது தான் எங்கள் கருத்து. ஆகையால், அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியமில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்து எழுந்த ஆட்சிமொழிச் சட்டத்தி

3rd April 1965] *[திரு. எம். பக்தவத்சலம்]*

லேயே (Official Language Act) திருத்தம் செய்து தம்முடைய நோக்கத்தை நிறைவேற்ற இடம் இருக்கிறது. இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருப்பதற்கு, ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்தலாம், அல்லது தனிச் சட்டமாகவும் செய்யலாம். தனிச் சட்டமாகக்கூட செய்யக் கூடும் என்பதைப் பற்றி நானும் ஆராய்ந்தேன். இதுவெல்லாம் இப்போது அமைக்கப்பட்டிருக்கிற குழு முடிவு செய்ய வேண்டிய விஷயம். ஆனால் பிரதம மந்திரி அவர்களின் உறுதிமொழி சட்ட பூர்வமாக ஆக்கப்பட வேண்டும் என்பது இப்போது மத்திய அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர்கள் மகாநாட்டிலும் வற்புறுத்தப்பட்டது. அதை ஏற்றுக் கொண்டு பிரதம மந்திரி அவர்கள் பாராளுமன்றத்திலும் ஓர் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பது கனம் உறுப்பினர்களுக்குத் தெரியும். அந்த வகையிலே அதை எப்படிச் சட்டமாக்குவது என்பதுதான் இப்போதைய பிரச்சினை. ஆகையால் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று தான் நான் கூறுகிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

கனம் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறியதுபோல் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களுடைய திருத்தத்திற்கும், தி.மு.க. தலைவர் அவர்களுடைய திருத்தத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை தான். ஆனால், அவர்கள் இந்தத் திருத்தத்தில் கொஞ்சம் இந்தியைத் தாக்கியிருக்கிறார்கள். திருத்தம், தீர்மானங்கள் இவற்றிலெல்லாம் ஒரு மொழியைத் தாக்க வேண்டிய அவசியமில்லை. அதிலும் நான் அன்று கூறியது போல்—உண்மையாகவே கூறுகிறேன்—பண் பாட்டிற்குச் சிகரமாக விளங்குகிற கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு மொழியை ஒரு தீர்மானத்திலே தாக்குவது? அந்த மொழியின் முதிர்ச்சி, அதன் பக்குவம் இவற்றை எல்லாம் எதற்காக இந்தத் தீர்மானத்தில் சொல்ல வேண்டும்? தீர்மானத்தில் மொழியைத் தாக்க வேண்டிய அவசியமில்லை. இந்தத் திருத்தத்தின் மூலம் ஆங்கிலமே இருக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். இதைப் பிஹாரிலும் மத்தியப் பிரதேசத்திலும் ராஜஸ்தானிலும் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? இந்தியா ஒன்று என்பதில் பரிபூர்ணமாக நம்பிக்கை கொண்டவர் கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள். கட்சியை இதில் கொண்டு வரக் கூடாது, அவரவர்களுக்குத் தோன்றிய வகையில் இதற்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறினார்கள். அது அவர்கள் கட்சியின் நிலை. சுதந்திராக் கட்சிக்கு மொழியில் ஒன்றும் அபிப்பிராயமே கிடையாது. கனம் சுதந்திராக் கட்சியின் மாபெரும் தலைவர் அவர்கள் புவனேஸ்வரத்தில் பேசியதைப் பார்த்தேன். புவனேஸ்வரத்தில் பேசியது "திணிப்பு வேண்டாம்" என்பது. இங்கு கூறப்படுகிற கருத்துதான் "திணிப்புக்கூடாது, திணிப்பு இல்லாமல் வந்தால் சரி" என்று தி.மு.க. மாபெரும் தலைவர் கூறியிருக்கிறார்கள். புவனேஸ்வரத்தில் சுதந்திராக் கட்சி மாபெரும் தலைவர் அவர்கள் "இந்தியைத் திணிக்கவில்லை என்றால் பரவாயில்லை", என்ற கருத்தில் சொன்னார்கள். இதற்குள் இந்தியைத் தாக்கிச்

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd April 1965

சுதந்திராக் கட்சித் தலைவரின் இந்தத் திருத்தம் இருக்கிறது. ஆனால், சுதந்திராக் கட்சிக்கு இதில் ஒன்றும் கருத்துக் கிடையாது என்பது எனக்குத் தெரியும்.

திரு. சா. கணேசன் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பெருமையோடு ஏற்றுக் கொள்கிறேன். இது சுதந்திரா கட்சிக்குரிய கட்சிக் கொள்கை அல்ல என்பதை. ஆனால் புவனேஸ்வரில் திரு. ராஜாஜி அவர்கள் இந்தித் திணிப்புக் கூடாது என்றுதான் சொன்னார்கள் என்று சொன்னால் அதுதான் எங்கள் கொள்கை. இப்போது சொல்லி வருவதும், திருத்தமும், அப்படியே; திணிப்பு என்றால் "அபிஷியல் லாங்குவேஜ்" (Official Language) என்பதுதான். இதைப் பம்பாயில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். "இறுதியில் நான் ஒருவனை இருந்தாலும்சரி, அவ்வளவு பேர்களும் போனாலும்சரி இந்தித் திணிப்பை, அபிஷியல் லாங்குவேஜ் ஆகிற முறையை நான் எதிர்த்தே தீருவேன்", என்று.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அகில இந்திய ஒருமைப்பாட்டில் கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு, பற்றுண்டு. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வற்புறுத்தியதுபோல், மொழி சொம்ப முக்கிய பிரச்சினை என்பதைக் கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் ஏற்றுக் கொள்வார்கள். இப்பேர்ப்பட்ட பிரச்சினையில் தமிழ்நாடு சுதந்திராக் கட்சிக்கு ஒரு கருத்து, அதில்கூட திரு. கணேசன் அவர்களுக்கு சொந்தக் கருத்து, பம்பாயில் உள்ள சுதந்திராக் கட்சிக்கு ஒரு கருத்து, பீஹாரில் உள்ள சுதந்திராக் கட்சிக்கு ஒரு கருத்து, புவனேஸ்வரத்தில் உள்ள சுதந்திராக் கட்சிக்கு ஒரு கருத்து என்றால் என்னென்பது? இந்த மாமன்றத்தில் இரண்டாவது எதிர்க் கட்சியாக விளங்கும் கட்சிக்கு இந்த நிலை வரக் கூடாது! (ஆரவாரம்).

திரு. சா. கணேசன் : திரும்பத் திரும்ப குறுக்கிட வேண்டியிருக்கிற நிலைக்காக வருந்துகிறேன். அவர்களே சுதந்திராக் கட்சிக்கு இதில் ஒருவகையான கோட்பாடும் இல்லை என்று கூறிவிட்டு, காரைக்குடி சுதந்திராக் கட்சிக்கு ஒரு கொள்கை, சென்னை சுதந்திராக் கட்சிக்கு ஒரு கொள்கை என்று சொன்னால், காங்கிரஸ் காரர்களுக்குள் பல கொள்கை, ஒருவர் குல்லாய் போட்டிருக்கிறார், இன்னொருவர் நாமம் போட்டிருக்கிறார் என்று சொன்னால், அது தனி மனிதரின் உரிமை, உணர்ச்சி என்ற அடிப்படையில் பிறந்தது. அது கிட்டத்தட்ட மத உணர்வு போன்றதுதான். அவர்களுக்கு இஷ்டப்பட்டதை, சரி என்று நம்புவதைச் சொல்ல உரிமை இருக்கிறது என்பதைக்—கட்சி அனுமதித்திருப்பதால் இதைச் சொல்கிறேன் என்று—மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே தனிப்பட்ட கட்சிப் பிரச்சினையே எழவில்லை என்பதை வற்புறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மொழிப் பிரச்சினை சொம்பவும் முக்கியமானது. எல்லோருக்கும் மொழியைப் பற்றிய உணர்ச்சி இருக்கிறது. இப்பேர்ப்பட்ட அரசியல் கட்சிகள் இதில் வழி

3rd April 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

காட்ட வேண்டாமா என்றுதான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் ஏதாவது பேசிக் கொண்டு போகட்டும், ஏதாவது செய்யட்டும், என்று விட்டு விடுவது நல்லதல்ல. அது ஒரு கட்சிக்கு அழகில்லை. அதுவும் ஒரு அகில இந்தியக் கட்சி—கனம் ராஜாஜி அவர்களைத் தலைவராகக் கொண்ட கட்சியாக இருக்கிறது சுதந்திராக் கட்சி—இப்படிப்பட்ட கட்சி நல்லதொரு வழி காட்ட வேண்டாமா? முன்பு ஏதோ சொன்னார்கள். அப்புறம், கட்சிப் பிரச்னை இல்லை என்று சொல்கிறார்கள். கனம் சா. கணேசன் அவர்களிடம் எனக்கு எவ்வளவு மரியாதை இருந்தாலும் அவர்களது திருத்தப் பிரேரணை ஏதோ கட்சி ஹோதாவில்தான் வந்திருக்கிறது. அவர்கள் அக் கட்சியில் இல்லாவிட்டால் இப்பேர்ப்பட்ட திருத்தத்தைக் கொடுத்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் சொல்லலாம், "என் கருத்து" என்று. சுதந்திராக் கட்சியில் அவர் இல்லையென்றால் இது வேறுவிதமாக மாறியிருக்கும். ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இத் திருத்தத்தை நிச்சயமாக மற்ற எதிர்க் கட்சிகள் ஏற்றுக் கொள்ள முடியாது. நானும் அதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. இதில் அநேகமாக உடன்பாடு இருக்கிறது என்றாலும் எல்லாவற்றையும் செய்ய முடியாது. "பிரதேச மொழி (Regional Language)" பற்றிச் சொன்னார்கள். மத்திய பரீட்சைகளில் பிராந்திய மொழிகளை உபயோகிக்க வேண்டுமென்ற கருத்து மத்திய அரசாங்கத்தினிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. "அதைப் பரிசீலனை செய்கிறோம்", என்று சொன்னார்கள். இந்த நிலையில் இந்த அரசாங்கம் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. மற்றபடி மாநில மொழிகளை, தாய் மொழியைப் பரப்புவது பற்றியும் நான் நிலைமையை விளக்கியிருக்கிறேன். ஆகவே கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திருத்தப் பிரேரணையை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற இரு திருத்தங்கள், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் திருத்தமும், சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த திருத்தமும் இருக்கின்றன. நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால் இன்று கடைசி நாள், இன்றைக்குக் கூட்டம் இதோடு முடிகிறது என்பதற்காக மட்டுமல்ல. சுமுகமாக முடிகிறது. சுமுகமாகத்தான் முடிந்து கொண்டிருக்கிறது. இன்று கார சாரம் ஒன்றும் இல்லை. ஆனால் "மொழிப் பிரச்னையில் சட்டமன்றத்தில், தமிழ்நாடு சட்டமன்றத்தில், ஏதோ அபிப்பிராயபேதம் இருக்கிறது, ஏதோ கேட்டார்கள், மெஜாரிட்டி வோட் செய்யவில்லை", என்று வரக் கூடாது என்று முன்பே கூறினேன். என் கருத்து, அரசாங்கத்தின் கருத்து, பிரதம மந்திரி அவர்களின் உறுதி அரசாங்கத்தின் கருத்து, பிரதம மந்திரி அவர்களின் உறுதி மொழியை சட்டபூர்வமாக ஆக்க கொள்வதாக இருந்தால் அதை மன்றம் ஏகோபித்து ஏற்றுக் கொள்வதாக இருந்தால் அதை நானே கொண்டு வந்திருப்பேன். அதை நிறைவேற்றியிருந்தால் நலமாக இருக்கும். அப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்து, சில அங்கத்தினர்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்றால், 'மெஜாரிட்டி

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd April 1965

பலத்தை வைத்து நிறைவேற்றி விட்டார்கள்' என்று வரும். ஆகவேதான், நான் ஒரு தீர்மானமும் கொண்டு வரவில்லை. ஆனால் அப்படி நிறைவேற்றுவதை விட மத்திய அரசாங்கத்தினிடமும், பாராளுமன்றத்தினிடமும் இது மக்களுடைய கருத்து என்று நான் கூறுவேன். நான் வற்புறுத்துவேன். ஆகவே, தீர்மானமாக ஒன்றும் கொண்டு வரவில்லை. அப்படிக் கொண்டு வந்திருந்தால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தால் நன்றாயிருக்கும். அது இல்லாததினால் நான் இப்போது வேண்டுவதெல்லாம் இந்தத் திருத்தங்களை வற்புறுத்த வேண்டாம். இந்த விவாதம் talked out ஆகப் போகட்டும். அதற்கு இணங்கவில்லை என்றால் இந்தத் திருத்தங்களை நாங்கள் ஆதரிப்பதற்கு இல்லை, அதை எதிர்த்து வோட் செய்யவேண்டியதாக இருக்கும் என்று கூறி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, மேல் அவையில் ஆட்சி மொழிக் கொள்கை பற்றி விவாதம் நடந்து, விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பேச்சுக்கள் எல்லாம் தொகுக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைப்பது என்று முடிவை எடுத்திருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். அதே முறையில் இந்த மன்றத்திலே பேசப்பட்ட கருத்துக்களும் தொகுக்கப்பட்டு மத்திய அரசின் பார்வைக்கு வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு எதிர்க்கட்சித் தலைவருடைய அபிப்பிராயம் இருந்தால் அம்மாதிரிச் செய்யலாம். மேல் சபையிலே நடந்த விவாதம் புத்தகமாகப் போடப்பட்டிருக்கிறது. புத்தகத்தை அப்படியே மத்திய சர்க்காருக்கு அனுப்பப் போகிறோம். நானும் ஒரு கடிதம் எழுதி, பிரதமர் அவர்களுக்கும், உள்நாட்டு அமைச்சர் அவர்களுக்கும், இந்தப் புத்தகத்தையும் சேர்த்து அனுப்ப இருக்கிறேன். ஆகவே, மீண்டும் திருத்தங்களை யெல்லாம் ப்ரெஸ் செய்ய வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே நடைபெற்ற விவாதத்தையும் தொகுத்து மத்திய சர்க்காருக்கு அனுப்புகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி மொழிக் கொள்கை பற்றி முடிவு எடுக்க வேண்டியது இந்தியப் பேரரசாக இருக்கிற காரணத்தினாலும், இந்த மன்றத்தின் கருத்துக்கள் அத்தனையையும் அவர்கள் முன்னிலையில் வைத்துப் பரிசீலனை செய்ய வாய்ப்பு ஏற்படுத்தும் முறையில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த விவாதம் பூராவையும் தொகுத்து மத்திய அரசுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறுகிற காரணத்தினாலும் நான் கொடுத்திருக்கிற திருத்தத்தை வற்புறுத்தவில்லை என்று கூறிக் கொள்ளுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: On a point of personal explanation, சார், கனம் முதல் அமைச்சர் அவர்கள், இந்த மொழிப் பிரச்னை சம்பந்தமாக, 'நாங்கள் மந்திரிகள் ஆகவேண்டும், அதிலே தான் பரிகாரம் இருக்கிறது' என்று நாங்கள் சொல்லுவதாகக்

3rd April 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

குறிப்பிட்டார்கள். ஒன்று மட்டும் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷனுக்கச் (Personal explanation) சொல்லிக்கொள்கிறேன். இதற்கு நிவாணம் திராவிட முன்னேற்றக் கழக மந்திரி சபை வந்தால் தான் ஏற்படும் என்று சொன்னது, பதவி ஆசைப்பட்டு என்று குறிப்பிட்டார்கள். ஒன்றே ஒன்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மொழிப் பிரச்சினை மட்டும் எங்களுக்கு இருக்கிற அரசியல் பிரச்சினை அல்ல என்று எங்கள் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லுகிற பதினைந்து மொழிக் கொள்கையை நிறைவேற்றித் தருவதாக இருந்தால் அடுத்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் நிற்காமல் இருக்கும்" என்று தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு 1,008 பலவீனங்கள் இருக்கின்றன, இப்படித் நிசை திருப்ப வேண்டாம் என்று அவர்களிடத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர்: அரசியல் வாதிகள், இந்தக் கட்சியோ, அந்தக் கட்சியோ, பதவி ஆசை என்றால் தப்பா என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் சொல்லவில்லை. கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் சொன்னதைத்தான் சொன்னேன். 1967-ம் ஆண்டுக்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கின்றன. இப்போது அதற்கு என்ன அவசரம்?

திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய அபிப்பிராயமும், ஒன்றும் சொல்லாமல் இப்படியே விட்டு விட்டு, இதோடு முடித்து விடுவது சிறப்பாகவும், பொருத்தமாகவும் இருக்கும் என்பதுதான்.

கனம் சபாநாயகர்: அது எப்படி அந்த மாதிரி முடிக்க முடியும்? Then what happens to the amendments?

திரு. கே. ஏ. மதியழகன்: "Talked out" என்று இல்லாமல், திருத்தங்களை வற்புறுத்தாமல் விட்டு விட்டால், சந்தேகம் தவிர்க்கப்பட வேண்டும். கனம் முதல் அமைச்சருடைய கருத்து நிறை வேறியதாக ஏற்பட்டு விடக்கூடாது.

The amendment of Sri V. R. Nedunchezhiyan was, by leave, withdrawn.

திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் சொல்லுகிற போது இந்தத் தீர்மானத்தைப் பொறுத்த வரையில் அது என்னுடைய கருத்து அல்ல, நான் வேறு விதமாகக் கருத்துக் கொண்டிருப்பேன் என்று கூறினார்கள். நான் அழுத்தமாகக் கூறிக் கொள்ளுகிறேன், என்னுடைய மனச் சாட்சிப் படி, நான் விரும்பியதைத் தான் என்னுடைய amendment ஆகக் கொடுத்திருக்கிறேன். அதை இந்தியாவின் வளத்திற்காக, எல்லா மாநிலங்களின் நன்மைக்காக மேலிடத்திலே கவனித்து, உள்ள உணர்ச்சிகளை உணர்ந்து தக்க வழியில் செயல்படும் என்ற நம்பிக்கையில் இப்போது இதை ப்ரெஸ் (press) பண்ணுவதற்கு நான் விரும்பவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

The amendment of Sri Saw. Ganesan was, by leave, withdrawn.

[3rd April 1965

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற திருத்தத்தை நானும் வாபஸ் பெறத்தான் யோசிக்கிறேன். அதை நான் வற்புறுத்த வேண்டிய அவசியம் இல்லை. அதுவும் கனம் முதல் அமைச்சர் அவர்கள் 'சாரத்தை ஒத்துக்கொள்கிறேன்' என்று சொல்லிவிட்டார்கள். விவரங்களைப் பின்னால் பார்க்கலாம். சபை நடவடிக்கைகளை அப்படியே அச்சிட்டு மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்க கனம் முதல் அமைச்சர் அவர்கள் முன் வந்திருப்பதை வரவேற்கிறேன். அதோடு இதை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியம். அவரவர்கள் குறிப்பிட்ட கருத்துக்களை வாபஸ் வாங்கியதாக அர்த்தம் அல்ல. அதோடு கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற தீர்மானம் "That the Official Language Policy be taken into consideration" என்று இருக்கிறது. என்ன சிபாரிசு என்று ஒன்றும் இல்லாமல் இருக்கிறது. ஆகையால் அதை நிறைவேற்று வதிலும் அர்த்தம் இல்லை. சந்தர்ப்பப்படி சொல்லிக்கொள்ள வேண்டிய நிலைதான் ஏற்படுகிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியது போல இந்தப் பேச்சுக்களை யெல்லாம் தொகுத்து மத்திய அரசாங்கத் திற்கு அனுப்புகிறோம். கனம் அங்கத்தினர் திரு. கலியாண சுந்தரம் கூறியதுபோல அவைகளை மொழி பெயர்த்தும் அனுப்ப லாம். இப்போது திருத்தங்கள் எல்லாம் வாபஸ் வாங்கப்பட்டது பற்றி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். திருத்தங்களை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள் என்றால், கருத்துக்களை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள் என்று நான் கொள்ளவில்லை. அந்த மாதிரி யாரும் கொள்ள மாட்டார்கள். நான் தெரிவித்த கருத்து ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று பறை சாற்ற மாட்டேன். இப் போது மூன்று திருத்தங்களும் வாபஸ் ஆன பிறகு பேசித் தீர்க்கப் பட்டதாக (Talked out) வைத்துக்கொள்ளலாம். டெக்னிக் கலாக நான் கொடுத்த தீர்மானத்தை ஓட்டுக்கு விடலாம். ஆனால் இப்போது அதை ஓட்டுக்கு விட வேண்டிய அவசியம் இல்லை. இதை இப்படியே விட்டு விடலாம் என்று தெரிவித்துக்கொள் கிறேன். The matter may be left as it is.

The amendment of Sri M. Kalyanasundaram was, by leave, withdrawn.

MR. SPEAKER : All the amendments have been withdrawn and the matter is left as it is.

VII.—ANNOUNCEMENTS.

BILLS PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER : I have to announce to the House that I have received messages from the Hon. Chairman, Legislative Council, that the following Bills have been passed by the Council without any amendment—

(1) The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1965 (L.A. Bill No. 7 of 1965).